# ஜீவநதி சிறுகதைகள்



தொகுப்பாசிரியர்

கலாமணி பரணீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவநதி சிறுகதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்பாசிரியரின்
# பிற நூல்கள்

1. நதியில் விளையாடி...கவிதைத் தொகுதி (தொகுப்பாசிரியர்)

2. ஜீவநதி நேர்காணல்கள் (தொகுப்பாசிரியர்)

3. மீண்டும் துளிர்ப்போம் - சிறுகதைத் தொகுதி

4. இலக்கியமும் எதிர்காலமும் - கட்டுரைத் தொகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி சிறுகதைகள்

## தொகுதி-01

தொகுப்பாசிரியர்

## கலாமணி பரணீதரன்

எஸ். கொடகே சகோதரர்கள்
அரச விருதுபெற்ற வெளியீட்டாளர்
675, பீ. டீ எஸ். குலரத்ன மாவத
கொழும்பு 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு - 2011

ஜீவநதி சிறுகதைகள்
தொகுதி - 01

© கலாமணி பரணீதரன்

அட்டை வடிவமைப்பு
மேமன்கவி

வெளியிடுபவர்
எஸ். கொடகே சகோதரர்கள்
675, பி. டி எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு 10.

அச்சிட்டோர்
சத்துர அச்சகம்
69, குமாரதாஸ பிளேஸ், வெல்லம்பிட்டிய.

First Print - 2011

Jeevanathy Kathaikal
(Jeevanathy Short Stories)

© Kalamani Bharneetharan

ISBN 978-955-30-3148-8

*Cover Designed by:*
Memonkavi

*Published by:*
S. Godage & Brothers
675, P. de S. Kularatne Mawatha, Colombo 10.

*Printed by:*
Chathura Printers
69, Kumaradasa Place, Wellampitiya.

14020/2097/350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

அனர்த்தங்களால் பாதிப்படைந்த
இலங்கை வாழ் மக்களுக்கு .............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகுப்பாசிரியர் உரை

### க.பரணீதரன்
### "ஜீவநதி" பிரதம ஆசிரியர்

**ஜீவநதி சிறுகதைகள்"** நூலின் நுழைவாயிலில் வாசகர்களாகிய உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. ஜீவநதி சஞ்சிகையின் முப்பத்திரண்டு இதழ்கள் இன்றுவரை தொடர்ச்சியாக வெளிவந்துள்ளன. இந்நிலையில் "ஜீவநதி சஞ்சிகையில் வெளிவந்த இருபத்தைந்து சிறுகதைகளைத் தொகுத்து "கொடகே நிறுவனம்" மூலம் நூலாக வெளியிடலாம்" என கவிஞர் மேமன்கவி அவர்கள் கேட்டுக் கொண்டார். ஜீவநதியின் முப்பத்திரண்டு இதழ்களில் அறுபத்தாறு சிறுகதை ஆசிரியர்களின் நூற்றுநாற்பது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. அவற்றிலிருந்து இருபத்தைந்து சிறுகதைகளைத் தேர்ந்து இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

ஜீவநதி சஞ்சிகையை ஆரம்பித்த பின்னர் இதுவரை எட்டு நூல்களை ஜீவநதி பதிப்பகம் வெளியீடு செய்துள்ளது. ஜீவநதியில் வெளிவந்த கவிதைகளுள் அறுபது கவிஞர்களின் கவிதைகளின் தொகுப்பு நூலான **"நதியில் விளையாடி"** வாசகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. அதே போலவே ஜீவநதியில் பிரசுரமான பதினைந்து நேர்காணல்களின் தொகுப்பு நூலான "ஜீவநதியின் நேர்காணல்கள்" கலை இலக்கியத்தில் சமகால ஆளுமைகளின் கருத்தியல்களைப் பதிவு செய்தது. அடுத்து ஜீவநதியில் பிரசுரமான சிறுகதைகளின் தொகுப்பு நூலொன்றை ஜீவநதியின் பதிப்பகத்தினூடாக வெளியிடலாம் என எண்ணிக் கொண்டிருந்த வேளையில் தான் மதிப்பிற்குரிய கவிஞர் மேமன்கவி அவர்களிடமிருந்து இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எஸ்.கொடகே சகோதரர்கள்" என்ற பெயர் அண்மைக் காலத்தில் தமிழ் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டு வருகிறது. தமிழ் நூல்களையும் தமது நிறுவனத்தினூடாக வெளியிட வேண்டுமென "எஸ்.கொடகே சகோதரர்கள்" மேற்கொண்டுள்ள தீர்மானம் ஆனது வரவேற்கத்தக்கது. இத் தீர்மானத்தின் பிரகாரம் அந்நிறுவனம் தனது பதிப்பு முயற்சிகளை மேற் கொண்டு வருகின்ற வேளை "ஜீவநதி"யையும் இத்திட்டத்தின் பயனாளிகளுள் ஒருவராய் உள்ளடக்கியமைக்கு ஜீவநதி தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

நீண்ட கால வரலாற்றையுடைய பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளைத் தொகுத்து, **மறுமலர்ச்சிச் சிறுகதைகள், ஈழநாடு சிறுகதைகள், சுதந்திரன் சிறுகதைகள்** என நூல்களாக வெளியிடும் போக்கு இன்று பலராலும் சிலாகிக்கப்படுகின்றது. இத் தொகுப்பு முயற்சியில் பெரும்பாலும் மூத்த எழுத்தாளர்கள் தான் ஈடுபட்டு வருகின்றார்கள். ஆனால் நான்கு வருடங்களாக தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் ஜீவநதி சஞ்சிகையில் வெளிவந்த சிறுகதைகளில் இருந்து தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட வேண்டுமென **"எஸ்.கொடகே சகோதரர்கள்"** நிறுவனத்திற்கு கவிஞர் மேமன்கவி பரிந்துரை செய்திருப்பது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. உண்மையான உழைப்பு மதிக்கப்படும் என்பதற்கு இது சான்றாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவநதியின் அண்மைக்கால வளர்ச்சியில் எமக்கு மகிழ்ச்சியுண்டு, ஆனால் மமதையில்லை. இவ்வளர்ச்சியில் எழுத்தாளர்கள், வாசகர்கள், விளம்பரதாரர்கள் எனப் பலருக்கும் பங்கு உண்டு என்பதை என்றும் நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். ஜீவநதி எப்போதும் தன் ஆதரவாளர்களை அரவணைத்துக் கொண்டே பிரவாகிக்கும். அவ்வாறு "ஜீவநதி" பயணிக்கும் வேளையில் எஸ்.கொடகே சகோதரர்கள், கவிஞர் மேமன்கவி போன்றோரது பெயர்களும் ஜீவநதியின் வரலாற்றுப் பக்கங்களில் ஆழப் பதிக்கப்பெறும் என்பதையும் உறுதியாகக் கூறிக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலினுள்ளே இவர்கள்...

1. யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
2. தெணியான்
3. கே.ஆர்.டேவிட்
4. குந்தவை
5. செங்கை ஆழியான்
6. பவானி சிவகுமாரன்
7. க.சட்டநாதன்
8. த.கலாமணி
9. எம்.எஸ்.அமானுல்லா
10. சந்திரகாந்தா முருகானந்தன்
11. ப.ஆப்டீன்
12. திக்குவல்லை கமால்
13. ஆ.இரத்தினவேலோன்
14. தாட்சாயணி
15. ச.முருகானந்தன்
16. க.நவம்
17. அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்
18. இ.இராஜேஸ்கண்ணன்
19. கெக்கிராவ சஹானா
20. அன்புமணி
21. அ.விஷ்ணுவர்த்தினி
22. மு.அநாதரட்சகன்
23. க.பரணீதரன்
24. அஷ்ரப் சிஹாப்தீன்
25. கார்த்திகாயினி சுபேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி நிலத்திடையே

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

ஜீவநதி

சிறுகதைகள்

1

சேவல்கள் கூவும் சப்தமும் காகங்கள் கரைவதும் இரவு போர்த்திருந்த நிசப்தத்தை மெதுவாக அகற்றின. அந்த ஒலிச் சேர்க்கை வேல்முருகனின் காதுகளுட் புகுந்து அவரை எழுப்பவும் முயன்றது.

வேல்முருகனின் கண்கள் விழிக்க மறுத்தன. கனடாவிற்கும் யாழ்ப்பாணத்துக்குமான நேரவேறுபாடு, இரவு வெகு நேரமாக உறக்கத்தைத்தடுத்துவிட, தாமதித்து வந்த தூக்கம் இப்போது விழிகளின் மீது சவாரிவிட்டது.

கோழி காகங்களின் சப்தங்கள் "நீ யாழ்ப்பாணத்தில் இருக்கின்றாய்" என அவருடைய மனதிற்குக்கூறின.

'யாழ்ப்பாணம்'

அந்த எண்ணம் திறந்துவிட்ட உணர்ச்சியூற்று உடலெங்கும் வியாபித்த கணத்தில் உறக்கம் அடித்துச் செல்லப்பட வேல்முருகன் எழுந்து உட்கார்ந்தார்.

அன்று செய்யவென அவர் போட்டிருந்த அட்டவணையும் நினைவிற்கு வந்தது. செயற்படுத்த முடியுமா? என ஓர் ஐயமும் கூடவே எழுந்தது.

நேற்று அதிகாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அவர் விமானத்தில் வருவதற்கு ஒழுங்கு செய்ததும், வந்த அன்றே சில இடங்களுக்குப் போய்வரலாமென எண்ணியிருந்தார். அந்தக்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிலிருந்து இன்ரசிற்றி பேருந்தில் புறப்பட்டுவந்து எத்தனை வேலைகளை அன்றைக்கே செய்து முடித்திருக்கின்றார்.

ஆனால் நேற்று விமானத்தில் பயணித்து யாழ்ப்பாணத்தில் வந்துசேர மாலை மணி நான்கைத் தாண்டிவிட்டது. நீராடி உணவருந்தி, அவரைக்காண வந்தவர்களுடன் உரையாடிவிட்டு 'கணேசலிங்கம் அத்தான் வீட்டுக்குப் போட்டுவாறன்' என அவர் புறப்பட, "இரவு ஏழு மணிக்குத்தான் ஊரடங்குச்சட்டமென்றாலும் ஐந்தரை ஆறு மணிக்குப் பிறகு ஒருவரும் அவசரமில்லாவிட்டால் வெளியிலே போறதில்லை" என்றான் அவரது பெறாமகன் சுந்தரவேல்.

வீட்டிலிருந்த ஒவ்வொருவரும் தொடராக தத்தம் நினைவிற்கு வந்த ஊரடங்கு இரவு நேரக்கதைகளை அவருக்குக் கூறினார்கள்.

விமானப் பயண அலைச்சல் உடலை அடித்துப் போட்டிருந்தும் யாழ்ப்பாணத்தின் கதைகளும் நேர வேறுபாடும் அவரது தூக்கத்தைத் தூக்கிச் சென்றுவிட, அவர் தனது பழைய நினைவுகளைக் கிளறிக் கொண்டு படுக்கையில் கிடந்தார். அப்போதுதான் இந்திரபுரத்தின் நினைவும் எழுந்து வந்தது.

கனடாவில் இருந்தபோதே 'அங்குபோய்ப்பார்க்கவேண்டும்' என்று பலமுறைகள் நினைத்திருக்கிறார். இப்போது அந்த ஆசை பேருருக் காட்டியது.

நேற்றுச் செய்ய எண்ணியிருந்தவற்றுடன் இதையும் இன்றைய நிகழ்ச்சிநிரலிலே சேர்த்தார்.

நேற்றுப்போவதெனத் திட்டமிட்ட உறவினர் வீடுகளுக்கு முதலிலே போகத் தொடங்கினால் அவர் பார்க்க விரும்பும் இந்திரபுரத்தைச் சுற்றிப்பார்க்க முடியாது போகலாம். அதைப்பார்ப்பதுதான் அவரைப்பொறுத்தவரை மிக முக்கியம்.

'இந்திரபுரம்!'

அவர் பொறுப்பதிகாரியாக இருந்து அமைத்த நவீன கிராமம். அப்போது நவீன கிராமம். இப்போது பழையதாகி ஒரு நகரமாகக் கூட வந்திருக்கலாம். கடலோரத்தை அண்மித்த இடம். மறுபுறம் வயல்களும் தோட்டங்களும். முயன்றிருந்தால் வளர்ந்திருக்கக் கூடிய சூழலிலேதான் அதை அமைக்க வாய்ப்புக்கிட்டியது.

"பெரியப்பா, எழும்பீட்டீங்களோ? அல்லது படுக்கப் போறீங்களோ?" அறை வாசலில் அவரைக்கண்ட சுந்தரவேல் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனிப்படுக்கேலாது ஐந்து நாட்கள்தானே நிற்கப்போறன். நிறைய வேலைகள் கிடக்கு."

"மதுரிகா, பெரியப்பா எழும்பிட்டார். கோப்பி"

"வேண்டாம், வேண்டாம் அப்பிடிக்குடிக்கிற பழக்கமில்லை. நான் குளிச்சிட்டுவாறன். பிறகு கோப்பி குடிப்பம்"

அவர் கிணற்றடியை நோக்கி நடந்தார். கிணறு கண்ணில் படவும் இந்திரபுரம் அவரிடம் மீண்டும் ஓடிவந்தது.

அந்தக்கிராமத்துக்குத் தண்ணீர் வசதிசெய்வதுதான் அவருக்குப் பெரும் பிரச்சினையாக அமைந்த விடயம்.

கடற்கரையை அண்மித்த பிரதேசமாக இருந்ததாற் போலும் அங்கு நன்னீரூற்றைத் தேடிப்பிடிப்பது கஷ்டமாகவிருந்தது. அது மிகப் பெரும் பிரச்சினை. எவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில் அவர் திட்டத்தை நிறைவேற்ற முயல்கிறார்.

வெளிநாடொன்றின் அரசசார்பற்ற நிறுவனம் குடியேற்றத் திட்டத்திற்கு வழங்க முன்வந்த உதவியை இப்பகுதிக்கென்று பெற்றுக் கொள்ள பெரும்பாடுபட வேண்டியிருந்தது. அதற்கான இடமொன்றைத் தெரிவு செய்து அவர்கள் திருப்தியுற்றால் தான் நிதியுதவி கிடைப்பது உறுதியாகும்.

கிராமமொன்றை அமைக்கக் கூடிய நிலமொன்று தேவை. அது அவ்வளவு சுலபமாகக் கிடைப்பதாகவில்லை. வெறும் தரிசாகக் கிடந்த நிலத்தைப் பார்த்துவிட்டு வந்தாலே மறுநாள் அதற்கு உரிமைகோரிக் கொண்டு யாராவது வந்து நிற்பார்கள்.

வீடுகளை அமைக்க மட்டுமே நிறுவனம் நிதிவழங்க முன்வந்திருந்தது. காணிக்கு ஒருவரும் நிதியுதவி செய்யமாட்டார்களே, அரச காணிகளும் ஏற்றதாக இல்லை. பாரதியாரின் "காணிநிலம் வேண்டும்" பாடல்தான் அடிக்கடி நினைவிற்கு வந்தது. பராசக்திக்கு அது கேட்டதோ என்னவோ?

இவர் காணிதேடுவது பற்றி கேள்வியுற்ற ஒரு கோவில் நிர்வாகம் கோவிலுக்குரிய இந்தக்காணியை வழங்குவதற்கு முன்வந்தது. கோவிலுக்குப் பெரும் பயனொன்றும் தராத காணிதான். ஆனால் குடியேற்றத்திட்டத்திற்குப் பொருத்தமாக இருந்ததென்று மகிழ்ந்தபோது நன்னீர் பிரச்சினை! நல்ல தண்ணீர் இல்லாமல் கிராமமா? அதுதான் பாரதியார் தன் பாடலிலும் கேணியைக் கேட்டாரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் கிடைக்காவிட்டால் மீண்டும் நிலம் தேடுவதா? கடவுளே!

மனம் பதற நிலத்தின் சகல பகுதிகளிலும் பரிசோதித்து தேடியலைந்த போதுதான் நன்னீரூற்று ஓரிடத்தில் கிட்டியது. அந்தக்கண ஆனந்தம்...

ஒரே அமைப்புடன் அழகாக நிரலிட்ட வீடுகள். சீரான பாதைகள். பாடசாலை, தபாலகம், வைத்தியசாலை, வங்கி, சனசமூகநிலையம்... முற்கூட்டியே தயாரிக்கப்பட்ட வரைபடத்தின்படி உருவான கிராமம். தானே உருவாகி வளர்ச்சியடைந்த கிராமத்தை விட இது அழகுதான். வசதியானதுங்கூட.

இந்திரபுரம் இப்படி உருவாகிக் கொண்டிருந்தபோது ஒரேயொரு நன்னீர் கிணற்றிலிருந்து சகல வீடுகளும் நீர் பெற நீர்த்தாங்கி அமைத்து, குழாய்களைப் பொருத்தி, ஏற்ற வசதிசெய்வதற்கான செலவுகளைப் பொறுப்பேற்க மற்றொரு வெளிநாட்டு நிறுவனத்தைத் தேடியலைந்து அந்தத்திட்டத்தை நிறைவேற்றுவதிலும் அவர் வெற்றி கண்டார்.

பழைய நினைவுகளுடன் குளித்து முடித்து வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த அவரெதிரே பூந்தளிராய் மஞ்சுளன் – சுந்தரவேலின் மகன் – ஓடி வந்தான். அவன் பின்னே தாய், மதுரிகா.

"அம்மா ஊஞ்சல்"

மாமரத்தில் கட்டியிருந்த ஊஞ்சலில் அவனை உட்கார வைத்ததும் அவனது கண்களில் ஆனந்தம் ஊஞ்சலாடியது. சிறு பிள்ளைகளுக்கு இப்படி விளையாடுவதில் கொள்ளை மகிழ்ச்சிதான்.

இந்திரபுரத்தில் சிறுவர் விளையாடி மகிழ ஒரு பூங்காவையும் உருவாக்கியிருந்தார். சிறுவரைக் கவரக்கூடிய உருவச்சிலைகள், அவர்கள் விளையாட ஊஞ்சல் முதலிய உபகரணங்கள் யாவற்றையும் கொண்ட மனதிற்கினிமையான அழகிய பூங்கா.

குடியிருக்க இடமின்றித் தவித்தோர் அங்கு குடியேறிய போது அடைந்த மகிழ்வு!

வீடு கிடைக்காதவர்களிடமிருந்து பொங்கி வந்த கோபம்!

பொறாமை!

ஏமாற்றம்!

மாடிவீட்டில் வசித்தவர்களே காட்டிய புகைச்சல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் இவ்வளவு பொல்லாததா?

வேல்முருகனின் பொறுப்பு நிறைவேறிய வேளை அவர் இடமாற்றம் கிடைத்ததால் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்று விட்டார்.

சில மாதங்களிலேயே இனக்கலவரம் அவரைத் துரத்த இந்தியா சென்று பல நாடுகள் சுற்றி, இறுதியில் கனடாவில் குடியேறினார்.

இடையிடையே இந்திரபுரம் நினைவில் தலை நீட்டும்ஓரிருமுறை சுந்தரவேலிடம் அதைப்பற்றி விசாரித்தார். "நான் அந்தப்பக்கம் போனதில்லையே பெரியப்பா" என்று பதில் வந்தது.

நீண்ட காலத்தின் பின் இலங்கைக்கு, அதுவும் யாழ்ப்பாணத்திற்கு இப்போது வந்திருக்கிறார்.

அதைச் சென்று பார்க்க வேண்டும்.

அந்த நாட்களில் அதைஅமைக்க உழைத்த அத்தனை பேரும் முழுமையான ஈடுபாட்டுடன், ஒரு சேவைசெய்யும் உணர்வுடன் பணியாற்றி நிறைவேற்றிய திட்டம்.

இன்று எப்படி இருக்கிறது?

அன்றைய எதிர்பார்ப்புகள் ஈடேறியிருக்குமா?

காலை உணவை சுவைத்து உண்டபின் முச்சக்கரவண்டியொன்றில் புறப்பட்டார்.

கண்கள் இருபுறமும் பார்த்தன.

நேற்று பலாலியிலிருந்து வந்தபோது வீதிமருங்கைப் பார்த்து அவை மனதிற்குள் சேர்த்துக்குவித்த வேதனை இன்று உருவாகவில்லை. பழக்கப்பட்டு விட்டதோ?

மகிழ்வு முகிழ்விடவும் எதுவுமே இல்லை. இடிந்து கிடந்த கட்டடங்களஇ உடைந்து திருத்திய வீடுகள், ஆங்காங்கே புதிய வீடுகளும் கட்டத் தொடங்கி முடிவுறாத கட்டடங்கள். ஒவ்வொன்றும் தன்னுள் ஓவ்வொரு கதையை வைத்துக் கொண்டு நின்றன.

பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் சென்று கொண்டிருந்தார்கள்.

இந்திரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இப்பொழுது வளர்ச்சியடைந்திருக்குமா? இரண்டு கட்டடங்களை மட்டுமே போட்டு ஆரம்பப்பாடசாலையாக அதை அமைப்பதற்கே அவர் அரும்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவேண்டியிருந்தது.

அதிபர் திறமைசாலியாக இருந்தால் முன்னேற்றியிருக்கலாம். சற்று நேரத்தில் தெரியப்போகிறது.

"தம்பி, முந்தி இந்தப்பக்கம் போயிருக்கிறியளோ?" அவர் முச்சக்கரவண்டி ஓட்டுனரிடம் கேட்டார்.

"ஒரு முறை போயிருக்கிறன்"

"இந்திரபுரம் என்று ஒரு குடியேற்றத்திட்ட கிராமம் இருந்தது தெரியுமோ?"

"தெரியேல்லை"

இப்படியொரு பதில்!

விரிந்திருந்த கற்பனைகள் அச்சொல்பட்டு தொட்டாற் சுருங்கியாகின.

அவரது மனநிலை அவனுக்குப் புரிந்ததோ?

"அந்தப் பக்கம் வீடுகள் குறைவு. தொண்ணூற்றைந்து இடம் பெயர்வுக்குப் பிறகு வந்த உடனே குடியேறினவை இருக்கினம். அதற்குப் பிறகு குடியேற அனுமதி கிடைக்கிறது கஷ்டம் என்று சொல்லுகினம். பாதுகாப்புப் பிரதேசத்துக்குள்ளை இருக்கிற ஊரெல்லோ?"

முச்சக்கரவண்டி ஓட்டுனர் தனக்குத் தெரிந்தவற்றைக் கூறினான்.

நேற்று அந்திப் பொழுதில் வீட்டிலிருந்தவர்கள் ஊரடங்கு இரவுபற்றிக் கூறியபோது ஏற்பட்ட மரணவலி மீண்டும் படர்வது போல்.

"அந்தக் காட்டு வெளியினிலே அம்மா நின்றுன் காவலுற வேண்டும்"

இந்திரபுரத்தை உருவாக்கியபோது அடிக்கடி நினைவு வந்த பாரதியாரின் பாடலை முழுமையாகப் பாடாமல் விட்டுவிட்டேனோ?

பராசக்தியைக் காவல் வைக்காததால் வேறு எவரேனும் காவலிருப்பார்களோ?

முதலில் செபமாலைதாசன் வீட்டிற்குப் போவோமோ? இந்திரபுரம் நிர்மாணிக்கப்பட்டபோது உதவிய ஊர்க்காரர்களில் அவர் முக்கியமானவர். அவர் இருப்பாரோ, இல்லையோ? அவரைத்தேடி அலையாமல் இந்திரபுரத்திற்கே செல்வோம்.

ஊர் அண்மிக்க முச்சக்கர வண்டிக்காரனின் கூற்று சரிதா னென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியது. வயலும் தோட்டங்களுமாக இருந்த இடங்கள் பற்றைக் காடுகளாகக் கிடந்தன. அவற்றின் முன்னே சிவப்புப் பலகையில் வெண்ணிறத்தால் வரையப்பட்ட மண்டையோடும் இரு எலும்புத் துண்டு களும் கொண்ட படமும் மிதிவெடி அபாய அறிவிப்பும் கிடந்தன. மிதிவெடிகள் அகற்றப்படாத பிரதேசங்கள்.

அறிவிப்புப் பலகையின் தோற்றமே மனதைப் பிசைந்தது.

இந்திரபுரம் பகுதியை வண்டி அண்மித்துவிட்டது. அதோ உயர்ந்து நிற்கும் நீர்த்தாங்கி ஒரு பக்கம் உடைந்து தெரிகிறது.

பாடசாலை பெயர்ப் பலகையின்றி வளைந்த கம்பிகள் மட்டும்.

கட்டடங்கள் இருந்ததற் கான அடையாளங்களாக அங்கு மிங்கும் உடைந்த சுவர்கள்.

சிறுவர் பூங்கா விளையாட்டு உபகரணங்களின் பலகையொன்று மண்ணுக்கு மேல் தலைநீட்டிப் பார்க்கிறது.

இந்திரபுரம் பெயர் பொறித்த கல்லில் 'ம்' எழுத்து மட்டும் கிடக்கிறது.

"நீ எங்களைத் தேடி வருவாய். அப்போது எம் கதைகூறவென இறுதி மூச்சைப்பிடித்துக்கொண்டு காத்துக்கிடக்கிறோம்."

இந்திரபுரத்தை உருவாக்க உதவிய நிறுவனங்களின் பெயர் களையும் அக்கல்லில் பொறித்திருந்தோம். அவை மட்டும் உடையாது கிடந்தன.

அதன் கீழே சிவப்புப் பல கையில் மண்டையோடும் எலும்புகளும்...

**இதழ்-03 புரட்டாதி - ஐப்பசி 2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மாமன்

## தெணியான்

ஜீவநதி
சிறுகதைகள்
2

ஓசை எழுப்பாமல் திருடன்போல தெரு ஓரத்துத் தகரப்படலை மெல்லத் திறந்து மூடுகிறது.

இப்படித் திறந்து மூடி பதுங்கிப் பதுங்கி உள்ளே வருகின்றவர் வேறு யாருமல்ல, மாமாதான்.

மாமா இப்பொழுது உடல் மெலிந்து நல்லாத் தளர்ந்து போனார். அவர் கரங்கள் வலு இழந்து போய் விட்டன. அவைகளில் எப்பொழுதும் ஒரு நடுக்கம். அந்தக் கரங்களில் ஒன்று ஊன்றுகோலைப் பற்றிப் பிடித்திருக்கும். மறுகரத்தினால் படலையை மெதுவாகத் திறந்து கொண்டு உள்ளே வருகின்றார்.

மாலை கருகும் மைமல் வேளை.

அவர் இந்த நேரம் பார்த்துத்தான் என்றைக்கும் இரகசியம் போல வந்து போகின்றார்.

தனது வருகையைப் பிறர் அறிந்து விடாத வண்ணம் உள்ளே வந்து வாசலில் நின்று மெல்லக் குரல் கொடுப்பார்.

இப்போ எந்த அசுகையுமில்லை.

படலையில் இருந்து சில மீற்றர் தூரம் உள்ளே வந்தாக வேண்டும். மாமா வந்து கொண்டிருக்கிறார். இந்தத் தூரத்தைத் தாண்டி வருவதற்கே அவருக்கு சில நிமிடங்கள் வேணும். மூச்சிரைக்க வந்து வாசலில் மெல்ல அமர்ந்து விடுகின்றார்.

வீட்டுக்கு வெளியே பக்கம் பக்கமாக இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்களை நிறுத்தி, அதற்கு மேல் பிளாற் கூரையை நீட்டிப்போட்டு, அதன் கீழ் படிகள் அமைத்து, பக்கங்களில் அரைச் சுவர் வைத்த வாசல்.

மேற்குப்புறமாக உள்ள அரைச்சுவரில் தூணின்மேல் தனது வளைந்த முதுகை வைத்துச் சரிந்து ஆசுவாசமாக அமர்ந்திருப்பார். கால்கள் இரண்டுக்கும் இடையில் கைத்தடி சார்த்தி இருக்கும். எப்பொழுதும் அவர் வந்து அமர்ந்து கொள்ளும் இடம் இதுதான். இன்னொரு இடத்தில் மறந்தும் போய் உட்காரமாட்டார்.

"மாமா உள்ளுக்கு வாருங்கோ!"

"வேண்டாம்"

அவர் இந்த இடம் விட்டு எழுந்து வரப்போவதில்லை என்பது எனக்குத் தெரியும்.

சந்தர்ப்பத்துக்குத் தகுந்த ஒரு சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு இடையிடையே வந்து இப்படி உட்கார்ந்து கொள்ளுவார்.

எனக்குத் தெரியும், அவருக்கு என்னைக் காணாமல் இருக்க இயலாது.

எனக்குந்தான் அப்படி; பல தினங்கள் அவரைக்கண்டு கொள்ளவில்லை என்றால் மனசு அவரைத் தேட ஆரம்பித்து விடும்.

என் சொந்தப் பெயர் சொல்லி பிறர் என்னை அழைப்பார்கள் உறவுக்காரர்கள் உறவு முறை சொல்லுவார்கள். அவருக்கு மாத்திரம் நான் 'ராசு' என் பெயரை அவர் தன் வாயால் கூறி என் செவிகள் இதுவரை கேட்டதில்லை.

"ராசு"!

இதய ஆழத்துள் இருந்து எழுந்து அடித் தொண்டையால் மெல்ல வெளிப்படும் அந்தக் குரலில்தான் எத்தனை நெருக்கம் இறுக்கமான பிணைப்பு! பாசத்தின் குளிர்ச்சி!

இன்னொரு தடவை மாமா இப்படி அழைக்க வேண்டுமென மனசு ஏங்கும்

முதற் குரல் வந்த பிறகும் நான் மௌனித்திருக்கின்றேன். இன்னொரு தடவை அழைக்கட்டும்.

"அப்பு ராசு!"

மாமாவின் இதயம் அவர் குரலாக வந்து என் இதயத்தைத் தொடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சிலிர்த்துப் போகின்றேன்.

என்னால் மௌனமாக இருக்க இயலவில்லை.

"வாறன் மாமா" எழுந்து வாசலுக்கு வருகின்றேன்.

மாமா அவருக்குரிய இடத்தில் காய்ந்துபோன பனம் ஒடியலாக சுருண்டு போய் இருக்கின்றார்.

நான் அவருக்கு எதிர்ப்புறத்து அரைச்சுவரில் வந்து அமருகின்றேன்.

மாமா மெல்லத் தலையைத் திருப்பி காலில் இருந்து தலைவரை நோக்கி எனது முகத்தில் வந்து அவர் பார்வை தரித்து நிற்கிறது.

அவருக்கு முதுமையிலும் கூர்மை மழுங்காத விழிகள்.

மெல்லிய இருளிலும் என்னைச் சரியாக அவதானிக்கின்றார். அவர் விழிகளில் முன்னர் இருந்த கலக்கம் இப்ப தெளிகிறது.

"ராசுவுக்குச் சுகமில்லையாம்"

"காச்சல்"

"டெங்கோ... என்னவோ புதுப்புது வருத்தங்கள் சொல்லுகினம்"

"இது... சாதாரண காச்சல்"

"கொதிக்காச்சல்... தலையிலே வெய்யில் பட்டுப்போச்சு... எத்தினை நாள்!"

"ஒரு கிழமை ஆச்சு!"

"ஹூம்.... எனக்கார் சொல்லுகினம்!"

மாமாவின் பெருமூச்சு அவர் நெஞ்சச் சுமையாக காற்றோடு கலக்கிறது. ஆனால் யாரையும் குறையாக வாய் திறந்து ஒரு வார்த்தை மாமா சொல்லமாட்டார்.

எதைக் கேட்டாலும் மாமா ஒருபதில் வைத்திருக்கின்றார். அது எனக்குத் தெரியும். தெரிந்து கொண்டே அவரிடம் கேட்கின்றேன்.

"மாமா சாப்பிடுங்கோ!"

"மத்தியானம் நல்ல சாப்பாடு"

"ஒரு தேத்தண்ணி!"

"குடிச்சிட்டுத்தான் வந்தனான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா வெளியே போய் வாய் நனைத்துவிட்டு வீடு வருகின்றாரென அவர் மருமகள் அறிந்தால் போதும். அவள் நெருப்பு எடுத்துக் கொண்டு நிற்பாள். வாய் திறந்து சீறுவாள் அவள் நாவின் சுட்டெரிக்கும் அக்கினிச் சுவாலையில் அவர் வெந்து கருகிப்போகின்றார்.

"அவருக்கு வயிறு நிறைய எந்த நேரமும் கொட்டுறது போதாதெண்டு ஊரிலே பூசை பாத்துப்போட்டு வந்திருக்கிறார்."

"மூண்டு நேரமும் வயிறு வெடிக்க விழுங்க வேணும்"

"வெட்கம் மானமில்லையே வீட்டுக்குவீடு கைஏந்தி நக்கித் திரிகிறார்.

"தின்னாமல் கொள்ளாமல் கிடந்து குறண்டினவர் இப்பதான் வாயைத்திறந்து திண்டு தள்ளுறார்"

மாமாவுக்கு வந்து வாய்த்த மருமகள் அவர் மனைவி போலத்தான் அவர் மனைவியின் தம்பி மகள்.

அவள் கண்ணில் அவர் படும் போதெல்லாம் இல்லாத பொல்லாத பழிகள் சொல்லிச் சொல்லி அவமதித்துக் கொண்டிருக்கின்றாள்.

அவரைக் கேலி செய்வதும் கேவலப்படுத்துவதுமே அவளுக்கு வேலை.

"அத்தான் உங்கடை அப்பா சும்மா கிடக்கிறாரில்லை"

"அவரை அடக்கி வைச்சுக் கொண்டு கிடக்கச் சொல்லு"

"எப்பபாத்தாலும் பசிக்குது... பசிக்குதெண்டு..."

"ஓமாம் அவர் உழைச்சிங்கே குவிச்சு வைத்திருக்கிறார்... உழைச்சுழைச்சு ஆருக்கோ குடுத்துப்போட்டு..."

"வீட்டிலே இருந்து எந்த நேரமும் பழஞ்சீலை கிழிஞ்சதுபோல புறுபுறுத்தால் வீடு விடியுமே!"

"அந்த நாயை வாயை மூடிக் கொண்டிருக்கச் சொல்லு"

"பட்டினி போட்டால் தான் கொழுப்பு அடங்கும்"

அவர் மகன் மனைவி சொல் கேட்டு எப்பொழுதும் அவரைத் திட்டித்தீர்த்துக் கொண்டிருக்கின்றான்.

மாமா வாய் திறப்பதில்லை. மனைவியுடன் வாழ்ந்த காலத்திலும் அப்படித்தான். அது அவர் சுபாவம். எவரோடும் அதிர்ந்து பேசி அறியாதவர். அவசியமில்லாது அடுத்த வீட்டுப் படலை திறக்காதவர். தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையே தனக்குத் துணை என்று நம்புகின்றவர். யாரிடத்திலும் போய் கை ஏந்தி நிற்காதவர்.

"நான் உழைக்க வேணும், என்ரை உழைப்பிலே தின்னவேணும். அது எவ்வளவு சந்தோஷம். அப்பதான் சாப்பிட்டது எனக்குச்சமிக்கும்."

மாமா மந்திரம்போல இதைச் சொல்லிச் சொல்லி வாழ்ந்தவர். எவர் வீட்டுக்கும் அவர் இப்ப போய்வருவதில்லை. ஆனால் என்னைப் பார்க்காமல் இருக்க மாத்திரம் அவருக்கு இயலுவதில்லை. அவர் என்னைத் தேடிக்கொண்டு வந்து போவது வீட்டில் அறிந்தால்...

"வீட்டிலே திண்டு கிடப்பம் தின்னாமல் கிடப்பம் இவர் ஊரெல்லாம் போய்ச் சொல்லி பறை அடிச்சுப் போட்டு வாறார்"

"எங்கடை கதையளை மற்றவைக்குப் போய்ச் சொல்லித் திரிகிறார்"

"வயிறுதான் இஞ்சை மனமெல்லாம் எங்கோ!"

"வீட்டிலே சின்ன அலுவல் செய்ய ஏலாது... ஊர் உலாத்த மட்டும் ஏலும் இண்டைக்கு அவர் வரட்டும் வரட்டும்."

கணவன் வீடுவந்து சேர, அவள் காத்திருந்து பழி மூட்டி விடுவாள்.

"என்ன... அவன் வீட்டுக்கு இந்த நாய் போனதே! எத்தனை நாள் சொல்லுறது அங்கே நக்கப்போகாதை எண்டு. உன்னைக் கொலை செய்தாலும் எனக்கு வாற ஆத்திரந்திராது. ராசு... ராசு... எண்டு என்ன எடுத்துக் கொண்டு போய் ஒளிச்சொளிச்சுக் குடுக்கிறார்!"

அவன் துள்ளிக் குதிக்கின்றான். கை நீட்டி அவருக்கு அடித்தும் இருக்கின்றான்.

அந்தக் குடும்பத்தில் இருக்கும் எல்லாருக்கும் என் மீது ஒரு வெறுப்பு. இப்படி ஒரு உணர்வை அவர்கள் மனங் களில் வளர்த்து விட்டவள் அவர் மனைவி தான்.

மாமா தேடிக் கொண்டு என்னிடம் வருவார். அதிகநேரம் தரித்திருக்க மாட்டார்.

இனி இங்கிருந்து புறப்பட்டுவிடுவாரென மனதில் நான் எண்ணிக் கொண்டிருக்க, வீட்டுவாசல் லயிற் திடீரென ஒளிர்கிறது.

மாமாவை இப்பதான் நான் நன்றாகப் பார்க்கின்றேன்

ஓ... மாமா!

வாடிச் சோர்ந்து போன முகம். பஞ்சடைந்த கண்கள். கத்தரிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாமல் வளர்ந்து சுருண்டு கலைந்து தொங்கும் வெள்ளை முடி. தாடை யிலு உதட்டிலும் மயிர் வளராத சருமத்தில் சுருக்கங்கள். வரிவரியாக மடிந்து உள்ளே ஒட்டின வயிறு. அரையில் அங்கங்கே கிழிந்து கிடக்கும் சாரம்.

அந்தச் சாரம்.... மெல்லிய பச்சை வண்ணத்தில் தடித்த கோடுகளும், சிறிய கறுப்பு மஞ்சள் கோடுகளும் குறுக்குப்பாடாகப் போட்டிருக்கும் அந்தச் சாரம்...

மாமா அந்தரப்பட்டு என்னைத் திரும்பிப்பார்க் கின்றார். நான் உள்ளே பார்த்துக்குரல் கொடுக்கின்றேன்.

"லயிற்றை நிப்பாட்டுங்கோ!"

லயிற் அணைந்து போகிறது.

அந்தச்சாரம் மாத்திரம் தெளிவாக... மிகத்தெளிவாகத் தெரிகிறது.

மாமாவின் உள்ளத்து உணர்வுகளை புரிந்து கொண்டு முதுமைக்காலத்தில் அவரை வைத்து பாதுகாத்து அன்பாக நடந்தத் தெரியாத அவர் மகன் அவர் இரசனையை விளங்கிக் கொண்டா அந்தச் சாரத்தை அவருக்கு வாங்கிக் கொடுத்தான்.

அந்தச் சாரம்...

ஒரு தீபாவளி தினம். ஊரெல்லாம் கொண்டாட்டம் எங்கள் எங்கள் வீடும் ஊரில்தான் ஆனால் ஏழைகளுக்கு என்ன கொண்டாட்டம்!

மூன்று அக்காமருக்குப் பிறகு நான் ஒரு அருமைத் தம்பி . பிறந்து மூன்று ஆண்டுகளில் அப்பாவைத் தின்றவன். மூன்று அடுப்புக்கற்கள் போல இருக்கும் பெண் பிள்ளைகளுக்குப் பின்னர் அடுப்பில் வைத்து எரிக்கும் விறகு கட்டையாகப் பிறந்தவன் நான் என்று சொன்னார்கள் என்னால் எங்கள் குடும்பம் எரிந்து போனது என்றார்கள்.

அம்மா, அக்காமார் மூவரும் இரவுபகல் என்று பாராமல் ஓய்வில்லாது பனை ஓலைப் பாய் இழைத்துத்தான் குடும்பத்தின் வயிறு நனைந்தது.

இந்தக் குடும்பத்தில் என்ன கொண்டாட்டம்!

தீபாவளிக்கு முதல் நாள் பள்ளியில் ஒன்றாகப் படிக்கும் பக்கத்துவீட்டு நண்பன் குமாரைவழமைபோலத் தேடிக்கொண்டு விளையாடுவதற்காகப் போகின்றேன்.

"வா... வா..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு உற்சாகமாக அவன் என்னை வரவேற்கின்றான். வீட்டுக்குள்ளே ஓடிச் சென்று நீலநிறக்காற் சட்டை ஒன்று, வெள்ளை ரீசேட் ஒன்றைக் கையில் தூக்கி வந்து பெருமையோடு காட்டுகின்றான்.

"அப்பா நேற்று வாங்கி வந்து தந்தவர். இனி கிழிஞ்ச களிசான் பள்ளிக் கூடம் போட்டுக் கொண்டு வரமாட்டேன்"

"தம்பி உனக்குப் புது உடுப்பு எடுக்கயில்லையே!"

அவன் அம்மா கேட்டுக் கொண்டு அருகே வருகின்றா.

'இல்லை அத்தை"

"ஆ... அம்மா பிறகு வாங்கித் தருவா" ஆதாரவாக எனது தலை மெல்லத் தடவுகின்றார்.

"வா.... நாதன் வீட்டை போவம்" தனக்குப்புது உடுப்புக் கிடைத்திருக்கும் உற்சாகத்தில் குமார் அழைக்கின்றான்.

"வேண்டாம்.... அங்கே போக வேண்டாம்" தடுக்கின்றா அவன் அம்மா.

"அவன் இரண்டு பேரையும் வரச் சொன்னவன். போவம்... வா..." குமார் சந்தர்ப்பத்துக்குத் தகுந்த பொய்யைக் கூறி கையில் பிடித்து இழுத்துக் கொண்டு போகின்றான்.

நாங்கள் இருவரும் வந்திருப்பது கண்டு நாதனுக்குப் பெரிய புளுகம் கரைபுரண்டு ஓடுகிறது.

"வாங்கடா.. வாங்க... இதிலை நில்லுங்கோ வாறன்" முன்மண்டபத்துள் இருவரையும் நிறுத்தி விட்டு உள்ளே ஓடிச் சென்று வீட்டுக்கதவைத் திறப்பினால் படாரென்று திறந்து அறைக்குள்ளே நுழைந்து ஒரு பையைக் கையில் தூக்கிக் கொண்டு வேகமாகத் திரும்பி வருகின்றான்.

தீபாவளிப் புத்தாடைகளை எதிர் பார்த்து வந்திருக்கும் எங்களுக்கு அவன் கையில் பையைத் தூக்கிக் கொண்டு வருவது அதிசயமாக இருக்கிறது.

"இஞ்சை பாருங்கோ...!" பைக்குள் கையைவிட்டு ஒவ்வொன்றாக வெளியே எடுக்கின்றான்.

பெட்டி வெடி, கோர்வை வெடி, சக்ரவாணம், வெள்ளிவிறிசு, பூவாணம்...

ஒவ்வொன்றாக வெளியே எடுத்து வைக்கின்றான் எங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலட்சியமாக கர்வத்துடன் நோக்குகின்றான்.

நாங்கள் இருவரும் விழிகளில் ஏக்கம் வழியப் பார்த்துக் கொண்டு நிற்கின்றார்கள்.

"டேய் நாளைக்கு வாருங்கடா!"

"நாங்களும் கொளுத்தத் தருவியார்"

"அதிலை வேலையில்லை. நான் கொளுத்திறதை வந்து பார்த்துக் கொண்டு நில்லுங்கோ!"

"டேய்... என்ரை புது உடுப்புகள்.." உள்ளே போய் அலுமாரியைத்திறந்து எடுத்துக் கொண்டுவருகின்றான்.

ஜீன்ஸ்.. முழுக்கைக்சேட்... ஒருசாரம்.

"நாதன் சாரம் கட்டப் போறான்ரா!"எங்கள் இருவருக்கும் எல்லாம் புதுமையாக இருக்கிறது. நாங்கள் இன்றுவரை ஒருசாரம் அரையில் கட்டிப்பார்த்த அனுபவம் எங்களுக்கு இல்லை. எங்களுக்கு பள்ளிக் கூடத்துக்கு வீட்டுக்கு விளையாட்டுக்கு கோயிலுக்கு படுக்கிறதுக்கு... குளிக்கிறதுக்கு... எல்லாத்துக்கும் அரைக்காற்சட்டைதான்.

"நாதன் இதெல்லாம் எங்கெடா வாங்கினது!"

"ரவுனிலே வாங்கி வந்தவர். அப்பாவுக்கு ரவுனிலே பெரிய கடை இருக்குத் தெரியுமா!"

சாரத்தைத் தொட்டுப் பார்க்க வேண்டும் போல ஆசையாக இருக்கிறது. நாதன் கைகளில் தூக்கி வைத்துக் கொண்டு நிற்கின்றான்.

இருவரும் தொட்டுத்தடவிப் பார்க்கின்றோம். அப்போ வெளியே சென்றிருந்த அவன் அம்மா இந்தச் சமயம் உள்ளே வருகின்றாள்.

"டேய் தரித்திரங்கள்... என்னடா செய்கிறியள் நாளைக்கு நாதன் உடுக்கைக்கே வந்து பார்க்கிறது தானேயடா! இப்ப தொட்டளைஞ்சு ஊத்தையாக்கிறியளே மூதேவிகள்"

அவள் கை ஓங்கிக் கொண்டு பாய்ந்து வருகின்றாள்.

நாங்கள் தம்பினோம் பிழைத்தோமென்று வெளியே ஓடி வருகின்றோம்.

நான் நேரே அம்மாவைத் தேடிக் கொண்டு போகின்றேன். அம்மா எங்கள் வீட்டுக்குடிசைக்குள் தலை குனிந்து இருந்து பாய் இழைக்கின்றா. அம்மாவின் பாயில் அம்மாவுக்கருகே சின்னக்கா, இன்னொரு பாயைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியக்காவும் மற்றக்காவும் இழைத்துக் கொண்டிருக் கின்றார்கள்.

அவர்கள் எல்லோரது கரங்களிலும் ஒரு வேகம், ஒரு அவசரம்.

"அம்மா... அம்மா..."

அம்மாவின் கவனம் முழுவதும் பாயை இழைத்து முடிப்பதில்தான்.

"அம்மா... அம்மா... எனை அம்மா... அம்மோவ்"

"என்ன...! இதுகளை மாலைப்படுகிறதுக்குள்ளே இழைத்து முடிச்சு, மானாண்டிச் சந்தைக்குக் கொண்டு போய் வித்தாத்தான் இரவாவது சோறு காச்சித் தரலாமெண்டால்... அதுக்குள்ளே நீ வந்து கிண்டிக் கொண்டு நிற்கிறாய்"

அம்மாவுக்குப் பின்புறமாக வந்து முதில் சாய்ந்த வண்ணம் கழுத்தைக் கட்டிப்பிடிக்கின்றேன்.

"அம்மா... அம்மா... என்ரை அம்மாச்சி..."

"விடடா... விடடா... உன்ரை அம்மா தான் என்னத்துக்கு இப்ப வளைக்கிறாய்!"

"அம்மா.. எனக்கொரு சாரம் வாங்கித்தானை"

"சாரமோ....!"

"ஓமோம் சாரந்தான்"

"பள்ளிக்கூடத்துக்குப் போடுகிற துக்குக் களிசான் இல்லை"

"களிசான் வேண்டாம்... சாரந்தான் வேணும்"

அம்மா வாய்திறக்கவில்லை கைவேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

"ஓமெண்டு சொல்லெணை... ஓமெண்டு..."

"எப்ப வேணும் நாளைக்கு.."

"நாளைக்கோ..?"

"நாளைக்குத்தானே தீவாளி."

"விடடா... அம்மாவை!" சின்னக்கா சீறுகின்றாள்

"பிள்ளை நீ பேசாமல் இரு!" அவனுக்கும் அவளுக்குந்தான் அடிக்கடி மோதல் வரும். அந்த மோதல் இப்ப வந்து விடாமல் அம்மா தவிர்க்க நினைக்கிறா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா ஓமெண்டு சொல்லனை" என்கிறாள் பெரியக்கா.

"சொல்லிப்போட்டு..." பொய் சொல்லி என்னை ஏமாற்றுவதற்கு அம்மா விரும்பவில்லை.

"அக்கா, ராசு என்னவாம்!" கட்டட வேலைக்குக் கூலியாளாகப் போகும் மாமா கேட்டுக் கொண்டுவந்து சேருகின்றார்.

"தீபாவாளி கொண்டாடப் புதுச்சாரம் வேணும்..." என்கிறாள் சின்னவள்.

"அவன் சின்னப்பிள்ளைக்கு ஆசை யாத்தானே இருக்கும்" அவர் திரும்பி ஆழமாக என்னைப் பார்த்துவிட்டு எங்கள் குடிசைக்குப் பின்னாலுள்ள தனது குடிசை நோக்கி போகின்றார்.

எனக்குத் திருப்தியான பதில் கிடைக்கவில்லை. மனவெப்பிசாரத் துடன் போய்ப்படுத்துக் கொள்ளுகிறேன்.

மறுநாள் புலர்ந்து கண்விழிக்கும் போதும் அந்த நினைவோடுதான் எழுகின்றேன்.

மாமாவின் குடிசைப் பக்கமாகப் போகின்றேன் மாமா வேலைக்குப் போவதற்குப் புறப்பட்டுக் கொண்டு நிற்கின்றார்.

"தீபாவாளி நாள் வேலைக்கு வெளிக்கிடுகிறாய். வேலை செய்ய ஆர்வரப்போகினம்"

"அவசர வேலை செய்து முடிக்க வேணுமெண்டு மேசன் சொன்னவர்"

"பெரியமேசனுக்கு பொருத்தமான பெரியமுட்டாள் நீதானே.. போ...போ...!"

அவர் மனைவி சொல்வதை மாமா காதில் போட்டுக் கொள்ள வில்லை. அவர் அங்கிருந்து புறப்பட்டு வெளியே சென்று விடுகிறார்.

நேரம் நடுப்பகல் தாண்டி விட்டது. சகோதரிகள் மூவரும் தலை முழுகித் தோய்ந்து, பழைய உடுப்புகளை உடுத்திக்திக் கொண்டு கூந்தலை விரித்து உலரபோட்ட வண்ணம் இருக்கிறார்கள்.

"தம்பி வாடியப்பு... முழுகுவம்"

"மாட்டன்... சாரம் வாங்கித் தந்தால்தான் முழுகுவன்"

"இண்டைக்கு என்னெண்டு வாங்குறது... பிறகுவாங்கித்தாறன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை இண்டைக்கு வேணும்"

"வா அப்பு... தீபாவளிநாத்து முழுகவேணும்"

"முடியாது.... சாரம்..."

அம்மா கெஞ்சிக் கெஞ்சிப் பார்த்து விட்டு இறுதியில் எதற்கும் நான் இசைந்து போகாததால் தான் மட்டும் போய் நீராடிவிட்டு வந்து விட்டாள்.

"மோகன்... மோகன்... வா... நாதன் வீட்டை போவம்" குமார் வந்து புத்தாடைகளை அணிந்து கொண்டு வீட்டு முற்றத்தில் நின்று அழைக்கின்றான்.

"நான் வரயில்லை நீ போ"

அவன் அங்கிருந்து மெல்லத்திரும்பிப் போகின்றான். சற்று நேரத்தின் பின்னர் நாதன் வீட்டில் இருந்து பெரிதாக வெடிச்சத்தம் கேட்கின்றது. வாணம் பூப்பூவாகச் சொரிந்த வண்ணம் வானத்தில் மிதக்கிறது.

மாலைப் பொழுது நெருங்கிக் கொண்டு வருகிறது.

"ராசு..."! வாஞ்சையுடன் அழைத்த வண்ணம் மாமா வருகின்றார். அவர் கையில் சுருட்டிய காகிதப் பொதி ஒன்று.

"இந்தா ராசு... இதைக் கட்டு"

மாமா தந்த காகிதப் பொதியைக் குலைத்துப் பார்க்கின்றேன். சாரம்... ஆகா சாரம்...!

மளமள வென்று சாரத்தை உடுத்துக் கொண்டு குமாரைத் தேடிக் கொண்டு ஓடுகின்றேன்.

பின்பு அவனோடு சேர்ந்து கொண்டு நாதன் வீட்டுக்குப் போகின்றேன்.

"எட நீயும் சாரம் உடுத்திருக்கிறியா?" அவன் அலட்சியமாகக் கேட்கின்றான்.

கால்கள் ஓர் இடத்தில் எனக்குத் தரித்து நிற்பதாக இல்லை. திரும்பி எங்கள் வீட்டுக்கு வருகின்றேன்.

எங்கள் வீட்டுக்குப் பின்புறம் இருக்கும் மாமா வீட்டுக்கு ஓடுகின்றேன்.

"டேய் இஞ்சை வா!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமியின் கழுகுக்கண்கள் என்னைக் கண்டு விட்டன. அவள் முகம் மாறுகிறது. பொறாமையுடன் என்னை நோக்குகின்றாள்.

அவள் எதிரில் போய் நான் தலை நிமிர்ந்து நிற்கின்றேன்.

"புதுச்சாரம் கட்டித்தீவாளி கொண்டாடுறாய். ஆரடா வாங்கித் தந்தது உனக்கு கொம்மாவே! அவள் அமசடக்குக்காரி இல்லை இல்லை எண்டு சொல்லிச் சொல்லி..."

நான் வாய்திறக்கவில்லை.

"என்னடா வாயை மூடிக் கொண்டு நிற்கிறாய்

வாயுக்கை கொளுக்கட்டையே! கொம்மா தானே வாங்கித் தந்தவள்!"

"இல்லை"

"பின்னை ஆர்?"

"மாமா"

"மாமாவோ...?"

"ஓம் மாமாதான்"

"இவரோ...! கட்டின பெண்டிலுக்கு மானத்தை மறைக்க ஆனமான துணியில்லை. பிள்ளை குட்டியள் கிழிஞ்ச உடுப்பு.. ஊத்தை உடுப்பு போட்டுத் திரியிதுகள். நல்ல நாள் பெருநாளுக்கு அதுகளுக்கொரு துண்டுத் துணியில்லை.... அவர் தன்ரை செல்லத்துக்கு ராசுவுக்கு சாரம் வாங்கிக் குடுத்திருக்கிறார்.

அவள் பொரிந்து தள்ளுகிறாள்

மாமா தலைகுனிந்து மௌனமாகக் குந்தி இருக்கிறார்.

"இப்பதானே எனக்கு விளங்குது. வேலை செய்த கூலிக்காசு எங்கே எண்டு கேக்க... நாளைக்குத்தல்லாமெண்டு சொன்னவை எண்டு பொய் சொன்ன நீ, நல்ல நாள் பெருநாளிலே கூலி தராமலே விட்டவை"

அவள் வாய்திறந்து ஏச ஏச மாமா கேட்டுக் கொண்டே இருக் கின்றார். அவருக்குக் கோபம் என்பது வருவதே இல்லை.

அவள் மனதிலுள்ள ஆத்திரம் முழுவதும் முழுவீச்சுடன் பட்டென்று என்மீது திரும்புகின்றது.

"தறுதலையாகத் திரியும் தேப்பனைத் தின்னிக்கு எல்லாம் நீ குடுக்கிற செல்லம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சொல்லி வாய் மூடுவதற்கு முன்னம் மாமா சீறிக் கொண்டு பாய்ந்தெழுந்து அவள் குடுமியில் பிடித்து இழுத்து அவளைக் கீழே தள்ளுகின்றார்.

"எட பெண்ணையா.. எடபெண்ணை... என்னை விடடா... உனக்கும் கோள்வம் வருகுதே பெடா... பெண்டில் பிள்ளையைப் பாக்க வக்கில்லாத பெண்ணையனெடா! நீயும் ஒரு ஆம்பிளையோடா நான் என்ட படியால்தான் உனக்கு வாழ்க்கைப்பட்டு பிள்ளையும் பெத்தனான்.

அவள் நிலத்தில் விழுந்து கிடந்து அழுது புரண்டு வாய்க்கு வந்த வாறெல்லாம் அவரைத் திட்டுகிறாள்.

நான் அவளைக்கண்டு அஞ்சி வீட்டுக்குத் திரும்பி ஓடிவந்து விடுகின்றேன்,

மாமா அன்று வாங்கி வந்து எனக்குத்தந்த அந்தச் சாரம்... மாமா இப்ப கட்டிக் கொண்டிருக்கும் இந்தச்சாரம் போல... அதே வண்ணங்கள்.. அதே கோடுகள்...

"மாமா என்னோடை வந்திருங்கோ..." ஒரு தினம் கேட்டேன்.

மாமாவின் பார்வை என்விழிகளை ஊடுருவிப் போகிறது'

"ராசு.... நீவேறெ.அவன் வேறெயல்ல.. எனக்கு இரண்டும் பிள்ளையள் தான். ஆனால் உலகம் என்ன சொல்லும்! பெத்த தேப்பனைக் கை கழுவிவிட்டிட்டான் எண்டு அவனைப் பழி சொல்லும்"

மாமா சொல்வதில் ஒரு நியாயம் இருக்கிறது. நான் அதை உணர்ந்து கொள்ளுகிறேன்.

அவன் என்ன சொன்னாலும் எப்படித்தடுத்தாலும் மாமாவால் என்னை விட்டு மாத்திரம் விலக முடியவில்லை.

அப்பா இறந்த அன்று மாமா என்னைத் தூக்கி நெஞ்சில் வைத்து தோள்மீது சாய்த்து அணைத்துக் கொண்டார். அந்த மாமா இன்றுவரை என்னைக் கீழே இறக்கி விட்டு விடுவதற்கு இன்னும் இயலவில்லை.

மாமா இனி தரித்திருக்கப் போவதில்லை.

'ராசு நான் போவிட்டு வாறன்"

ஊன்று கோலைக் கையில் எடுத்து ஊன்றி ஊன்றி மெல்ல மெல்ல அவர் நடந்து போகின்றார்.

அவர் நடப்பதற்கு ஆதாரமான ஊன்று கோலைத் தானும் எடுத்து அவர் கையில் கொடுக்க இயலாது, நான் அசையாது அமர்ந்திருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண் போறணை

## கே.ஆர்.டேவிட்

ஜீவநதி
சிறுகதைகள்
3

தினசரி உறிஞ்சி, உப்புக்காற்றையே சுவாசித்ததாலோ என்னவோ... சீரான வளர்ச்சி குன்றி குறண்டிப்போன பூவரசு மரங்கள்... தனக்குள்தானே வெந்து வெதும்பிப் போன ஒரு அபலையின் தோற்றம். அந்தப்பூவரசு மரங்களில்... உடல்முழுவதும் அனுபவக் கண்டல்கள்... கடற்கரைக்கும் பிரதான வீதிக்கும் இடைப்பட்ட மேட்டுநிலத்தில் கடற்கரையை அண்மித்து குறண்டிப்போன அந்தப்பூவரசுமரங்கள் வரிசையாக நிற்கின்றன.

பொருத்தமற்ற சுவாத்தியத்தினால் அந்தப் பூவரசுமரங்கள் குறண்டிப் போனாலும்... அந்தப் பூவரசுமரங்கள் மேலால் அடர்த்தியான... பூவரசம் பூக்கள்... குறண்டிப்போன உடலுக்குள்ளும்... இயல் பான உணர்வுகளின் வெளிப்பாடுகள்...

புத்தளம், கடற்கரை.

ஆரவாரித்தெழும்புகின்ற பெரும் அலை களின்றி சிறிய அலைகளோடு அமைதியாகக் காட்சி தரும் கடற்பரப்பு... வரிசையாக நிற்கும் குறண்டல் பூவரசுமரங்கள்... சீரான இடைவெளிகள் உடன் கோடடித்தது போல வரிசையாக நிற்கும் அந்தக் குறண்டல் பூவரசுமரங்களின் கீழ் சீமேந்தினால் கட்ட ப்பட்ட ஆசனங்கள்... தற்காலிக மாக அமைக்கப்பட்டி ருக்கும் சிறியதொரு இறங்கு துறை... இந்த இறங்கு துறையை அண்மித்து சிறியதொரு ஐஸ்கிறீம் கடை. புத்தளம் கடற்கரை பற்றி இவ்வளவுதான் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கடற்கரையில் நின்று மேற்கு நோக்கிப் பார்த்தால் சீன நாட்டரசினால் நிர்மாணிக் கப்படும் நுரைச்சோலை அனல்மின் நிலையக் கோபுரம் மங்கலாக ஆனால் இனங் காணக்கூடியளவிற்குத் தெரியும். இந்த நுரைச்சோலை அனல்மின் நிலையத்தைப் பார்ப்பவர்களில் ஒரு சாரார் அதன் பிரமாண்டத்தைப்பற்றிப் பேசிக்கொள்கின்றனர். இன்னும் சிலர் சீனா நாட்டரசின் அரசியல் கபடத்தனமென்றும் பேசிக் கொள்கின்றனர்.

புத்தளம் கடற்கரையோடு அமைந்திருக்கும் பிரதானவீதியில் புத்தளம் நகரத்தின் நுழைவாயிலில் ஒரு முச்சந்தி. மன்னார் பிரதானவீதி வந்து புத்தளம் பிரதான வீதியோடிணையும் முச்சந்தியிது. சந்தியின் ஒருபுறம் மீன்சந்தையும் மற்றைய இருபுறங்களும் கடைத்தொகுதிகளும் அமைந்துள்ளன. மூவின மக்களும் வாழ்கின்ற சிறியதொரு நகரம். புத்தளம் பிரதானவீதியோடு வந்திணையும் மன்னார் வீதியில் கல்லெறி தூரம் வரை நடந்து இடதுபக்கமுள்ள குறுக்கு வீதியில் இறங்கி நடந்தால் கடற்கரையை வந்தடையலாம்.

புத்தளம் நகரப்பகுதியிலும் நகரத்தையண்டிய பகுதிகளிலும் வசிப்பவர்களுக்கு இந்தக் குறுக்கு வீதியும் இந்தக்கடற்கரையும் மிகவும் பழக்கப்பட்ட இடம் மட்டுமல்ல, மிகப் பிரபலமான இடமென்று கூடக் கூறலாம்.

தினசரி அதிகாலை ஐந்து, ஐந்தரை மணி தொடக்கம் ஏறத்தாழ காலை ஒன்பது மணிவரை இந்தக்குறுக்கு வீதியும் கடற்கரையும் கலகலப்பாகவே இருக்கும். இரவு கடற்தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் அதிகாலையில் இந்த இடத்தில்தான் வந்து சேருவார்கள்.

வீதியின் வலதுபக்கக்கரையோடு வரிசையாக மீன்வியாபாரிகள் இருப்பார்கள். இவர்களைத் தொடர்ந்து மீன்வெட்டிக் கொடுப்பவர்கள் இருப் பார்கள். இடதுபக்கக்கரையோடு மரக்கறி வியாபாரிகளும்... நடமாடும் தேநீர்க்கடை வியாபாரிகளும் நிற்பார்கள்.

மூவினமக்களும் நிறைந்து போய் நிற்பார்கள்.

மீனவனின் வலைக்குள் சிக்கி தனது இயல்பான சூழலை இழந்து மரண அவலப்படும் மீன்களையும் தலைப்பகுதியோடு அமைந்திருக்கும் மீன் செதில்களை சுட்டுவிரல் நகத்தினால் கிளப்பி... குருதி கசியும் மீன்பூவுள்ள மீன்களையும் வாங்கு வதில் பொதுவாகவே சகல மக்களும் திருப்தியடை கின்றனர்... இத்திருப்திக்கு காரணம் நிறைந்ததொரு மரபுமுண்டு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை ஆறுமணியிருக்கும்

வழமைபோல் குறுக்குவீதியும் குறுக்குவீதி வந்து கடற்கரை வீதியோடிணையும் சிறிய சந்தியும் கடற்கரையும் கலகலப்பாகவே இருக்கின்றது.

சில்லறை வியாபாரிகள், சைக்கிள் பெட்டி வியாபாரிகள், மொத்த வியாபாரிகள், வீட்டுத் தேவைக்கு மீன்வாங்குவோர்...

குறுக்குவீதி வந்து கடற்கரை வீதி யோடிணையும் சிறிய முச்சந்தியின் வலதுபக்கமாகவுள்ள குறண்டிப்போன பூவரசமரத்தின் கீழ் குச்சன் அமர்ந்திருக்கின்றான். அவனுக்கு முன்னால், இரண்டு பக்கங்களும் கிழித்து விரிக்கப்பட்ட 'சொப்பிங் பாக்கில்' சில மீன்குஞ்சுகள் கிடக்கின்றன.

பலவகையான மீன்குஞ்சுகள்... திரளி, கொய், கெழுறு, முரல், மணலை... இரண்டு மூன்று நண்டுக் குஞ்சுகள்... குச்சன் இப்போது ஒரு மீன் வியாபாரி... இப்போதென்ன தினசரி காலையில் இந்த இடத்தில் குச்சனைக் காணலாம்... மீன் குஞ்சுகளோடு இருப்பான்...

"ஐயா வாங்கோ... அம்மா வாங்கோ... மலிவு விலை அறுபது ரூபா... லாபாய்... லாபாய்..." குச்சன் இரண்டு மொழிகளிலும் குரல் கொடுக்கிறான்.

குச்சன் சிங்களத்தில் மட்டுமல்ல, நுரைச் சோலை அனல்மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இங்கு வந்து தங்கியிருக்கும் சீனநாட்டவரும் இங்கு மீன்வாங்க வருவார்கள்... அவர்களோடு ஆங்கிலத்திலும் கதைத்துச் சமாளிக்கும் வல்லமையுள்ளவன்.

குறண்டிப்போன அந்தப் பூவரசமரங்கள், பூவரசம் கதியால்களாக இருக்கும் போது குறண்டிப் போனவைகளோ அல்லது வளர்ந்தபின்பு குறண்டிப் போனவைகளோ தெரியாது... ஆனால் குச்சன் குறண்டித்தான் பிறந்தான்..!

சின்னமணி... இவள் தான் குச்சனைத் தனது வயிற்றுத் தோற்புரையில் பத்துமாதங்கள் சுமந்து பெற்றவள்... சின்னமணிக்கு நிரந்தர வறுமை... குறண்டிப்போன பூவரசுமரங்கள் பூத்திருப்பது போல... சின்னமணியின் கருப்பையில் குச்சன் கருவானான். பெண்களின் வயிற்றுக்குள் இரைப் பையும் கருப்பையும் மிக நெருங்கியே அமைந்துள்ளன... கருப்பைக்குள் கிடந்த குச்சன் இரைப் பையின் பசிவெக்கையில் வெந்து... குறண்டி... முகட்டிலிருந்து விழுந்த எலும்புந் தோலுமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலிக்குஞ்சுபோல்... குச்சனும் எலும்புந்தோலுமாக சூம்பிப்போய் சின்னமணியின் வயிற்றிலிருந்து பூமியில் விழுந்தான்...!

ஒல்லித்தேங்காய் போன்ற நெஞ்சாங் கூடு... பருத்தவயிறு... கண்குழிக்குள் சதையற்ற வெறும் தோலுக்குள் புரளும் செத்தல் முளிகள்... ஈக்கில்கள் போன்ற கை கால்கள்... வறுமை என்ற உத்தியோகபூர்வ சீல் குத்தப்பட்டு மை காயாத நிலையிலேயே அவன் பிறந்தான்!

குச்சனுக்கு இப்போது பத்துவயது உடல் நிலையில் வயதுக்குக் குறைந்த வளர்ச்சியையும் அனுபவத்தில் வயதுக்கு மிஞ்சிய வளர்ச்சியையும் அவன் பெற்றிருந்தான்.

வாழ்க்கை அனுபவங்களும், அந்த அனுபவங்களின் தொகுப்பில் புதிய பரிமாணங் களையும் பெறுகின்ற தத்துவப்படிமங்களும் துயர வெக்கையில், கோதுகளை உடைத்து வெளியேறிய குஞ்சுகள்தானே...!

குச்சனுக்கு முன்னாலுள்ள சொப்பிங் பாக்கின் மீது அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பல இன மீன் குஞ்சுகளைப்போல... குச்சனின் மனப்பறிக்குள் பல விதமான அனுபவப் படிமங்கள் நிறைந்திருந்தன...

குச்சன் றோட்டின் வலது பக்கமாக அமர்ந்திருக்கின்றான். றோட்டின் இடது பக்கமாக குச்சனுக்கு நேர் எதிராக கபிரியேல் பாண் வண்டிலோடு நிற்கிறான். குச்சனைப்போல கபிரியேலும் பாண்வண்டி லோடு தினசரி அதிகாலையில் இங்கு வந்துவிடுவான். கபிரியேல் பாண் வண்டிலோடு இதே இடத்தில் தான் நிற்பான்.

அதிகாலையில் இங்கு வருபவர்கள் பல நோக்கங்களுடனேயே வருகின்றனர். மலிவாக மீன் வாங்கலாம். மரக்கறிவாங்கலாம். காலை உணவுக்காக கபிரியேலிடம் சுடுபாண் வாங்கலாம்... இப்படிப்பல நோக்கங்கள்.

கபிரியேல் ஒரு கிறீஸ்த்தவன். அவனுக்கிப்போது ஐம்பது வயது. அவன் ஒரு இருதய நோயாளி. அவனால் பலத்த வேலைகள் செய்யமுடிவதில்லை. குண்டுச் சட்டிக்குள் கொட்டப்பட்ட நண்டுக் குஞ்சுகள் போல்... அவனுக்கு குஞ்சும் குருமானுமாய் ஐந்து பிள்ளைகள்... கபிரியேலின் குடிசைக்குள் சின்னனும் பெரிசுகளுமாய் ஏழு இரைப்பைகள்... இவைகள் தினசரி இயங்கிக் கொண்டே இருக்கும்... கபிரியேல் பதில் சொல்லித்தான் தீர வேண்டும்...!

தனிமனிதனிலிருந்து...சமூகமாக... தேசியமாக வளர்ந்திருக்கும் இந்த மனிதர்களின் இயக்க நிலையின் மூலஸ்தானத்திலுள்ள முதலாவது இயககப்புள்ளி... இந்த இரைப்பையும்... அதிலுள்ள பசியுந்தான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிரியேல் அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் பேக்கரிக்கு வந்துவிடுவான். பாண் போறணைக்குள்ளால் இறக்கிவைக்கப்பட்டிருக்கும் சுடுபாண்களில் ஒரு தொகைப் பாண்களை வண்டிலுக்குள் அடுக்கிக் கொள்வான். அதேபோல் சீனிபணிசுகளிலும் ஒரு தொகையை வண்டிலுக்குள் அடுக்கிக் கொள்வான்.

பேக்கரி முதலாளி வந்து கணக்கெடுத்துப் பதிந்த பின் கபிரியேல் புறப்பட்டு இங்கு வந்து விடுவான்.

இங்கு வியாபாரம் முடிந்ததும் பேக்கரிக்குச் சென்று முதலாளி யிடம் திரும்பவும் பாண்களையும் பணிசுகளையும் பெற்றுக் கொண்டு உள்வீதிகளுக்குள் இறங்கி விடுவான்.

பதினொரு மணி தொடக்கம் பிற்பகல் மூன்று மணிவரை ஓய்வு... அதன் பின் நாலு மணிக்குத் திரும்பவும் பாண் வண்டி லோடு புறப்பட்டால் உள் வீதிகளில் விற்பனை செய்து... இரவு எட்டு மணியளவில்த்தான் பேக்கரிக்கு வருவான்.

மாதம் முடிய சிறிய தொகைப்பணம் சம்பளமாக அவனுக்குக் கிடைக்கும்.

குச்சனுக்கு இந்த மரத்தடியும் மீன் வியாபாரமும் கபிரியேலுக்கு பாண்வண்டிலும் வீதிகளும்... மிகவும் பழக்கப்பட்ட சங்கதிகள்...!

சின்னமணி இவள்தான் குச்சனைப் பெற்றவள். சின்னமணி குச்சனைப் பெற்றதன் மூலம் தாய் என்ற ஸ்தானத்தைப் பெற்றது உண்மை தான்... ஆனால் ஒரு தாயின் கடமைகளை அவளால் செய்ய முடிய வில்லை... அதிகாலை ஐந்தரை மணியளவில் சின்னமணி குச்சனை எழுப்புவாள். 'ராசா குச்சன்.. எழும் பையா.. மீன் பொறுக்கப் போக வேணும்...' கால்கள் இரண்டையும் மடித்து கைகள் இரண்டையும் கால்களுக் கிடையில் செருகியபடி கேள்விக் குறிவடிவில் குறண்டிப்போய் குச்சன் படுத்திருப்பான்.

குச்சனை எழுப்புவதற்கு சின்னமணிக்கு மனம் வராது... அவனுக்குப் பக்கத்தில் குந்தியமர்ந்து குறண்டிப்போய் படுத்திருக்கும் அவனது உப்புப்படர்ந்த முதுகைத் தடவுவாள்... அவளது ஈரல்குலை வெந்து பிளக்கும்...!

"ராசா... குச்சன் நேரம் போகிது... மீன்வள்ளங்கள் கரைப்பட்டிடும்.. எழும்பு குஞ்சு.." அவள் திரும்பவும் எழுப்புவாள். அவளின் கண் குழிக்குள்ளிருக்கும் வெண்மையான நித்திரை அழுக்கு அவளது கண்ணீரில் கரைந்து... நாடியில் தொங்கும்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற பிள்ளை களைத்தான் அதிகாலையில் படிப்பதற்காகப் பெற்றோர் எழுப்புவார்கள்... ஒருபக்கத்தில் தாயும் மறுபக்கத்தில் தகப்பனும் நின்று... எழுப்பி... செல்லம் கொஞ்சி... 'ரீ' கொடுத்து... படிக்க விடுவார்கள்... குச்சனுக்கு இப்போது பத்துவயது.. ஐந்தாம் ஆண்டில் தான் படிக்கிறான். ஏனைய மாணவர்களைப்போல் இவனும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட் சைக்குத் தோற்றியிருக்க வேண்டும்...? குச்சனுக்கு வாழ்க்கைப் பரீட்சை...!

சின்னமணியும் ஏனைய தாய்மார்கள் போல் குச்சனைப் பத்து மாதம் சுமந்துதான் பெற்றாள். ஏனைய தாய்மார்களைப்போல் சின்னமணியும் அதிகாலையில் குச்சனை எழுப்புகிறாள்... ஆனால்... பரீட்சைக்குப் படிக்கவல்ல.

வலைக்குள்ளிருந்து மீன் தெரிவு நடத்தும் மீனவர்கள் பொருத்த மற்ற மீன் குஞ்சுகளைப் பொறுக்கி எறிவார்கள். அவைகளைப் பொறுக்கி விற்பதற்காக...!

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை... அதுதேவையோ... வேதனை யற்றதோ... அதுதான் போகட்டும்... ஒரு கிளாஸ் சாயத்தண்ணீர் கொடுத்தனுப்ப அவளிடம் தேயிலை இருக்காது... கண்கள் நிறையக் கண்ணீர் தான் இருக்கும்.

குச்சன் எழும்பி... சாறம் உடுப்பதுபோல களிசானை உடுத்திக் கொண்டு வலதுகையால் இடது தோளையும் இடது கையால் வலது தோளையும் பிடித்துக் கொண்டு பனிக் குருவி நடப்பது போல் அவன் நடப்பான்...

சின்னமணி பார்த்துக் கொண்டு நிற்பாள்... அவளது தொப்புள் குழியிலிருந்து கண்ணீர் வடியும்...

குச்சன் இரண்டு வழிகளில் மீன் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்வான். ஒன்று மீனவர்களுக்கு மீன் தெரிவு செய்ய உதவி செய்தால் கூலியாக சில மீன்களைக் கொடுப்பார்கள்... அந்தச் சந்தர்ப்பம் சில வேளைகளில்த்தான் கிடைக்கும். இரண்டாவது மீனவர்கள் சில மீன்குஞ்சுகளைக் கழித்து எறிவார்கள் அவைகளைக் குச்சன் பொறுக்கிக் கொள்வான்.

இன்று பொறுக்கப்பட்ட மீன் குஞ்சுகளையே குச்சன் வைத்திருக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச்சனின் குடும்பத்தில் மொத்தமாக ஐந்து சீவன்கள். தகப்பன் மகேந்திரன், தாய் சின்னமணி, மூத்த தங்கை மலர், இவளுக்கு ஆறுவயது. கடைசித் தங்கை குமாரி, இவளுக்கு மூன்று வயது. மகேந்திரனும் சின்னமணியும் கூலிவேலைக்குச் செல்வார்கள். கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக நமது மண்ணில் நடந்த யுத்தத்தினால் நம்மவர்கள் கோவணங்களையும் இழந்து கூலிகளாகிவிட்டதால் மகேந்திரனுக்கும் சின்னமணிக்கும் கூலிவேலை கிடைப்பதும் அரிதாகிவிட்டது.

சூரிய ஒளிக்கதிர்கள் பூமியில் நீண்டு கொண்டிருக்கின்றன. மீன் சந்தை கலகலப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

குச்சன் மீன் குஞ்சுகளையும் பார்த்து அடிக்கடி பாண்வண்டிலையும் பார்த்துக் கொள்கிறான். மீன்குஞ்சுகளை விற்று பாண் வாங்குவது வழமையான செயற்பாடு இன்று மேலதிகமாக கடைசித் தங்கைக்கு ஒரு சீனிபணிஸ் வாங்க வேண்டுமென்றொரு ஆசை குச்சனுக்கு.

"ஒரு பாண் முப்பதுரூபா. ஒரு சீனிபணிஸ் பத்துரூபா... நாற்பது ரூபா... அப்ப ஐம்பதுரூபா சொன்னால்த்தான் நாற்பது ரூபாவுக்கு விற்கலாம்... இன்னும் பத்துரூபா கூடச் சொன்னால் என்ன... அறுபதுரூபா சொல்லுவம்..." குச்சனின் மனம் கணக்குப் போடுகின்றது.

குச்சன் பாண்வண்டிலைப் பார்க்கிறான்.. பெருமளவு பாண்களும் சீனிபணிசுகளும் முடிந்து விட்டன..!

"ஐயா வாங்கோ... உடன்மீன்... மலிவு... லாபாய்... லாபாய்..." குச்சன் தனது கீச்சுக்குரலில் இருமொழிகளிலும் கூறுகின்றான்.

புத்தளம் மூவினமக்களும் வாழ்கின்ற ஒரு பிரதேசம். இங்குள்ள வர்கள் தங்களின் தாய் மொழியோடு ஏனைய இரண்டு மொழிகளையும் ஓரளவு பேசுகின்ற வல்லமையுள்ளவர்கள்.

குச்சன்,

மகேந்திரனுக்கும், சின்னமணிக்கும் திருமணமாகி அவர்களுக்கு முதல் பிறந்த பிள்ளையிவன். சின்னமணியின் வயிற்றில் குச்சன் ஒரு புள்ளியாய் கருத்தரித்தபோது... புதுத்தம்பதிகளின் மனதில் இயல்பாக ஏற்படுகின்ற உணர்வுகள் அவர்களது மனதிலும் ஏற்படத்தான் செய்தது..

ஆண்பிள்ளை பிறந்தால் ஜெயந்தன் என்றும், பெண்பிள்ளை பிறந்தால் ஜெயந்தினி என்றும் பெயர் வைப்பதாகத் தீர்மானித்துக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்பிள்ளை பிறந்தது... ஜெயந்தன் என்று பெயர் வைத்தனர்.

குச்சனின் உடல் தசைப்பிடிப்பின்றி எலும்புந் தோலுமாக குச்சி போல் இருந்ததால் 'குச்சன்' என்று செல்லமாக அழைக்கப்பட்டு... நாளடைவில் அவனது ஜெயந்தன் என்ற உண்மைப் பெயர் மறக்கப்பட்டு குச்சன் என்ற பெயரே பாவனைக்கு வந்து...

குச்சனே தனது உண்மைப் பெயரை மறந்து போய் விட்டான்.

"...டேய்குச்சன்.. பள்ளிக்குடத்திலை புதுப்புத்தகங்கள் குடுத்து... என்ரை புள்ளங்கள் கொண்டு வந்தாங்கள்... உனக்கும் கிடைச்சிதா..." பாண்வண்டிலோடு நின்ற கபிரியேல் குரல் கொடுக்கிறான்.

"...நான் இரண்டு மூண்டு நாள் பள்ளிக்குடம் போகவில்லை. குச்சன் சர்வ சாதாரணமாகப் பதில் கூறுகின்றான். புதுப்புத்தகம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் அவனிடமில்லை.

"என்ரா... குச்சன்... பள்ளிக்குடத்துக்குப் போய் இரண்டெழுத்துப் படிச்சு... சோதினை பாஸ் பண்ணினால்தானே ஏதாவது வேலை வெட்டிக்குப் போகலாம்... இல்லாட்டி வாழ்க்கை முழுவதும் மீன்குஞ்சுகள் பொறுக்கி விக்க வேண்டித்தான் வரும்..." பாம்பின் காலைப் பாம்பறியும் என்பதுபோல தனது வறுமைக்கூடாகக் குச்சனின் வறுமையைப் புரிந்து கொண்ட கபிரியேல் இரக்கப்பட்டு இப்படிக் கூறுகிறான்.

கபிரியேல் வறுமைப்பட்டவன். மிகவும் நல்லவன். அவனது கழுத்தில் ஒரு கறுப்புக்கயிறு.. அந்தக்கயிற்றில் யேசுவின் சிலையோடு சேர்ந்ததொரு சிலுவை...

அவனது நெஞ்சாங்குழியோடு அந்தச் சிலுவை தொங்கிக் கொண்டிருக்கின்றது. அவன் சகல நம்பிக்கைகளையும் இழந்து... அந்தச் சிலுவையை மட்டுந்தான் இப்போது நம்புகிறான்!

கல்விக் கூடங்கள் என்பன பரீட்சை வினாக்களுக்கான விடைகளைத் தயார் படுத்தும் நிலையங்களே தவிர வாழ்க்கைக்கான போதனைகளையோ சமூக முடிச்சுக்களை அவிழ்க்கும் அல்லது அறுக்கும் போதனைகளையோ செய்யும் சமூக நிலையங்களல்ல...

என்ற உண்மையை...

மிக நீண்ட கயிற்றில் 'கல்வி மேய்ச்சல்' நடத்திய மிகப் பெரும் கல்வி யாளர்களாலேயே புரியப்படாமல் இருக்கும் போது... வறுமை என்ற ஒரு முழக்க யிற்றில் 'சமூக மேய்ச்சல்' நடத்திய கபிரியேலால் புரிந்துகொள்ள முடியுமா?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிரியேலின் கழுத்திலுள்ள கறுப்புக் கயிற்றில் நெஞ்சாங் குழியோடு தொங்குகின்ற யேசு வின் சிலையோடு கூடிய சிலுவை... யேசு இன்று வணக்கத்திற்குரியவர். அன்று யேசுவைச் சமூக விரோதியாக்கி... அவனது தலையில் முள்முடியை இறுக்கி... சிலுவையில் அறைந்து சொல்லும்படி ஆணையிட்டதும் அந்த நாட்டின் தலைவன் தான்!

அரசுகளின் இயல்புகள்... அன்றும் இன்றும் ஒன்று தான்!

"...டேய் குச்சன்... நேரம் ஏழரை ஆகிது... வித்து போட்டுப் போனால்த்தானே... பள்ளிக்குடம் போகலாம்..." கபிரியேல் கூறுகிறான்.

"நான் இண்டைக்குப் பள்ளிக்குடம் போகயில்லை" குச்சன் எந்தமனத் தாக்கமுமின்றிக் கூறுகின்றான்.

அதிகாலை ஆறுமணியளவில் இயங்க ஆரம்பிக்கும் இந்தச் சந்தை ஏழரைமணியளவில் உச்சநிலையை அடைந்து அதன்பின்பு படிப்படியாக இறங்கி ஒன்பதுமணியளவில் சந்தை முற்றாகக் கலைந்துவிடும்.

இப்போது நேரம்... ஏழரைமணி... சந்தையின் உச்சநிலை...

மிகவும் அழகானதொரு வெள்ளைக் கார்.. குறுக்கு றோட்டில்வந்து கடற்கரைச் சந்தியால் வலது பக்கந்திரும்பி.. றோட்டுக்கரையோடு நிற்கின்றது.

கபிரியேலும் குச்சனும் ஒருமுறை அந்தக் காரைப் பார்த்துக் கொள்ளுகின்றனர்.

காரின் நான்கு கதவுகளும் திறக்கப்பட்டு ஆண்கள் ஆறுபேர் இறங்குகின்றனர். இவர்கள் ஆறுபேரும் அடிக்கடி இங்கு வந்து போவார்கள் .

அகிலன், சாந்தசீலன், குமரவேள், மகேந்திரன், மூர்த்தி, பிரதீபன்... இவர்கள் ஆறு பேரும் அரசசேவைகளில் உள்ளவர்கள். கிழமையில் ஒருநாள் இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அன்றைய பொழுதைச் சந்தோஷமாகக் கழிப்பார்கள். இன்று சாந்தசீலன் வீட்டில் கூழ் காய்ச்சு வதாகத் திட்டமிட்டுள்ளனர். அதற்கான பொருட்களை வாங்குவதற் காகவே இங்கு வந்துள்ளனர்.

"...அகிலன்... அந்தப் பூவரசு மரத்தடியிலை இருக்கிற பொடியன் வைச்சிருக்கிற மீன் குஞ்சுகளைப் பாத்தீயோ... கூழுக்குச் சூப்பராய் இருக்கும்" சாந்தசீலன் கூறுகிறான். சாந்தசீலனிடம் கூர்மையான கிரகித்தல் திறனுண்டு. மிக இளம்வயதில் பொறுப்பான பதவி வகிப்பவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தசீலனின் பேச்சைக்கேட்ட அவர்கள் குச்சனையும் அவனுக்கு முன்னால் சொப்பிங் பாக்கில் கிடக்கும் மீன்குஞ்சுகளையும் பார்க்கின்றனர்.

குமரவேள்... அவர் ஒரு டாக்டர். அவரின் பார்வை குச்சனில் நங்கூர மிடுகின்றது.

"...என்ன குமரவேள்... அந்தப் பொடியனை உங்களுக்குத் தெரியுமா..." குமரவேளின் பார்வையை அவதானித்த மகேந்திரன் கேட்கிறான். மகேந்திரன் தினசரி பணத்தோடு பழகும் வாய்ப்புள்ள ஒரு வங்கி ஊழியன்.

"...அந்தப் பொடியனைப் பாத்தீங்களா... பச்சைப்பாலன்... மழையுக்கை நனைஞ்ச கோழிக் குஞ்சுபோலை... குறாவிப் போயிருக் கிறான்... சிறுவர் பாதுகாப்பு... சிறுவர்களுக்கு போசாக் குணவு வழங்க வேண்டும்... சிறுவர்களைப் பணயில் சேர்ப்பது சட்டவிரோதமானது... சிறுவர்களை வீட்டு வேலைகளுக்கமர்த்துவது சட்ட விரோதம்... இப்படித் தினசரி நாலுபக்கங்களிலிருந்தும் குரல் எழுப்பப் படுகின்றது. ஆனால் நடைமுறைகள்... முழங்கைக்கும் மொட்டந் தலைக்கும் முடிச்சுப் போட்ட கதை தான்..." குமரவேளின் கதையில் மனிதம் கசிகின்றது.

"...குமரவேள்... நீங்கள் சொல்றதிலை நிறைய யதார்த்த உண்மைகள் இருக்கு..."

"...நாங்கள் நாட்டோடிருந்தோம்... ஒருவன் 'பைபிளோடு' வந்தான்... இப்போது... அவன் நாட்டோடிருக்கிறான்... நாங்கள் 'பைபிளோடு' நிற்கிறோம்..."

"...எத்தனையோ அரசியல் முனிவர்களால் சபிக்கப்பட்ட பூமியிது" இது வரை மௌனமாக நின்ற பிரதீபன் கூறுகிறான். பிரதீபன் கல்விக் கந்தோரில் வேலை செய்பவன். அதனால்த் தானோ என்னவோ... அரசியல் வரலாற்றை முதன்மைப்படுத்தி மிகவும் அர்த்த புஷ்டியாகக் கூறுகிறான்.

"என்ன மூர்த்தி... மௌனமாய் நிக்கிறியள். நீங்களும் ஏதாவது சொல்லுங்கோ..." அகிலன் மூர்த்தியைக் கிண்டுகிறான். மூர்த்தி பிரதேசசபை ஒன்றில் பணிபுரிபவன்.

"...பூவரசுமரத்தடியிலை இருக்கிற அந்தப்பொடியனைப் போலை ஆக்கள் மௌனமாய் இருப்பதும்... எங்களைப் போல ஆக்கள் அதிகமாகக் கதைக்கிறதுந்தான்... இன்றைய நிலைக்கு முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமெண்டு நான் நினைக்கிறன்... மூர்த்தி ஆணி இறுக்கியது போல் கூறுகின்றான்.

"...கூட்டத்தில் கூடி நின்று கூடிப்பிதற்ற லன்றி... நாட்டத்திற் கொள்ளாரடீ கிளியே! நாளில் மறப்பாரடீ..." பாரதியின் இந்தக்கவிதை வரிகள் இன்று மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு வாழத்தான் போகின்றது..." உச்ச நீதிமன்ற நீதியதியின் தோரணையில் ஆனால் மிகவும் நாசுக்காக தன் கருத்தை வெளிப்படுத்து கிறான் அகிலன்.

குச்சன் பாவம்... அவன் இவர்களின் பேச்சுக்களை அவதானிக்க வில்லை... கவனித் தாலும் அவனால் இவர்களின் சூக்குமமான பேச்சுக் களைப் புரிந்துகொண்டிருக்கமுடியாது. ஆனால் கபிரியேல் இவர்களது பேச்சுக்களை அவதானித்துக் கொண்டு நின்றான். அவனாலும் சரிவரப் புரிந்திருக்க முடியாதென்றுதான் கூறவேண்டும்.

சாந்தசீலனின் தலைமையில் நண்பர்கள் கூழுக்கான பொருட்களை வாங்குவதற்காக காரடியிலிருந்து புறப்படுகின்றனர்.

"...சீலன் அந்தப் பொடியனிட்டை உள்ள மீன்குஞ்சுகளை வாங்குவமா..." குமரவேளின் மனம் இன்னமும் குச்சன்மீதே நங்கூரமிட்டு நிற்கின்றது.

"...வாங்கலாம்... இப்ப கேட்டால் டபிள் விலை சொல்லுவான். திரும்பி வரயுக்கை யெண்டால், நேரம் போகிடும் மலிவாய் வாங்கலாம்". சீலன் பதில் கூறுகிறான்.

"...ஐயா வாங்கோ... உடன்மீன்... மலிவு விலை குச்சன், சீலனையும் அவனது நண்பர் களையும் பார்த்துக் குரல் கொடுக்கிறான்.

சீலனும் நண்பர்களும் குச்சனைக் கடந்து செல்கின்றனர்.

குச்சன் பாண்வண்டிலைப்பார்க்கின்றான்.. நாலைந்து பாண்களும், இரண்டு சீனிபணிசுகளும் மட்டும் கிடக்கின்றன.

நேரம் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

பாணும் சீனிபணிசும் முடியப்போகின்றது என்ற மனவேக்காட்டில் குந்தியிருந்த குச்சன் எழுந்து நின்று தலையைச் சொறிகிறான்.

"பத்துரூபா... குறைப்பம்..." குச்சனின் மனம் கூறுகின்றது. "ஐயா... வாங்கோ... ஐம்பதுரூபா..." குச்சன் குரல் கொடுக்கிறன்.

கபிரியேல் குச்சனுக்கு கடனாக பாணும் சீனி பணிசும் கொடுப்பான். அவ்வளவுக்கு கபிரியேல் நல்லவன். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளியிடம் கணக்கை ஒப்படைக்கும் போது... முதலாளி கபிரியேலைத் திட்டுவான்.

நேரம் எட்டை நெருங்கிவிட்டது... பாண் வண்டிலுக்குள் சீனிபணிஸ் கிடந்த இடம் வெறுமையாகக் கிடக்கின்றது.

"கபிரியண்ணை சீனிபணிஸ் முடிஞ்சிதா..." குச்சன் மனம் பொறுக்கமுடியாமல் கேட்கிறான்.

"ஓமடா குச்சன்... சீனி பணிஸ் முடிஞ்சிது... பாணும் முடியப் போகிது..." கபிரியேல் வேதனையோடு கூறுகிறான்.

சீலனும் நண்பர்களும் வருகின்றனர். ஒவ்வொருவரின் கைகளிலும் ஒவ்வொரு சொப்பிங் பாக்...

"...தம்பி... மீன்குஞ்சுகள் என்ன விலை..." சாந்தசீலன் குச்சனிடம் கதை கொடுக்கிறான். அவனது கதையில் இலேசான நளினம்...!

"நாப்பதுரூபா..." மீண்டும் பத்துரூபா குறைத்து விலை கூறுகிறான் குச்சன்.

"என்ன தம்பி... முள்ளு முத்தாத இந்த மீன்குஞ்சுகள் நாப்பது ரூபா பெறாது..." அந்த மீன் குஞ்சுகளை வாங்கவேண்டுமென்ற முடிவு சீலனுக் குண்டு... அதைக் காட்டிக் கொள்ளாமல் புறா இருக்க முட்டை எடுக்கும் தந்திரத்தில் பேசுகிறான். மீன்குஞ்சுகள் வாங்குவதில்க் கூட உளவியல் தந்திரம்...!

"நீங்கள் எவ்வளவு கேக்கிறியள்..." மூளை தலைமண்டைக்குள் அமைந்திருப்பதாலோ... என்னவோ தலையைச் சொறிந்தபடி குச்சன் கேட்கிறான்.

"...என்ரை மதிப்புப்படி ஒரே பேச்சு இருபதுரூபா தாறன்..." இருபத்தைந்துரூபா கொடுக்கலாம் என்ற தனது முடிவை வைத்துக் கொண்டு இருபதுரூபா கேட்கிறான்.

மீன்சந்தைக்குள்ளும் நாம் கற்றுக் கொள்ளவேண்டிய அனுபவங்கள் நிறையவுண்டு!கபிரியேல் சகலதையும் அவதானித்தபடி நிற்கிறான்... அவனுடைய அனுபவத்தனத்தில் இப்படி எத்தனையோ சூட்டுக்காயங்கள் உண்டு!... குச்சன் பாவம் அதிர்ந்துபோய் நிற்கிறான்.

"...என்ன தம்பி... கடுமையாய் யோசிக்கிறாய்... நட்டமெண்டால் வைச்சுக்கொள். நான் போறன்..." குச்சனின் மனநிலை தனக்குச் சாதகமாக இருப்பதைப் புரிந்து கொண்ட சீலன் இரண்டாவது தாக்குதலை நடத்துகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையில் ஒரு கிலோமீற்றர் தூரம் நடந்து... கடற்காற்றின் காலைக் குளிர்... கரம்பை முட்களாய் உடலைக் குத்த... மீனவர்களால் கழித்து எறியப்படும் மீன்குஞ்சுகளை கடல் நீருக்குள் ஓடியோடிப் பொறுக்கி... களிசானிலிருந்து நீர் சொட்டச் சொட்ட இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாகக் காத்திருந்து... முடிவு... தங்கச்சிக்கு ஒரு சீனி பணிஸ். அதுதான் போகட்டும் ஐஞ்சு சீவன்களின் காலைச் சாப்பாட்டிற்கு ஒரு பாண் வாங்க முடியாத நிலை...!

"...சரி... தம்பி... ஐஞ்சுரூபா கூடத்தாரான்... மீன் குஞ்சுகளைத் தா..." குச்சன் சஞ்சலப்பட்டுப் போய் நிற்பதை உணர்ந்த சீலன் தனது மூன்றாவது தாக்குதலை நடத்துகிறான்.

குச்சன் வீழ்ந்து விட்டான்.

சீலன் மீன்குஞ்சுகளோடு புறப்படுகின்றான்.

குச்சனின் பிஞ்சுக்கைக்குள் இருபத்தைந்து ரூபா... திகைத்துப்போய் நிற்கின்றான்! குச்சன்!

"...என்ன குச்சன் யோசிக்கிறாய்... யோசிக்காதை... எங்களைப் போலை ஆக்களுக்கு இதுதான் முடிவு...

"...யேசு கூட ஒரு முறைதான் முள்முடி தாங்கினவர்... ஒரு முறைதான் சிலுவை சுமந்தவர்... ஆனால் எங்களுக்கு..."

தினசரி வறுமை என்ற சிலுவை... கண்ணீர் என்ற முள்முடி எங்களைப் பெட்டியுக்கை இறக்கப் போறதில்லை..."

குச்சன் பச்சைப்பாலன்... அவனுக்கு இந்த அனுபவப் பேச்சுக்கள் புரியப்போவதில்லை, என்பது கபிரியேலுக்குத் தெரியாமலில்லை... இருந்தும் குச்சனுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைப் புரிந்து கொண்டதால் ஏற்பட்ட உணர்வு மேலீட்டால் தனது மனதில் பட்டதை அப்படியே கூறுகின்றான்.

கபிரியேல் மிகவும் அனுபவசாலி. சமுகத் தாக்கங்களுக்குள்ளாகி உணர்ச்சி வசப்படும் போது தனது மனதில் தோன்றுபவைகளை அப்படியே! கூறிவிடுவான். ஆனால் அவனது பேச்சில் நிறைய அர்த்தங்கள் இருக்கும்...!

பாண் வண்டிலுக்குள் படிந்திருந்த பாண் தூள்களைத் துப்புரவாக்கிக் கொண்டு நின்ற கபிரியேல்... திருப்பவும் குச்சனைப் பார்க்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் குச்சன். அதே இடத்தில் விறைத்துப் போய் நிற்கின்றான்!

வறுமையின் யதார்த்தநிலை... வறுமைக்கான பின்புலம்... வறுமையின் வரலாறு... இவைகளைத் தொகுத்துப் பார்த்துச் சிந்திக்க அவனால் முடியுமா?...

பாம்பின் காலைப் பாம்பறியும் என்பார்களே... குச்சனின் மனவேதனையைத் தனதாக்கி உணர்கிறான் கபிரியேல்.

"...டேய் குச்சன்... என்னடா யோசிக்கிறாய். அரைக்கிலோ பச்சை அரிசி வாங்கிக் கொண்டு போய்க்குடு... கஞ்சி காய்ச்சிக் குடிச்சிட்டுப் படுக்க வேண்டியது தான்...". "எங்களைப் போலை ஆக்கள் தங்கச்சிக்கு சீனிபணிஸ் வாங்கிக்குடுக்க ஆசைப் படக்குடாது.. சுவையாய் சாப்பிட ஆசைப்படக் குடாது... எதிலையும் ஆசைப்படக்கூடாது..."

தினசரி... பசிக்குச் சாப்பிட்டால் அது போதும்..." இப்படிக் கூறிய கபிரியேல் தொடர்ந்தும் பாண்வண்டிலைத் துப்புரவாக்குவதில் ஈடுபடுகிறான்

பாண்வண்டிலைத் துப்புரவாக்கியபடியே அவன் கதைக்கின்றான்... தனது பேச்சை யாராவது கேட்கவேண்டுமென்றும் அவன் எதிர்பார்க்க வில்லை... எதிர்பார்ப்பதும் இல்லை..!

அவன் பேசுகிறான்...

"...பிறந்த உடனை... இந்த மண்ணிலை என்ரை பிறப்பை உறுதிப்படுத்த பிறப்புப் பதிவு செய்யவேணும்"

"...பதினாறு வயது வந்திட்டால்... இந்த நாட்டுப் பிரசை எண்டதை உறுதிப்படுத்த... அடையாள அட்டை எடுக்க வேணும்..."

"அதுக்குப் பிறகு ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்த வாக்குரிமைப் பதிவு செய்ய வேணும்..."

"...எல்லாப் பதிவுகளையும் செய்து போட்டு... அடுப்புக்கல்லிலை தலையை வைச்சு... இரைப்பை வலிப்பெடுத்துப் படுத்திருக்கிறம்..."

"...அதுக்கொரு பதிவில்லை...! அதைப் பற்றிக் கேட்டால்... அதுக்குப் பதிலுமில்லை...!?"

"இரைப்பை வலிப்பெடுத்துச் செத்துப் போனால் அதுக்கொரு பதிவுண்டு... மரண அத்தாட்சிப்பத்திரம்!..?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...எங்கடை வாழ்க்கை.. பாண்போறனை மாதிரி.. அதுக்குள்ளை நாங்களெல்லாம் பாண்கள் மாதிரி... வெந்து கருகிப்போறதுதான் முடிவு..." இப்படிக் கூறிய படி வண்டிலைத் தள்ளிக்கொண்டு கபிரியேல் புறப்படுகின்றான்.

குச்சன் குந்தியிருந்த கல்லுமட்டும் கிடக்கிறது... குச்சனைக் காணவில்லை...!

நாளைக்குக் காலை... இதேநேரம்... இதே இடத்தில் இருவரும் சந்திப்பார்கள்...!...?'"

**இதழ் - 16 தை -2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிழப்பும் பின்பும்

குந்தவை

ஜீவநதி
சிறுகதைகள்
4

**வா**னம் இருண்டு கொண்டு வந்தது. ஆனாலும் இப்பொழுதெல்லாம் பெரிதாக மழை பெய்வதில்லை. சிறிது நேரத்தில் மழை நின்று வானம் வெளித்து விடும்.

மழை பெரிதாகப் பெய்தால் கிடுகு மூடிய தெற்கு மூலைச் சுவர் பக்கமாக மழை நீர் ஊறி இறங்கி தரையில் தேங்கி விடும். பிறகு சந்திரா வந்து மழை நீரை தட்டி வெளியேற்றி பழம் துணி கொண்டு தரை ஈரத்தையும் துடைக்க வேண்டும். சந்திராவிற்கு இருக்கும் வேலைகளுக்குள் இதுவும் ஒன்றாகிவிடும். இப்படிச் செய்தால் தான் அவளும் அர்ச்சகாவும் இரவில் தரையில் படுத்துறங்க முடியும்.

மழை பெய்யத் தொடங்கிவிட்டது. செல்வகுமார், வெளி வாசல் படியில் மழைப் புள்ளிகள் பொட்டு பொட்டாய் விழுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். விழுந்த மழை நீர் சிறு சிறு கொப்பளங்களாக நகர்ந்து பின் நின்றுவிட்டது.

மழை நின்று விட்டலாம், வெளி வாசல் படியின் கீழே நிலத்தில் மழை நீர் தேங்கி நின்றது.

றோட்டால் ஒரு மோட்டார் சைக்கிள் போனது. தொடர்ந்து அடுத்தடுத்து இரு சைக்கிள்கள் போயின. சைக்கிள் பெடல்களை உழக்கும் கால்களே கண்களில் நிறைத்துக் கொண்டு தெரிந்து இழுபட்டு மறைந்தன.

அவனின் கைகள், அவனையறியாமலே மொண்ணையாகி விட்ட முழங்கால்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைச் சுற்றி நீண்டிருந்த தகர உருளைகளையும் தடவிக் கொடுத்தன.

முன்பெல்லாம் முழங்கால்களில், குத்தி குத்தி குறண்டி இழுக்கும் வலி, நரம்பு வழி ஓடியே முழு உடம்பையுமே துவள அடிக்கும். கால்களை அழுத்தித் தேய்க்க ஓடும் கைகள் முழங்கால்களுக்கு கீழே வெறுமை கண்டு தவிக்கும். மனம் அரண்டு போய் கிடக்கும்.

இப்பொழுது காயமெல்லாம் ஆறிவிட்டது தான். ஆனால் இரவில் நித்திரையில் திடீர் திடீரென்று முழங்கால்கள் தூக்கிப்போடும். விழித்தால் முழங்கால் நரம்புகள் யாவும் விண் விண் என்று உளைந்து கொண்டிருக்கும். முதுகெலும்பு வலி எடுக்கும். கீழே படுத்திருக்கும் சந்திராவிற்கு தெரியக் கூடாதென்று மௌனமாய் வலி பொறுத்து புரண்டு புரண்டு படுத்து உழன்று ஒரு விதமாய் சமநிலை கண்டு மறுபடியும் தூங்க சாமம் கடக்கும்.

நடந்தவற்றை நினைக்கும்பொழுது, ரணகளமாகி விடும் மனமும் இப்பொழுது சற்று ஆறித் தான் விட்டதென்றாலும் 'கால்கள் இல்லை' என்ற உண்மை முகத்தில் வந்து அறைய இரவு நேரங்களில் அவன் அலமந்து போய் விடுவான். 'எதிர்காலம் என்பது வெறுமையாய்' அவன் முன் நிற்கும். மனம் நடந்த சம்பவங்களில் மீள விழுந்து விழுந்து புரளும்.

ஐந்து வருடங்களுக்கு முன்பு, ஊரை விட்டு வன்னிக்குப் புறப்பட்டு போயிருக்க வேண்டாம். தன் சின்ன மகனை துண்டம் துண்டமாகச் சிதறக் கொடுத்துவிட்டு இப்படி இரு ஊன்றுகோல்களுக்கிடையே தாண்டி தாண்டி ஊர் திரும்பி வந்து சொந்த வீட்டில் கூட இருக்க அனுமதி இல்லாமல் கைவிடப்பட்ட இந்த சிறு கடைத் தொகுப்பிற்குள் வீழ்ந்து கிடக்க வேண்டாம்.

வன்னியில் மச்சான் செத்துப் போனார் என்ற தகவல் வந்தபொழுது மனம் கேட்கவில்லை. தங்கை குழந்தைகளோடு தனியே என்ன செய்வாளோ என்ற அவதியில் சந்திராவையும் பிள்ளையையும் கூட்டிக் கொண்டு வன்னி போக நேரிட்டது.

போனது தான் போனார்கள், அந்தியேட்டி முடிந்த கையோடு திரும்பியிருக்கலாம். திரும்பவில்லை.

அங்கு சாமான்கள் எல்லாம் நல்ல மலிவாகக் கிடைத்தன. நல்ல நாட்டரிசி, மரக்கறி வகை, இறைச்சி, தேன் என்று அதோடு குத்தகைக்கு விவசாயம் செய்யக் கிடைத்த நல்ல தோட்டக் காணி.

வேறுமொன்றும் அவர்களை ஊர் திரும்பும் நினைவை வர விடாமல் அடித்திருக்கலாம். அடுத்த சண்டை யாழ்ப்பாணத்தில் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும் என்ற நம்பகமான செய்தி. யாழ்ப்பாணத்தில் சண்டை தொடங்கினால் முதலில் சிதிலமாக்கப்படுவது உயர் பாதுகாப்பு வலயத்தை ஒட்டியிருக்கும் அவனின் கிராமம் தான் என்ற பயமும் தலைகாட்டியது.

ஆனால் நினையாப் பிரகாரமாய் வன்னிக்குள்ளேயே எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.

இனி 'அப்ப செய்திருக்க வேண்டாம், இப்படி செய்திருக்க வேண்டாம்' என்று நினைப்பதில் என்ன பிரயோசனம்?

வன்னிப் பகுதிக்குள் நுழைந்து ஆழ ஊடுருவி கண்ணிவெடிகளைப் புதைத்துச் செல்லும் படையினர் பற்றியே முதலில் பயம் இருந்தது.

இப்படிப் புதைத்த கண்ணிவெடி ஒன்று மோட்டார் சைக்கிளில் போன நண்பன் ஒருவனை கை வேறு, கால் வேறு, உடல் வேறாக ஆக்கிவிட்டதைப் பார்த்துவிட்டு வந்து, இரண்டு, மூன்று இரவுகள் நித்திரையின்றி அவதிப்பட்டது நினைவில் வந்தது.

ஆனால் அதை ஒன்றுமில்லாதது போல ஆக்கிவிட்ட எத்தனையோ சடலங்களைப் பிறகு பார்த்தாயிற்று. முதுகு பிளந்த உடல்களும முகம் தீய்ந்த உடல்களும வயிறு துண்டமிட்ட உடல்கள்.

கூடவே வந்துவிட்டு லொறியில் அரிசி கொண்டு வந்து விநியோகிக்கிறார்கள் என்று முண்டியடித்துக் கொண்டு அரிசி வாங்கப் போய், 'கிபிர்' வந்து குண்டு போட, சதைக் குவியலாகிப் போன தங்கையின் அவள் அணிந்திருந்த சட்டையின் ஒரு பாகத்தினால் மட்டுமே அடையாளம் காணப்பட்ட இடது முழங்கால் பகுதி.

கடைசியாக அவனின் இளைய மகள் வளர்நிலாவின் சிதறிய உடல். அம்மா தான் வந்து மீளப் பிறந்திருக்கிறா என்ற நினைப்போடு ஆசை ஆசையாய் வளர்ந்த மகளும அப்பா அப்பா என்று எப்பொழுதும் காலடியோடு ஒட்டித் திரியும் மகள்.

பதுங்குகுழிகளே தஞ்சமென, வேர்வைக் கசகசப்பு, மூச்சு முட்டல், வெக்கை, மேலே இருந்து சொரியும் மண், எல்லாவற்றை விட குழந்தைகளின் பசி மயக்கம் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு இருந்து ஷெல் அரக்கன் துரத்தி வர எழுந்து தருமபுரம், இருட்டுமடு, வள்ளிப்புனம், இரணைப்பாலை என கிழமை ஒரு ஊராய் ஓடி வழியில் கூவிக் கொண்டு வரும் ஷெல்களின் வீழுமிடம் ஊகித்து சிதறி ஓடி இரைச்சலிட்டு வரும் கிபிருக்கு ஒளிந்து மறைந்து, உயிர் தப்பி புதுமாத்தளனுக்கு வந்ததெல்லாம் இந்த அனர்த்தங்களைச் சந்திக்கத் தானா என மனம் பேதலித்துக் கிடந்து அடிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாதுகாப்பு' வலயத்திற்குள் வந்து விட்டோமென்ற நிம்மதி நொடிப் பொழுதில் மறை இரு புறத்திலுமிருந்து உக்கிரமான 'ஷெல்' வீச்சு. பதுங்குகுழிகளுக்குள் முடங்கிக் கொண்டனர். ஷெல்களோடு கடலில் நிற்கும் கப்பல்களிலிருந்து அடிக்கும் பீரங்கிக் குண்டுகளின் ஒலிகள் காதுகளை வந்து அதைக்கும்.

உடல் கசகசப்பைத் தாங்கமுடியாதபொழுது, இரு தரப்பினர் இடையேயும் ஷெல் வீச்சு சற்று தணிந்து விட்டதென நினைத்த வேளையில் பக்கத்துக் கிணற்றில் குளிக்கச் சென்றான் குடும்பத்தோடு.

குளித்துத் திரும்பி வரும் வேளை படார் என்ற பேரொலியுடன் கண் முன்னே ஷெல் வந்து விழுந்து சிதறுவதைக் கண்டு அதிர்ந்த பொழுது கொடூர வெப்பக் காற்றோடு எரித் துண்டம் முழங்கால் பகுதியைத் தீய்த்துச் செல்வதை உணர்ந்தான்.

"ஐயா" என்ற பயங்கரமான கதறலோடு நிலத்தில் சரிந்தான். எலும்பும் சதையுமான இரத்தக் குழாய் இரத்தம் கக்கிக் கொண்டிருந்தது. இரு முழங்கால் கீழ் பகுதிகள் கருகிய தோல் துணுக்குகளாய் சிதறி இருந்தன.

பெருகும் குருதியைப் பார்த்தபடி சோர்ந்து போகும் கண்களைப் பலவந்தமாகத் திறந்து வைத்து சுற்றுப்புறத்தை ஆராய முற்பட்டபொழுது கோரமாய் காட்சிகள் தெரிந்தன.

கால்களோடு ஒட்டி வந்த குழந்தை வளர்நிலா துண்டமாய் சிதறிக் கிடப்பதை, மனைவி சந்திரா தூக்கி எறியப்பட்டு, கைகள் முடங்க இரத்தம் பெருக முனகுவதை, அர்ச்சனா எங்கோ சுருண்டு கிடப்பதை எல்லாவற்றையும் சோர்ந்து போகும் கண்கள் இனம் கண்டன. ஆற்றாமை யும், இயலாமையும் பெருகிய அதே நேரம் இப்படியே தாமெல்லோரும் செத்துப் போய் விட்டால் ஒரு வித கவலையுமில்லை என்ற எண்ணமும் தோன்றியது.

ஆதரவான கைகள் அவனை மெல்லத் தூக்கி ஸ்ரெச்சரில வளர்த்திய பொழுது அவன் ஏறக்குறைய மயங்கிய நிலையில் இருந்தான். உள்ளூர் மருத்துவமனையிலிருந்து வவுனியா மருத்துவமனைக்கு செஞ்சிலுவைச் சங்கத்தினர் அவனை எடுத்துச் சென்றிருக்கின்றார்கள். அங்கு கடும் மயக்க மருந்துகளில் அவனை ஆழ்த்திவிட்டு முழங்கால்களுக்குக் கீழே இரு பாதங்களையும் எடுத்து விட்டிருக்கிறார்கள். ஆஸ்பத்திரியில்.

முழுமையாக மயக்கம் தெளிந்தபொழுது இரு முழங்கால்களையும் சுற்றிப் போர்த்திய பெரிய கட்டுகள் போடப்பட்டிருப்பதைக் கண்டான். முழங்கால் களுக்கப்பால் ஒன்றுமில்லை. வெறுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்க நினைக்க குமுறி வரும் அழுகையை பல்லைக் கடித்து அடக்கக் கற்றான்.

சந்திராவும் மூத்த மகளும் மன்னார் ஆஸ்பத்திரியில் காயங் களுக்கு சிகிச்சை பெற்று தேறி வருகிறார்கள் என்பது பிறகு தெரிந்தது.

சண்டை முடிந்து, வவுனியா இராமநாதன் முகாமிற்கு கொண்டு வரப்பட்ட பின்னரே சந்திராவையும் பிள்ளையையும் மீளக் கண்டான். சந்திராவிற்கு கை எலும்பு முறிவு சரி செய்யப்பட்டிருந்தது. அர்ச்சனாவின் முதுகிலேறபட்ட எரிகாயமும் மாறி இருந்தது. சந்திராவைக் கண்டதும் அவளோடு சேர்ந்து நடந்தவற்றை நினைத்து ஒரு பாட்டம் அழத் தான் முடிந்தது அவனால்.

முகாம் வாழ்க்கை கஷ்டமாகத் தானிருந்தது. அவனைக் கழிவறைக்கு அழைத்துச் சென்று வரிசையில் நிற்க வைத்து பின் உள்ளே அழைத்துச் சென்று தண்ணீர் சேகரித்து அவனைக் குளிக்க வைத்து நான்கு குடும்பங்கள் சேர்ந்து வாழும் அக்கூடாரத்தின் ஓரம் பாய் விரித்து அவனைப் படுக்கப் பண்ணி, இவற்றுக்கெல்லாம் சந்திரா பட்ட சிரமம் கொஞ்சமல்ல...

அவற்றைப் பொறுக்காது தானே தன் கருமங்களைச் செய்ய பழகிக் கொண்டான். நாள் முழுக்கக் காத்திருந்து, சற்று வரிசை குறைந்த நேரம் கழிவறைக்குத் தத்தித் தத்திச் சென்று வரிசையில் நிற்பவர்களின் அனுதாப அனுமதி பெற்று உள்ளே போய் இரு புறமும் ஊன்றி கோல்களை ஊன்றி அழுத்தப் பிடித்து பாதி குந்தியிருந்த நிலையிலும் பாதி நின்ற நிலையிலும் கடன் கழிந்து இடுப்பை வளைத்து நீர் மொண்டு கழுவி வெளியே வருவதற்குள் களைத்துப் போய்விடுவான்.

முள் கம்பி வேலிக்குள்ளாக முக்கி சந்திரா போய் முண்டியடித்து வாங்கி வந்த பார்சல் உணவைத் தின்று குளிர்ந்த ஈரலிப்பான தலையில் படுத்துறங்கப் பழகி மழைக் காலம் வந்து ஒரே அவஸ்தைப்பட்டு வெள்ள மாகிவிட்ட தரையில் நிற்கவும் முடியாமல் படுக்கவும் முடியாமல் இரவெல் லாம் கண் விழித்து இந்த வாழ்க்கை எப்பொழுது முடியுமென ஏங்கி...

கடைசியில் யாழ்ப்பாணத்தவர்களை அவரவர் சொந்த இடங் களில் குடியமர்த்தப் போகிறார்கள் என்ற செய்தி சொந்த வீடு, சொந்த ஊர் என்ற உணர்வைக் கிளர்த்திவிட ஒரு வித எதிர்பார்ப்போடு நாட்களை எண்ணி ஊரில் போய் கடை கண்ணி வைத்துப் பிழைப்பதாகக் கற்பனை பண்ணி, ஊரில் சொந்த வீட்டில் கொண்டு வந்து இறக்கப்பட்ட பின் வீட்டில் மண்டிக் கிடந்த குப்பை கூழங்களை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நேரம் நாலைந்து ஆமிக்காரர்கள் வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புது ஆள்கள் இரவில் இந்த ஊரில் தங்கமுடியாது"

தாங்கள், புது ஆட்களில்லை என்றும், ஊர்க்காரர்கள் தான் என்றும், சொந்த வீடு என்றும் எவ்வளவோ வாதாடியும் அவை ஒன்றும் எடுபடவில்லை. ஒரு வேளை வன்னியிலிருந்து வந்தவர்கள் என்பது அவர்களை வெருட்டியதோ என்னவோ.

இரவில் தங்குவதற்கு இடம் தேடி ஊருக்கு வெளியே தங்கியிருந்த இந்த கொட்டில் கடையைக் கண்டுபிடித்தனர்.

பகலில் அவன் இந்தக் கடையில் விழுந்தது கிடக்க சந்திரா வீட்டிற்குப் போய் மத்தியானம் சமைத்து அவனுக்கு சாப்பாடு அனுப்பி பின் இரவுச் சாப்பாட்டையும் சமைத்தெடுத்துக் கொண்டு அர்ச்சனாவுடன் மாலைக்குள் இந்தக் கடைக்குத் திரும்பி விடுகிறாள்.

எப்பொழுதாவது குளிக்கத் தோன்றும் நேரங்களில் அவனுக்கு ஓட்டோ நண்பன் ஒருவனின் உதவி கிடைத்திருக்கிறது. வீட்டிற்குப் போய் குளித்து விட்டுத் திரும்புகிறான்.

மதியம் திரும்பி வெகுநேரமாகிவிட்டது. இன்னமும் சந்திராவை யும் பிள்ளையையும் காணவில்லை. வராவிட்டால் மதியச் சாப்பாடாவது யார் மூலமும் அனுப்புவார்கள். இன்று அதையும் காணவில்லை. சாப்பாடு அனுப்ப ஆட்கள் யாரும் கிடைக்கவில்லையோ என எண்ணிக் கொண்டிருந்தவேளை.

கடை சன்னல் வழியாக சந்திராவும் மகளும் விறு விறு என நடந்து வருவது தெரிந்தது. மனம் ஆறுதலடைந்தது.

'றோட்டில ஆமிக்காரன்கள் நிக்கிறாங்கள். நான் வெளிக்கிடேல்ல. ஒரேதா இரவுச் சாப்பாட்டையும் செய்து எடுத்துக் கொண்டு வந்திட்டன்" என்றவாறு சந்திரா உள்ளே வந்தாள்.

அவனுக்கு சாப்பிடக் கொடுத்துவிட்டு வந்து முன்னால் நின்றாள் சந்திரா.

"கையிலிருக்கிற காசெல்லாம் முடியுது. மிச்சமுள்ள இருபது ஆயிரம் நிவாரணக் காசை எப்ப தருவாங்கள்?"

அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

"இனி நிவாரணங்களில் தானா அவன் குடும்பம் தங்கி வாழப் போகிறது?"

கண்கள் லேசாகப் பனித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமுகில் மூடாத வானம்

## செங்கை ஆழியான்

ஜீவநதி
சிறுகதைகள்
5

பரமசாமி தகப்பனின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காகத் தனியே யாழ்ப்பாணம் வந்துள்ளான் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. கனகசபையின் குடும்பத்தில் அவன் தான் மூத்தவன். இரண்டு தங்கைகளையும் இரண்டு தம்பிமாரையும் கொண்ட குடும்பம். தந்தையின் கம உழைப்போடு பரமசாமியின் ஆசிரியை வேலையால் கிடைத்த வருவாயைக் கொண்டு தான் அவர்கள் குடும்பம் ஓடியது. அவர்கள் உழைப்பின் பெரும்பகுதியைப் பல்கலைக்கழகத்தில் படித்துவந்த ஒரு தங்கையும் தம்பியும் எடுத்துக் கொண்டனர். அனைத்தையும் தன்னை நம்பியிருந்த அனைவரையும் இடைநடுவில் கைவிட்டு லண்டனுக்கு ஓடிப்போனான் பரமசாமி.

பரமசாமி என்னோடு படித்தவன். படிக்கின்ற காலத்திலேயே மிக்க சுயநலம் கொண்டவன். ஒவ்வொரு செயலிலும் அவன் சுயநலம் வெளிப்படும். மாங்காய், நெல்லிக்காய் என்பன அகப்பட்டால் தனித்து வைத்து மற்றவர்களுக்குக் காட்டாது சாப்பிடுவான். அம்மன் கோயில் திருவிழாவுக்கு வருவான். பிரசாதத்தை வாங்கிக் கொண்டு விலகிச் சென்று விடுவான். 'அண்ணை... ஒன்று தாங்கோ...' என்று சிறிய பிள்ளைகள் கேட்டாலும் கொடுக்காது சென்றுவிடுவான். வீட்டிலும் அப்படித்தான். தங்கை, தம்பி உறவுகள் கூடப் பார்க்க மாட்டான். சாப்பாட்டிலும் முதல் பங்கு அவனுக்குத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புக்கு ஆசிரியப் பணிக்குச் சென்ற பிறகு அவனது நடத்தை சற்று மாறியது.

"தன்ரை செலவுக்கு எடுத்துக்கொண்டு தம்பி வீட்டுக்கு அனுப்புறான்." என்பார் கனகசபை.

பெரிதாக அனுப்புவான் என நான் நம்பவில்லை.

"அண்ணனிட்ட காசு கறக்கிறதெண்டால் பெரும்பாடு.." என்பான் பரமசாமியின் தம்பி சின்னராசா. "தெரியாமல் யுனிவேசிற்றிக்கு எடுபட்டிட்டன். சிலவு..."

மூத்த தங்கைக்கு ஒரு கலியாணம் பேசினார்கள்.

"ஒரு வருட லோன் எடுத்தனுப்பினால் கலியாணத்தை ஒப்பேற்றலாம்" என்று கனகசபை எழுதினார்.

"என்ன விசர்க் கதை... லோனோ... அது இப்ப எடுக்கேலாது..."

பரமசாமியோடு அயல் பெண் ஒருத்தி படிப்பித்தாள். இருவருக்கும் எப்படியோ பிணைப்பு ஏற்பட்டுவிட்டது. மணந்தால் அவளைத்தான் திருமணம் செய்வதாகப் பரமசாமி முடிவெடுத்துக் கொண்டான். அவளுக்குப் பணம் தேவைப்பட்ட போது ஒரு வருடக்கடன் எடுத்துக் கொடுத்து அவளின் முட்டைத் தீர்த்தான். ஆசிரியத் தொழிலில் ஒரு வருடக்கடன் எடுக்கலாமெனச் சொல்லிக் கொடுத்த வளும் அவள் தான். அப்படியிருக்கப் பின்பும் கடன் எடுக்க முடியுமா? தங்கையின் திருமணத்துக்கு அவனால் உதவ முடியவில்லை.

கலியாணத் தரகர் ஓய்ந்துவிடவில்லை. மாற்றுச் சம்பந்தம் ஒன்றைப்பேசி வந்தார். இந்தக் கலியாணத்துக்கு பரமசாமி மறுக்காமல் ஒப்புக் கொள்வானென நம்பினார். மாற்றுச் சடங்கிற்கு மகன் ஒப்புக் கொள்வானெனக் கனகசபையும் நம்பினான். விடயத்தைக் கேள்விப் பட்டதும் பரமசாமி துடித்துப் போனான். யாழ்ப்பாணத்துக்கு ஓடி வந்தான்.

"என்ன வேலை பார்க்கிறியள். தங்கச்சி மாரை எப்ப கரை சேர்க்கிறதெண்டு எனக்குத் தெரியும். ஏதோ என்னை நம்பித்தான் அவயளைப் பெத்த மாதிரி.."

"உன்னை நம்பித்தானடா தங்கச்சிமார் இருக்கினம்.."

பரமசாமி பொறுமை இழந்தான்.

"என்னைக் கேட்டா அவயளைப் பெத்தியள்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகசபை வாயடைத்துப்போனார். அதன் பிறகு அவரால் எதுவும் பேச முடியவில்லை. அவன் கொழும்புக்குத் திரும்பி வந்தான். தங்கச்சிமாரின் திருமணப்பேச்சும் தடைப்பட்டது. இருந்தாற்போல ஒருநாள் அவன் வந்தான்.

"நான் என்னோடு படிப்பிக்கிற ஆசிரியையைக் கலியாணம் செய்யப்போறன். அவவின்ர அண்ணன் ஒருவன் லண்டனில இருக்கிறான். எங்களைக் கூப்பிடுகிறானாம்." என்றான்.

அவருடைய சம்மதத்தை எதிர் பார்ப்பவன் போல அவன் காணப் படவில்லை. அவருடைய கனவுகள் கலைந்து போயின் பொடிப் பொடியாகின.

"நாங்கள் கை நனைக்காத பகுதி..." அவ்வளவு தான் கூறமுடிந்தது.

"பரிமளம் நல்ல பொடிச்சி.. அந்தவிடத்தில சம்பந்தம் கிடைப்பதுக்குக் கொடுத்து வைச்சிருக்க வேணும். சகோதரங்களுக்காக என்ர வருங் காலத்தை வீணாக்க முடியாது. லண்டனுக்குப் போற தெண்டால் லேசே? செலவழிச்சுக் கூப்பிடுகிறாங்கள்... அங்க போய் உழைச்சு காசு அனுப்புறன். தங்கைச்சிமாரைக் கரை சேருங்கோ.."

பரமசாமி இருந்தாற்போல லண்டனுக்குப் போய்விட்டான்.

அவ்வளவு தான். கனகசபை மனங் கேளாமல் பல கடிதங்கள் எழுதிப்போட்டார். அவருடைய கடிதங்களை மருமகள் படித்துவிட்டு அவனுக்குக் காட்டாமல் மறைத்து விட்டாள் என்பது தெரிந்தது. அவர் போட்ட முதலிரு கடிதங்களுக்கு அவள் தான் பதில் எழுதியிருந்தாள்.

'...அவருக்குக் கடும் வேலை. நான் தான் பதில் வரையிறன். நீங்கள் கை நனைக்காத இடத்தில் அவர் கலியாணம் செய்திட்டார் என்று கவலை உங்களுக்கு. உங்களை இங்கு கூப்பிட என்னால முடியவில்லை. அவர் இங்க பார்க்கிற வேலையைப் பார்த்தால், உங்களால தாங்கமுடியாது. இங்கு ஒரு லோண்றியில் வேலை பார்க்கிறார்..' அதன்பின்னர் ஒரு கடிதத்துக்கும் பதிலில்லை.

தாயின் இறந்த வீட்டுக்குக் கூட வரவுமில்லை. ஒரு அனுதாபக் கடிதம் கூடப்போடவு மில்லை. கனகசபையின் வீட்டிற்குச்சில வேளை களில் செல்ல நேர்வதுண்டு. இவ்வேளை களில் கனகசபை மகனைப் பற்றிக் குறைப்படுவார்.

"இவன் இப்படிச் சுயநலவாதியாக மாறுவான் என்று நினைக்கவில்லை. எல்லா வற்றையும் மறந்திட்டான். நான் போடுகிற கடிதங்களை மருமோள் அவனிடம் கொடுப்பதில்லை எனத் தெரியுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குப் பிள்ளையா, குட்டியா? தாயின்ர செத்த வீட்டிற்கும் வரவில்லை. என்ரை சா வீட்டிற்கா வரப்போறான். கொள்ளி வைக்க மூத்த பிள்ளை இருக்குது என்று நினைச்சன். அது போச்சுது. வீட்டில இருக்கிற புள்ளைகள் முதிர் குமருகளாய்ப் போச்சுது. சீதனம் இப்ப கொஞ்ச நஞ்சமா கேக்கிறான்கள்."

கனகசபையின் செத்த வீட்டிற்குப் பரமசாமி வந்திருக்கிறான் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. அதுவும் தனியனாக வந்திருக் கிறான். கனகசபை செத்துப்போனதாக அறிவித்ததும் 'பிரேதத்தை வைச்சிருங்கோ. நான் வாறன்' என்று அதிசயமாக தொலைபேசியில் அறிவித்தான். மருமகள் பரிமளம் எப்படி அனுமதித்தாள் என்பது அதிசயமாக இருந்தது. இவ்வளவு காலமும் வராத பரமசாமி வருவதென்பது அதிசயமாக இருந்தது.

பரமசாமியின் வருகையுடன் சில கதைகள் நரகல் புரகலாக வெளியில் உலாவின. பரமசாமி பரிமளத்தை விவாகரத்து செய்துவிட்டான் என்று பேசிக் கொண்டார்கள்.

"பழி யாரை விட்டது. குமருகள் பெருமூச்சு விடேக்கை எப்படி வாழுறது? ஏமாத்திப்போட்டு லண்டனுக்குப் போனவனல்லே..."

பத்து நாட்களுக்கு மேல் கருவாடாகக் காத்திருந்த சடலம் கடைசில் தகனம் செய்யப்பட்டது. பரமசாமி முன்னின்று செலவுகளைச் செய்தமை எனக்கு அதிசயமாக இருந்தது.

செலவு வீட்டுக்கு என்னைக் கூப்பிட்டிருந் தார்கள். போனேன் பரமசாமி கப்போடு சாய்ந்து அமர்ந்திருந்தான். உலகத்துக் கவலை யெல்லாம் கவிந்திருப்பதாகப்பட்டது.

முற்றத்துக் கதிரையில் அமர்ந்து கொண்டேன். பரமசாமியின் தம்பி சின்னராசா வெற்றிலைத் தட்டத்துடன் என் அருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

"அக்காமாருக்கு எங்காவது மாப்பிள்ளை பாருங்கோ. ஐஞ்சாறு கொடுக்கலாம்.."

எனக்கு அதிசயமாக இருந்தது.

"பரமசாமி கொடுக்கிறானா?"

"இல்லை.. அண்ணி கொடுக்கிறா.. பத்து இலட்சம் அனுப்பி யிருக்கிறா.."

"அவளோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணியைக் குறை சொல்லா தையுங்கோ. நானும் அவவைப் பற்றிக் குறைவாகத்தான் எண்ணியிருந்தன் முதலில்."

உள்ளே எழுந்து சென்ற சின்னராசா அறைக்குள் சென்று ஒரு கடிதத்துடன் வந்தான். என்னிடம் நீட்டினான். அதே வேளை பரமசாமி திடீரென எழுந்து வந்தான்.

"இந்த வேசையின்ர கடிதத்தை ஏன் எல்லாரிடமும் காட்டுறாய். றைவரோட ஓடினவள்.."

"அதிலையென்ன.. உன்ர கடமையை அவ செய்யிறா.. நீ ஏதோ சரியாக நடந்து கொண்டாய் போல.. நீங்க பாருங்கோ கடிதத்தை.."

"வேண்டாம் சின்னராசா.. பரமசாமி விரும்பவில்லை.."

"என்னைத் துரத்திவிட்டு அவள் பத்து லட்சம் அனுப்பிவிட்டாளாம் பெரிய காசு தானே அங்கத்த மணியில நான் ஒரு வாரத்தில உழைக்கிறது..."

"உனக்குச் சின்னக் காசு தான். அனுப்பி யிருக்கலாமே.. குடியும் கூத்தியுமாகத் திரிஞ்சு போட்டு வந்திட்டார்." சின்னராசா பொரிந்து தள்ளினான்.

"நீங்க வாசியுங்கோ.. அப்பதான் இவயின்ர சீத்துவக் கேடுகள் புரியும்..."

நீண்ட கடிதம்.

"...நீங்கள் இக்கடிதத்தைப் படிக்க விரும்புவியளோ தெரியாது. உங்க அண்ணரின்ர உழைப்பில் ஒரு பகுதியை இத்துடன் அனுப்பி வைத் துள்ளேன். தம்பி. எங்களுக்குப் பிள்ளையில்லை. உன் அண்ணர் எப்பவும் மலடி மலடி என்று ஏசுவார். அடிப்பார். உண்மையில் நான் மலடியல்ல. டாக்ரரிடம் பரிசோதித்துப் பார்த்தேன். கடைசியில் உம் அண்ணரின் கொடு மை பொறுக்காமல் அந்த முடிவை எடுத்தேன். அது ஒன்றும் இந்த நாட்டில பாரதூரமானதல்ல.. இப்ப நான் முழுகாமல் இருக்கிறேன். உன் அண்ணன் செய்யத் தவறியதை நான் செய்யிறன். இத்துடன் அனுப்பியுள்ள பத்து லட்சத்தைப் பயன் படுத்தி மைத்துனிமாரின் கலியாணத்தை முடித்து வைப்பாயென எதிர்பார்க்கிறேன். எப்பவோ இதை அனுப்பியிருக்கலாம். உன் அண்ணர் விடவில்லை...' எனக்கடிதம் நீண்டது.

தலையில் கைகளை வைத்தபடி பரமசாமி அமர்ந்திருந்தான். 'நான் இனி அங்கை போக மாட்டன்' என முணுமுணுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல் கொஞ்சம் தா...

பவானி சிவகுமாரன்

ஜீவநதி
சிறுகதைகள்
6

சுவரில் ஏதோ மோதி விழுந்தது.

"அம்மா சீ திஸ் டேர்ட்டி பெலோ... கிவ் மீ... கிவ் மீ... அம்மா!... அம்மா."

"கீப் யுவர் மௌத் ஷட்"

சண்டை வலுத்தது. மருமகள் இருவர் முதுகிலும் மொத்தும் சத்தம்.

"டீவியை ஓஃப் பண்ணு. வெயார்ஸ் த ரிமோட்? ஹ்கோ அன்ட் டூ யுவர் ஹோம்வேர்க்"

அப்பம்மாவிற்கு கதைப்பது பாதி விளங்கா விட்டாலும், நடந்ததை ஊகிக்க முடிந்தது.

வாரநாட்களில் பொழுது போவதில்லை. விடுமுறை நாட்களில் சத்தம் தாங்க முடிவதில்லை. பேத்தி அபிநயாவிற்கு 'கார்ட்டூன்' பார்க்க வேண்டும். பேரன் அபிலாஷ்க்கு 'டிஸ்கவரி சனல்' பார்க்க வேண்டும் வழமை போல் 'ரிமோட் கொன்ட் ரோலுக்கான சண்டை இது.

மருமகளுக்கும் பொறுமையில்லை. வாரக் கடைசி, வீட்டுவேலை தலைக்கு மேல். போதாக் குறைக்கு இப்போது கண்மூடித்தனமான கோபம் மாமியார் மேல். கையில் கிடைப்பதைத் தூக்கிப் பிள்ளைகளை அடித்து விடுவாள். முன்பு அப்பம்மா பேரப்பிள்ளைகளைச் சமாதானப்படுத்துவது போல் மருமகளைத் தடுத்து விடுவாள். இப்போது மருமகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபத்திற்குப் பயந்து முன்னே வருவதில்லை. பேரப்பிள்ளைகளைக் கூட முன்பு போல் அப்பம்மாவை நெருங்க விடுவதில்லை. மனம் நிலை கொள்ளாமல் குழம்ப, சுவரைப் பிடித்து எழுந்து 'ஹோல்'க்குள் வந்தாள். மேசையில் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டிருந்த பேரப் பிள்ளைகள் திரும்பிப் பார்த்தார்கள். அபிநயாவின் முகம் முழுதும் கண்ணீர். அருகே வரும்படி அபிலாஷ் கையால் சைகை செய்தான். போனதும் கிசுகிசுத்தான்.

"அப்பம்மா!... 'டீவி'யைப் போடுங்கோ."

"பிறகு அம்மா என்னைத் தான் பேசுவா."

"ஆர் யு மாட்? அம்மா உங்களைப் பேசுவாவா?"

பேசாட்டா என்ன? அதான் கொஞ்சநாளா முகத்தை நீட்டிக் கொண்டு திரியுறாவே. பேரப்பிள்ளைகளிடம் இதைச் சொல்ல முடியுமா?

"கொஞ்ச நேரம் படியுங்கோ பிறகு போடுறன்."

"யு ஆர் யூஸ்லெஸ்"

சொல்வதைச் செய்யாவிட்டால் உடனே அபிலாஷ் "யூஸ்லெஸ்" என்கிறான். நான் எல்லாருக்கும் பாரமாய்ப் போய்ட்டனா? பாசத்துக் காய் ஏங்கும் இந்த அப்பம்மாக் கிழவி அபிலாஷ் சொல்வது போல் ஒன்றும் 'யூஸ்லெஸ்' இல்லை.

காலையில் சமைத்தபின் பாத்திரங்களை அப்படியே போட்டுவிட்டு மருமகள் வேலைக்குப் போய் விடுவாள். அப்பம்மா தான் கழுவுவாள். வீடு கூட்டுவாள். குளித்த பின் தன் உடைகளைத் தானே தோய்ப்பாள். பிள்ளைகள் பாடசாலை விட்டு வந்ததும் கதவைத் திறந்து விடுவாள். சாப்பாடு போடுவாள்.

இது மட்டுமல்ல, இளையமகன் மயூரன் – அபிலாஷின் அப்பா இந்த 'அபார்ட்மென்ட்' வாங்கும் போது வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளிடம் சொல்லி உதவினாள். கணவரின் 'பென்ஷன்' பணத்தில் பேரன் பேத்திகளுக்கு தீபாவளி, வருஷம் என்று உடைகள் வாங்குவாள். 'டியூசன்' பணம் கொடுக்கிறாள். இருந்தும்... மகனும், மருமகளும் சில நாட்களாக அவளை நிமிர்ந்து பார்ப்பதில்லை.

இரவு கதை சொல்லும் நேரம். அபிலாஷும், அபிநயாவும் அறைக்குள் வந்தார்கள். படுக்கும் முன் கதை கேட்பது வழக்கம். மகாபாரதம், இராமாயணம் இவற்றி லிருந்து ஏதாவது ஒன்றை அப்பம்மா சொல்வாள். இறுதியில் ஒரு நீதியொன்றைச் சொல்லி முடிப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இன்டர்நஷனல் ஸ்கூல்'லில் படிக்கும் பிள்ளைகள். தமிழறிவு குறைவு. கதைகள் கேட்பதை மகனும் மருமகளும் ஊக்குவித்தனர்.

அப்பம்மா இந்த நேரத்திற்காகக் காத்திருப்பாள். தனிமை அலுப்பூட்டுகிறது. பேரப்பிள்ளைகளின் அருகாமை இந்த நேரத்தில் மட்டும் தான் கிட்டும்.

"அப்பம்மா... அண்டைக்குச் சொன்ன ... கீ ... தோ... தோபதேசம் நல்ல கதை. திரும்பச் சொல்லுங்கோ."

"வேண்டாம். போரிங் ... புதுக்கதை சொல்லுங்கோ."

"ஷட்டப். அப்பம்மா கடமையைச் செய்... மற்றது என்ன?"

"... பலனை எதிர்பாராதே."

"நல்ல வேர்டிங்."

நான் செய்தது பிழையா? பாவம் சுகிர்தா. கண்ணீர் ததும்பிய சுகிர்தாவின் முகம் மனதில் நிழலாடப் பழையபடி மனதில் சுமையேறியது. அப்பம்மாவின் இளைய சகோதரி யோகமலரின் மூத்தமகள் தான் இந்தச் சுகிர்தா.

ஒரு மாதம் முன்பு 'கோலிங் பெல்' ஒலித்தது. யார் இந்த நேரத்தில? வீட்டில் ஒருவருமில்லை. மெலிதான பதட்டம் வரச் சங்கிலியைக் கொழுவி விட்டுக் கதவைத் திறந்தாள். யாரிது? முதலில் தன் மூத்தமகள் என நினைத்து, அவள் தான் வெளிநாட்டில் இப்ப பூசணிக்காய் மாதிரி இருக்கிறாளே... உடனே நினைப்பை மாற்றி.

"யார் நீங்கள்?"

"என்ன... பெரியம்மா, என்னைத் தெரியேல்லயா?... சுகிர்தா"

"அ... அ... வா.. வா"

நீண்ட காலத்தின் பின் எதிர்பாராத சந்திப்பில் மனம் துள்ளியது.

"இது சித்தப்பா." கூட வந்தவரை அறிமுகப்படுத்தினாள். அவளை அணைத்து முகர்ந்த போது கண்ணீர் வழிந்தது.

"எப்ப வந்தனி?"

"ரெண்டு மாசமாகுது. சித்தப்பா வீட்டில நிக்கிறன்... பெரியம்மா வாற மாசம் எனக்குக் கல்யாணம்... கனடா மாப்பிள்ளை."

சிரித்தாலும் அடிக்கடி கண்கள் கலங்குவதை அப்பம்மா கவனித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா எங்க?"

"...காம்ப்பில"

"அ..அ..."

'என்னை முதல்லயே சித்தப்பா வீட்டுக்கு அனுப்பீட்டா. தான் பிறகு காணியை வித்திட்டு இல்லாட்டி யாரிட்டயாவது மாறிக் கொண்டு வாறன் என்டவா."

"......."

"நான் வந்ததோட அங்க வன்னியில பிரச்சனை தொடங்கீட்டுது. இப்ப தங்கச்சியவையோட 'காம்ப்பில இருக்கிறாவாம். நேத்துத் தான் வவுனியாவில இருந்து யாரோ ஒரு ஆள் ஃபோன் பண்ணிச் சொன்னார்."

"வெளிய வரேல்லாதா?"

"அறுபது வயசுக்கு மேல உள்ளவையை விடுகினம். தங்கச்சியவைய விடாயினம். அதான் அவவும் வராம இருக்கிறா"

"அப்ப கல்யாணத்துக்கு"

'தெரியேல்ல... சீதனம் ஒண்டும் கேட்கேல்ல. கல்யாணச் செலவை மட்டும் எங்களப் பார்க்கச் சொன்னவை. தாலிக்கொடியும் நாங்கள் தான் செய்யோணும்... என்ன செய்யிறதென்டு தெரியேல்ல... அம்மா, தங்கச்சியவையை நினைச்சா இரவில நித்திரையும் வருகுதில்ல."

அழும் சுகிர்தாவை வேதனையோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நேத்து தான் அம்மா ஆக்கள் உயிரோட இருக்கிறதே தெரிஞ்சுது. அதுக்குப் பிறகு தான் உங்களப் பார்க்க வந்தன்."

நிறையப் பெண் சகோதரங்களுடன் பிறந்தவள் இந்த அப்பம்மா. சிறுவயதில் வறுமை, காதல் திருமணம் கணவர் ஆசிரியர், பண்டிதர். அவருக்கு ஒரு சிறிய தோட்டம். மெல்லிய சங்கிலியில் தாலியைக் கோர்த்துப் போட்டிருந்தாள். சிறிமாவோ அரசாங்கத்தின் புண்ணியத்தில் எழுபதுகளில் மிளகாய்ச் செய்கையில் பணம் புரள, பதினைந்து பவுணில் தாலிக்கொடி, நாலு பிள்ளைகளின் பின் அப்பம்மாவிற்குக் கிட்டியது. மருமகள் 'லொக்கர்'ரில் வைக்கச் சொன்னபோதும் ஏனோ சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

தங்கையின் நினைவு வந்தது. பிறந்ததிலிருந்து வறுமை. பெயர் தான் யோகமலர். அவளுக்கு மூன்று பெண் பிள்ளைகள். இளையவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்ததும் கணவரின் மரணம். தோட்டம், ஆடு, மாடு இவைகளில் காலம் கழிகிறது.

"அழாத... அழாத."

யோசனையுடன் சுகிர்தாவின் சித்தப்பாவைப் பார்த்தாள். கையாலாகாத்தனம் தெரிந்தது.

"சுகிர்தா! டீ போடப் போறன். உள்ளுக்கு வா."

உள்ளே,

"சித்தப்பா உதவி செய்ய மாட்டாரா பிள்ள?"

"பாவம் அவர். ஒரு அறை வீடு மூண்டு பிள்ளைகள். அதுக்குள்ள தான் நானும். அதுக்கே வாடகை குடுக்கேல்லாம கஷ்டப்படுறார்."

அப்பம்மா 'சூட்கேசை'த் திறந்தாள். தாலிக்கொடியை கையில் எடுக்கும் போதெல்லாம் இனிய நினைவுகளின் ஏக்கம் தாக்கத் தொடங்கும்

"இந்தா... இதை 'பாக்'கிலை வை" தாலிக்கொடியை நீட்டினாள்.

"ஐயோ வேணாம்... பெரியம்மா... வேணாம்."

"பிடி நீ நல்லா இருந்தா தான் உன்னுடைய சகோதரம், அம்மா எல்லாம் நல்லா இருப்பினம்."

"உங்கட பிள்ளைகள் ஏதும் சொல்லுவினம்... கேட்டிட்டுத் தாங்கோ"

"தேவையில்லை... அவைக்குச் செய்ய வேண்டியதெல்லாம் செய்தாச்சு"

கையிலிருந்த இரண்டு சோடிக் காப்புகளையும் உருவி நீட்டினாள்.

"இதையும் வை. எனக்கு கழுத்தில இருக்கிற சங்கிலி காணும்."

"பெரியம்மா இத நான் ஒருக்காலும் மறவன்."

அழுதபடி சுகிர்தா வாங்கிக் கொண்டாள்.

அப்பம்மா 'டீ'யுடன் வெளியே வந்த போது சுகிர்தா, சித்தப்பாவிற்கு நகைகளைக் காட்டிக் கொண்டிருந்தாள்.

"பெரிய உபகாரம் அம்மா" தன்னையுமறியாமல் அந்த மனிதர் கை கூப்பியபடி எழுந்து நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் விடை பெற்ற போது,

"சுகிர்தா! நான் அக்காவிற்குக் காணியை வித்து வெளிநாட்டில் கட்டி வைச்சன். அவள் அங்க ஒரு தம்பியைக் கூப்பிட்டாள். பிறகு மற்றவன் போனான். மயூரன் படிச்சான் எங்கட இந்த நிலைக்கு அவள் தான் காரணம்.

சுகிர்தா ஏன் இதைப் பெரியம்மா சொல்கிறாள் என்று புரியாமல் பார்த்தாள்.

"அம்மா பாவம். சின்னல இருந்து கஷ்டம். உங்களுக்காக தன்னை உருக்கினவ. எனக்கு எப்பிடி என்ர மகளோ அப்பிடித் தான் நீ அவவுக்கு.... நீ தான் மருந்து மறவாத."

" அது என்ர கடமை பெரியம்மா" அழுதபடி விடைபெற்றாள்.

கதவை மூடிவிட்டு ஓடிச் சென்று 'பல்கனி'யில் நின்று அப்பம்மா பார்த்தாள். மலர்ந்த முகத்துடன் சுகிர்தாவும், கையை நீட்டி, ஆட்டி உற்சாகமாகக் கதைத்தபடி செல்லும் சித்தப்பாவும் கலங்கிய கண்களில் மங்கலாகத் தெரிந்தனர்.

ஒரு மாதம் பிரச்சினையில்லாமல் கழிந்தது. ஒரு நாள் மகன் மயூரன் தயங்கியவாறு மனைவி பின் தொடர வந்தான்.

"அம்மா! டீவி திரும்பவும் பழுதாப் போச்சு. எல் சி.டி டீவி வாங்கச் சொல்லிப் பிள்ளைகள் கேட்குது. அதென்டா ஸ்கிரீனும் பெரிசு தியேட்டர்ல பார்க்கிற மாதிரி இருக்கும்."

"......."

"அம்மா, உங்கட தாலிக்கொடியை வச்சுப் பாதுகாக்கிறதும் கஷ்டம் தானே. தந்தீங்களென்டா வாங்கலாம். பழைய 'லோன்' முடியேல்ல. 'ஒபிஸ்ல 'லோன்' தராங்கள்."

"நான் சுகிர்தாக்குக் குடுத்திட்டன்."

"சுகிர்தாக்கா ஏன்?"

"தாயும் இல்ல. கல்யாணச் செலவுக்கு காசில்லாமல் அழுதாள். முப்பத்து நாலு வயசாச்சு. கீழ முப்பத்து ரெண்டுலயும். இருபத்தெட்டிலயும் ரெண்டு தங்கச்சி".

மருமகள் சட்டென்று அப்பம்மாவின் கையைப் பார்த்தாள்.

"மாமீ..! காப்பு எங்க?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குடுத்திட்டன்"

"அவள்... கள்ளி. கல்யாண வீட்டில கதைக்கேக்க கூட இதப் பற்றி ஒண்டும் சொல்லேல்ல."

"கல்யாண வீட்டில என்னெண்டு இதப் பற்றிக் கதைக்கிற... அவள் வேண்டாம் பிள்ளைகள் ஏதும் சொல்லுவினம் எண்டு தான் சொன்னவள்."

"மாமி உங்களுக்கும் பேரப் பிள்ளைகள் இருக்கு. மறந்திட்டீங்களா?"

அத்தோடு மகனும், மருமகளும் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. மயூரனின் வீடு, கார் வாங்குவதற்கு அவள் உதவியதை சுலபமாய் அவன் மறந்து போனான். எனக்கொரு மகள், உங்கட அக்கா, இருந்தபடியால் தான் நாங்கள் நல்லா இருக்கிறம். அது மாதிரி சித்தி குடும்பமும் இருக்கட்டும். மனம் நினைத்தது. வெளியே சொன்னால் அதற்கும் ஒரு கொடும் பதில் வரும்

"அப்பம்மா! இன்னும் கதை யோசிச்சு முடியேல்லயா?"

நினைவுகளிலிருந்து மீண்டு கதை சொல்லத் தொடங்கினாள்.

"பாண்டவர் யார்?"

"அ... தர்மன், வீமன், அர்ச்சுனன்... வரதன்..."

"கூல் வரதன் இல்ல நகுலன், சகாதேவன்."

"சரி இவையெல்லாம் காட்டிற்குப் போனவை தானே?"

"ஓ தேர்ட்டீன் இயர்ஸ் வனவாசம்... மற்றது என்ன வன் இயர்?"

"அஞ்ஞானவாசம். தங்கட உருவத்தை மாற்றி யாரெண்டு தெரியாம தலைமறைவா இருக்கோணும். அப்பிடிக் காட்டில இருக்கேக்க ஒரு பிராமணரின்ர அரணிக்கட்டை மானின்ர கொம்பில மாட்டீட்டுது. மான் அதோட ஓடீட்டுது."

"என்ன அப்பம்மா அது?"

"அரணிக்கட்டை. நெருப்பு மூட்டப் பாவிச்சவை அந்த நாளேல்ல, பிராமணர் பாண்டவரிட்ட வந்து அந்த அரணிக்கட்டைய எப்படியாவது கொண்டு வரச் சொன்னார்."

"மானைப் பிடிச்சினமா அப்பம்மா?"

"பொறு. தர்மர் சகாதேவனை மானைத் தேட அனுப்பினார். அவன் கனநேரமா வரேல்ல. நகுலனை அனுப்பினார். அவனும் வரேல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே அர்ச்சுனன், பீமன் எல்லாரும் போய்ச்சினம். வரேல்ல. தர்மனுக்குக் கவலை வந்திட்டுது."

"அப்பம்மா அவையெல்லாம் எங்க?"

"சொல்றன். தர்மர் தானே தேடிப் போனார். ஒரு குளத்தங் கரையில நாலு பேரும் செத்துக் கிடந்தினம். தர்மன் அழுதார். தேடித் திரிந்ததில சரியான தாகம். தண்ணி குடிக்க குளத்தில இறங்கினார். 'நில்' என்று அசரீரி கேட்டுது"

"எனக்குத் தெரியும் அசரீரி என்டா குரல் கேட்கும். ஆள் தெரியாது."

"நான் கேட்கிற எல்லாக் கேள்விக்கும் சரியான பதில் சொல்லி விட்டுத் தண்ணி குடி.. உன் தம்பிகள் என்னை மதிக்காமல் குடித்து இறந்து விட்டார்கள் என்று அசரீரி சொன்னது. தர்மன் சரி என்றான், சரியான பதில் சொன்னான்."

" பிறகு தண்ணி குடிக்க விட்டுதா?"

"தர்மா நீ நல்லவன். புத்திசாலி எல்லாக் கேள்விக்கும் சரியான பதில் சொன்னாய். உனக்குப் பிடித்த தம்பியைச் சொல், உயிரோடு தருகிறேன் என்று சொல்லிச்சு."

"வீமன் தான் வீரன்."

"இல்ல அர்ச்சுனன் தான் கெட்டிக்காரன்."

தர்மன் யோசித்தான் நகுலனை எழுப்பித் தா என்று கேட்டான்.

"ஏன்வை?"

"அப்பிடித் தான் அசரீரியும் கேட்டுது. துரியோதனனை போரில் வெல்லுறதென்றால் உனக்கு வீமன் அல்லது அர்ச்சுனன் தானே தேவை. ஏன் நகுலனைக் கேட்கிறாய் என்றது. தர்மன் சொன்னான். என் தாய் குந்தி தேவிக்கு மூத்த மகன் நான் உயிரோடு இருப்பது போல், என் சிறிய தாய் மாத்ரிக்கு அவரின் மூத்த மகன் நகுலன் உயிரோட இருக்கட்டும் எண்டு."

அப்பம்மாவின் குரல் தழுதழுத்தது.

"தர்மதேவதை, அவன் முன் வந்தாள். தர்மா! உன் தயாள குணத்தால் என்னை வென்றாய். உன் தம்பிகள் அனைவரையும் உயிரோடு பெற்றுக் கொள் என்றாள்."

"கதை முடிஞ்சுதா அப்பம்மா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் முடிஞ்சுது."

"நீங்க என்ட்ல ஒரு வேர்டிங் சொல்லுவீங்க. இதுக்கு இல்லையா?"

"இருக்கு. உன்னைப் போல் பிறரையும் நேசி."

"அப்பம்மா அழறீங்களா? ஆர் யு கிரைங்?"

"இல்ல."

"கண்ணில தண்ணி வருது."

"விரல் குத்தீட்டுது."

"இல்ல. ஐ நோ. விரல் குத்தினால் ஒரு கண்ணில தான் தண்ணி வரும். சுகிர்தா மாமிக்கு பிக் செய்ன், பாங்கில்ஸ் குடுத்ததுக்கு அப்பா பேசினார் அது தானே?"

'..............'

"அப்பம்மா! நீங்க அப்பாவுக்கு 'உன்னைப் போல் பிறரையும் நேசி' எண்டு கதை சொல்லேல்லயா? டோன்ட் வொரி. நான் வளர்ந்து உங்களுக்கு நிறைய பிக் செய்ன்ஸ், பாங்கில்ஸ் வாங்கித் தாறன்."

"நேரமாச்சு. போய்ப் படுங்கோ" வாசலில் மயூரன் நின்று கொண்டிருந்தான்.

இவன் எப்ப இங்க வந்தவன்? பிள்ளைகள் படுக்கப் போனார்கள்.

"அம்மா! நாளைக்கு நான் வேலையால வரேக்க ரெடியா இருங்கோ. அபிலாஷ், அபிநயா சின்னன்ல போட்ட காப்பு, மோதிரம் எல்லாம் சும்மா தானே இருக்கு வெறுங்கையா இருக்க வேண்டாம். காப்பு வாங்கிக் கொண்டு அப்பிடியே சுகிர்தாவையும் பார்த்திட்டு வருவம். பாவம் அவளுக்கு வேறு யார் இருக்கினம். அவள் எப்ப கனடா போறாள்?...

**இதழ் - 20 வைகாசி 2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிளமை

## க.சட்டநாதன்

ஜீவநதி
சிறுகதைகள்
7

சரசு அதைக்கூறியபோது, இறக்கை விரித்து மேலே உயர உயரப் பறப்பது போல இருந்தது மகேசுக்கு.

"உண்மையாகவா...? என்னைப் பற்றி விசாரித்தாரா, உணர்ச்சியும் அதிமென்மையும் கொண்ட அந்த மனிதர் எழுத்து, இலக்கியம் என்பதற்கு அப்பால் எதையுமே பார்த்தறியாத அவர், மகேஸ் சுகமாக இருக்கிறாவா...? என்று கேட்பதென்றால்..."

நினைவுகளில் கனிந்து கரைந்து போயிருந்த வளைச் சரசு தான் மீளவும் சுயநிலைக்குக் கொண்டு வந்தாள்

"அவர் கதைத்த பொழுது ஒளிப்பு மறைப்பு ஏதும் இல்லை. உங்க சிநேகிதியை வந்து பார்க்கலாமா? அவவோட பேசமுடியுமா? என்று வேறு கேட்டார், இந்த வயதில் என்ன சடங்கென்று இருக்கிறாவா...? சடங்கு முடிக்கிற உத்தேசம் ஏதாவது உண்டா..? என்றெல்லாம் விசாரித்தார்.."

சரசுவின் கண்களில் தென்பட்ட ஒளி இவளை மேலும் குதூகலமடையச் செய்தது.

சரசுவின் கரங்களை இறுக்கமாகப் பற்றிக் கொண்ட மகேஸ்வரி அவளது கண்களைத் தீர்க்கமாகப் பார்த்தபடி கேட்டாள்.

"நீர்தான் நடாவைச் சந்திக்க, அவருடன் பேச ஏற்பாடு செய்யவேணும்...!" உதடுகளில் கிளர்ந்த லேசானசிரிப்பும் கண்களின் பளபளப்பும் அவளது சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக்கிடக்கையை சரசுவுக்குப் பட்டும் படாமலும் உணர்த்தியது போலும்...

"நாப்பது வயசாகப் போகுது. குமர்ப்பெட்டை மாதிரி இதென்ன கூத்து..." சரசுவின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டு மகேஸ் கூறினாள்.

"ஸொாரி சரஸ்... அவரிலை ஒரு மனச் சாய்வும் விருப்பமும் பதினைஞ்சு பதினாறு வருஷத்துக்குமுந்தியே எனக்கு இருந்தது. அது உமக்கு நல்லாத் தெரியும். மிக நெருக்கமான பழக்கமது. நான்தான் முதலிலை என்ரை ஆசையை அவருக்குத் தெரிவிச்சனான். காதல் எண்டு வரும் போது ஆள் சரியான "ஹாட் நட்..." இறுக்கம். இருந்தும் அவற்ரை மனசும் என்னிலை கரைஞ்சது. பிறகு சந்தர்ப்பவசத்தால சகலதும் குழம்பிப் போச்சுது. சின்னமாமான்ரை சாதித்தலுக்கும், திமிரான எடுபிடிக் கதையளும் அவரைக்குழப்பிப் போட்டுது. மனம் மாறின அவர் "நான் கோவியப்பொடியன்.. இவை.. இந்த வெள்ளாளப் பெட்டையைக் கட்டிக் கொண்டு மல்லுக் கட்டேலுமா..?, எண்டு கனவானாய் ஒதுங்கீற்றார். இப்ப அம்மாவுமில்லை... மோசம் போயிட்டா... மாமாவும் பெண்சாதி பிள்ளையளோட கனடாவில. தனிச்சிருக்கிற எனக்கு அவர் வாறது, கதைக்க ஆசைப்படுறது. எல்லாம் ஆறுதலாயிருக்கும். அவரைச் சடங்கு முடிச்சா, முகம் சுளிக்கச் சாதி சனமெண்டு ஆர் இருக்கினம்! ஒருத்தருமில்லை. அயலட்டம், காலங்கடந்த கலியாணமெண்டு சில வேளை கதைக்கும் கதைக்கட்டுமன்.

மகேசின் மனநிலையை மேலும் சலனப்படுத்த விரும்பாத சரசு விடைபெற்றுக் கொண்டாள்.

* * *

எண்பதுகளின் கடைக்கூறு பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மகேஸ்வரி கலைப்பீட மாணவியானாள். யாழ்ப்பாணத்தில், அதுவும் ஊரில் இருந்து படிப்பதில் அவளுக்கு நிரம்பிய திருப்தி இருந்தது. அப்பர் இல்லாத குறை தெரியாத அளவுக்கு அன்பு பாராட்டி அவளை அம்மா வளர்த்தாள். சின்னமாமாவின் துணையும் வழிகாட்டலும் அவளைத் தலைநிமிர்ந்து நடக்க வைத்தன. அவரில் அவளுக்குப் பிடிக்காததெல்லாம் அவரது சாதித் தடிப்பும் "நாம தாவாடிக்காரர். ஆள்பார்த்துப் பழக வேணும்... கண்ட கண்ட இடத்தில் கை நனைக்கக் கூடாது. சிநேகித மெண்டாலும் தெரிஞ்சு பழகவேணும்..." என்ற அவரது போதனைகளும் தான்.

பட்டணத்துப் பெட்டையல்ல அவள். பக்கத்துக்கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். ஊரில் மத்திய மகாவித்தியாலயத்தில் ஏ.எல்.வரை படித்து பாஸ் ஆகி பல்கலைக்கழகம் வந்திருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில், அவளது முதல் நாள் அநுபவமே, சீலை நழுவிய கிரிசை கேடாகி விட்டது. பகிடிவதை என்ற பெயரில், சிரேஷ்ட மாணவர்கள் ஆண்களும் பெண்களுமாகக் கூட்டணி வைத்துக் கொண்டு ஆபாசமாக நடந்து கொண்டார்கள். அதை அவளால் தாள முடியவில்லை.

"மகேஸ்வரி நில்... நீ தீவுதானே...தீவாரும் படிக்கக் கிளம்பியாச்சு போல.." நாராசமாய்ப் பேசிய அந்தப் பட்டணத்துக் குட்டிச் சுவரை, அவள் நிமிர்ந்து பார்த்தாள். பல்லு மிதப்புடன் மேல் உதட்டின் மீது மீசை அரும்பாத முன் தலையில் சொட்டை விழுந்த அந்த மாணவனின் கண்களில் தெரிந்த விஷமத்தனம் அவளுக்கு மிகுந்த எரிச்சலைத் தந்தது. நெருங்கி வந்த அவன், அவளைப் பார்த்துக் கேட்டான்.

"ஏதோ மச்சமாம்!... கறுப்பா படர்ந்திருக்காம்! உன்ரை இடது... எங்கை பாப்பம்...!" கூறியவன் அவளது சேலைத் தலைப்பைப் பற்றினான்.

மகேஸ்வரிக்கு எங்கிருந்து அப்படி ஒரு அசுரபலம் வந்ததோ தெரியவில்லை, காளியின் கோலங்காட்டியவள் அவனது கைகளை மிகுந்த பலத்துடன் தட்டிவிட்டாள்.

முகம்கோணி வலிப்புக்காட்டிய அந்தச் சோதா அவளைப் பார்த்து கோபத்துடன் ஆபாசமாக ஏதேதோ திட்டினான், மீளவும் அவளை நெருங்கியவன் அவளது இடது கையைப் பற்றினான்.

"சிவதாஸ்...! பகிடிவதை வேணும்.. ஆனால் அதுக்காக கேர்ல்ஸைத் தொட்டுப் பேசிறது வடிவில்லை..."

கணீரென்ற அந்தக் குரலுக்குக் கட்டுப்பட்ட சிவதாஸ் ஒதுங்கிக் கொண்டான்.

"மிஸ் நீங்க போங்க... இதைப் பெரிசா எடுக்காதேங்க பல்கலைக்கழக வாழ்க்கையில் இது ஒரு பகுதி... வழக்கமா நடக்கிற விஷயம்."

"ம்..."

"போங்க...!"

நன்றிப் பெருக்குடன் அவனை அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் ஒடிசலாக இருந்தான். சடசட என ஒரு வளர்த்தி. அவனது கண்களில் தீர்க்கமான பார்வை. அதில் சபலமோ சஞ்சலமோ இல்லை. மிகத் தெளிவாகவே சிந்திக்கக் கூடியவன் இவன் என நினைத்தவள், திரும்பத்திரும்ப அவனையே பார்த்தபடி நடந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் யார்..? எந்த வருடத்தில் பயிலும் மாணவன். கலைப்பீடமா? அல்லது விஞ்ஞானமா...? எது..."

அவளது சந்தேகத்தைத் தீர்த்து வைத்தவள் அவளது பிராண சிநேகிதியும் உடன் பயிலும் மாணவியுமான சரஸ்வதிதான்.

"நடராசா நல்ல மாதிரி. பல்கலைக்கழக மாணவ மன்றத் தலைவர். புவியியலைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படிக்கிறார். மூண்டாவது வருஷம்..."

"ஆள்... பழக்கமா..."

"இல்ல... தெரியும்..."

மனசு அவனையே நாடிச் செல்வதையும் அவனை மறக்க முயற்சித்த போது நினைவுகள் அவனையே சுற்றிச்சுற்றி தட்டாமாலை ஆடுவதையும் அவளால் கட்டுப்படுத்த முடிய வில்லை. "அவனை மீளவும் சந்திக்க வேணும் அவனுடன் மனசு முட்டமுட்டப் பேசவேணும்..." என்ற ஆவலே அவளில் குதியாட்டம் போட்டது.

அவள் சரசுடன் பொருளியல் மண்டபத்தை நோக்கி நடந்தாள். பழசெல்லாம் மறந்து போக வாழ்க்கை புத்தம்புதிதாய் ஆனது போல அவளுக்கு அப்பொழுது இருந்தது.

* * *

நடா நூலகத்தினுள் நுழைவதைக்கண்ட மகேஸ் அவனது கவனத்தைத் தன்பக்கம் திருப்பும் உத்தேசத்துடன் காற்செருப்புகளை உரசி சலனப் படுத்தியபடி தானும் நுழைந்தாள்.

திரும்பிப் பார்த்தவன் "இதென்ன சறுக்கல்.. சடுகுடு எல்லாம் நடக்குது" அவனது பேச்சு அவளுக்கு வெக்கத்தைத் தந்தது. நாக்கை மெதுவாக கடித்தபடி "ஸொாரி ' சொன்னாள்.

நெருக்கமாக வந்தவன், நிமிர்ந்து பார்த்தான்.

அவள் நல்ல உயரம். கண்கள் பெரிதாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தன. சிறிது சரிந்த மார்பகங்கள். உதடு திரட்சியாக பழத் துண்டுகள் மாதிரி இருந்தன. வதவத என முழங்காலைத் தொடுவது போலக்கைகள். விரல்கள் மிகமிக நீளமாக கூந்தல் கூட மிக அடர்த்தியாகத் தழைந்தபடி...

நீல வண்ணப் புடவையில் அவள் அழகாக இருந்தாள். அவளைச் சூழ ஏதோ வாசம் கொட்டிச்சிந்தியது போல..! அந்த வாசம் வலுவாய் அவனுக்குப் பிடித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெண் உடல் அதன் வாசங்களோடும் தாபங்களோடும் புல நுகர்ச்சிக்குப் பிரியமானது தான். இவளுக்கு.. இவளுக்கும் இந்த உணர்ச்சிச் சுழிப்புகள் இருக்குமா...? ஆணும் பெண்ணும் ஆன்ம லயிப்புடன் கலவியில் ஒன்றுதல் கூட ஒருவகைக் கலா அனுபவம் தானோ...?

அந்த நினைவுகள் அவள் மீது ஓர் ஆர்வத்தை அவனுக்கு ஏற்படுத்தியது. லேசான சிரிப்புடன் நெருக்கமாக வந்த அவனிடம் அவளும் மிக நெருங்கிவந்து அவனது கைகளில் இருந்த புத்தகத்தை வாங்கிப் பார்த்தாள்...

"என்ன புத்தகம்.. The tindrum. குந்தர்கிராஸ்...! இதெல்லாம் படிப்பியளா...! எனக்கு நா.பா.அகிலன், கல்கி போதும்.

"சுந்தரராமசாமி, புதுமைப்பித்தன், ஜெயமோகன், அசோக மித்திரன், எண்டு தமிழில் படிக்கப் பலர் இருக்கினம். உங்க வாசிப்பை கொஞ்சம் அகலப்படுத்துங்க.."

தொடர்ந்து "எனக்குப் பத்து மணிக்கு லெக்சர் இருக்கு.. வரட்டுமா" என்று கூறியவன், lending section னுள் நுழைந்தான். இவளும் அவன் மீது விழுந்த பார்வையை அகற்றாமலே reference பக்கமாக நடந்தாள்.

அவன் கூடவே வருவது போன்ற மாயத்தோற்றம் அவளைப் பாடாய்ப்படுத்தியது. இவன்தான்... "இவன்தான் என்னுடைய ஆள்..." என்ற உணர்வு அவளுள் இளந்தீயாய்ப் படர்ந்து ஒரு வகை வெத வெதப்பை ஊட்டியது.

இவனுடன் பழகிய இந்த ஆறுமாத காலத்தில் இப்படி நெருக்கமாக இவனது மூச்சுக் காற்றுப் படநின்றது. பேசியது எல்லாம் இன்றுதான்! "இது தொடரவேணும்..."

ஆசைகள் அடங்காத தவிப்பு அவளுள் வியாபகம் கொண்டது. அது அவளுக்கு இப்போதைக்குத் தேவையாயிருந்தது.

நாலுநாள் கழித்து கலை அரங்கத்தில் நடந்த நிகழ்ச்சியொன்றில் அவனைக் கண்டதும் அவனது பார்வை படுமிடத்தில் சற்று அருகாகவே இவள் உட்கார்ந்து கொண்டாள்.

பேச்சு இல்லாத மௌனமே அங்கு நிலவியது.

நிகழ்ச்சி முடிந்து எழுந்தபோது இவளைக் கண்டு கொள்ளாத, இவளது இருத்தலையே பொருட்படுத்தாத அவனது பாவனை இவளைக் காயப்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் செல்ல அவளது எதிர்பார்ப்புகளைப் பொய்ப்பியாத வகையில் அவனே வந்து பேசினான் பழகினான்.

அப்படிப்பலிதமான சந்தர்ப்பமொன்றில் அவனைப் பார்த்து இவள் கேட்டாள்.

"ஒட்டி உரசி சிலவேளைகளில் தூரவிலகி நிக்கிற இந்த love and hate விளையாட்டெல்லாம் வேணுமா என்ன...? "

"என்ன.. என்ன சொல்லுறீர்..! வெறுப்பா.. எனக்கா... உம்மிலா...? இல்லவே இல்லை எல்லாமே விருப்பந்தான்."

அவனது பதிலின் வேகம் அவளைப் பற்றிக் கொண்டது. அவள் நன்றிப் பெருக்குடன் அவனது வலது கரத்தை எடுத்து தனது உள்ளங்கைகளில் அழுத்தமாகப் பொதித்துக் கொண்டாள்.

அவர்கள் அப்பொழுது நின்றது இரண்டு வகுப்பறைகளுக்கு மிடையிலான ஒதுக்கமான ஒரு நடைபாதை. அந்த ஒதுக்கத்தைப் பயன்படுத்தி அவன் அவளது கன்னத்தில் முத்தமிட்டான். எதிர்பாராத அவனது முத்தம் அவளுக்கு மிகுந்த மலர்ச்சியைத் தந்தது. புத்தம் புதிதாய் கட்டுடைந்த மலர்க் கொத்தாய் அவள் குலுங்கிச் சிலிர்த்தாள்.

காதல் வசப்பட்ட அவ்விருவரும் அதன் பின்னர், மனதளவில் சடைத்திருந்த இறுக்கங்களும் கட்டுக்களும் குலைந்து தளர்ச்சி கொள்ள மிக நெருக்கமாகப் பழகத் தலைப்பட்டார்கள். அந்த நெருக்கமான உறவு, உடல் சார்ந்த சலனங் களை அவர்களிடையே ஏற்படுத்தவில்லை. அது அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

அவர்களது காதல் வீடுவரை வந்த போது அவனது பெற்றோர்கள் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அவளது சின்னமாமா குதியோ குதி என்று குதித்தார். குரல் உயர்த்திப்பேசினார். அவரது பேச்சும் ஏச்சும் அவனது காது வரை எட்டியிருக்க வேண்டும். அவன் பெருந்தன்மையுடன் அவளிடமிருந்து ஒதுங்கிக் கொண்டான்.

அந்த ஒதுக்கம் ஏதோ பெரும் பொக்கிசத்தை இழந்ததான தவிப்பை, ஆழமான துயரத்தை அவளுக்குத்தந்தது.

* * *

அவனது உறவு தந்த பரிமள லகரி இத்தனை ஆண்டுகள் கழிந்த பின்னரும் அவளைச் சூழக் கவிந்திருந்தது. அவனை மனதில் இருத்தி நினைவு கூர்ந்தாள்.

அவன் இது வரை சடங்கு செய்யாதிருப்பது எதனால்...? என் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பிரேமையினாலா...? அல்லது அக்காதல் தந்த தோல்வியினாலா...

அந்த நினைப்பே அவளுக்கு மிகுந்த சிரிப்பைத்தந்தது. சேறு கண்ட இடத்தில் பிசங்கி தண்ணி கண்ட இடத்தில் கால் அலம்பும் பேர்வழிகள் இந்த ஆண்கள் என்பதை இப்பொழுதெல்லாம் அவள் நிரம்பத் தெரிந்து வைத்திருக்கின்றாள். காதல் தெய்வீகமானது என்பதெல்லாம் மனோரதி யரசம் பூசிய ஒருவசியம் மட்டுமே எனக்காலம் அவளுக்குக் கற்றுத் தந்திருக்கிறது.

அவன், திருமணம் பற்றிப்பேசி அது விஷயமாகவே தன்னைச் சந்திக்க வருகிறான் என்ற செய்தியைச் சரசு கூறியபோது, அவள் ஓரளவு கிளர்ச்சியடையவே செய்தாள். காதல் உணர்வு களுக்கு மேலாக ஒரு ஆணின் துணையும் உடனிருப்பும் அவளுக்கு அவசியமாகப்பட்டது. அவன் ஏற்கனவே அறிமுகமானவன் என்பதால் அதனை ஒரு கூடிய தகுதியாக அவள் கருதினாள். அது அவளுக்குச் சிறிதளவு தெம்பையும் நிம்மதியையும் தந்தது.

மெல் உணர்வு மிக்க காதலனாகவே பார்த்துப் பழக்கப்பட்ட அவன் ஒரு சில வேளைகளில் முரண்பாடுகளின் மொத்த உருவமாகவும் அவளது நாளைச்சீண்டி காரணம் ஏதுமில்லாமலே காயப்படுத்துபவனாகவுமே இருந்திருக்கிறான்.

முன்னொரு சமயம் 'காதலுக்கு அப்பால் சென்று கதைக்க உம்மிடம் என்ன இருக்கிறது...? அறிவு பூர்வமான உசாவுகை என்பது உம்மிடம் சாத்தியமானது தானா...?" என்று கேட்டது அவளுக்கு ஞாபகம் வந்தது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் இப்பொழுதும் அகிலனும் நா.பாவும், கல்கியும் தான் உமது ஆதர்சமா...? என்ரை கதைகளை கவிதைகளைப் படிப்பதுண்டா...? என்னைத்தவிர இன்னும் சிலர் படிக்கக்கூடிய மாதிரி எழுதுவது தெரியுமா..." என்று அவன் கேட்டது அவளது நினைவில் படர்ந்து, அவளை அசுவாரஸ்யப் படுத்தியிருக்கிறது.

பலதையும் பத்தையும் சிந்தித்தபடி இருந்த அவளது பார்வையில் ஒரு பழைய அல்பம் பட்டது. அதை அவள் புரட்டினாள். அதில் அவனும் அவளும் இணைந்தபடி நின்ற நிழல் படம் ஒன்று இருந்தது.

படத்தில் காட்சி அளித்த அவனது தோற்றம் அவளுக்குப் பிடித்திருந்தது. அவனது கண்களில் தெரிந்த தீட்சண்யம் அவளது அந்தராத்மா வரை சென்று அவளைத் தொட்டுப் பேசியது. அதிகம் உணர்ச்சிவசப்படாத, எதையுமே உரசி உரசிப் பார்க்கும் அவனிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குப் பிடித்ததெல்லாம் அவனது நேர்மையான பேச்சும் சில சமயங்களில் வலிய வந்து தானாகவே கொள்ளும் உறவும் நட்பும் தான்.

இவை எல்லாமே, அவனைக் கண்டு கதைக்க அவன் விரும்புகிற பட்சத்தில் அவனைத் தனது துணையாக வரித்துக் கொள்ளப் போதுமானவையாக அவளுக்குப்பட்டது.

நேற்றையதினம் இவளைச்சந்தித்த சரசு வாற சனி, காலை பத்து மணிக்கு நடா வாறார். பொம்பிளை பார்க்க எதுக்கும் ரெடியாய் இரும்...

சரசுவின் பேச்சைக் கேட்டதிலிருந்து, நிதானமிழந்த அவள் ஒரு வகைப்பதட்டத்துடன் அவனது வரவை எதிர்பார்த்தபடி இருந்தாள்.

மனசோடு அவனிருக்க, அவனது நினைவோடு அவள் இருந்தாள்.

* * *

சரசு கூறியது போல சனிக்கிழமை காலை பத்துமணியளவில் நடா வந்தான். உள்ளே வந்து செற்றியில் அமர்ந்தவன் அவளை வைத்த கண் அகற்றாது பார்த்த படி இருந்தான்.

அவளது தோற்றம் அவனது மனதுக்கு இதம் தருவதாய் இருக்கவில்லை. ஏமாற்றத்தையே தந்தது. அதனைக் காட்டிக் கொள்ளாத பாவனையில் காலம் கரைந்தது.

இவள் என்ன இப்படி உலர்ந்து உடல்மெலிந்திருக்கிறாள். இவளது அந்தப் பெரியகண்கள் எங்கே...? அவை குளிர்ச்சி இழந்து, குழியுள் பதுங்கியபடி..! மார்பகங்கள் இருப்பதாகவே தெரியவில்லை. நெஞ்சோடு நெஞ்சாய்ப் பூசியது போல.. உதடுகள் திரட்சி இழந்து ஈரப்பசை அழிந்து சொரசொரப்பாக... பற்கள் பழுப்பாய்... ஈறுகள் கரைந்து, நீக்கலுடன். கரங்கள் மெலிந்து கைவிரல்கள் கூம்பி... இதென்ன எலிவாலாய் ஒரு பின்னல்...

"நாம சந்திச்சு நாலஞ்சு வருஷமிருக்குமா..?"

"ம்..."

"சுகமில்லாமல் இருந்தனீங்களா.. இப்படி உடம்பு கொட்டிண்டு கிடக்குது... அம்மா போன துக்கமெல்லாம் சேர்ந்திட்டுது போல..."

"ம்..."

அவனது மன ஓட்டத்தைப் புரிந்து கொண்ட மகேசு! "மனசு மாறேல்லை உடம்புதான் ஓரளவு கொட்டிண்டு போச்சு..." என்றாள்.

"ஓரளவா...? ரி.பி. வந்தாக்கள் போல இருக்கு, எதுக்கும் நெஞ்சுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களி எடுத்துச் சோதனை செய்யிறது நல்லது."

அவன் மீதான காதலும் மனசோடு ஆகிவிட்டரசனைகளும் வடிந்து போக, அவள் உலர்ந்தசிரிப்புடன், "வயசு போனால் ஆசைகளும் தீய்ந்து போக வேண்டியதுதானே..." என்றாள்.

"ஸொாரி... உங்களைத் துக்கப்படுத்த வேணுமெண்ட நோக்கம் எனக்கில்லை... உண்மையைத்தான் சொன்னனான். சடங்கு செய்யிற யோசனை எனக்கு இருந்தது. ஆனால் இப்ப அதுக்'கென்ன அவசர மெண்டிருக்கு புதிசா நுகத் தடியில சிக்கின மாடு மாதிரி அவலப்பட வேணுமா என்ன..."

கூறியவன் கலகல எனச் சிரிக்கவும் செய்தான். அவனது சிரிப்பு அவளுக்கு மிகுந்த எரிச்சலை தந்தது. தனது விதியை நொந்து கொண்ட அவள் அவனை இன்னும் கிட்ட நெருங்கி சாக்கடையில் நெளியும் ஒரு அற்ப புழுவைப் பார்ப்பது போலப் பார்த்தாள்.

"ம்... அங்கமட்டும் என்னவாமுதாம்! கண்ணாடி மாளிகையில் இருந்தபடி கல் போடேலுமா...? ஒடிசலான அந்த வதவத உடம்பு ஏன் இந்த மாதிரிப் பெருத்து, மத்தளம் மாதிரி ஆகிவிட்டிருக்கிறது. கடைவாயிலும் முகத்திலும் வெள்ளை விழுந்து அசிங்கமாக தலைமுடியும் மீசையும் கூட நரை கண்டு கறையான் அரித்துக் கொட்டியது போல.. இவனது உடல் மட்டுமல்ல உள்ளமும் தளர்ச்சியடைந்து, பேச்சிலும் செயலிலும் நிதானம் தப்பிவிட்டிருக்கிறதே..."

கீழ்க்கண் கொண்டு ஏளனமாக அவனைப்பார்த்தாள். உதடுகளிலும் கீறலான ஒரு சிரிப்பு அவனை வதைத்தது.

அவசர அவசரமாக இருக்கையை விட்டு அவன் எழுந்து கொண்டான்.

மெதுவாக கதவுப்பக்கம் நகர்ந்த அவள் கதவைத்திறந்தபடி அவனை மௌன மாகப் பார்த்தாள். பின்னர் பித்தம் தலைக்கேறியவள் போலப் பேசவும் செய்தாள்.

"போறேங்களா...? போங்க... இந்த பந்தம், இந்த ஜென்மத்துக்கு மட்டுமல்ல ஏழேழு ஜென்மத்துக்கும் வேண்டாம். அழகா இளமையா சுண்டிப் பார்த்துபுதிசா திரட்சி கொண்ட பெட்டையொண்டைப்பாருங்க... தளர்ந்து போன உங்க உடம்புக்கு அது தோதாய் இதமாயிருக்கும்."

அவளது பேச்சில் இழைந்த, காரமும் இங்கிதமின்மையும் அவனைக் கலவரப்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதிகமாகத்தான் பேசிப் போட்டனா... அநுதாபப்படுவதாக நினைத்துக் கொண்டு மனதில் பட்டதை யெல்லாம் இப்படிக் கொட்டிச் சிந்தியிருக்க வேண்டாம்.

உள்நோக்கம் ஏதுமில்லாத எனது கதைப்பு அவளை அந்த நல்லியல்புடைய பெண்ணை நன்றாகவே காயப்படுத்திப்போட்டுது.

கழிவிரக்கத்துடன் கூடிய அவனது கவலை அவனது கண்களில் தெரிந்தது. அதனை இனங்கண்டு கொண்ட அவள் அவனது முகத்தில் கசிந்த கனிவை கண்டு குலுங்கினாள். வந்த விம்மலைச்சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

அவன் மெய்யாகவே வருந்துவது அவளுக்குத் தெரிந்தது. ஆனாலும் அவளால் எதுவும் செய்யமுடியவில்லை. அவன் மௌன மாகப்படி இறங்கிப்போவதைப் பார்த்தபடி நின்றாள்.

அவன் வீதி முடக்கில் திரும்பி கண்ணில் காணாமல் போகும் வரை பார்த்தபடி நின்றவள், தனது கண்களைத் துடைத்துக் கொள்ளவும் செய்தாள்.

**இதழ் - 06 பங்குனி - சித்திரை - 2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிவு

## த.கலாமணி

ஜீவநதி
சிறுகதைகள்
8

இவன் இவ்வளவு தூரம் முசுடனாக இருப்பான் என்று நான் எண்ணவில்லை. 'என்வெயர் கொம்பனி' யில் எனக்கு வேலை வாங்கித் தந்த சண்முகம் அண்ணை இவனைப் பற்றித் தான் முதலில் சொன்னார்.

"தம்பி! புறாக் எண்டொரு 'வேர்க் சூப்பர்வைசர்' இருக்கிறான்... சிடு மூஞ்சி. அவனோடை தான் கவனமாக இருக்க வேணும். வேலையிலை குறை பிடிச்சு விலத்தியும் போடுவான்..."

அப்போது கூட வேலை மேற்பார்வையாளன் என்றால் கடுமையாகத் தானே இருப்பான் என்ற எண்ணம் மட்டும் தான் இருந்தது. வேலைக்கு வந்து, இவனைக் கண்டு, இவனின் செய்கைகளை எல்லாம் அவதானித்த பின்பு தான், 'இவனோடு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என்று என் அந்தராத்மா அடிக்கடி எனக்கு சொல்லிக் கொள்கிறது.

புறாக்கை முதன் முதலில் கண்டபோது எனக்கு சிரிப்புத் தான் வந்தது. முன்பு 'கல்கி'யில் வெளிவந்த 'வாண்டுமாமா'வின் சித்திரக்கதையொன்றில் வந்த 'விஜயன்' போல் நெட்டையனாக இருந்தான். உயரம் ஆறரை அடிக்குக் குறையாமல் இருக்கும். இவனுக் கென்று விசேடமாகத் தான் கட்டில் செய்ய வேண்டும்.

சண்முகம் அண்ணை தான் எங்கள் எல்லோருக்கும் இணைப்பாளர் என்பதால் எங்களுக் குரிய பெரும்பாலான வேலைகளை சண்முகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணை மூலம் தான் புறாக் எங்களுக்கு அறிவிப்பான். இதனால் சண்முகம் அண்ணையையும் புறாக்கையும் ஒன்றாக அருகருகாகக் காணும் வாய்ப்பு ஏற்படும். சண்முகம் அண்ணையின் தோள் மூட்டு, புறாக்கின் 'பாண்ட்' மட்டத்துக்குத் தான் நிற்கும். ஓரிடத்தில் நிற்காமல் நீண்ட கால்களை எட்டப் போட்டு நடந்து கொண்டிருக்கும் புறாக்கின் பின்னால் 'குடு குடு' என சண்முகம் அண்ணை ஓடுவதைப் பார்த்தால் கெக்கலி கொட்டிச் சிரிக்க வேண்டும் போலிருக்கும்.

புறாக்கின் தேகத்துக்கு மட்டும் அப்படியென்ன ஒரு நிறம்.

சுண்டினால் இரத்தம் கசிந்து விடுமோ என்று எண்ண வைக்கும் 'றோஸ்' நிறம்.

நீண்ட மூக்கு!

மூக்கின் நுனியில் கோபம் 'பொத்துக் கொண்டு' வரும்போது, அது சிவந்து, அதிலிருந்து இரத்தம் சொட்டுவது போலிருக்கும்.

ஒடுக்கமான உடம்பு தான்; ஆனால் 'ஒல்லி' என்று இல்லை.

வெளிர் நீல நிறத்தில் அரைக் கை சட்டை அணிந்திருப்பான். ஒரே 'சேட்'டைத் தான் 'வோஷிங் மெஷினில்' போட்டுப் போட்டு எடுக்கிறானோ, என்னவோ...

ஆள் சரியான கஞ்சன். சிரிப்பை வெளிப்படுத்துவதிலும் கூடத் தான். தனக்குள்ளேயே அமுக்கி விடுவான்.

எனக்கு அவுஸ்திரேலியாவில் மிகவும் பிடித்தமான நடைமுறையே காலையில் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது 'குட் டே' என்று சொல்லிக் கொள்வது தான். ஒருவருக்கொருவர் 'இன்று நல்ல நாளாகட்டும்' என்று சொல்வதைக் கண்டு, பாடசாலைகளில் எங்கள் பிள்ளைகளிடத்தும் நேர் மனப்பாங்கை வளர்க்க இது ஒரு நல்ல உபாயம் என்று எண்ணிக் கொள்வேன்.

ஆனால் புறாக் மட்டும் வாய் திறந்து எவருக்கும் வாழ்த்துக்கள் கூறியதை நான் கேட்டதில்லை. காலையில் இவனை வேலைத்தளத்தில் கண்டதும் 'குட் டே' என்று நாம் சொல்லும்போது அவன் வாயைத் திறக்காமலே வாயினுள் விழுங்கிக் கொண்டு பதிலுக்கு ஏதோ சொல்வது 'புறுபுறுப்பது' போலிருக்கும். 'நல்ல நாளாகட்டும் என்று இவனுக்கு ஏனடா வாழ்த்துச் சொன்னோம்' என்று மனசு தனக்குள் கறுவிக் கொள்ளும்.

சமூகத்துடன் ஒட்டாத ஒருவனாக புறாக் இப்படி இருப்பதற்கு என்ன காரணம் என்று சில வேளைகளில் நான் சிந்திப்பதுண்டு. எனக்குத் தெரிந்த உளவியலை வைத்துக்கொண்டு இவனின் சுபாவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுப்பாய்வு செய்து பார்க்க நான் விழைந்ததுண்டு. இவன் தனக்குள்ளேயே எல்லாவற்றையும் மறைத்து வைக்கும் ஓர் 'அமுசடக்கி'. உளவியற் பரிபாஷையில் இவன் ஒரு 'இன்றவேற்'. இவன் ஆபத்தானவன். எம் வேலைகளில் குறை காணும்போது இவன் என்ன நடவடிக்கை எடுப்பான் என்று எதிர்வு கூறவே முடியாது. அதற்கு இனி மேல் தான் ஒரு புதுக் கருவி கண்டுபிடிக்க வேண்டும்.

யாரிடமும் ஒட்டாமலிருக்கும் இவன் சண்முகம் அண்ணையுடன் மட்டும் நின்று கதைப்பான். ஆனால், அருகில், சற்று எட்ட நின்றாலும் அவன் கதைப்பது எதுவும் காதில் விழாது. சண்முகம் அண்ணைக்கு மட்டும் எப்படித் தான் கேட்குதோ, என்ன தான் விளங்குதோ?

சண்முகம் அண்ணை அப்படியொன்றும் சரளமாக ஆங்கிலம் பேசக்கூடியவரல்லர். அவர் பேசும்போது நிறைய இலக்கணப் பிழைகள் இருக்கும். ஆனால் அவர் அதைப் பற்றி பொருட்படுத்துவதில்லை. தொடர்பு கொள்ளலுக்குத் தேவையான சொற்களைப் பொறுக்கி வைத்துக் கொண்டு சொல்லாடல் புரியும் சண்முகம் அண்ணையின் வல்லபம் கண்டு எனக்குத் திகைப்பாக இருக்கும். பதினைந்து வருடங்களுக்கு மேலாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருபவருக்கு இந்த வல்லபம் கைவரக்கூடியது தான்.

ஆரம்பத்தில் இரண்டு, மூன்று வருடங்கள் வேறு "கொம்பனி"களில் வேலை பார்த்தது போக மீதிக் காலம் முழுவதும் 'என்வெயர் கொம்பனி' யிலேயே வேலை பார்த்து வருவதாக சண்முகம் அண்ணை கூறுவார். ஆனால், அவுஸ்திரேலியாவில் ஒரே கொம்பனியிலேயே வேலைக்கு நின்று நிலைப்பது என்பது ஆச்சரியத்துக்கு உரிய ஒன்று. நன்றாக உழைத்துச் சம்பாதிக்கக்கூடியதாக இருந்தாலும் தொழிற் பாதுகாப்பு இல்லாமை அவுஸ்திரேலியாவின் தொழில் நடைமுறையில் உள்ள பெரும் குறை. ஆனால், அதனை ஒருவரும் பெரிதுபடுத்துவதில்லை. வேலை வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் ஒரு வேலையிலிருந்து நிறுத்தப்பட் டாலும் இன்னொரு வேலையொன்றைத் தேடுவதில் சிரமமொன்றில்லை.

சண்முகம் அண்ணை மட்டும் எப்படித் தான் இந்த கொம்பனியில் நின்று நிலைத்தாரோ தெரியவில்லை. இந்த கொம்பனியிலேயே ஒட்டுநராக வேலையில் இணைந்து வெவ்வேறு வேலைப் பிரிவு களிலெல்லாம் பயிற்சி பெற்று, இன்று பல்வேறு பிரிவுகளின் வேலைகளை யெல்லாம் ஒன்றிணைக்கும் இணைப்பாளராக கடமையாற்றும் சண்முகம் அண்ணை சூரன் தான்.

'என்வெயர் கொம்பனி'யிலுள்ள சகலருடனும் சண்முகம் அண்ணை சகஜமாக பழகுவார். எல்லோரிடத்தும் இவருக்கு நல்ல மதிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் வேலையாட்களுக்கும் புறூக்குக்கும் இடையிலான தொடர்பு களுக்கும் சண்முகம் அண்ணை தான் இடைத்தரகர். சண்முகம் அண்ணைக் கூடாகத் தான் பலரும் தங்கள் தேவைகளை புறூக்கிடம் எடுத்துச் சொல்வார்கள். அவ்வப்போது புறூக் பற்றியதான என் மன அலசலுக்குத் தீனி போடுவதும் சண்முகம் அண்ணை தான். புறூக்கின் சரித்திரத்தை அப்படியே அக்கு வேறு ஆணி வேறாய்ப் பிய்த்துப் போடுவார்.

புறூக் நல்ல குடும்பச் சூழலில் வளரவில்லையாம். புறூக்கின் அம்மாவும் அப்பாவும் ஒன்றாகத் தான் வாழ்ந்து வந்தார்கள் என்றாலும் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டார்கள். சண்டைக்குக் காரணம் வேறொன்றுமில்லை. இன்னுமொரு பெண்ணை வீட்டுக்கே அழைத்து வந்து அவனது அப்பா சல்லாபம் புரியத் தொடங்கியதிலிருந்து தான் சண்டை ஆரம்பித்ததாம். அவுஸ்திரேலிய நாட்டுக் கலாசாரத்தில் இது ஒன்றும் புதுமையானது இல்லை. ஆனால் புறூக்கின் அம்மாவால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாதிருந்தது. அந்தப் பெண் தனக்குச் 'சக்களத்தி'யாக வந்துவிடுவாளோ என்ற பயமும் அவளைப் பற்றிக் கொண்டது. புறூக்கின் அப்பா அந்தப் பெண்ணை தன் இச்சைக்காக மாத்திரம் வைத்துக் கொள்ளவில்லை. அவளை தனி வீட்டு அலகு ஒன்றில் குடியமர்த்தி, அவளுக்குத் தன்னிடத்துப் பிறந்த குழந்தைகளையும் பேணிப் பராமரிக்கத் தொடங்கினார்.

புறூக்கின் அம்மாவுக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லை. வீட்டுக்குத் தனது கணவன் வந்து போனாலும் அவரை ஒரு பொருட்டாகவே அவள் மதிக்கவில்லை. தனது ஒரே குழந்தையான புறூக்கை நன்கு வளர்த்துவிடவேண்டுமென்பதில் கவனமாக இருந்தாள். ஆனாலும், நித்தமும் சச்சரவு நிரம்பிய சூழலிலேயே புறூக் வளர்ந்தான்.

சில வேளைகளில் சிறுவனான புறூக்கை அந்தப் பெண்ணின் வீட்டுக்கு அவனின் அப்பா கூட்டிச் செல்வார். அந்த வீட்டின் குழந்தைகள் மூவரும் புறூக்கைக் கண்டு "அண்ணா" என்று வாஞ்சையோடு அழைத்து மகிழ்ந்து குதூகலமாக ஒன்றாக விளையாடுவார்கள். இது தெரிய வந்ததும் புறூக்கின் அம்மா "பத்திரகாளி" ஆனாள். புறூக்குக்கு தண்டனையும் வழங்கி, அப்பாவுடன் வெளியே செல்லத் தடையும் விதித்தாள். அப்பாவும் அம்மாவும் இறந்த பின் புறூக் தனியாளாகி இன்னமும் திருமணம் செய்யாமல் இருக்கிறான்.

பிளவுபட்ட குடும்பச் சூழலும் பிள்ளைப் பருவ அனுபவங்களும் புறூக்கை இப்படி ஆக்கிற்றோ என்னவோ, இவனுள் வக்கிரம் பாறையாய் உறைந்திருந்தது. அநேக வேளைகளில் இவன் முகத்தில் சலனம் ஏதும் இருக்காது. சில வேளைகளில் மட்டும் மூக்கும் முகமும் சிவந்து போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியானவனின் வரலாற்றையே அவனின் வாயைப் பிடுங்கி அறிந்து வைத்திருக்கிறார் என்றால் சண்முகம் அண்ணை கெட்டிக்காரர் தான். புறூக்கின் கழுகுக் கண்களை நேரில் சந்திக்கவே எவருக்கும் திராணி இருக்காது. அப்படியிருந்தும் சண்முகம் அண்ணை புறூக்கின் எதிரே நின்று அவனுடன் பேசுவார். புறூக்கிடத்தில் செல்வாக்கு மிகுந்தவராக இருந்தாலும் சண்முகம் அண்ணை ஒரு போதும் எவரையும் "அண்டி" விட்டதில்லை. இன்னும் சொல்லப் போனால், புறூக்கின் மன ஓட்டத்தைப் படம் பிடித்துப் பார்த்தவர் போல், சம்பந்தப்பட்டவர்களை புறூக்கிடம் தமது பிரச்சினைகளையும் நிலைமைகளையும் தெளிவு படுத்தும்படி கூறுவார்.

இன்றும் அப்படித் தான்.

அதிகாலையில் வேலை ஆரம்பிக்கும் சிலரில் நானும் ஒருவன். காலையில் சண்முகம் அண்ணை தான் தனது காரில் என்னையும் வேலைக்கு அழைத்து வருவார்.

முதல் நாள் நித்திரையில்லாமல் காலையில் மிகவும் குழம்பிப் போயிருந்தேன். சண்முகம் அண்ணையிடம் லீவு எடுப்பதாகக் கூறியிருந்தும் அவர் விடுவதாக இல்லை. சில 'ஓடர்'களை அவசரமாக முடித்து கொடுக்க வேண்டியிருப்பதாகக் கூறி வற்புறுத்தினார். சண்முகம் அண்ணையிடம் இரவு நித்திரை வராததைப் பற்றிச் சொல்லி வேலைக்கு வராமல் நின்றிருக்கலாம். வேலைக்கு வந்து இப்படி அவதிப்படத் தேவையில்லை.

என் போதாத வேளை. வேலையை ஆரம்பித்து ஒரு சில நிமிடங்களிலேயே "பேர்ணரின்" அருகே அமர்ந்து தூங்கி வழிந்து கொண்டிருந்தமையை புறூக் கண்டுவிட்டான். ஒன்றுமே பேசாமல் "விசுக்" என்று திரும்பிச் சென்றவன், எதிர்ப்பட்ட சண்முகம் அண்ணையிடம் கண்களால் ஏதோ கேட்டுவிட்டுச் சென்றிருக்கிறான்.

அப்போதிருந்து தான் சண்முகம் அண்ணையும் என்னிடம் நானாகவே சென்று புறூக்கிடம் என் நிலைமையைத் தெளிவுபடுத்தி மன்னிப்பும் கேட்டுக் கொள்ளுமாறு நச்சரித்துக் கொண்டிருக்கிறார்.

நித்திரை தூங்கியமைக்கான காரணமொன்றையும் சொல்லித் தந்து, காலைத் தேநீர் அருந்த எல்லோரும் 'கபினில்' கூடும்போது, எவரும் அறியாமல் புறூக்கைச் சந்தித்து தான் சொல்லித் தந்ததை அப்படியே கூறுமாறு ஆலோசனையும் சொன்னார். தேநீர் அருந்தும் வேளை நெருங்க நெருங்க நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொள்கிறது. ஏதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவு செய்தவன் போல் மன்னிப்புக் கோர நேரிட்டுவிட்டதே என்று மனம் ஏங்குகிறது.

எல்லோரும் தேநீருக்காகச் சென்றுவிட்டார்களா என்பதை உறுதி செய்துகொண்டு புறூக்கின் அறையினுள் பிரவேசிக்கின்றேன்.

"புறூக்! இரவு முழுவதும் என் குழந்தைக்கு வருத்தம். ஒரே சத்தியும் காய்ச்சலும்... நான் இரவில் நித்திரை கொள்ளவில்லை... அதனால் என்னை அறியாமலே சற்றுத் தூக்கிவிட்டேன்... 'சொறி'"

என் நிலைமையினால், ஆங்கிலம் தெரியாதவன் திக்குத் திணறிப் பேசுவது போல, நிறுத்தி நிறுத்தி சண்முகம் அண்ணை சொல்லித் தந்தவாறே காரணத்தை எடுத்துச் சொல்கின்றேன்.

அவனின் இதழ்க் கடையோரம் புன்சிரிப்பொன்று மலர்கிறது. என்னால் நம்பமுடியவில்லை.

'என் காரணத்தை நம்பாமல் என்னை இவன் இகழ்கின்றானா?'

"நோ வொறீஸ் கலா... கம் கம் வீ வில் கோ போ ரீ..."

கையில் 'சொக்கிலெற் ரின்' ஒன்றையும் எடுத்துக் கொண்டு, என் கையைப் பிடித்து அழைத்துச் செல்லும் புறூக்கின் செய்கையை நம்பாமல் பிரமித்துப் போய் அவனுடன் கபினுக்குள் இழுபட்டுக் கொண்டே செல்கிறேன்.

கபினில் புறூக்கைக் கண்டதும் எல்லோருக்கும் ஒரே திகைப்பு. அவர்களின் திகைப்பு அடங்கு முன்னரே புறூக் எல்லோரையும் விளித்தான்.

"பிரெண்ட்ஸ்! என் சகோதரிக்கு பையன் ஒருவன் பிறந்திருக்கிறான். நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன்... சொக்கிலேற் சாப்பிடுங்கள்..."

சொக்கிலேற் ரின்னை ஒவ்வொருவருக்கும் நீட்டிக் கொண்டிருக்கும் புறூக்கை எல்லோரும் அதிசயமாகப் பார்க்கிறார்கள். புறூக்கின் 'சரித்திரம்' தெரிந்த சண்முகம் அண்ணை என்னைப் பார்த்து கண்ணால் ஜாடை செய்கிறார்.

**இதழ் - 18 பங்குனி 2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை


## எம்.எஸ்.அமானுல்லா


ஜீவநதி

சிறுகதைகள்

9

நாளை ஒன்பது மணிக்கெல்லாம் அவன் சுதந்திர மனிதனாகி விடுவான். போகம்பரை சிறைக் கதவுகள் அவனுக்காக ஒருமுறை திறந்து மூடிக் கொள்ளும்.

நேற்றே வார்டன் சொல்லி விட்டார். இந்த இரண்டாண்டு சிறைவாசத்திற்குப் பிறகு சமூக வாழ்வில் எப்படி இணைந்து கொள்ள வேண்டும் என்று நீண்ட புத்திமதி... இதெல்லாம் அவன் காதில் ஒன்றும் ஏறவில்லை... முக்காட்டுக் கொடியாக, மனம் முழுக்க பழிவாங்கும் உணர்வே மூடிக்கிடக்கிறது.

காலையில் ஒன்பது மணிக்கு திறந்து விட்டால் அருகிலேயே பஸ் ஸ்டாண்ட். உடுப்புக்களையெல்லாம் அங்கேயே எறிந்து விட வேண்டும்... எதற்கு உடுப்பு?.. திருந்தி வாழ்வ தற்கா?... அவனுக்கு அந்த சிந்தனையே இல்லையே...

பணமும் தருவார்களாமே... ஆமாம் பணமும் கொஞ்சம் தேவைதான். வழிப் பிரயாணத்திற்கு, கூர்மையான கத்தி ஒன்று வாங்குவதற்கு, ஒரு வாரம் ஊரில் மறைந்து வாழ்வதற்கு... கொஞ்சம் பணம் தேவைதான்.

பத்து மணிக்கு பஸ் புறப்பட்டால் ஐந்து மணிக்கெல்லாம் ஊர் போய்ச் சேர்ந்து விடும். செக்கல் பொழுது மறைவதற்கிடையில் சேனைக்காட்டை அடைந்து விடலாம், இருட்டுவதற்குள் வேலையை முடித்து விடலாம். இந்த இரண்டு வருடம் இந்த சிறைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவுகளுக்குள் நான் பட்ட அவஸ்தைகளுக்கு வட்டியும் முதலுமாக அவளைத் தீர்த்து விட வேண்டும்...

மனிதன் மூலையில் இருந்து மெல்லிய மின்னற்கீற்றாக 'மனிதம்' எட்டிப் பார்க்கிறது. இப்பொழுதும் இந்த முரட்டுத்தனம் தேவை தானா?... மறுகணம் உடம்பு பூராகச் சிலிர்த்துக் கொள்கிறது.

யாரை ஏமாற்றி இருக்கிறாள் இவள்? யாருக்காக நான் சிறைவாசம் அனுபவிக்கிறேன்?...

முரட்டுத்தனமே உள்ளம் உடல் பூராக ஆட்சி செலுத்திப் பார்க்கிறது.

இப்பொழுது வந்த முரட்டுத்தனமா இது?...

பரம்பரையாக வந்த முரட்டுத்தனமா என்பதும் தெரியாது. ஏனெனில் தனது தாய் தந்தையர் யார் என்பதே அவனுக்கு இன்று வரை தெரியாது. அத்துடன் சகோதரங்கள், இனசனம் என்று யாருமில்லை.

ஊரில் தனியாகத்தான் திரிவான். கண்டதைச் சாப்பிடுவான். அகப் பட்ட இடத்தில் உறங்குவான். அவனை யாரும் நெருங்குவதுமில்லை. 'இம்' என்றால் கோபம் வந்து விடும். வயது மரியாதை என்று எதுவுமே பார்ப்பது கிடையாது. அடித்து நொறுக்கி விடுவான். அந்த ஊரில் அவன் தனிக்கட்டை, முரட்டுக்கட்டை. சின்ன வயதில் காடு மேடெல்லாம் திரிவான். கூடவே குஞ்சுத்தம்பி, அவனும் அதிகம் பேச மாட்டான். தலையாட்டுவ தோடு சரி.

அரைக் காற்சட்டைக்கு மேல் உடுப்பு கிடையாது. மேலெல்லாம் உப்பு வாசனை.

"குஞ்சுத்தம்பி, இண்டைக்கு ஈச்சங் குலை அடிப்பமா?"

"உம்"

சிறுவர் பட்டாளம் சேர்ந்து விடும். கூட்டமாக நடுக்காடு நோக்கிச் செல்வார்கள். ஈச்சம் புதரில் கண்ணாடி விரியன் இருக்கும். அவன் அதற்கெல்லாம் தயங்குவது கிடையாது. அடிமட்டைகளை அடுக்கி சுற்றிவர நெருப்புக் கொடுத்து விடுவான். பாம்பு, பல்லி, அறணை என்று எல்லா ஜீவராசிகளும் நெளியத் தொடங்கும். அவற்றை தீவட்டத்துள் எறிந்து, கருகுவதைக் கண்டு கைகொட்டிச் சிரிப்பான்.

ஈச்சமுள் முழங்கை முழுவதும் தைக்க கைகளை உள்ளே விட்டு, செங்காய் நிறத்தில் கோணல் கத்தியால் அறுத்து விடுவான்.

பின்னர், இரண்டு தோள்களிலும் ஈச்சங் குலைகளை சுமந்து வருவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கட்டிச் சிவப்பு நிறத்தில் "நாளை பழுத்துவிடுவேன்" என்று பயமுறுத்தி நிற்கும் காய்களை உப்புத் தண்ணீரில் குளிப்பாட்டி எடுத்து விடுவார்கள்.

அடுத்த நாள் எல்லாக்காய்களும் "குப்" பென்று கட்டெறும்பு நிறத்தில் பழுத்து விடும். அப்புறமென்ன, தென்னங்கிடுகில் பழங்களைப் பரத்தி சமபந்தி உண்ணத் தொடங்கி விடுவார்கள்.

அவனுக்கு உணவில் அவ்வளவு நாட்டமில்லை.

எங்காவது சொண்டங்காய் அகப்படுகிறதா என்று புகுந்து புறப்படு வான். அவற்றையும் பறித்து தென்னங்கிடுகில் பரத்தி துலாவி விடுவான்.

உடம்பெல்லாம் இரத்தம் பொசிந்து நிற்கும்.

அவனுக்கு வலி எடுப்பதில்லையா?...

ஏனில்லாமல்?

ஒருநாள் அப்பாவிச் சிறுவன் ஒருவன் தெரியாமல் கூறிவிட்டான்.

"இப்படி இரத்தம் வருதே. இவனுக்கு நோகாதா? மாடு மாதிரி உடம்பு..."

அவனுக்கு காதில் விழுந்து விட்டது.

அப்புறமென்ன?... அப்பாவிச் சிறுவனை பந்தாடி விட்டான். மூக்கிலும், முழங்கையிலும் இரத்தம் வழிய வழிய முகமெல்லாம் வீங்கி அழத் தொடங்கினான்.

அப்பொழுதும் அவனது மூர்க்கத்தனம் குறையவில்லை. சிறுவர் பட்டாளம் ஓடி ஒளிந்து கொண்டது.

குஞ்சுத்தம்பியும் அவனும்தான் மிச்சம். கிடுகு முழுவதும் ஈச்சம் பழமும், சொண்டான் பழமும் கிலி பிடித்து மௌனித்து கிடந்தன.

"நாமளும் ஊருக்குள்ள போய்விடுவம்" – குஞ்சுத்தம்பி

அவன் ஒன்றும் பேசவில்லை.

சித்திரை வெயில் அடங்கி காற்று எழும்புவதற்குள் பெருமழை பெய்யும். அந்த மழையுடன் பாலைப்பழம் முழுவதும் பழுத்து விடும். மரம் முழுக்க மஞ்சள் சேலை கட்டி விட்டது போல பழுத்துக் குலுங்கும்.

ஊரில் இருந்து வண்டில் கட்டிக் கொண்டு காட்டுக்குள் குடும்பம் குடும்பமாக பறப்பட்டு விடுவார்கள். அவ்வாறான நேரங்களில் அவனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜமரியாதை. மரங்களில் ஏறி கிளைகளை வெட்டித்தள்ளி பழக்குலை களை கீழே தட்டி விடுவான். ஒருமணி நேரத்தில் பத்து மரங்களின் கிளை களை தும்பு தட்டி விடுவான். அப்படி ஒரு வேகம். குடும்பம் குடும்பமாக குந்தி இருந்து கிளைகளில் இருந்து மஞ்சள் நிறப் பழங்களாக பறித்து கடகங்களில் சேமிக்கத் தொடங்கி விடுவார்கள்.. ஆனால் அவனுக்கு சேமிப்பதில் நாட்டமில்லை. யாருக்கென்று கொண்டு போகப் போகிறான்?

வந்திருக்கும் குடும்பங்களுக்கு மதியக் கறிக்கு ஏதும் பார்க்க வேண்டும்.. சின்னக் கண் வலையை எடுத்துக் கொண்டு குஞ்சுத்தம்பியுடன் புறப்பட்டு விடுவான். நீர் வற்றிக் கிடக்கும் சின்னக் குளங்களில் வரால் மீன் வீசுவான்.

இப்படித்தான் ஒரு நாள்...

மீன் வீசிக் கொண்டு திரும்பும்போது வழியில் காட்டெருமை எதிர்ப்பட்டு விட்டது. அவன் போட்டிருந்த சிவப்பு நிறக் காற்சட்டையால் மிரண்டு திமிறி இவனில் பாயத் தொடங்கி விட்டது.

அதனோடு மல்லுக்கட்டி, உடம்பெல்லாம் காயமாகி இரத்தம் வழிய வழிய... இவனது மூர்க்கமும் கூடிக் கொண்டே போனது... இவனைக் கீழே வீழ்த்தி விட்டு கொம்புகளால் முட்ட வந்த போது அவசரமாக விலகி, கைகளில் தற்செயலாக அகப்பட்ட மான் கொம்பினால் மாட்டின் வயிற்றைக் கீறி அதன் குடலை பிளந்து நிமிர்ந்த போது சனம் கூடி விட்டது.

குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்த காட்டு எருமையும் உடம்பெல்லாம் இரத்தம் வழிய முனகிக் கொண்டிருந்தவனையும் பார்த்த மாஞ்சோலை வளவுக்காரர் தற்செயலாகக் கூறினார்.

"சே... வாயில்லாச் சீவன். வீணாகக் குத்திப் போட்டானே"

வந்ததே கோபம் இவனுக்கு. தனது உயிரை கொல்ல வந்ததை அவர் பெரிதாக நினைக்கவில்லை. மாடு செத்துப் போனதையா இவர் பெரிது பண்ணுகிறார்.

பெரியவரென்றும் பார்க்காமல் முகத்தில் குத்தி விட்டான். நுனி மூக்கு உடைந்து இரத்தம் வழிய அவர் குனிந்த போது முதுகில் மறுபடி காலால் உதைத்தான். கீழே விழுந்து எழும்ப முயன்றவரை மான் கொம்பை எடுத்து வயிற்றில் கீற ஓங்கினான்.

ஆனால் நல்ல காலம் குஞ்சுத்தம்பி தடுத்து விட்டான்.

அப்புறம் என்ன... தப்பித்தோம் பிழைத்தோம் என்று கூட்டம் ஊருக்குள் ஓடி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பு முழுக்க ஒழுகி வழிந்த இரத்தத்தை எல்லாம் வாய்க்கால் நீரில் கழுவி, ஒரு முழுக்குப் போட்டு நிமிர்ந்த போது குஞ்சுத்தம்பியும் அவனை விட்டுப் போய் விட்டிருந்தான்.

முரட்டுத் தனத்தைத் தவிர அவனிடம் வேறு இரக்க சுபாவமே இருப்பதில்லையா?..

விடலைப் பருவத்தில் அவன் தவழ்ந்த போது, அந்த அதிசயம் நிகழ்ந்தது.

ஆமாம். அவன் காதல் வயப்பட்டுப் போனான்.

நாட்டில் நிகழ்ந்த வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு சொத்து சுகம் எல்லாவற்றையும் இழந்து, இனி இழப்பதற்கு ஏதும் இல்லை என்ற கட்டத்தில் அல்லிக் காட்டிற்கு வந்து சேர்ந்தது அந்தக் குடும்பம்.

தாய், தகப்பன், இவர்களது மகள் முல்லை என்று மிகச் சிறிய குடும்பம் அது. தரிசாகக் கிடந்த காட்டை வெட்டி சேனைப் பயிருக்குத் தயாரானது.

இவனும் கூடமாட உதவி செய்தான். காட்டு மரங்களை வேரொடு புடுங்கி கட்டை வேலி அமைத்துக் கொடுத்தான். இரண்டு ஏக்கர் அளவில் தேறிய நிலத்தில் சோளப் பயிர் இட்டார்கள். மூலை வளவுக்குள் பயறு போட்டார் கள். சோளம் விளைந்து அறுவடையான போது, பனி ஈரத்தில் எள்ளு விதைத்தார்கள். புதுத்தரை என்பதால் பயிர்கள் செழுமையாக வளர்ந்து அபரிதமாக விளைச்சல் காட்டியது.

அவர்களோடு சேர்ந்து இவனும் மாடாக உழைத்தான். அறுவடை யில் ஒரு பங்கை இவனுக்கென்று ஒதுக்கி கொடுத்தபோது மறுத்து விட்டான். யாருக்கென்று கொண்டு போய் கொடுப்பது? அவர்களுக்கே திருப்பிக் கொடுத்து விட்டான்.

கடின உழைப்பைத் தவிர அவனுக்கு இப்போது எதிலும் கவனம் இல்லை. ஊராரோடு சேர்த்தி இல்லை. முரட்டுத்தனத்தை வெளிப்படுத்த அவனுக்கு இப்போது நேரமோ, வாய்ப்போ கிடைப்பதில்லை. குஞ்சுத் தம்பி எப்போதாவது வந்து போவான். மற்றபடி சேனைப்பயிரும் அவனும் அந்தக் குடும்பமும் பட்டபாடுதான். அந்த போகத்திற்கு எள்ளு ஏகமாக விளைந்திருந்தது. அவனுக்கும் விளைச்சலில் ஒரு பங்கு ஒதுக்கிக் கொடுத்தார்கள்.

அவன் வழமை போல மறுத்து விட்டான்.

முல்லை, ஒருநாள் தனியாக பிடித்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எள்ளுப் பங்கை ஏன் மறுத்தீர்கள்?"

"வேண்டாம்"

"அதுதான் ஏன் என்று கேட்கிறேன்"

"எனக்கென்று யார் இருக்கிறார்கள், கொடுப்பதற்கு"

"அப்போ, இந்த எள்ளு முழுக்க எங்களுக்கா?"

"எள்ளை எல்லாம் விற்றுவிட்டு புதுசா வீடு கட்டிக் கொள்றதுக்கு அத்திவாரம் போட்டுக் கொள்ளுங்க. அடுத்த தடவை பயறு விளையும் போது வீட்டைக் கட்டிக் கொள்ளலாம்"

"வீடு எதற்கு?"

"ஏன், சீவிப்பதற்குத்தான்"

"யார் நானும் நீங்களும் சேர்ந்து சீவிப்பதற்கா?"

என்ன சொல்கிறாள் இவள்?...

உடம்பு சிலிர்த்துக் கொண்டது. மயிர் கால்களில் குளிர் ஏறி... "சோ" என்று மழைக்குள் நனைவது போல, அந்த மழை நீரும் குளிர்ந்து ஆலங்கட்டி துண்டுகளாக தலையை சிலிர்ப்பித்து...

ஆயிரம் மல்லிகை மொட்டுக்கள் முகையவிழ்ந்து மனம் முழுவதும் மணம் பரப்பி நின்றது.

அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல் வார்த்தைகள் உறைந்து போய்விட....

முதன் முறையாக அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். வைகறையில் விரிந்த தென்னம் பாளை போல புது அழகோடு... இத்தனை நாளும் இந்த அழகு எங்கே ஒளிந்திருந்தது? அவள் மெளனமாக நகர்ந்த போது, தடுக்கவும் எண்ணமின்றி தவிப்போடு மலைத்து நின்றான்.

***

அப்புறம் அவனுக்கு வேலையில் பராக்கு குறைந்து விட்டது. அவளைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பதே அவனுக்கு ஜென்ம சுகமாக இருந்தது. அவள் தன்னைப் பார்த்துச் சிரிப்பது போல கற்பனை செய்யும் போதெல்லாம் தொண்டைக்குள் இனிமையான சுகமொன்று திரள்வதை உணர்ந்தான் அவன். அவனால் உறங்க முடியவில்லை, விழித்திருக்கின்ற வெள்ளிகளை எண்ணிக் கொண்டிருப்பதே அவனுக்கு வேலையாகப் போய்விட்டது. காலையில் கருக்கிருட்டில் எழுந்து வேலையைத் தொடங்கி விடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேநீர்ச் சிரட்டையுடன் முல்லை,

"கொஞ்சம் பனி குறைந்த பிறகு வேலை செய்யலாமே?"

"செய்யலாம். ஆனால் வேலை முடியாதே"

"வேலை முடிஞ்சு என்ன செய்யப் போகிறீர்கள்?"

"இந்த முறை குரக்கன் விதைக்கப் போகிறேன்"

"அப்புறம்"

"விளைஞ்சதை விற்று பணமாக்கப் போறேன்"

"அப்புறம்"

"பணத்தில் வீடு கட்டப் போறேன்"

"அப்புறம்"

"தகப்பனைக் கூப்பிடு. அவரிடம் பேசுகிறேன்"

"அவர் இல்லை"

"எங்கே?"

"மரவள்ளித் தடி வாங்கப் போயிருக்கிறார்"

"அப்போ வந்ததும் பேசுகிறேன்"

அவர் வரும் அரவம் கேட்டது...

"நேற்று பின்னேரம் குஞ்சுத்தம்பி வந்தவர்"

"எதுக்காம்?"

"தெரியாது. ஆனா தாயிடம் பேசிக் கொண்டிருந்தவர்"

"என்னவாம்?"

"தெரியாது. மாப்பிள்ளைத் தோழனா நான்தான் வருவன் என்று சொல்லி இருப்பார்..." முள்ளிமுருங்கை விதைகளை தகரப் பேணிக்குள் இட்டுக் குலுக்குவது போல கலீர்ச் சிரிப்புடன் ஓடி விட்டாள் முல்லை.

அதற்குள் தகப்பன் வந்துவிட்டார்.

ஆனாலும் குஞ்சுத்தம்பி என்ன பேசி இருப்பான் என்ற சந்தேகம் நீண்ட நேரம் அவன் மனதை தென்னை மர வண்டாய்க் குடைந்து கொண்டிருந்தது.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசிப் பூரணைக்குப் பின்னர் தோன்றும் முன் இருட்டுக் காலத்தில் இலுப்பைத்தேன் விளைந்திருக்கும். சேனை வளவின் மூலையில் இருந்து பூவரசு மரத்தில் தேன் எடுக்க ஆயத்தம் ஆனார்கள். அவனால் அதில் முழு ஈடுபாட்டுடன் ஈடுபட முடியவில்லை. பல தடவைகளில் தேனீகொட்டியது. அவற்றைக் கலைக்க தீ மூட்டி புகை அடித்தார்கள். புகை மூட்டம் அவன் மனதிலும் பரவிக் கிடந்தது.

தேனெல்லாம் பானையில் சேகரித்து முடித்த பின்னர் அவர்தான் பேச்சைத் தொடங்கினார்.

"தம்பி ஊரெல்லாம் ஒருமாதிரி வித்தியாசமாப் பேசுறாங்களாம். முல்லை ஏதும் சொன்னவளா? அவளுக்கும் வயதுசு தான். ஒரு இளந்தாரிப் பொடியனை வீட்டுக்குள் வெச்சிருப் பதைப் பத்தி ஒருமாதிரி கதைக்கிறாங்களாம். முந்தநாள் விதானையாரும் சாடையாகச் சொன்னவர்."

அவனால் ஒன்றும் சொல்ல முடிய வில்லை. அவரே சொல்லி முடிக்கட்டும் என மௌனமானான்.

"முல்லைக்கு ஒரு கல்யாணம் செய்யலாம் எண்டு பாக்குறன். நீங்களும் எங்களோடதான் இருக்கிறீங்க. உங்களுக்கும் ஏதும் தோணிச்சா? சொல்லுங்க. உங்களக் கேக்காம ஒண்டும் முடிவெடுக்க மாட்டம்"

இவர் என்ன சொல்கிறார்? தன்னையே கட்டிக்கச் சொல்கிறாரா? அல்லது வேறொரு பையனைப் பார்க்கச் சொல்றாரோ?... நானே கட்டிக் கொள்றன் என்று எப்படி நேரடியாகச் சொல்வது?...

முல்லை சொல்லி இருக்க கூடாதா?

"அகதிகள் வீடு கட்டிக் கொள்ள கொஞ்சப் பணம் கொடுக்கிறாங் களாம். நாளைக்குப் போய் எடுக்க வேணும். மிச்சத்தை நாளைக்கு பேசுவோம்."

கைத்தூக்குப் பானையில் தேன் கனக்கத் தொடங்கியது. மனதில் தேள் ஊரத் தொடங்கியது.

இரண்டு நாட்கள் கழித்து நாலு வளவு தள்ளி இருக்கின்ற சேனைக்காரருக்கு நெல் விதைத்துக் கொத்திக் கொடுத்து விட்டு செக்கல் நேரத்தில் திரும்பிய போது...

முல்லை விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன முல்லை? ஏன் அழுறே?"

"நான் சொல்லேல்ல, வீட்டாரைக் கேளுங்கோ"

மறுபடியும் பேசத் தொடங்கினாள்.

"அவங்களை என்ன கேட்கிறது. நீ சொல்லன்"

தயங்கி தயங்கி வார்த்தைகள் நடுக்கத்துடன் வந்தன.

"குஞ்சுத்தம்பி வந்தவர். வீட்டாரிடம் பேசிக் கொண்டிருந்தார். என்னைப் பெண் கேட்டு வந்த மாதிரி"

"வீட்டில் என்ன சொன்னவங்க?"

"என்னைக் கேட்டுச் சொல்றன் எண்டவவாம்"

"நீர் என்ன சொல்லப் போறீர்?"

"ஹோ" வென்று சத்தமாக அழத் தொடங்கி விட்டாள் அவள். குஞ்சுத்தம்பி இதற்குத்தான் இந்தப் பக்கம் வந்து போறவனா?

காட்டாற்றை மூடி வைத்திருந்த அணைகள் படீர் படீர் என்று உடைத்துக் கொண்டன. உள்ளே உறங்கிக் கொண்டி ருந்த மூர்க்கமிருகம் மறுபடியும் தனது கோரைப் பற்களை திறந்து கொண்டு உறுமல் காட்டியது. மயிர்க்கால்களின் தசை களில் அசுர வேகம் முட்டித்தள்ள மனிதனை மறைத்து இருந்த முரட்டுத்தனம் வெளிவர வேகமாக வெளியேறினான் அவன்.

மறுநாள் காலை குறை காயங் களுடன் கிடந்த குஞ்சுத்தம்பியை ஆற்றங் கரை ஓரமாக கண்டெடுத்தார்கள். இவனைப் பொலிஸ் பிடித்துக் கொண்டு போனது. சட்டம் இரண்டு வருடம் உள்ளே தள்ளியது.

***

இந்த இரண்டு வருடங்களிலும் அவன் முரடனாகவே அங்கு தனித்திருந் தான்.... சிறையில் மற்றக் கைதிகளுடன் அவன் எந்தப் பேச்சும் வைத்துக் கொள்ள வில்லை. அவனை யாரும் பார்க்க வருவ தில்லை. அவனுக்கு யாரும் பொருட்கள் கொண்டு வருவதில்லை. அவனுக்கு அதில் தேவைப்பாடும் இல்லை. தன்னை நெருங்கும் யாரையும் அவன் முரட்டுத் தனத்துடனேயே எதிர் கொண்டான்.

ஆனாலும் இந்த இரண்டு வருடங்களையும் அவன் விரைவாகக் கடத்தி விடவே விரும்பினான். தனக்காக முல்லை காத்திருப்பாள் என்ற நம்பிக்கை அவனுக்கிருந்தது. சிறைவாசம் முடிந்து அங்கே சென்று அவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம் முடித்து பாதியளவு வளர்ந்துள்ள வீட்டை முடித்து அவளுடன் சேர்ந்து வாழும் அந்த இனிய நாட்களை அசை போட்டபடியே அவன் துன்ப இரவுகளைக் கழித்து விடுவான்.

***

சிறைவாசம் முடிய இன்னும் ஒரு வாரம் இருக்கும் போதுதான் அவனுக்கு அந்தச் செய்தி இடிபோல காதில் இறங்கியது.

வளவில் தானியங்கள் விளைந்திருக்கும் காலங்களில் அவற்றைக் கொள்வனவு செய்வதற்காக வெளியூர் வியாபாரி ஒருவர் வருவார். இதனால் அவர் அவனுக்கு நல்ல அறிமுகம்.

ஏதோ வழக்கில் சிக்குண்டு அவரும் கைதியாக அங்கே வந்திருந்தார்.

"தம்பி, நீர் குஞ்சுத்தம்பி வழக்கில் அகப்பட்டவரல்லே?"

"ஆமாம் அடுத்த வாரத்தில் விடுதலையாகப் போகிறேன்"

முல்லையை சந்திக்கப் போகிறேன் என்ற மகிழ்ச்சியில் முகமலர்ச்சியோடு கூறினான்.

"அதுக்குப் பிறகு அங்கு நடந்த செய்தியெல்லாம் கேள்விப் பட்டிருப்பீர்தானே"

"இல்லியே, முல்லை இருக்கிறாதானே.."

"ஆமா, ஆனா தாய் தகப்பனெல்லாம் ஊரோட போய்ட்டாங்களே"

வெண்ணெய்க் கட்டிக்குள் கத்தி இறங்குவதாய் மனம் பிளவுபட...

"அப்போ முல்லை தனியாகவா இருக்கிறா?"

மெல்லிதாக சந்தேகம் முளை கொள்கிறது...

"அப்போ உமக்கு விசயம் தெரியாதோ?"

இதயக் கூட்டுக்குள் யாரோ மான் கொம்பை செருகுகிறார்கள். அவரது கைகளைப் பிடித்து முறுக்குகிறான். வலியால் பயந்து பின்வாங்குகிறார்.

"என்ன நடந்தது?"

"ஒரு வருசத்துக்கு முதல்ல கல்யாணம் முடிஞ்சிட்டுது"

"யாருடன், யாருடன்"

"வேறு ஆரு? அந்த குஞ்சுத்தம்பி பயலோடதான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் தீப்பொறி பறக்கிறது. கைகளில் நரம்புகள் புடைத்து முறுக்கேறுகிறது. கம்பிகளை பிடித்து வளைக்கிறான். இப்போதே இந்தக் கம்பிகளுக்குள்ளாக பாய்ந்து வெளியேறி அவளுடைய குரல்வளையை பிடித்து நெரித்து... கண்கள் கோவைப்பழம் போல சிவந்து சுவாலை கக்குகின்றது.

"தம்பி கொஞ்சம் அமைதியா இரும். இன்னும் ஒரு கிழமைதான் இருக்கு ஏடா கூடமாக ஏதாவது செஞ்சா திரும்பியும் சிறைச்சாலைக் குள்ளேயே போட்டுடு வாங்க"

அவர் தூரமாகி விட்டார்.

அவனால் எதனையும் சிந்திக்க முடியவில்லை.

தலைக்குள் கருங்குளவி ஒன்று ஆக்ரோசமாக கொட்டுவது போல வலி எடுப்பதாக உணர்ந்தான்.

எவளுக்காக அவன் மண்டையை உடைத்தேனோ, இந்த இரண்டு வருடமாக சிறைக்குள்ள இருந்து நரக வேதனையை அனுபவித்துக் கொண்டு இருக்கிறேனோ அவள் இன்று இன்னொருவனுடன் குடும்பம் நடத்துகிறாளா?... அவனால் கற்பனை செய்ய முடியவில்லை. தன் இடத்தில் இன்னொருவனை வைத்துப் பார்க்கவே முடியவில்லை. இன்றைக்கே அவளை கண்டதுண்டமாக வெட்டி... மனம் பூராக ஆத்திரம் அலை மோதுகிறது.

சிறைக்கூடத்தை அதே ஆத்திரத்துடன் வெறித்தான்.

***

பஸ்ஸில் இருந்து இறங்கியவுடன் நாலு அங்குல நீளத்தில் கூரான கத்தியொன்றை வாங்கிக் கொண்டான். ஒரே குத்தில் முடித்துவிடக் கூடாது. குஞ்சுத்தம்பியுடன் வாழ்ந்தவளை, உடல் பூராக கத்தியால் குத்தி இரத்தம் சொட்டச் செய்ய வேண்டும். என் முன்னாலேயே அவள் துடித்துச் சாக வேண்டும்.

வானம் சிவந்து ஒளி மறையத் தொடங்கும் நேரம். இந்தச் சூரியன் ஒளிந்து கொள்வதற்குள் முடித்து விட வேண்டும்.

நரம்புகள் முறுக்கேறி உடல் சூடாகிக் கொண்டு இருந்தது. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. கால்களில் வேகம், மூச்சுக் காற்று அனல் கொள்ளத் தொடங்கியது. என்னை ஏமாற்றியவள் இன்று இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துச் சாகப் போகிறாள்...

ஆத்திரத்துடன் சேனை வளவுக்குள் நுழைந்தபோது ஆள் அரவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதும் இல்லை. தொண்டைக் கூட்டுக்குள் முரட்டுத்தனம் வேகம் கொண்டு அடைத்துக் கொள்ள கைகள் கத்தியின் முனையைப் பற்றிக் கொள்ள கண்கள் உருண்டு உருண்டு முல்லையைத் தேடி அலைந்தன.

மாமரக் குற்றியின் மீது வேகம் கொண்டு உதைத்தான்.

சேனையின் கிழக்குப் பக்கம் எள்ளு விதைத்திருந்தது. இடது பக்கம் மரவள்ளி போட்டிருந்தது. நெஞ்சளவு உயர்ந்து வளர்ந்திருந்த மரவள்ளி செடிகளுக்கிடையில் ஆள் அரவம் கேட்கிறது.

தலை தெரிகிறது... ஆமாம் முல்லைதான்.

என்னைச் சிறைக்கு அனுப்பிவிட்டு அவனுடன் சந்தோசமாக இருக்கும் முல்லைதான்.

மரவள்ளிச் செடிகளுக்கிடையிலேயே அவளை முடித்து விட வேண்டும். கத்தியில் கரத்தைப் பதித்து முன்னேற முனைந்த போது அவள் மரவள்ளிச் செடிகளுக்கிடையில் இருந்து வெளியே வரத் தொடங்கி விட்டாள்.

இப்போது அவளது முழு உருவமும் தெரிகிறது.

ஆக்ரோசத்துடன் முன்னேற முயன்றவன் இப்போது பின் வாங்கினான்.

கத்தியில் பதிந்திருந்த அவனது கை தளர்கிறது. கண்களில் கொதித்துப் போயிருந்த ஆத்திரம் சூடு தணியத் தொடங்கியது.

தாய்மையின் பூரணப் பொலிவோடு அவள்....!

நிறைமாதக் கர்ப்பிணியாக அவள் மெதுவாக நடந்து வந்தபோது அவனது சிந்தனையில் மின் பொறி பறந்தது.

தன்னையும் தனது தாய் இப்படியொரு தாய்மைக் கோலத்தைத் தாண்டித்தான் பெற்றெடுத்திருப்பாளா?...

முதன் முறையாக ஒரு மகனின் பாச உணர்வோடு... அவளை மரியாதையோடு பார்த்தான்.

தான் கொண்டுவந்த பணத்தையும், கத்தியையும் மாமரக்குற்றிமீது வைத்துவிட்டு அமைதியாக வெளியேறினான்...

இதழ் - 25 ஐப்பசி - 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடை

## சந்திரகாந்தா முருகானந்தன்

ஜீவநதி
சிறுகதைகள்
10

பங்குனி மாத உச்சி வெயில் தகித்துக் கொண்டிருந்தது. பாடசாலை விட்டு வீதியால் மெதுவே நடந்து வந்து கொண்டிருந்தேன். உடலெங்கும் வியர்வை கசிந்து கொண்டிருந்து.

எனது கையிலே குடை. விரித்த குடை மங்கிப் போயிருந்தது. என் இளமையைப் போலவே! இந்தக் குடைக்கு எத்தனை வயது என்று யோசித்துப் பார்க்கிறேன். பன்னிரண்டு வருடங்களுக்கு முன் நான் பல்கலைக் கழக மாணவியாக இருந்த காலம் தொட்டு இன்று வரை இந்தக் குடையைப் பாவித்து வருகிறேன். துணி ஒளியிழந்து மங்கிப்போய்விட்டாலும் அதைக் கைவிட மனமில்லை. வலுபக்குவமாக பாவித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு பட்டதாரி ஆசிரியையான எனது சம்பளத்தில் எத்தனையோ குடைகள் வாங்கலாம். நாள் ஒரு சாறியும், வாரம் ஒரு செருப்பும், மாதம் ஒரு கைப்பையும் என்று பாவிக்கும் எனக்கு சாதாரண விலையுள்ள குடையொன்றை வாங்குவது அப்படி யொன்றும் கஷ்டமில்லை. குடையை இன்னமும் கைவிட மனமில்லை என்பது தான் உண்மை.

கர்ணனுக்கு கவச குண்டலம் போல் என்னோடு இப்போது இந்தக் குடை ஒட்டிப் போய்விட்டதோ என்னவோ! இதைப் பிடித்துக் கொள்ள பலத்த வெயிலோ மழையோ கூட தேவையில்லை. தெருவில் இறங்கினால் கையில் இந்தக்குடை! தயாழினி ரீச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவார் பின்னே, குடைவரும் முன்னே என்று சக ஆசிரியைகள் கூட கிண்டல் அடிப்பார்கள். எனக்கும் இந்தக் குடைக்கும் உள்ள உறவு பற்றி பிறருக்குத் தெரிந்திருக்க நியாய மில்லை. என் மனதுடன் முடங்கிப் போய்விட்ட அந்தக் குடை தொடர்பான விடயங்களை நான் யாரோடும் பகிர்ந்து கொள்வதில்லை.

ஏன், இந்தக் குடையை அன்பளித்த செல்வகுமாரைக்கூட நீண்ட பத்து வருடங்களுக்கு மேலாகக் காணவில்லை. ஒரு மலையடிவார கிராமத்திற்கு ஆசிரிய நியமனம் பெற்றுச் சென்றதாக ஞாபகம்.

யோசனையுடன் நடந்து கொண்டிருந்த போது ஒரு அழகான கார் என்னருகே வந்து பிரேக் அடித்து நின்றது. நிமிர்ந்து பார்த்தேன். ஆள் மாறியிருந்தாலும் அந்தக் கண்கள் அவனைச் சட்டென்று அடையாளப் படுத்தியது. செல்வகுமார். "ஏறுங்க" என்றான் உரிமையோடு "இவ என்னுடைய பெச்மெட்" மனைவிக்கு என்னை அறிமுகப்படுத்தினான். புன்னகைகளைப் பரிமாறினோம். அதே குடையை விரித்தபடி ஏறியதை அவன் அவதானித்தான். என் மனதிலே பழைய நினைவுகள்...

பல்கலைக்கழக வளாகத்தில் காலடி எடுத்து வைத்த முதல் நாளில் எதிர்பார்த்தது போல பகிடி வதை அட்டகாசமாகவே இருந்தது. ஆண்கள் தான் அப்படி இப்படி என்றிருந்தால் இந்தப் பெண்களும் இப்படியா?

புதிய பெண்கள் நான்கைந்து பேரை மேடையில் ஏற விட்டு, குடைகளை விரித்து சுழற்றியபடி நடக்க விட்டு அழகு ராணிப் போட்டி வைத்து சிரேஷ்ட மாணவ மாணவியர் ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்போது எனது முறை குடையை விரிக்கும் போதே மனது திக்கென்றது எட்டுக்கம்பிகளில் ஒரு கம்பி ஏற்கனவே உடைந்திருந்ததால் எனக்குக் கூச்சமாக இருந்தது. குடையைச்சுழற்றிச் சுழற்றி நடந்த போது கம்பி உடைந்த பக்கம் மடிந்து அசிங்கமாக இருந்தது "முதல்ல புதுக் குடை ஒன்று வாங்கி பல்கலைக் கழக மாணவிபோல் இருக்கப் பழகு! பிறகு தான் படிப்பு" என யாரோ ஒரு மாணவி கிண்டலடிக்க, ஏனைய மாணவர்கள் எல்லோருமாகச் சிரித்தார்கள். எனக்கு நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலிருந்தது.

எங்கள் வீடுகளில் வேலை வெட்டி செய்து சீவித்த செல்லத்தின் மகன் செல்வகுமார் கூட பார்த்துக் கொண்டிருக்கிறானே. என்ன வெட்கக் கேடு, அப்பாவிடமும் அம்மாமீதும் கோபம் வந்தது. குடையொன்று வாங்க வேண்டும் என்று நான் கேட்டபோது அவர்கள் அதைப் பெரிதுபடுத்த வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கம்பி முறிஞ்சு போச்சம்மா...."

அப்பா குடையை வாங்கிப் பார்த்தார். "அதொண்டும் பெரிய பழுதில்லை. இரவைக்கு நான் கம்பியை மாத்தித்தாறன்" சொன்னபடியே சீர் செய்து தந்தார் அப்பா. விரித்துப் பார்த்த போது மனதுக்கு ஆறுதலாக இருந்தது. பாவம் அப்பா, ஒரு ஏழைக் கமக்காரர். அந்தச் சிறிய தோட்டத்தில் இரத்தத்தை வியர்வையாக்கி அயராது உழைத்தாலும் வரும் படி போதாது. மூன்று பிள்ளைகள், ஆச்சி என சுமை அதிகமானதால் அம்மாவும் வீட்டில் கோழி, ஆடு, மாடு வளர்த்துத் தான் செலவை ஈடு செய்வாள். வீட்டில் அன்றாடச் சாப்பாட்டிற்கே சில நாட்களில் திண்டாட்டம். பேசாமல் படிப்புக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு, ஏதாவது ஒரு தொழில் செய்யலாம் என்று சில வேளைகளில் எண்ணுவேன். அம்மாவிடம் என் கருத்தை ஒரு நாள் சொன்னபோது அம்மா பதறிப்போய் விட்டார். "நீ படிக்கக் கூடியனி... படிச்சு ஒரு தொழில் பார்க்கவேணும். எங்களைப் போல எங்கட பிள்ளைகளும் கஷ்ரப்படக்கூடாது. உன்னைப் பட்டதாரி யாக்கிப்பார்க்க வேண்டுமென்பது அப்பாவின்ர ஆசை. தயா நீ படிக்கணும்..."

அவர்கள் விருப்பப்படி படித்தேன். பல்கலைக்கழகக் கதவு எனக்காகத் திறந்த போது உள்ளமெல்லாம் துள்ளியது. ஆனாலும் படிப்புச் செலவை எப்படி சமாளிப்பது என்ற எண்ணம் மனதை நெருடியது. இலவசக் கல்வி என்று பெயர்தான். பதிவுக் கட்டணம், படிப்புக் கட்டணம், விடுதிக் கட்டணம் என்று ஆரம்பச் செலவுகளே அச்சுறுத்தின. நல்ல உடுப்புக்கள், அத்தியாவசியப் பொருட்கள் வாங்கக் கூட கடன்பட வேண்டியிருந்தது. அப்பா பகலெல்லாம் தோட்டத்திலும், சந்தையிலும் என ஓடிஓடி உழைப் பார். எனினும் மிச்சப்பாடு இன்றி நாளாந்தச் செலவுகளில் பணம் கரைந்து விடும்.

"காசு கிடைச்சால் புதுக்குடை வாங்கலாம். அதுவரை சமாளி பிள்ளை..." அம்மா ஆறுதல் கூறினாள். பழைய குடையுடன் வந்தாகிவிட்டது. பலன் இன்று இந்த அவமானம். அப்பா மாற்றித் தந்த கம்பி, காலையில் பஸ்ஸிலிருந்து குடையை விரித்தபடி இறங்கும் போதே "டக்" என்று மறுபடி முறிந்து விட்டது.

வெயில் சுட்டாலும் பரவாயில்லை, நாளைக்கு இந்தக்குடையைக் கொண்டு வரக்கூடாது என எண்ணினேன். மேடையிலிருந்து இறங்கிய என் முகம் இருண்டு போயிருந்தது. மனதெல்லாம் படபட என்று அடித்துக் கொண்டது. உடலில் வியர்வைக் கசிவு கைக் குட்டையால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டிருந்தபோது, தயாழினி என்ற அழைப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுத் திரும்பினேன். செல்வகுமார் தான் நின்றிருந்தான். இரண்டு வருடங்களுக்கு முன்னர் பல்கலைக்கழகம் வந்து விட்ட சிரேஷ்ட மாணவனான அவன் என்னைக் கனிவோடு நோக்கினான்.

முன்னர் பார்த்ததைவிட நாகரிகமாக இருந்தான். அவனது அண்ணா அகதியாகப் புலம்பெயர்ந்து சென்று இப்போது அவனது குடும்ப நிலை உயர்ந்துவிட்டதாக அறிந்திருந்தேன். இப்போதெல்லாம் அவனது அம்மா செல்லம் எமது வீடுகளுக்கு முன்னரைப் போல் வேலைகளுக்கு வருவதில்லை.

"தயாழினி கவலைப்படாதீங்க.. இவங்கள் இப்படித்தான் மனிதர்களுடைய கஷ்டத்தைப் பற்றித் தெரியாதவங்கள்.. இன்னும் இரண்டு கிழமையில் பகிடி வதை முடிஞ்சிடும். ஒண்டுக்கும் யோசிக்காதையுங்க..."

இரவு உறக்கம் கெட்டது. இருபக்கமும் கேலி மீண்டும் மீண்டும் காதோடு ஒலித்தது.

செல்வகுமாரின் நினைவு வந்து மனதில் என்னவோ செய்தது. அவனுக்கு முன்னே மானபங்கப்பட்டது போலிருந்தது. புரண்டு புரண்டு படுத்தேன். குடைவாங்கத் தான் வேண்டும். அப்பாவுக்குக் கடிதம் எழுதலாமா, பாவம் பணம் புரட்ட அவர் பட்ட கஷ்டம் நினைவில் வந்தது. இந்த நிலையில் பணம் அனுப்பி வையுங்கள் என்று எழுதினால், வீட்டில் பட்டினி கிடந்துதான் அனுப்ப வேண்டிவரும். வேண்டாம். எப்படியாவது பல்லைக் கடித்துக்கொண்டு சமாளிக்க வேண்டியது தான். மதிய நேரம் வெயில் தான். யாராவது தோழியின் குடையுள் ஒட்டிக் கொள்ள வேண்டியதுதான்.

அடுத்த சில நாட்கள் பகிடி வதை தொடர்ந்தது. இக்கட்டான சில சமயங்களில் செல்வகுமார் தான் காப்பாற்றினான். எனினும் அவனது உதவிகளை மனம் ஏற்க மறுத்தது. அந்த வார இறுதியில் வீட்டிற்குப் போனேன். திண்ணைவேலியிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு வந்து எனது அடுத்த பஸ்ஸுக்காகக் காத்திருந்த போது செல்வகுமார் எதிர்ப்பட்டான்.

நீண்ட நேரம் பஸ் வரவில்லை "ரீ குடிப்போமா?" என்று அழைத்தான் "வேண்டாம்" என்றேன்.

"களைப்பாக இருக்கடி... குடிப்போம்..." தோழி ராகினி சென்னாள். நான் மறுபடி மறுத்தேன். "விருப்ப மென்றால் நீ போய்க்குடி..." என்றேன். அவர்கள் போகவில்லை. செல்வகுமாரின் முகத்தில் துயர ரேகைகளை அவதானித்தேன்.

வீட்டுக்குப் போனதும் அழுகை அழுகையாக வந்தது. அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வோடு வந்து பல்கலைக்கழகம் பற்றி விசாரித்தார்.

"நான் இனிப் படிக்கப் போக வில்லை.. இந்தக் குடையால பட்ட அவமானம் போதும்..." என்றபடி குடையை மூலையில் வீசினேன் அம்மாவுக்கு கவலையாகப் போய் விட்டது. குடையை எடுத்து விரித்துப் பார்த்தார். ஒரு கம்பி முறிந்து ஒரு பக்கம் மடிந்து காட்சியளித்தது.

"கத்தரி பூக்கத் தொடங்கி விட்டது. இரண்டு கிழமைகளில் காய்பிடுங்கத் தொடங்கலாம் பிறகு வாங்கலாம். நீ ஒண்டுக்கும் யோசிக் காதை பிள்ளை" அம்மா ஆறுதல் கூறினார். இரவு வந்த அப்பாவிடம் அம்மா சொல்லியிருக்க வேண்டும். அப்பா குடையை எடுத்து விரித்துப் பார்த்தார். அவரது முகத்திலும் சோக ரேகைகள்.

எனினும் அடுத்தநாள் குடையை எடுத்துக் கொண்டு கடைத் தெருவுக்குப் போனார். அங்கு குடை திருத்துபவனிடம் கொடுத்துத் திருத்திக் கொண்டு வந்தார். குடையை விரித்து என்னிடம் காட்டினார். அதைப் பார்த்தேன். எனினும் குடையை வாங்கவில்லை அப்பாவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

"அடுத்தமுறை நீ வரும்போது புதுக்குடை வாங்க காசு தாறன் பிள்ளை... கவலைப்படாதை. எங்கட கஷ்டம் தெரியும் தானே பிள்ளை?" அப்பா சொல்லும் போது எனக்கு மனது கனத்தது. அவர்களது திருப்திக்காக கம்பஸ் போனபோது குடையைக் கொண்டு போனேன். எனினும் பாவிப்பதில்லை. நாட்டின் யுத்த சூழ் நிலையிலும் பல்கலைக் கழகப் படிப்பு பயத்துடன் தொடர்ந்தது.

எம்மோடு படித்த ரசீத், பாத்திமா முதலியோர் வெளியேற்றப் பட்ட போது மனது அழுதது. கிழக்கில் ஊர்காவல் படை செய்த கொடுமைக் காக இவர்களைப் பழி வாங்குவதா என நினைத்தேன்.

ஒரு மாதத்தில் பகிடி வதை முடிவுக்கு வந்தது.

பகிடிவதை முடிந்து விட்டமையினால் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களும் பழைய மாணவர்களும் சுமுகமாகி விட்டனர். "வெல்கம் பாட்டியன்று "பார்சல் பாசிங்" நிகழ்வின் போது மீண்டும் ஒரு நெருடல்.

பார்சல் எனது கையில் வந்த போது இசை நின்றது. "இங்கே வழங்கப் படும் குடையை விரித்துக் கொண்டு அழகு ராணியாக வலம் வரவும்.."

குடையை வாங்கி விரித்தேன். நான்கு கம்பிகள் முறிந்து கிழிந்த குடை. மனமும் முகமும் இருண்டு போனது. குடையை விரித்துக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றி வருவதைத் தவிர மாற்று வழி இருக்கவில்லை. எல்லோரும் "கூ" அடித்தார்கள் யாரோ ஒருவன் விசிலடித்தான். சுற்றி வந்ததும் குடையை மடித்து ஒரு மேசையில் வைத்து விட்டு வெட்கத்துடன் கூனிக் குறுகி ஓடினேன். அப்புறம் தான் கவனித்தேன். நான் குடையை வைத்தது செல்வகுமாரின் முன்னே என்பது. தற்செயலாக நடந்தது என்றாலும் ஏன் இப்படி நடந்தது என்று புரியவில்லை.

அடுத்த முறை வீட்டிற்குச் சென்று வந்தபோது செல்வகுமாரும் அதே பஸ்ஸில் பயணம் செய்தான். தற்செயலாக அவனுக்குப் பக்கத்தில் அமரவேண்டி ஏற்பட்டது. நீண்ட நேரம் இருவரும் மௌனமாகப் பயணம் செய்தோம். இப்போது முன்னரைப்போல் அவன் மீது வெறுப்பு ஏற்படுவதில்லை. எனினும் அதிகம் நெருங்கிப் பழக ஒரு விதபயம்.

செல்வகுமார் ஏதோ பலமான யோசனையில் ஆழ்ந்திருப்பது போலவும், எதையோ சொல்ல முடியாமல் தயங்குவது போலவும் உணர்ந்தேன். பஸ் வல்லை வெளியை தாண்டிய பின்னர் தான் கதைத்தான். "நீங்கள் எந்தத் துறையில் ஸ்பெஷல் செய்வ தாக இருக்கிறீர்கள்?" எனது பக்கம் திரும்பிக் கேட்டான்.

"இன்னும் முடிவு செய்யவில்லை"

"நான் கெமிஸ்றி ஸ்பெஷல் செய்கிறேன்." என்றான் "நீங்கள் விடுதியில் தானே தங்கியிருககிறீர்கள்?"

ஓம் என்று தலையசைத்தேன்.

"நாட்டு நிலைமை சீரில்லை வெளியில் இருந்து வந்து போறது கஷ்டம். எந்த நேரம் என்ன நடக்குமோ தெரியாது. இந்த யுத்தம் முடிவுக்கு வராட்டில் யாரும் நிம்மதியாக இருக்க முடியாது.. போன கிழமை என்ர தம்பியும். வெளிக்கிட்டுப் போய் விட்டான்.. ஓ எல்லில எல்லாப் பாடமும் ஏ எடுத்தவன்.."

"கேள்விப்பட்டனான்..."

"உங்கட அம்மா சுகமில்லாமல் வைத்தியசாலையில் இருந்தவராம். இப்ப எப்படி?" அவன் அக்கறையுடன் கேட்ட போது மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

இப்படி இடையிடையே சந்திப்புகள் தொடர்ந்தன.

அன்றிரவு படுக்கையில் கற்பனைகள் விரிந்தன. வீட்டுச் சூழலையும் உறவுகளையும் பிரிந்து வாழ்கின்ற துயர சூழ்நிலையின் தனிமையில் செல்வகுமார் ஒரு நம்பிக்கையான துணையாகத் தோன்றினான். அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாக எனது நட்பைப் பெறவும், என் மனதில் இடம் பிடிக்கவும் வேண்டும் எனவும் செயற் படுவதாக உணர்ந்தேன்.

அவனது உள்ளக் கிடக்கையை ஏற்க மனது தயங்கித் தவித்தது. சாதி என்கிற சாத்தான் அடிக்கடி வந்து பயமுறுத்தியது.

உறுதியாக எல்லை தாண்டாமலிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

நான் தங்கியிருந்த விடுதிக்கு சில மாலை வேளைகளில் வந்து கதைத்துக் கொள்ளும் அளவுக்கு எமது நட்பு வளர்ந்தது. எனது ஒவ்வொரு தேவைக்கும் அவனையே மனது எதிர் பார்த்தது. கடைத் தெருவுக்குப் போக கோயிலுக்குப் போக. எங்கே வெளியே போவதென்றாலும், சிநேகிதிகள் கூட வந்தாலும், நாட்டு நிலைமை காரணமாக ஒரு ஆண் துணை தேவைப்பட்ட போதெல்லாம் உரிமையுடன் அவனையே அழைப்பேன்.

"செல்வ குமாருக்கு உன்னில லைனடி... நல்ல பையன். நீ அதிஷ்டக் காரியடி..." மலர் நெடுமூச்செறிந்து கூறியபோது. "அப்படியில்லையடி... எனக்கு அப்படி ஒரு எண்ணம் இல்லையடி"

என்று மறுத்துரைத்தேன். எனினும் இரவு யோசிக்கும்போது, அவனுக்கு என்ன குறை? கண்டறியாத சாதி... என மனது எண்ணியது.

ஒரு நாள் மாலை செல்வகுமார் விடுதிக்கு வந்திருந்தான்.

"அண்ணா வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறான்." என்ற படி என்னிடம் ஒரு பார்சலை நீட்டினான். "வேண்டாம்" என்று மறுத்தேன். அவனது முகம் கறுத்ததைக் கண்டதும் அந்தரமாக இருந்தது. பார்சலை வாங்கிக் கொண்டேன்.

அவன் விடைபெற்றுக் கொண்டு போனதும் பார்சலை கழற்றிப் பார்த்தேன். சென்ற் போத்தல், சொக்லெட் வகை, ஒரு அழகான ஸ்கேட், அத்துடன் ஒரு குடை!

குடை மிகவும் அழகாக இருந்தது. விரித்துப் பார்த்தேன். அற்புதமான குடை. கம்பஸ்சில் யாரிடமும் இப்படி ஒரு குடை இல்லை. மனதில் தென்றலடித்தது. நானும் அவனும் இந்தக் குடையுள் நடந்து போவதாக மனதில் ஒரு கற்பனை. மனதில் நாணம் ஏற்பட்டது.

குடையை வீட்டிற்குக் கொண்டு போக முடியாது. இங்கேயே வைத்துப் பாவிக்கலாம்.

அடுத்த வார இறுதியில் வீட்டிற்குப் போன போது எனது ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்ட அண்ணா ஒருவன், செல்வகுமாரின் உறவினரான பெட்டை ஒருத்தியை கூட்டிக் கொண்டு ஓடிவிட்ட சேதியைக் கூறி அம்மா அட்டகாசமாக ஏசினார். எனக்கு என்னவோ போலிருந்தது.

"எங்கட தாயக விடுதலைக்காக ஒன்றிணைந்து நின்று போராடுகிறம், இந்தக் காலத்திலும் என்ன சாதி பார்க்கிறியள் அம்மா?" என்றேன்.

அம்மா என்னைப் பார்த்து முறைத்தார். " என்ர பிள்ளை இப்படிச் செய்தா நான் உயிரோட இருக்க மாட்டேன்.." எனக்கு சுரீரென்றது.

இந்த நிகழ்வுக்குப் பின்னர் செல்வகுமாருடன் பழகவே அந்தரமாக இருந்தது. நிச்சயமாக அவன் என்றோ ஒருநாள் வந்து தன் காதலைத்தெரிவிக்கத்தான் போகிறான்.

எனினும் செல்வகுமார் அன்பளித்த குடையுடன் பெருமிதமாக நடந்து போவேன் "அருமையான குடையடி எங்கேவாங்கலாம்?" எத்தனையோ பேர் கேட்டனர். எனக்குப் பெருமிதமாக இருந்தது.

செல்வகுமாருக்கு இறுதியாண்டுப் பரீட்சை முடிந்தது. நான் எதிர்பார்த்தபடி அவன் என்னிடம் அந்தக் குண்டைத்தூக்கிப் போட்டான். "தயாழினி.. எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு உங்களுக்கும் என்னைப் பிடிச்சிருக்கும் என்று நினைக்கிறேன்.." எனக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. ஆனால் அவன் சொன்ன வார்த்தைகளிலிருந்த உண்மை உறைத்தது. மௌனமாக நின்றேன். கண்கள் பனித்தன. " செல்வா... அடைய முடியாத பொருளிலை ஆசைப் படக்கூடாது. நடக்க முடியாத சாத்திய மற்ற காதலை நாம் ஆரம்பிக்கத்தான் வேணுமா? எங்களுடைய சிநேகிதம் இறுதிவரை நல்ல நட்பாகவே இருந்து விட்டுப் போகட்டுமே.."

"தயா.. நீங்க சொல்லுறதில் உள்ள நியாயம் எனக்குப் புரியுது. ஆனால் நாம் மனம் வைத்தால் எதுவும் சரிவரலாம்.. துணிவுதான் வேணும்.."

எனக்கு அந்தத் துணிவில்லை. பின்னுக்குள்ள என்னுடைய சகோதரி களுடைய எதிர்காலம் என்னால் பாதிக்கப் படக் கூடாது.." உறுதியாக மறுத்தேன்.

செல்வகுமார் படிப்பு முடிந்து போய்விட்டான் நீண்ட நாட்கள் என் மனம் அவனுக்காக அழுதுகொண்டே இருந்தது.

எனது படிப்பு முடிந்து நான் ஆசிரியையானேன். வீட்டில் பல இடங்களில் திருமணம் பேசினார்கள். அவர்கள் எதிர்பார்த்த சீதனத்தை எம்மால் கொடுக்க முடியாததால் எனது திருமணம் பின்தள்ளிக்கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனது. தலையில் வெள்ளிகூட பூக்கத் தொடங்கிவிட்டது.

இளமைக் கனவுகள் ஈடேறாத தகிப்பில் தவிக்கின்ற பொழுதுகளி லெல்லாம் செல்வகுமாரின் நினைப்பு மேலோங்கும். வலிய வந்த சீதேவி யைத் தட்டிக் கழித்துவிட்டு இன்று வாழ்வுக்காகத் தவிக்கின்ற அவலத் தை உணர்கின்ற இந்த வேளையில் இராக்காலக் கனவுகளிலும் நினைவு களிலும் செல்வகுமார் தரிசனமாவான்.

எனினும் அவனை அப்புறம் சந்திக்கவேயில்லை. இன்று சற்றும் எதிர்பாராமல் சந்தித்தபோது மனது கனத்தது. செல்வகுமாரும் மனைவியும் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் இயந்திரத்தனமாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன்.

கார் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. நான் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது சொன்னேன். செல்வகுமார் காரை நிறுத்தினான். நான் இறங்கி குடையை விரிக்கும் போது அவனது பார்வை குடையிலேயே குத்திட்டு நின்றது

நான் காரை விட்டு இறங்கிய போது "தயாக்குட்டி.. அன்ரிக்கு டாட்டா சொல்லம்மா.." என்று தன் மகளிடம் கூறினான்.

நான் அதிர்ச்சியுடன் செல்வகுமாரை நிமிர்ந்து பார்த்தேன். என்னைப் போலவே அவனது கண்களும் பனித்திருந்தன.

குழந்தைக்கு "டாட்டா" சொல்லியபடி குடையை விரித்தேன் "படக்" கென்று ஒரு கம்பி முறியவே நெஞ்சு வலித்தது. தாங்க முடியாமல் கண்கள் பெருக்கெடுத்தன.

வீட்டிற்குச்சென்றதும் அப்பாவிடம் சொல்லி முறிந்த கம்பியை மாற்றிக் கொள்ள வேண்டுமென நினைத்தேன். வீட்டை அடைந்ததும் முதல் வேலை யாக அப்பாவிடம் குடையை நீட்டினேன்.

அப்பா குடையை வாங்கிப் பார்த்தார். "இந்தக் குடையை வீசிவிட்டு புதுக்குடை வாங்கம்மா.." என்று அன்பாகக் கூறினார்.

"நீங்கள் தானே வாங்கித்தர வேண்டும்" என்றேன். நான் சொல்வது புரியாமல் அப்பா விழித்தார்.

**இதழ் - 08 புரட்டாதி-ஐப்பசி 2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைவுகள்

## ப.ஆப்டீன்

ஜீவநதி
சிறுகதைகள்
11

"என்ன மாஸ்டர் யோசனை?" என்று கேட்டுக் கொண்டே பாடசாலைப் பிரதான மண்டபத்தினுள் பிரவேசித்தான் அஹமது.

"ஒன்றுமில்லை... சும்மா..." சிறு சமாளிப்போடு சொன்னேன்.

வந்தவர் வழக்கம் போல் மாணவர் கதிரைகளையும், பெஞ்சுகளையும் இரைச்சலுடன் இழுத்து ஒழுங்கு படுத்துகிறார்.

அவருடைய வருகையும், அந்தச் செய்கையும் எனக்கு அறவே பிடிக்கவில்லை.

"என்ன மாஸ்டர்? ஒரு மாதிரியாப் பாக்கிறீங்க?"

நான் ஒன்றும் பேசவில்லை.

"ஏற்கனவே அரைகுறையாய் இருக்கும் தளபாடங்களை, இப்படிக் கொஞ்சமும் பொறுப் புணர்ச்சி இல்லாமல் நாலுதரம் இழுத்தால்.. அவை என்னத்துக்கு உதவும்? ஓர் ஆசிரியன் என்ற முறையில் நான் இதை எல்லாம் பார்த்துக் கொண்டு... அனுமதிப்பதா...?"

சொற்கள் சிலம்பமாடின.

நானோ இந்தக் கிராமத்திற்குப் புதியவன்.

நான்கு பேர் இருந்து சீட்டு விளையாடத்தக்கதாக மேசை நாற்காலிகளை ஒழுங்கு செய்து விட்டு, 'சேர்ட் பொக்கட்டில்' வைத்திருந்த சீட்டுக் கட்டை இழுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெடுத்தான் அஹமது. இவன் அயலவன். பாடசாலைக்கு சம்பந்தம் இல்லாதவன்.

சீட்டாட்டத்தில் காட்டும் இந்த ஆர்வமும் ஒற்றுமையும் கிராம முன்னேற்றத்தில் காட்டினால்...? ஆசிரியன் என்ற தரத்தில் என் மனம் ஏங்கியது.

நான் மௌனமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

"மாஸ்டர் உங்களுக்கு 'முன்நூற்றி நாலு' விளையாடத் தெரியுமா?"

இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டுத் தன் பார்வையைப் பள்ளிக்கூட முன் வாயில் பக்கம் செலுத்துகிறார், அவனது முகத்தில் ஒரு முறுவல் இழையோடுகிறது.

பள்ளிக்கூடக் கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே வருகிறார்கள் ஆதம்பாவாவும் றஹீமும்.

இப்போது விளையாட்டை ஆரம்பிக்க மூன்று பேர் சோந்து விட்டார்கள்.

"சே..! இன்னும் ஒரு ஆள்தானே" அஹமது மீண்டும் வாயில் பக்கம் பார்க்கிறான், தவிக்கிறான்.

என் மன ஆத்திரத்தைக் கொட்ட முடியாமல் இரைகிறேன்.

"ஆதம்பாவா, தயவு செய்து வாற ஆட்கள் அந்தப் பாடசாலைக் கேற்றை மூடிவிட்டு வாங்களேன். மாடுகள் உள்ளே வந்து பயிரை நாசப்படுத்தும்..."

என்குரலில், ஆத்திரமும் கோபமும், சற்றுக் கண்டிப்பும்.. அவர்கள் பூட்டிவிட்டு வருகிறார்கள்.

"புதிதாக வந்து ஏதேதோ சட்டங்கள் போடுகிறார் போலிருக்கு, இவர் மட்டும் அதிபராயிட்டா... எங்கட பாடு..?"

ஆதம்பாவா தனது எண்ணத்தை றஹீமிடம் கூறுகிறான்...

"சே! இவர் மலைநாட்டுக்காரர்... இங்கே அதிபராக வைக்கமாட்டாங்க...." என முணுமுணுத்தான் ரஹீம்.

"என்ன மாஸ்டர் சொன்னீங்க...?" என்று சற்று ஆக்ரோஷமாகக் கேட்டான்.

ஆதம்பாவா என்னைக் கூர்ந்து கவனிக்கிறான்.

"... இல்லை மாடுகள் உள்ளே வந்து வளரும் பயிரை நாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும்... மறுகா காலையில புள்ளைக பாடசாலைக்கு வந்தா... சாணம் அள்ளுவதற்கே நேரம் சரி..." என்றேன்.

"இந்தாங்க... மாஸ்டர்... சும்மா பைபோஸ் போடாதீங்க... சொல்லிட்டன்.. சரியா...."

வம்பு வளரப் பார்க்கிறது... அஹமது வெளியே வருகிறான்.

"என்னப்பா இது, இந்த ஆள் புதுசு, அந்த ஆளோட போய்..."

"வாங்கடாப்பா விளையாடுவம்"

அஹமது எனக்கு உபதேசம் செய்ய வருகிறான்.

"மாஸ்டர், இந்த ஊர்ப் பொடியன்கள் அப்படித்தான். அவர்களுக்குப் பேசத் தெரியாது. நீங்க அவங்களோட எல்லாம் கவனமாக இருக்கனும்"

நான் அவனுடைய பேச்சைத் துரும்பாக மதித்து, நாற்காலியில் இருந்து அன்றைய பத்திரிகையை விரித்து வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தேன்.

மீண்டும் அஹமது தான் அழைக்கிறான்.

"வாங்க சேர் விளையாடுவோம், நான் சொல்லித்தாறன்..."

"ஆ...! இதென்ன அநியாயம்... இவர்களுடைய பிள்ளைகளுக்கு.. திறம்பட ஆங்கிலப் பாடம் படிப்பிக்க அனுப்பப்பட்ட எனக்கு இவன் சீட்டு விளையாடப் படிப்பிக்கிறானாம்..."

"சே...! எனக்கு விருப்பமில்ல..." அதற்குப் பிறகு நான் ஒன்றும் பேசவில்லை.

ரோட்டில் போய்க் கொண்டிருந்த அல்லாப்பிச்சையைக் கூப்பிட மூவரும் ஏககாலத்தில் குரல் எழுப்பினர்.

அவன் வருகிறான்.

"என்ன இங்கிலிஸ் மாஸ்டரைக் கூப்பிட்டு விளையாடுறதுதானே..?"

"சே...! அவருக்கு ஒண்டுந் தெரியாது"

மூவரும் என்னைத் துரும்பாக எடை போட்டுக் கொண்டு அல்லாப்பிச்சையுடன் சீட்டு ஆடத் தொடங்குகின்றனர். அல்லாப் பிச்சையின் காதில் ஏதோ 'கசமுச'வென்று கூறுகிறான் ஆதம்பாவா, பென்னாம் பெரிய சிரிப்புகள் வெடிக்கின்றன. சுவாரஸ்யமாக ஆடிக் கொண்டிருக்கின்றனர். முதலாவது ஆட்டத்தில் அஹமதுவும் ஆதம்பாவா வும் "குவீனை" துரும்பாக வைத்து வென்று விட்டனராம். வெற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோசங்கள் பாடசாலை மண்டபத்தையே அதிரச் செய்கின்றன.

அதற்கு அப்புறம் அது ஒரு சிறு இடைவேளை போலும்.

"மாஸ்டர், சிகரட் பற்றுவீங்களா..?"

"இல்லை..."

"வெற்றிலையாவது...?"

"அதுவும் இல்லை..."

"அப்ப அம்முக்குட்டி ஓட்டலில் ஒரு பிளேன் டீயாவது குடித்துவிட்டு வருவோமா...?"

"சரி போவோம்... நன்றாக இருட்டி விட்டது. விளக்கை ஏற்றிவிட்டுப் போகலாம்"

நானும் அஹமதுவும் புறப்படுகிறோம்.

"மாஸ்டர் உங்கடை ஊர் என்று சொன்னீங்க..?"

"மலைநாடு... கண்டி"

"அப்படியா, நான் இரண்டு வருடத்திற்கு முன் கண்டிககுப் பெரஹரா பாக்க வந்திருக்கிறன்... ஆமா கண்டியில் எந்த இடம்..?"

"கண்டியிலிருந்து இருபது மைல் நாவலப்பிட்டி..."

"நீங்க அங்கேதான் படிச்சீங்களா...?"

"முதல்ல கற்றபூலா தோட்டப் பாடசாலை, அப்புறம் கம்பளை சாஹிரா... கடைசியாக நாவலப்பிட்டி சென்றமேரிஸ் கல்லூரி..."

எனக்கொரு கிரிகஹட்ட, அஹமதுவுக்கு ஒரு பிளேன்டீக்கும், சிகரட்டுக்கும்... காசைக் கொடுத்தேன். நாங்கள் திரும்பியபோது வெளியே சென்றிருந்த அதிபரும் மற்றைய ஆசிரியர்கள் இருவரும் முன் வாசலில் நின்று கொண்டிருந்தனர்.

அவர்களுடன் ஆதம்பாவா கதைத்துக் கொண்டிருந்தான்.

"என்ன மர்ஜான் மாஸ்டர், என்ன அது?" வந்ததும் வராததுமாக அதிபர் கேட்டார்.

"எதைப் பற்றிக் கேட்கிறீர்கள்?"

"என்னமோ... ஆதம்பாவா...?"

"அப்படி ஒன்றும் விசேஷமில்லை. பள்ளிக்கூடத்திற்கு வாற ஆட்கள வாயில் மெயின் கேற்றை மூடிவிட்டு வரச் சொன்னேன். நேற்று ஐந்தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுப் பிள்ளைகள் வைத்த மிளகாய்க் கன்றுகளைப் பாருங்கள்.. மாடுகள் வந்து அவைகளை மிதிச்சு நாசம் பண்ணுமே...."

அதிபர் என்னைக் கூர்ந்து கவனிக்கிறார்.

'மாஸ்டர், வேலியிலுள்ள பம்பிகளை இழுத்துக் கட்ட வேண்டும். கேற் வாயிலால மட்டுந்தான் மாடுகள் உள்ளே வருகின்றனவா?" ஆதம்பாவா சொன்னான்.

"ஆதம்பாவா, கோவிக்காதயுங்க... நீங்கள் சொல்வதும் சரிதான்..."

"வேலியை நன்றாக இறுக்கமாகப் போட்டிருந்தால்...?"

நான் அதிபரைப் பார்க்கிறேன். அவரது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கின்றன.

நானும் அதிபரும், மற்றைய ஆசிரியர்களும் அறைகளை நோக்கி நடந்து கொண்டிருக்கிறோம்.

'மர்ஜான் மாஸ்டர் வேலி போடுவது, அது என்னுடைய வேலை... நான் அதைப் பார்த்துக் கொள்ளுவன்"

"ஐ ஆம் சொரி சேர்"

"ஆங்கில மாஸ்டர்... நீங்கள் ஊருக்குப் புதுசு, ஆட்களோடு பார்த்துப் பழகிக் கொள்ளணும். படிப்பிக்க வந்த நாம் எமது தொழிலை நன்றாகச் செய்ய வேண்டுமானால், நாம் ஊரோடும் ஒத்துப் போக வேண்டும்..."

அதிபரின் அறிவுரைக்கு நான் மறுப்புரை கூறவில்லை. அவருடைய ஆலோசனை எனக்கும் பிடித்தமானது தான்.

மண்டபத்தில் சீட்டு ஆட்டம் உச்சக் கட்டத்தை அடைந்து கொண்டிருந்தது. ஆசிரியர்களும் தீவிரமாகப் பங்கு பற்றினார்கள். சீட்டில், சிகரட்டில் எல்லாவற்றிலும் நேரம் போவதே தெரியாமல், ஊரோடு ஒத்துழைத்துக் கொண்டிருந்தார்கள். இம்முறை அஹமதுவுக்கும் அல்லாப்பிச்சைக்கும் படுதோல்வி.

"ஓ...! இப்ப ஆசிரியர்களுக்கும் தோல்வி" அல்லாப்பிச்சை இரைந்தான்.

ஆசிரியர்கள் 'ஜெக்'ஐ துரும்பாக வைத்து ஆடினார்கள்.

அவர்கள் தங்கள் 'துரும்பை' மறந்து எதை எதையோ துரும்பாக வைத்து ஆடுகிறார்கள். ஆடிக் கொண்டே இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் ஆசிரியர் புஞ்சிபண்டாவும் அம்முக்குட்டியில் இராப் போசனத்தை முடித்துக் கொண்டு வந்து படுக்கைக்குச் செல்லும்போது பத்துமணி பிந்தி விட்டிருந்தது.

ஆளுக்கு நான்கு தட்டையான மாணவர் மேசைகளைப் பொருத்தி, அதில் பன்பாயை விரித்து வைத்திருக்கிறோம். இதுதான் எங்கள் படுக்கை.

வந்ததும் படுக்கையில் சாய்ந்த புஞ்சிபண்டா மாஸ்டர் குறட்டை விடத் தொடங்கினார்.

மண்டபத்தில் மது பரிமாறப்பட்டதால் ஆட்டம் இன்னும் சூடுபிடித்துக் கொண்டிருந்தது!

ஆதம்பாவா வெறித்து இரைந்து கொண்டிருந்தான்.

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருக்கும் எனக்கு முதல் ஆசிரிய நியமன நாள் ஞாபகம் வந்தது. அன்று எனது மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இருக்க வில்லை.

இந்த முறை கல்வி அமைச்சராகப் பொறுப்பெடுத்திருப்பவர் தலைமைத்து வத்திற்கும் சமூக சேவைக்கும் பிறந்தவர். கறாரான பேர்வழி.

மலையகத்தைச் சேர்ந்த ஆறுபேரின் விண்ணப்பங்கள் மீள் பரிசீலனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு ஒரே வாரத்தில் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பும் வந்த போது, வீட்டில் நாங்கள் மகிழ்ந்ததை விட ஊர் நண்பர்களின் மகிழ்ச்சியே மேலோங்கியது.

ஆனாலும் இது ஒரு வித்தியாசமான நேர்முகத் தேர்வு.

வடித்தெடுக்கப்பட்ட நாற்பது பேரையும் அமைச்சர் சந்திக்க விரும்புகிறார் என்ற பணிப்புரையைத் தொடர்ந்து, ஒரே பரபரப்பு. என்ன ஆகப் போகுதோ?

அமைச்சரின் விசாலமான அலுவலக அறைக்குள் நுழைந்து வட்டமிட்டோம்.

ஒவ்வொருவரும் தத்தம் பெயரையும் ஊரையும் கூறிச் சுய அறிமுகம் செய்து கொண்டதைத் தொடர்ந்து அமைச்சரின் ஓர் உபதேசச் சிற்றுரையைக் கேட்ட பிறகுதான் எங்களுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

"உங்கள் எல்லாருக்கும் ஆங்கில ஆசிரியர் நியமனம் கிடைக்கும். ஆனால் நீங்கள் பார்த்திராத, கேள்விப்படாத மனித்தியாலங்களாகப் பிரயாணம் செய்ய வேண்டிய கஷ்டப் பிரதேச சிறு சிறு கிராமப் பாடசாலைகளுக்கு அனுப்பத் தீர்மானித்திருக்கிறோம். அங்கு நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதாபிமானத்துடன் கடமை செய்ய வேண்டும். அனைத்தும் குறைபாடு கள் உள்ள சிறு சிறு பாடசாலைகளே. முடிந்தவரை சமாளித்துக் கொண்டு விவசாயப் பெருமக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களின் பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை உணர்த்திப் படிப்பிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு...

இரண்டு அல்லது மூன்று வருடங்கள் கஷ்டப் பிரதேச சேவை செய்தபின்... நீங்கள் நிச்சயமாக ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்படுவீர்கள். அதற்குப் பின்னர் நீங்கள் விரும்பும் மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவீர்கள்..."

அவரது முகத்தில் மகிழ்ச்சி.

"கஷ்டப் பிரதேசம் என்று யோசிக்காதீர்கள்.. திஸ் இஸ் ஏ கோல்டன் ஒப்பொர்ச்சினிட்டி..."

"வயதான காலத்தில் அரச ஒய்வூதியம் கிடைக்கும் போதுதான்... இதன் அருமை புரியும்... அப்பொழுது நான் உயிருடன் இருக்கமாட்டேன்..."

'சரி இப்ப நீங்கள் போகலாம்... உத்தியோக பூர்வமான உங்கள் நியமனக் கடிதங்கள் அஞ்சலில் வரும்... இன்றிலிருந்து 'தூர கிழக்கு' போக ஆயத்தப்படுத்தத் தொடங்கலாம்" என்று நகைச்சுவை யாகப் பேசினார்.

நாங்கள் நன்றியுடன், அவரது நல்லாசியைப் பெற்று இல்லங்களுக்குத் திரும்பினோம்.

சொல்லி வைத்தாற் போல் ஒரே வாரத்தில் நியமனக் கடிதம் வந்து எங்கள் கதவைத் தட்டியது.

வீட்டில் தடல்புடலாக ஆயத்த வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

அலுமாரிக்கு மேல் இடது பக்க மூலையில் சுவரோடு சிறைப்பட்டுக் கிடந்த அந்தக் கூடைப்பெட்டியை இறக்கி தூசு தட்டிக் கொண்டிருந்தார். தகப்பனார்.

"அடே... ங்... கப்பா! எவ்வளவு காலமாச்சி... இப்பதான் ஒனக்கு நல்ல காலம் பொறந்திருக்கு... இனி ஒன்ன அசைக்க ஏலாது... எங்கிருந்தாலும் போய் படிப்பி...' என எனக்கு கூறுவது போல் கூடைப் பெட்டிக்கு ஆசி கூறியவாறு ஸ்டோர் றூமுக்குள் புகுந்தார்.

சற்று நேரத்தில் 'வார்னிஸ்' போத்தல் பிரஷ்சுடன் வந்து பூசத் தொடங்கினார்.

மெருகேற்றப்பட்ட கூடைப்பெட்டி பளிச்சென்று மின்னத் தொடங்கியது, புத்தம் புதியதாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறம் சோப், டவல், சாரம் எல்லாம் எடுத்துச் சுற்றிக் கொண்டு பள்ளத்து ஊற்றுப் பீலிக்குக் குளிக்கச் சென்றேன். எனக்கு விருப்பமான 'ஐஸ்' தண்ணீர்...

குளித்துக் கொண்டிருக்கும் போதே கடமை புரிய வேண்டிய அனுராதபுரம்.. ஹம்மில்லாவ முஸ்லிம் பாடசாலை எப்படி யிருக்குமோ என்று கற்பனை செய்தேன்.

என் மனக்கண் முன்னுக்கு அந்தக் கூடைப்பெட்டி காட்சி தந்தது. புத்தகங்கள் கொண்டு போவதற்கு மிகப் பொருத்த மானது.

கொஞ்சக் காலத்துக்கு முன் நாற்காலி பின்னும் ஒரு தொழிலாளி வந்திருந்தார். நாற்காலிகளைப் பின்னிக் கொண்டிருந்தவர் அப்பாவின் அன்பு உபசரிப்புகளுக்கு அடிமையாகி அந்தக் கூடைப் பெட்டியை அன்பளிப்பாகப் பின்னித் தந்துவிட்டுப் போனவர். உண்மையில் அது ஒரு அதிர்ஷ்ட கூடைப் பெட்டிதான்.!

அனுபவித்துக் குளித்துக் கொண்டு இருந்த நான் 'நாளை மறுநாள் காலை... வந்து உனக்கு 'குட்பை' சொல்லப் போகிறேன்...' என்று மானசீகமாகக் கூறி விட்டு, ஊற்றுப் பீலியை விட்டு நகர்ந்தேன்.

மாலையானதும் நூலகத்தில் நண்பர்களைச் சந்தித்து, உறவாடிவிட்டுத் திரும்பும் போது ஒரு புதிய "சூட்கேசை'யும் வாங்கி, சைக்கிள் பின் சீற்றில் வைத்துக் கட்டிக் கொண்டு வந்தேன்.

கூடைப் பெட்டி என்னை வரவேற்றது.

வார்னிஷ் நிறத்தின் மினுக்கமும் அதன் புதிய தோற்றமும் அன்று மலர்ந்த தாமரையைப் போல் ரம்மியமாக வசீகர மாக கையில் கொண்டு வந்த புதிய சூட்கேசு டன் போட்டி போட்டுக் கொண்டிருந்தது.

அன்று இராப் போசனத்திற்குப் பிறகு ஓய்வாய் இருந்து உடுப்பு வகையறாக் களைப் புதிய 'சூட்கேசில்' ஒழுங்காக அடுக்கினேன்.

மாணவர்களுக்குத் தேவையான ஆங்கில இலக்கணம், இலக்கியம், பயிற்சி நூல்கள்... கட்டுரைத் தொகுப்புகள்... என்று அலுமாரியிலிருந்து பத்து நூல்களைத் தெரிவு செய்து கூடைப் பெட்டிக்குள் அழகாக அடுக்கியாயிற்று. மேலதிகமாக ஒரு பைல், சி.ஆர். புத்தகம், இரண்டு குறிப்புப் புத்தங்கள்.. அவ்வளவுதான் அதன் உள்ளடக்கம்.

அப்பா கூறியது போல் அப்பொழுதுதான் கூடைப்பெட்டியின் கல்விப்பணி உயர்ந்து நிற்கத் தொடங்கியது. அனுராதபுரம் செல்லும் நாள் பளிரென்று வந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவின் ஆலோசனைப்படி, 'நியமனக் கடிதம் கிடைத்தது. தொழிலைப் பொறுப்பேற்பதற்காகக் கடுகதி புகைவண்டியில் புறப்பட்டு விட்டேன்' என்று பாடசாலை அதிபருக்கும் அனுராதபுரம் கல்வியதிகாரிக்கும் தந்தி கொடுத்துவிட்டேன்!

அன்று மாலை ஐந்து முப்பதுக்கு புறப்பட்ட ரயிலில் சீற் கிடைத்தது. இராப் பயணம் அலுப்புத்தான். யன்னலூடாக இயற்கைக் காட்சிகள் ஒன்றையும் பார்க்க முடியாதே!

எப்படியோ மறுநாள் விடியலில் அனுராதபுர நிலையத்தில் இறங்கியதும், மிக அவசர அவசரமாக விரைந்து தயாராக நிற்கும் வவுனியா பஸ்ஸில் ஏறி இருக்கை பிடித்துக் கொண்டேன்.

வளைவுகள் இல்லாத ஒரே நேர்ப் பாதை மிக வேகமாகப் போய்க் கொண்டிருந்தது பேரூந்து.

தேநீருக்காக மதவாச்சியில் பதினைந்து நிமிடங்கள் நிறுத்தம்! அப்புறம் பயணம் தொடர்ந்தது.

பஸ் கண்டக்டரிடம் உறுதிப்படுத்திக் கொண்டு "பூனேவ" சந்தியில் இறங்கிக் கொண்டேன்.

ஆள் அரவம் இல்லை யாரிடம் விசாரிப்பது? வண்டிகள் எதுவும் இல்லை. நீண்டு செல்லும் செம்மண் பாதையில் இரண்டு பையன்கள் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்கள். மாணவர்கள் போல் தெரிகிறது. நான் விசாரிப்பதற்கு முன்.

"ஸேர் பள்ளிக்கூடத்திற்கா...? எங்களைப் பெரிய சேர்... அனுப்பினவர்..."

"அப்படியா...!"

விபரங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டபின் சைக்கிளில் சவாரி தொடர்ந்தது.

"தம்பி எவ்வளவு தூரம்...?"

"மூன்று மைல் சேர்..."

எனக்கு வியர்த்துக் கொட்டியது.

இரண்டு மைல்களுக்குப் பிறகு ஒரு சிங்களக் குக்கிராமம் எதிர்பட்டது.

ஒரு விஹாரை. ஆங்காங்கே மண் வீடுகளும், கல் வீடுகளும், ஓலைக் குடிசைகளும்... என்னை வரவேற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேயொரு கடை. ஒரு பக்கம் மளிகைச் சாமான்கள். மறுபக்கம் சிறு தேநீர்க் கடை. டீ. பழம், பணிஸ், பாண்... என்று

"கடையப்பம் சாப்பிட்டுப் போவோம்..." என்று உள்ளே சென்று அமர்ந்தேன்.

"தம்பிமார் உட்காருங்க..."

"வேணாம் சேர்... நாங்க பால் சாயம் குடிச்சம்..."

"பால் சாயமா...?"

"ஓம் சேர்... கிரிகஹட்ட..."

கடையை நடத்தும் இளைஞன் வந்து...

"சேர் முஸ்லிம் ஸ்கூலுக்கா....?" சிங்கள மொழியில் கேட்டான்.

அவன் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது.

மேசையில் திண்பண்டங்களைப் பரத்தினான். காலைச் சாப்பாடு திருப்தியாக முடிந்தது.

சிற்றுண்டிக்குப் பணம் எடுக்க மறுத்துவிட்டான் இளைஞன்.

"முதன் முறையாகப் பக்கத்து முஸ்லிம் பாடசாலைக்கு வந்திருக்கிறீர்கள், உங்களை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். உங்களைச் சந்தித்ததில் பெரிய சந்தோஷம்.. இது எங்கள் கிராமம் ஆனைக் கட்டி. கடையும் நம்முடையதுதான். நான் நிமால். அது எங்கள் வளவு.

"சேர், சைக்கிளில் வந்த மாணவர் களை அனுப்புங்க... உங்களைக் காரில் கொண்டு போய் விடுறன்... இன்னும் ஒரு மைல்தான் கிடக்கு"

நிமாலின் அன்புக்குக் கட்டுப்பட்டு விட்டேன்.

கடைக்குப் பின்னால் விரைந்து கராஜிலிருந்து காரைக் கொண்டு வந்து நிறுத்தினான். கைகளில் கனத்துக் கொண்டிருந்த பொதிகளைப் பின்சீற்றில் ஏற்றிவிட்டு "சேர்... ஏறுங்க..."

ஒஸ்டின் கேம்பிரிட்ஜ் செம்மண் புழுதியைக் கொண்டு மெல்லக் கிளம்பியது.

மாணவர்கள் பின்னால் சைக்கிளில் ஓடி வந்தனர்.

நிமாலுடன் உரையாடிக் கொண்டே சென்றதால் பிரயாணக் களைப்பு ஆனைக் கட்டி வெப்பக்காற்றுடன் கலந்து கொண்டது.

பாடசாலை முன்றலில் 'ஹம்மில்லாவ அரசினர் முஸ்லிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலயம்' பெயர்ப் பலகைக்கு அருகே வண்டி நின்றது.

கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே நடந்தேன். நிமாலும் கூடைப் பெட்டியை ரசித்துக் கொண்டே பின்னால் வந்தான்.

சைக்கிளில் வந்த மாணவர்கள் இல்லங்களுக்குப் போய் விட்டார்கள். பாடசாலை தொடங்க இன்னும் நேரமிருக்கு.

அதிபர் "அஸ்ஸலாமு அலைக்கும்" சொல்லி வரவேற்றார்.

அதிருக்கு முன்னால் நாற்காலிகளில் அமர்ந்து சம்பிரதாய பூர்வமாக என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

"நிமால்... ஸ்துதி..." என்று அதிபர் நன்றி கூறவும், நிமால் எங்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

நியமனக் கடிதத்தை வாங்கி துருவித் துருவிப் பரிசீலனை செய்ய பிறகு பாடசாலை 'லொக்' புத்தகத்தில் நியமனம் சார்ந்த விபரங்களைப் பதிவு செய்வதில் மூழ்கினார் அதிபர்.

அதே நேரத்தில் பாடசாலையில் கடமைகளை ஏற்றுக் கொண்டேன் என்று ஒரு கடமை ஏற்புக் கடிதத்தை என் கைப்படத் தயாரித்துக் கொண்டிருந்தேன்.

அதிபர் மூலம் கல்வியதிகாரிக்கு அனுப்ப வேண்டிய உத்தியோகபூர்வமான கடிதம் அது.

"மர்ஜான் மாஸ்டர்... இப்பாடசாலையில் தங்கு வசதிகள் இல்லை. எல்லாத் துக்கும் இரண்டு அறைகள் தான்... நானும் எனது சொந்தச் சாமான்களை, பெட்டி படுக்கைகளை ஒரு மூலையில் ஒதுக்கிவிட்டு, திறந்த மண்டபத்தில்... பெஞ்சுகளை இணைத்துத்தான் நித்திரை கொள்வேன். அது எனக்கு பழக்கப்பட்டு விட்டது. ஆனால் உங்களால் அது முடியாது. புஞ்சி பண்டா மாஸ்டரும் ரொம்பக் கஷ்டப்படுகிறார். மின்சார வசதியும் இல்ல. எல்லாத்துக்கும் சிமினி விளக்குத் தான்... புஞ்சி பண்டா மாஸ்டரின் அறையில் தற்காலிக மாகப் பகிர்ந்து கொள்ளுங்கள். நான் விரைவில் ஏற்பாடு செய்து தருவேன். சாப் பாடும் அம்முக்குட்டி ஓட்டலில் வைக்கணும்..."

"இன்னுமொரு பிரதேசத்திலிருந்து வரும் ஆசிரியர் களுக்கு உதவிகள் செய்து தரவேண்டியது. அதிபர் என்ற முறையில் எனது கடமை. கொஞ்சம் பொறுத்துக் கொள்ள வேண்டும்!" பண்போடு சொன்னார் அதிபர்.

மறுநாள் காலையில் எழுந்து குளித்து உடைகள் மாற்றிக் கூடைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டியில் இருந்து இரண்டு நூல்களையும், பைல், குறிப்புப் புத்தகங்களையும் தயார்படுத்திக் கொண்டு, நானும் புஞ்சி பண்டா மாஸ்டரும் 'அம்முக்குட்டி' மலையாளக் கடையில் காலைத் தேநீரை அருந்திவிட்டுத் திரும்பினோம்.

பாடசாலை முதல் மணி அடிப்பதற்கு ஐந்து நிமிடங்கள் இருந்தன.

"மர்ஜான் மாஸ்டர், இது உங்கட ரைம்ரேபிள். உங்கட ஆங்கில பாடத்தோடு, சுகாதாரமும், சூழலும் பாடங்களாகப் போட்டிருக்கிறேன்"

"பிரச்சினை இல்ல சேர்"

எனது கடமையைத் தொடங்கினேன். வகுப்பறைகளில் அமைதியும், ஒழுக்கமும், ஆங்கிலம் படிக்க வேண்டும் என்ற ஆர்வமும் பளிச்சிட்டது. அதுவே எனக்குப் பெரும் நிம்மதி.

திட்டமிட்டபடி மாணவர்களுடன் ஆங்கிலத்திலேயே உரையாடத் தொடங்கினேன்.

பாடநூல்களின் தரத்திற்கும் மேலாக மாணவர்களின் தரத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்டேன்.

ஒரு பந்தியை வாசிக்கும்போது கவனிக்க வேண்டிய முறைகளை விளக்கிக் கூறினேன். நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தி வாசித்தல், ஒரு வசனத்தில் அழுத்த மாகச் சொல்ல வேண்டிய தேவை... இப்படி யான குறைபாடுகளை மனதிற் கொண்டு...

ஒரு மாதிரி வாசிப்பை (மொடல் ரீடிங்) நிகழ்த்திக் காட்டினேன்.

கையெழுத்துப் பரீட்சை, சொல்வ தெழுதல், இலக்கணப் பயிற்சிகள்... என்று நாட்கள் சொல்லாமலே நகர்ந்தன. வாரங்கள் ஓடி ஒரு மாதமும் பிந்தி, இரண்டாம் மாதத்தின் மூன்றாம் வாரம் ஓடிக் கொண்டிருந்தது.

வாராந்தம் ஆங்கிலப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் சிறுவர் களுக்கான சிறுசிறு கட்டுரை, கவிதைத் துணுக்குகளை ரசித்துப் படித்து அவற்றை வெட்டி சீ.ஆர் புத்தகத்தில் ஒட்டிப் பாதுகாக்கும் அளவுக்கு மாணவர்கள் மொழியில் ஈடுபாடும் தரமும் உயர்ந்து கொண்டிருந்தது.

ஊருக்குப் போகும் போதெல்லாம் சிறு சிறு நூல்களைக் கொண்டு வந்து மாணவருக்குக் கொடுத்தேன். அவர்கள் ஒரு சிறு நூலகத்தையே ஆரம்பிக்கத் தொடங்கி விட்டார்கள்.

உண்மையில் கூடைப்பெட்டியின் கல்விச்சேவை மகத்தானதுதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் என் கல்வி நடவடிக்கைகள் கிராமத்தின் கல்வி மான்களுக்குப் பிடித்துக் கொண்டன.

"நல்ல பயிற்சிகளைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்கிறார்கள்" என்று மனம் மகிழ்ந்தார்கள்.

ஜ_ன் முதலாந்திகதி கடமையைப் பொறுப்பெடுத்த நான் டிசம்பர் முடிய உள்ள காலப் பகுதிக்கு, பாடத்திட்டத்தையும், பாடக் குறிப்புகளையும் தயாரித்து அதிபரின் கையொப்பத்திற்கும், அங்கீகாரத்திற்கும் சமர்ப்பித்த போது ஒரு கணம் அவர் அசந்தே போய்விட்டார்.

"மர்ஜான் மாஸ்டர், விதுஹல்பதி, கதாசுரனவா..." மர்ஜான் மாஸ்டர் அதிபர் வரச் சொல்கிறார். நானும் புஞ்சி பண்டா மாஸ்டரும் அதிபரைச் சந்தித்தோம்.

"மாஸ்டர். இந்தக் கிராமத்தில் இஸ்மாயில் ஹாஜி மிக முக்கியமானவர். வசதி படைத்தவர். ஊருக்கும் பாடசாலைக்கும் பல வழிகளிலும் உதவி வருபவர். உங்கள் சேவையைக் கேள்விப்பட்டு அவர் உங்களை வெகு வாகப் பாராட்டுகிறார். அவரது வளவில் இரண்டு பெரிய அறைகள் சகல வசதிகளுடன் கட்டி முடித்திருக்கிறார். உங்களுக்கும் புஞ்சி பண்டா மாஸ்டருக்கும் வாடகைக்கு ஒரு தனிப் பெரிய அறையைத் தருவதாகக் கூறினார். பகல், இரவு, இருவேளை உணவையும் ஒழுங்கு பண்ணிக் கொள்ளலாம். அப்படி இல்லாவிட்டால், இருக்கவே இருக்கு ஆபத்துக்கு உதவும் அம்முக்குட்டி கடை"

அதிபரும், நானும், புஞ்சி பண்டா மாஸ்டரும் இஸ்மாயில் ஹாஜியின் இல்லத்திற்குச் சென்றோம்.

"இவர்தான் மர்ஜான் மாஸ்டர்..."

"ஆ... கேள்விப்பட்டன்... சந்தோசம்... வாங்க... ரூம் ரெடியா யிருக்கு.. இன்றைக்கே பொறுப்பெடுத்துக் கொள்ளுங்க..." விசாலமான அறையைச் சுற்றிக் காட்டினார்... "தண்ணீர்... கரன்ட்.. டொய்லெட்... எல்லாம் உள்ளுக்கே இருக்கு.. ஒன்றுக்கும் யோசிக்கத் தேவையில்லை..."

ஒரு சமயம் பாடசாலை தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கும் போது மற்றுமொரு செற்றப் தான்.

முன்றலில் ஆதம்பாவா தலைமை யில் ஒரு கோஷ்டி வந்து ஆர்ப்பாட்டம் செய்தது.

"அதிபர் சேர்... என் மகன் ஹசன் மாலை ஆறுமணிக்குப் பிறகு மஃரிப் தொழ மாட்டான். குர்ஆன் ஓதுவதை நிறுத்தி விட்டான். வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்கள் படிப்பு ஒன்றும் இல்லையா? இந்தப் பாடசாலையில் ஒரே ஆங்கிலப் பாட்டும், கூத்தும் தானா...?"

"பெரிய சேர்... அவன் மட்டும் இல்ல... இந்த ஊர்ல எல்லாப் புள்ளைகளும் அப்படித்தான்..." என்று உணர்ச்சி வசப்பட்டான் அபூதாலிப்.

'மர்ஜானை மலைநாட்டுக்கு அனுப்பு'

'ஆங்கிலம் வேண்டாம்'

'மர்ஜானை இடமாற்றம் செய்...'

ஒரு சில இளைஞர்கள் இப்படிப் பல சுலோகங்களை ஏந்தினர்.

மண்ணெண்ணெய் வாங்கப் போன ஒரு பெற்றார் கலனை தரையில் ஓங்கி.. ஓங்கி அடித்து கூச்சல் போடுகிறார். 'இந்தப் பாடசாலைக்கு ஆங்கிலம் தேவையில்லை... புள்ளைகள மண்ணாக்கிப் போடுவான்...

இவற்றிற்குப் பின்புலமாக நிற்கும் சீட்டாடும் கோஷ்டி மௌனம் சாதித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இதெல்லாம்... ஆதம்பாவா ஏற்படுத்திய குழப்படிக்குப் பின் என்னை பாடசாலையில் தங்கிவிடக் கூடாது என்று சீட்டாட்டக் காரர்கள் சீற்றம் கொண்டிருப்பார்களோ!

'சரி... நா அத கவனத்துக்கு எடுக்கிறன். இப்ப நீங்க கலைந்து போங்க...'

அதிபர் அவர்களைச் சாந்தப்படுத்தி அனுப்பிவிட்டார்.

நான் எனது கடமைகளில் தளர்ந்து விடவில்லை.

இந்த நிகழ்வு நடந்தது எப்பவோ...

மாதங்கள் ஓடி முதலாம் வருடப் பூர்த்தியை அண்மித்துக் கொண்டிருந்தது என் முதல் நியமனம். ஆர்ப்பாட்டமும் பிரச்சாரமும் எடுபடவில்லை.

இப்பொழுதெல்லாம் மாணவர் களினதும் பெற்றார்களினதும் நன்மதிப்பை யும் அபிமானத்தையும் முழுமையாகப் பெற்றுக் கொண்டிருந்தேன். கிராமத்தில் எனக்கொரு ராஜமரியாதை.

அதிபர் பாடம் படிக்கும் போது அடிக்கடி கோபம் வந்துவிடுகிறது.

'இந்தக் காட்டுப் பயல்களுக்கு ஒன்று சொன்னாக்கா... விளங்காது..."

அவரது கோபம் மாணவர்களின் கைகளில் சிவப்பு ஏறச் செய்வதில் 'கெவிட்டி' (பிரம்பு) கந்தலாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடித்துக் கனிய வைக்கும் கொள்கையோ, என்னவோ..."

ஒரு முறை 'லொக்' எழுதி பாடசாலைப் பொறுப்பை மௌலவி ஆசிரியரிடம் ஒப்படைத்து விட்டு ஆசிரியர்களின் சம்பளம் மாற்றப் போய்விட்டார் அதிபர்.

மறுநாள் காலை எட்டு மணிக்கு வந்துதான் பாடசாலைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

சம்பளத்தை ஆசிரியர்களுக்கு பங்கிட்டு விட்டு என்னை அழைத்தார்.

'மர்ஜான் மாஸ்டர், உங்களுக்கு கடிதங்கள் ஏதும் வந்ததா...?"

"இல்லை..."

"மாஸ்டர் உங்களுக்கு நான் எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை..."

"......................?"

"இந்தாங்க... உங்களுக்கு இடமாற்றம் வந்திருக்கு..."

"அப்படியா...? எங்கே...?"

"அது இதுபோல் பூனேவ சந்தியிலிருந்து மூன்று மைல் நடந்து பாடசாலையை அடையும் விசயமல்ல... பஸ் ரூட்டிலிருந்து எட்டுமைல் காட்டு வழியில் நடந்து செல்ல வேண்டும்"

பற்றைக்காடு எரிந்து பரவுவது போல் என் இட மாற்றச் செய்தி கிராமமெங்கும் பரவிக் கொண்டிருந்தது.

'இப்பதான் மாணவர்கள் ஏணிப்படியில் ஏறியிருக் கிறார்கள்... இன்னும் ஓரிரு வருடங்களில் அவர்கள் ஏணி யின் உச்சத்தையே அடைவார்கள்... ஆனால் அதற்குள் இப்படி ஏணியை உதைத்து விழுத்தி விட்டார்களா? இதெல்லாம் சீட்டாட்டக் காரர்களின் சூழ்ச்சியா...? அப்ப என் முயற்சிகளுக்கு இதுதான் முடிவா...? எல்லாம்...?

குறிப்பிட்ட தினத்தில் வெளியேறி பூனேவ சந்தியை நோக்கி நடந்து கொண்டிருக்கிறேன்.... ஒரு கையில் கூடைப்பெட்டி, மறுகையில் "சூட்கேஸ்" என் பொதிகளை நானேதான் சுமக்க வேண்டும். என் சேவையை விரும்பும் ஆசிரியர் கூட்டம் எங்காவது ஒரு பாடசாலையில் காத்திருப்பார்கள் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிவாசலும் பத்து ரூபாவும்

## திக்குவல்லை கமால்

ஜீவநதி
சிறுகதைகள்
12

பள்ளிவாசலுக்கு வெளியே முறுகல் நிலை காணப்பட்டது. ஜும்ஆவுக்குப் பின்பு ஏதோ கோஸாவ உண்டென்பதை அது உறுதிப்படுத்தியது. வெள்ளிக் கிழமையென்றால் ஊர்ச்சனமெல்லாம் ஒன்றுசேரும் நாளல்லவா?

காலத்திற்குக் காலம் கொஞ்சம் இளைஞர்கள் ஒன்றுகூடி ஏதோ உலகத்தைப் புரட்டப்போவதுபோல் உரத்த குரலில் நியாயம் பேசி, தங்களை வெளிச்சம் போட்டுக் கொண்டு காற்றுப்போன பலூனாகக் காணாமல்போய் விடுவார்கள்.

'ம்... இப்பிடி எத்தின பேரக் கண்டீக்கன்'

பள்ளிவாசலுக்கு மெல்ல மெல்லப் போய்க் கொண்டிருந்த பழுத்த அனுபவசாலியான கரீம்காக்கா தனக்குள்ளே சொல்லிக் கொண்டார். பரம ஏழையாக இருந்து படிப்படியாக உழைத்து முன்னேறி ஹஜ்ஜுக்கும் சென்றுவந்து இன்றும் வெகு சாதாரணமாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் பேர்வழி.

வழமையைவிட முன்கூட்டியே உள்பள்ளிவாசல் நிறைந்திருந்தது. நியாயம் கேட்போர் தங்கள் கெட்டித் தனங்களை வந்து பார்க்குமாறு வேண்டுகோள் விடுக்காவிட்டாலும்கூட கேள்விப்பட்டவர்களும் முகப்பாத்தி பார்க்க விரும்புபவர்களும் நேரகாலத் துடனேயே பிரசன்னமாகியிருந்தனர்.

தொழுது முடிந்து ஸலாம் கொடுத்ததும் துஆ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதிய பின்னரும் முண்டியடித்துக் கொண்டு வெளியேபாயும் அவசரக் குடுக்கைகள் அன்று மிகவும் குறைவு ஜெமாஅத்தினர் எதையோ எதிர்பார்த்தபடி அப்படியே அமர்ந்திருந்தனர்.

ஒரு யங் பொடியன் எழுந்து நின்றான். எப்பொழுதாவது ஒரு பத்துப் பேருக்கு முன்னால் நான்கு வார்த்தைகள் பேசிய அனுபவம் நிச்சயமாக அவனுக்கிருக்காது.

"பள்ளீல எத்தினயோ ஜாதி நடந்துக்கொணுபோற ஒன்டுக்குமே கணக்குவழக்கில்ல இருவத்தேழாம் நோம்பில ஸஹருக்கு சாப்பாடு குடுத்த பொடியம்மாரெல்லம் அய்நூறு ஆயிரமென்டு குடுத்த எங்கியன் கணக்கு?"

யார் பதில் சொல்வது? பள்ளித் தலைவர். அங்கிருந்தால்தானே? முன் வரிசையில் ஊரில் முக்கியமானவர்களென்று தங்களை நினைத்திருப்பவர்களெல்லாம் அமர்ந்திருந்தனர். யாராவது ஒருவர் பதில் சொல்லவேண்டுமே!

நிர்வாக சபை உறுப்பினர்களில் ஒருவரான அமானுல்லா ஹாகியை எல்லோரும் பார்த்தனர். ஆனால் அவர் விஷயமுள்ள ஒருவரல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் எதிர்பாராத நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்.

இதற்கிடையில் இன்னும் இரண்டு மூன்று பேர் சபையிலிருந்து கிடுகிடுவென எழுந்தனர்.

"முப்பது நோம்புக்கும் கஞ்சிகுடுத்த அதட கணக்கெங்கியன். சும்மவல்ல ஸௌதீலீக்கிய பொடியம்மாரே அம்பதாயிரம் சேத்தனுப்பீந்த"

"ஹஜ்ஜிப் பெருநாளக்கி மாடறுத்து குர்பான் குடுத்த லிஸ்ட் போட்டுப் போட்டுச் சல்லி சேத்தின. ம்... யாவாரம் தொழில் செய்யத் தேவில்லை. பள்ளியத் திண்டுதின்டீந்தாச் சரி"

சனங்கள் வருவார்கள் தொழுவார்கள் போவார்கள் தங்களது தொழிலிலும் வாழ்க்கைப் பிரச்சினைகளிலும் மூழ்கிப்போய் விடுவார்கள்.

"அல்லாட பள்ளீல ஒரு சாத்துக்கும் கணக்கீக்கோணும். இப்படி நெனச்சமாதிரி செஞ்சிக்கொண்டு போகேல. ம்... அதுக்கெண்டா எடமுடப்படாது" சபையிலிருந்து இன்னொரு குரல்.

அமானுல்லா ஹாகி எழுந்தாரே தவிர அவர் எதுவும் சொல்லும் அளவுக்கு அங்கே அமைதியேற்படவில்லை தங்கள் தங்கள் பாட்டில் எல்லோரும் ஹேஹாபத போட்டுக் கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொஞ்சம் ஸபூர் பண்ணுங்கோ ஹாசியார் செல்லியத்தக் கேழுங்கொ" பொறுக்க முடியாத நிலையில் தொழுகை நடாத்தும் ஹஸ்ரத் எழுந்து நின்று மைக்கில் சொன்னார்.

படிப்படியாக அமைதி நிலையடைந்தது.

"பொறுப்பானவங்க இன்டக்கி வந்தில்ல மத்தது... இப்பிடித் திடீரெண்டு கேட்டா எப்படியென் காட்டிய? அதேம் கொஞ்சம் யோசீங்கொ"

அமானுல்லா ஹாகியின் சமாளிப்பை எவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

"இங்க கேட்ட விஷயமெல்லாம் நடந்து முனுநாலு மாஸமாகீட்டு. இவளவு காலம் போதவா? இந்த ஏழெட்டு வருஷமா எவளவு விஷயம் நடந்தீக்கன். எல்லம் கெணத்தில போட்ட கல்லுமாதிரி" அதே வாலிபன் மீண்டும் குரல் கொடுத்தான்.

எல்லோரும் தங்களுக்குள் குசுகுசுத்துக் கொண்டனர்.

அல்லாவுடைய இல்லம் எல்லாம் ஒழுங்காகவே நடக்குமென்ற நம்பிக்கையில் எவருமே இவ்வளவு காலமும் வாய்திறக்கவில்லை. அந்த நம்பிக்கையைப் பயன்படுத்திக்கொண்டு பெரிய மனிதர்கள் நாடகமாடிக் கொண்டிருக்கும் சங்கதி எல்லோருக்கும் வெட்ட வெளிச்சமாகிக் கொண்டிருந்தது.

"சரி அடுத்த கெழும இதுக்கொரு முடிவு கெடக்கும் நான் இன்டக்கே கதக்கியன். சும்ம எங்கட பேரும் கெட்டுப்போற சரிவராட்டி நானும் வெலகிக் கொளுகிய"

பணத்துக்கும் தனக்கும் சம்பந்தமில்லையென்பதை அவர் நாசூக்காக வெளிப்படுத்திவிட்டு அமர்ந்தார்.

"ரெஸ்டி போர்டில ஒத்தரு அவருக்கு தெரியாம உள்ளுக்கு கேம்"

பல வாறாக அபிப்பிராயம் சொன்ன படி சனம் வெளியேற ஆரம்பித்தது.

'அல்லாட சொத்தென்டா எவளவு பயமீக்கோணுமன் மனிசனுக்கு...' கரீம் காக்கா தனக்குள் சொல்லிப் பெருமூச்சுவிட்டார்.

பள்ளிவாசலில் ஆங்காங்கே ஓரிருவர் அமர்ந்து ஸிக்ரு செய்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரீம் காக்காவின் மனதிலே இருபத்தைந்து முப்பது வருடத்திற்கு முற்பட்ட நினைவுச்சோகமொன்று மெல்லத் தலைகாட்டத் தொடங்கியது.

நாலைந்து பிள்ளைகள் அவருக்கு எல்லாம் சின்னச் சின்னப் பிள்ளைகள்தான் நம்பி இறங்கிய வியாபாரம் இடைநடுவில் கைவிட்டுவிட்டது அவரை பழைய தொழிற் தொடர்புகளும் அற்றுப்போன மந்தநிலை தொட்டதெலாம் தோல்வியாகிப்போகும் காலகட்டம்.

"நாலு தொழிலும் தெரிஞ்ச மனிசன்தானே நீங்க கலியாணம் பேசச்செல்லே அப்பிடித்தானே சென்ன" என்று சொல்லி மனைவி சிரித்தாள்.

அவளுக்கென்ன... எங்கிருந்தாவது தனக்கும் பிள்ளைகளுக்கும் தின்னக் கொண்டுவந்து போடுவாரென்ற நம்பிக்கை அவளுக்கு இந்தப் பத்துவருடமாக அந்த நம்பிக்கையை அவர் பாதுகாத்தே வந்துள்ளார்.

"ஓங்கட வாப்ப பெரிய சொத்துக்காரனென்டேன் சென்ன. அங்க காணீக்காம் இங்க காணீக்காம்... ம்! வந்து பாத்தாப் பொறகுதான் வெளங்கின சொத்தீக்கியது மெய்தான்... எல்லமே சிக்கு"

"தாரடயாலும் சொத்துக்கித்தப் பாத்து வேலில்ல ஓங்கட கால்ல கைல உஜாரீக்கிதானே.. நீங்க சம்பாரிச்சி புள்ளையளுக்கு தின்னக் குடுங்கொ" அவள் துடுக்காகப் பேசித் தன்னை நிலைநாட்டிக் கொண்டாள்.

பணக்கஷ்டத்தின் எல்லைக்கே வந்துவிட்ட சந்தர்ப்பம் அது. நாளை விடிந்தால் ஒரு துண்டுப் பாணுக்கோ ஒரு வாய்ச் சோற்றுக்கோ வழியில்லை.

வழமைபோல் இஷாத் தொழுது ஸீன்னத்தும் தொழுது ஸிக்ரு ஸலவாத்து சொல்லி முடிக்கையில் பள்ளிவாசல் எவருமில்லாமல் வெறிச்சோடிப் போய்க்கிடந்தது.

கரீம் காக்கா கையேந்தி துஆ செய்தார்.

"யா அல்லா ஏன்ட பொஞ்சாதி புள்ளியள பசிலா போடாதெ யாஅல்லா... அந்தப் பாவத்த ஏன்ட தலேல் போடம ஒரு வழியக்காட்டு யாஅல்லா

பள்ளிவாசலிலிருந்து வெளியிறங்கி செருப்பை மாட்டிக் கொண்டு திரும்பும்போது அவரது கணகளில் பட்டதுதான் என்ன...?

நான்காக மடித்து ஈரம் ஊறிப்போய்... நடுங்கும் கைகளோடு குனிந்து அதனை எடுத்து விரித்தார் அவர். என்ன ஆச்சரியம்! பத்து ரூபா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம் பத்து ருபாவேதான் சட்டென்று அங்குமிங்கும் பார்த்தார். எவருமேயில்லை.

'இது பள்ளிவாசல் சொத்து.. அங்க காணிக்கப் பொட்டி இரிக்கி' யாரோ உரத்த குரலில் அதிர்ந்து சொல்வது போலிருந்தது.

'இல்ல ஏன்ட துஆவுக்கு அல்லா தந்தீக்கி அவருக்குள்ளிருந்தொரு குரல்.

"இன்னேம் ஊட்டுக்குப் பொகல்லயா?"

அவர் திடுக்கிட்டுத் தலையைத் தூக்கிய போது தஸ்பையும் கையுமாக எதிரே மோதீனப்பா நின்றார்.

இரண்டு துளிக் கண்ணீர் கரீம் காக்காவின் கன்னத்தில் விழுந்து உருண்டன.

"நீங்க நாங்க அழுது வேலில்ல காக்கா பொதுச் சொத்த... அல்லாட சொத்தத் தொடுகியவனுக்கு பயமச்சம் ஈக்கோணும், ரெஸ்டிமாரும் ஞாயமான மனிசருதான்... கேள்வி கேக்கியத்திலேம் ஞாயமீக்கி... அல்லாவுக்குத்தான் வெளிச்சம்... சரி வாரனே" என்றவாறு மோதீனப்பா விடைபெற்றார்.

நேரம் இரண்டரை ஜும்ஆ முடிந்து எவ்வளவு நேரமாகிவிட்டது.

கரீம காக்கா கைக்குட்டையை எடுத்துக் கண்களை ஒற்றிக் கொண்டார். மூக்கை சீறிக்கொண்டார். இருந்தும் கண்கள் கசிந்தபடியே தான்.

பள்ளிவாசல் பிரச்சினையில் சரி பிழை, நீதி, நியாயம் அவருக்குத் தெரியவில்லை அதில் அவர் தலைபோடவேண்டிய தேவையுமில்லை

ஆனால் அந்தப் பத்துரூபா...

பின் நாட்களில் அவர் நிறையவே சம்பாதித்தார். பொது விஷயங்களுக் கெல்லாம் தனது பங்களிப்பைச் செய்தார் சக மனிதர்களின் கஷ்ட நஷ்டங்களுக்கு ரகசியமாக உதவினார். பள்ளிவாசம், மத்ரஸா பாடசாலைகளுக்கென்று கனிசமாக உதவினார்.

ஆனாலும் அந்தப் பத்து ரூபா....

கண் டெடுத்த அடுத்தநாள் வேறெந்த வழியுமிருக்கவில் லை அவருக்கு காலையில் பாண் வாங்கினார். பின்னர் சீனி வாங்கினார். பகல் சாப்பாட்டுக்கு அரிசி கூட அதனால்தான் வாங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யா அல்லா அந்தப் பத்துரூபா ஏன்டயல்ல அதால ஏன்ட பொஞ்சாதி புள்ளிகுட்டிகளுக்கு தின்னக் குடுத்திட்டன்.. யாஅல்லா என்ன மன்னிச்சிக்கோ யாஅல்லா..."

மீண்டும் கண்களைத் துடைத்துக் கொண்டு ஒரு கையை நிலத்திலூன்றி மறுகையால் சுவரைப்பிடித்து வீட்டுக்குப்போக எழுந்துநின்றார் கரீம்காக்கா.

**இதழ் - 10 தை - மாசி 2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவாய்... கானலாய்...

## புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்

ஜீவநதி
சிறுகதைகள்
13

பள்ளிக்கூடத்தில் நான் படித்தபோது என்னுடன் மூன்று ரவிச்சந்திரன்கள் படித்தார்கள். 'கட்டை ரவி', 'பெட்டை ரவி', 'தடியன் ரவி' என அவர்கள் அடையாளப் படுத்தப்பட்டாலும் நாகபூசணி ரீச்சரின் வரவின் பின்னர் முறையே ஆர்.ரவி, கே.ஆர்.ரவி, எஸ்.எஸ்.ரவி, என மூவரும் பெயர் பெறலாயினர். ஒரு வருடம் கூட அவ்வழக்கம் அமுலில் இருந்திருக்காது 'நிலா'வாகி நின்ற நாகபூசணி ரீச்சரும் வேறிடம் மாறிச்செல்லவே, வேதாளம் மீண்டும் முருங்கை மரமேறிற்று.

கட்டை ரவி, பெட்டை ரவியின் வீடுகள் எனது வீட்டிற்கு அணித்தாக கூப்பிடு தூரத்திற்குள் தான் அமைந்திருந்தன. ஆனால் தடியனின் வீடு எங்களூரின் தெற்குப் பக்கமாய் அமைந்திருந்தது. பிள்ளையார் கோவிலுக்குத் தெற்கே பரந்து கிடக்கும் வயல் வெளிகளுக்கும் அப்பால், நல்ல தண்ணீர்க் கிணற்றடி யோடு பருத்த புளிய மரமொன்று ஊரையே பய முறுத்திக் கொண்டு நின்றது. நடுநிசியில் அவ்வழியால் பயணிப்பவர்களை எல்லாம், புளியமர உச்சியில் குடிகொண்டிருக்கும் பேய் இறங்கி வந்து விட்டுத் துரத்துமாம். அப்படியாக பேய் விட்டுத் துரத்தியதில் தட்டுத் தடுமாறி நல்ல தண்ணீர்க் கிணற்றுள் விழுந்து அநியாயமாகப் பலியானவர்களை ஒரு பட்டியலே போடலாமாம். இக் கதைகளை எல்லாம் மூத்ததம்பி வாத்தியார் வராத நாட்களாகப் பார்த்து, வகுப்பில் வைத்து தடியன் தான் மிக விஸ்தாரமாகச் சொல்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புளியமரத்தைத்தாண்டிச் சென்றால் மூன்றோ, நான்காவதாக வரும் அலம்பர் படலை வீடுதான் தடியனுடையது. வீடு என்றால் இரண்டு மூன்று படுக்கையறைகள், காற்றோட்டமான முன் மண்டபம், சமையலறை என்றெல்லாம் அல்ல. பனையோலையால் வேயப்பட்ட ஒரு மண்ணறை. முன்னால் விசாலமான ஒரு ஒத்தாப்பு. கோடிப்புறமாக ஒரு குடில். அங்கு எப்போதும் பரபரத்தவாறே ஏதாவது வேலையில் மூழ்கிப் போயிருப்பாள் அவனது அம்மா.

எங்களூர் பள்ளியில் ஏழாந்தரம் வரை படித்துவிட்டு பின்னர் நான் ரவுண் கல்லூரிக்குச் சென்று விட்டேன். பத்துப் பதினைந்து பேர் கொடுக்குப் பிடித்த வாறே என்னுடன் அங்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் நுழைவுப் பரீட்சையில் புள்ளிகள் போதிய அளவில் எடுக்காததால் 'ஓலெவல்' வரை தடியன் எங்களூர் பள்ளியிலேயே படிக்க வேண்டியதாயிற்று. நாங்கள் கல்லூரிக்குச் சென்ற பின்னர் பள்ளிக்கூடத்தில் தடியனே முடிசூடா மன்னனாயினான். தடியனின் கொடுங்கோல் ஆட்சியால் வெருட்சியடைந்த ஒரு சில 'பெட்டையள்' ஓராங்கட்டையடி தொப்பிளாத்தைப் பள்ளிக் கூடத்துக்கு மாறியதாகவும் காதோடு காதாகச் சில கதைகளும் உண்டு.

பாடசாலைகள் மாறுபட்டாலும் பின்னேரங்களில் பிள்ளையார் கோவிலடியில் நாம் எல்லோரும் தவறாது சந்திப்பதுண்டு. கோவிலடி பூங்கொல்லையோடு ஒட்டினாற்போல் அமைந்துள்ள தேர் முட்டிக்குச் சற்று வடக்கே மகிழமரத்திற்குக் கீழே நாலைந்து பொழிந்த கற்கள் எங்கள் வட்டமேசை மாநாட்டிற்கு தினமும் ஆசனங்களாக அமைந்து உதவின.

ஒன்றாகப் படித்த நாட்களைக் காட்டிலும் 'ஓலெவல்' படித்த அந்நாட்களில் தான் தடியன் என்னுடன் மிக அந்நியோந்நியமாகப் பழகினான் எனலாம். எங்களூர் ரவுண் மெத்தை வீட்டுச் சந்திக்கு அப்பால் மூலைக் கடையோடு ஒட்டினாற் போல் அமைந்த சென்ரல் தியேட்டருக்கு, கள்ளமாய் நான் படம் பார்க்கச் செல்ல ஆரம்பித்ததும் தடியனோடு பழகிய அந்நாட்களில் தான் என எண்ணுகிறேன்.

பெரிய கரியர் பூட்டிய றோட் மாஸ்டர் சைக்கிள் ஒன்று தடியன் கைவசம் இருந்தது எமக்குப் பெரும் வரப்பிரசாதமாயிற்று. முன்னுக்கு 'பாரில்' கட்டை ரவியும், மூன்றடி நீளக் கால்களை கஷ்ரப்பட்டு இரண்டாக மடக்கியவாறே கரியரில் நானும் இருக்க, இரண்டரைக் கட்டை தூரத்திற்கு அப்பாலிருக்கும் தியேட்டரடிக்கு மூசி மூசி பெடல் உழக்கிச் செல்வான் தடியன். பாராயணம் பண்ணுதல் போல் பச்சை விளக்குப் படப்பாடலையோ அல்லது பாவமன்னிப்புப் படப்பாடலையோ அந்நேரங் களில் அவன் முணுமுணுத்துக் கொண்டிருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் திருவிழா காலங்களிலும் வடக்கு வீதியில் நாட்டுக் கூத்துகள் நிகழும் நாட்களிலும் சென்றல் படமாளிகையின் 'கலரி' பின்வரிசையில் மும்மூர்த்திகளாக நாம் மூவரும் தவறாது எழுந்தருளி யிருப்போம்.

'செக்கண்ட் ஷோ' பார்த்து விட்டு வரும் வழியில் சயிக்கிள் ரியூப் பஞ்சர் ஆகிவிட்டால் இரண்டரைக் கட்டை தூரமும் நடை பவனிதான். அப்படியாக முசுப்பாத்திக் கதைகள் கதைத்தவாறே நடை பயின்று வந்த ஒரு நிலவு காலித்த தினத்தில் தான் மருதடி பஸ் டிப்போவடியில் வைத்து தடியன் அதைச் சொன்னான்.

'இவள் பாரதி எனக்குச் சுழருறாள் மச்சான்'

தடியன் சொல்லி வாய் மூடு முன்னர் பளபளக்கும் தார் றோட்டில் தன் பிருஷ்டம் அடிபட தொப்பென இருந்தவாறே அட்டகாசமாகச் சிரிகக ஆரம்பித்து விட்டான் கட்டை ரவி.

கட்டை ரவியின் சிரிப்பைப் பார்த்த போது என்.எஸ்.கிருஷ்ணனின் 'சிரிப்பு...!' பாட்டின் முடிவினைக் கேட்டு வரும் சிரிப்பினைப் போல் எனக்கும் அடக்க முடியாதபடி சிரிப்பு வந்து விட்டது.

எங்கள் இருவரையும் பார்த்து தடியன் எறும்பு கடிப்பது போல் அந்தரப்பட்டுக் கொண்டு நின்றான்.

"என்னடாப்பா நாகேசின்ரை பகிடி கேட்டு சிரிக்கிற மாதிரிச் சிரிக்கிறியள்?" பற்கள் துருத்தித் தெரியும் தடியனின் அக்கோலம் எனக்குப் புதிதாக இருந்தது.

"பின்னை இப்ப நீ சொன்னது பகிடி இல்லாமல் மெத்தியே மச்சான்? நாளுக் கொரு சட்டை போடுற பாரதி எங்கை? சோத்துக்கே லாட்றி அடிக்கிற நீ எங்கை? இந்தப் பிறப்பிலை நீ அவளை நினைச்சுப் பார்க்கேலுமோ?" கேட்டவாறே றோட்டிலிருந்து விருட்டென எழுந்தான் கட்டை ரவி.

அதைக் கேட்டதும் தடியனுக்கு வந்ததே கோபம். அப்படி ஒரு கோபத்தை எங்களூர் பள்ளிக்கூட தலைமை வாத்தி யாரிடம் கூட நான் கண்டதில்லை. அப்படி ஒரு 'பேய்க்'கோபம்.

உருட்டிக் கொண்டு வந்த காற்றுப் போன சைக்கிளை அப்படியே மருதடி வைரவர் கோயிலடியில் 'ஸ்ராண்ட் போட்டு நிறுத்தி விட்டு எங்கள் இருவரையுமே திரும்பிப் பார்க்காது விறுவிறுவென நடந்து தன் வீடு போய்ச் சேர்ந்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவில் நானும் கட்டை ரவியுமே காத்தான் கூத்துப் பாட்டைப் பாடிக்கொண்டு சைக்கிளை மீதித் தூரம் உருட்டிக் கொண்டுவர வேண்டியதாயிற்று.

அந்த சம்பவத்தின் பின்னர் தடியன் எங்கள் இருவரையும் விட்டு சற்று விலகியே இருந்தான்.

'இவனுக்கு என்ன கீலாவோ?' என கட்டை ரவி அடிக்கடி என்னைக் கேட்டுக் கொண்டே இருந்தான்.

கொஞ்சக் காலத்தின் பின்னர் 'ஓ லெவல்'. பரீட்சை நிகழ்ந்தது. பரீட்சை எழுதிய பின்னர், எழுதிக் கிழித்த விறுத்தத்தில்... கோயில் தேர்முட்டியடியே கதியென நாம் கிடந்தோம். மறக்காமல் அவ்வப்போது 'விழுங்க' மட்டுமே வீடு சென்று வந்தோம்.

அந் நாட்களில் தடியன் மீண்டும் எம்மிடையே பிரசன்னமாகி யிருந்தான். ஆயினும் அவனது கவனம் எம்மிடையே இல்லாதிருந்ததை நான் கவனித்தே வைத்திருந்தேன்.

எங்களூரில் தடியடி மற்றும் மல்யுத்தத்திற்குப் பெயர் பெற்றவர்களாக இருவர் விளங்கினர். வீரப்பா, சாண்டோ எனவே அவர்கள் அழைக்கப்படுவார்களா யினும் அவர்களது இயற்பெயர்களில் தமிழ் மணங்கமிழுமாம். உண்மையில் அவர்களது பெயர்களை விதானையாரும், கூப்பன்கடை மனேஜருமே அறிந்திருந்தனர் எனலாம். சிறிய வயதில் அவர்களுக்குப் படிப்பித்த குற்றத்திற்காக சிலவேளை மூத்ததம்பி வாத்தியாருக்கும் தெரிந்திருக்கலாம்.

அவர்கள் இருவரும் ஆதவன் அண்ணாவுடன் படித்ததாகவே எனக்கு ஞாபகம். ஆயினும் ஆதவன் அண்ணாவை விட அவர்களுக்கு ஓரிரு வயதுகள் கூட இருக்கலாம் என்பது எனது ஊகம்.

இருந்தாற்போல் ஒருநாள் தடியன் என்னிடம் வந்து வலு 'சீரியஸாக' கேட்டான். 'மச்சான் சாண்டேவிற்கு வீரப்பா அடிப்பனோடா?'

அவனது கேள்வியில் பொதிந்திருந்த அர்த்தத்தினை என்னால் புரிந்து கொள்ள முடியாது போகவே, ஓரக்கண்ணால் கட்டை ரவியை நோக்கினேன்.

"தடியா நீவீர் கேட்டதன் அர்த்தம் என்னவோ?" என்று கேட்ட கட்டை ரவி பின் நாவினைக் கடித்துக் கொண்டான்.

"இல்லை சாண்டோவோ, வீரப்பாவோ பலசாலி எண்டு கேட்டன்" என்றான் சர்வ சாதாரணமாகத் தடியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ இப்ப அதுதான் வலு முக்கியம்" முட்டியில் பொங்கி வந்த கள்ளைப் போல் வெளியே வரத்தலைப்பட்ட வார்த்தைகள், ஏனோ என் தொண்டைக் குழிக்குள் அமிழ்ந்து போயிற்று.

சில காலங்களில் பரீட்சை முடிவு வெளியாகியது. எட்டுப் பாடங்களிலும் திறமைச் சித்தி எனக்குக் கிடைத்திருந்தது. 'சிவனே' என கட்டை ரவிக்கும் மட்டுமட்டாக அட்வான்ஸ் லெவல் படிக்கத்தக்கதாக முடிவு வந்திருந்தது. ஆனால் தடியன் பாடுதான் பாவம், வெளியில் சொல்ல முடியாதபடி பரீட்சை முடிவு அமைந்து விட்டது.

ஆனாலும் 'ரிசல்ஸ்' பார்க்க பாடசாலை சென்ற தடியன், தேர்தலில் வென்ற தொகுதி வேட்பாளரைப்போல சிரித்துக் கொண்டே தான் வெளியே வந்ததாக பின்பு ஒரு நாள் கட்டை ரவி எனக்குச் சொல்லி ஆச்சரியமுற்றான்.

பரீட்சை முடிவு வந்ததன் பின்னர் பல நாட்களாகத் தடியனை நான் சந்திக்கவே இல்லை. ஓரிரு மாதங்களின் பின்னர் சாண்டோ, வீரப்பா செற்றுடன் தடியனும் சேர்ந்து விட்டதாகவும், சதா அவர்களையே தன் சைக்கிளில் முன்னுக்கும் பின்னுக்குமாக ஏற்றித் திரிவதாகவும் யாரோ எனக்குச் சொன்னார்கள். பள்ளிக் கூடத்தில் எங்களுடன் படித்து விட்டு ஓராங்கட்டையடி தையல் பயிற்சி நிலையத்துக்கு தையல் பழகச் செல்லும் விஜயகுமாரியையே தற்போது தடியன் விட்டுத்துரத்தித் திரிவதாகவும் கூடவே ஒரு செய்தியையும் கூடாக என் காதில் போட்டு வைத்தார்கள்.

அதுசரி, பாரதி என்னவானாள்? என அறிவதில் என் மனம் அங்கலாய்த்தது. வெகு சீக்கிரத்திலேயே அந்த மர்மதத்துக்கு விடையும் கிடைத்தது. மரதன் ஓட்டப் போட்டியில் முதலாவதாக வந்தவனைப் போல மூச்சிரைத்தவாறே சைக்கிளை உழக்கி வந்த கட்டை ரவிதான் சைக்கிளை விட்டு இறங்காமல் நிலத்தில் காலூன்றி நின்றவாறே அதைச் சொன்னான்.

"பாவம் தடியன் கிட்டடியிலை பாரதியட்டை முறையாக வேண்டிக் கட்டினானாம்."

"ஏன்ரா -என்ன நடந்தது?"

"பாரதி பள்ளிக் கூடத்தாலை வீட்டை போகேக்குள்ளை மீசோலை முடக்கடியிலை வைச்சு வழி மறிச்சு மச்சான் லெட்டர் குடுத்திருக்கிறார். குடுத்த லெட்டரை வாசிக்காமலே கிழிச்சு அவனின்ரை முகத்திலை எறிஞ்சு போட்டு ஓலெவலிலை ஒழுங்கா ஒரு பாடம் கூடப் பாஸ் பண்ணத் தெரியேலை.... இதுகள் மட்டும் தெரியுதோ? எனக் கேட்டுக் காறித்துப்பினாளாம் பாவம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டை ரவி சொன்னது ஒரு கெட்ட செய்தி போல் என் மனதை வருத்தியது.

பரம சாதுவான பாரதியிடமே இப்படியென்றால் படுசுட்டியான விஜயகுமாரியிடம் பாவம், தடியன் என்ன பாடுபடப் போகிறானோ என என் நெஞ்சு பதைபதைத்து ஏங்கியது.

ஆனால் நான் நினைத்தபடி எதுவும் நடந்து விடவில்லை.

சில நாட்களின் பின் தேர்முட்டியடிப்பக்கம் வருவதையோ அல்லது எம்முடன் பழகுவதையோ தடியன் முற்றாகவே தவிர்த்து விட்டான். வீரப்பா சாண்டோ ஆகியோருடன் ஓடக்கரைப்பக்கமாக அவன் திரிவதாக கடையில் ஆறுமுகப்பா என்னைக் கண்ட இடத்தில் ஒரு நாள் சொன்னார். கடற்கரை கள்ளுத் தவறணையடியிலும் அடிக்கடி அவர்கள் காணப்படு வதாக இராசேந்தி இன்னொரு நாள் சொன்னான்.

தடியனின் இப்போக்குகளால் அவனது தாயாரும் நிலை குலைந்து நின்றாள். 'பொடியனுக்குப் புத்தி சொல்லித் திருத்தடா மேனை' என எனைக் காணுமிடமெல்லாம் காலில் விழாத குறையாக மன்றாடித் திரிந்தாள்.

தடியனுக்கு என்ன நேர்ந்தது? அவன் ஏன் இப்படியாக ஆனான்? என என்மனம் சதா சிந்தித்த வண்ணம் இருந்தது. அவனை நல்வழிப்படுத்தி மீண்டும் எங்கள் 'கிளிக்' குடன் சேர்க்கவே மனம் அவாவுற்றது.

ஆனால்... வீட்டிலோ அல்லது வேறெங்கிலுமோ அவனைப் பிடிக்க முடியாமை எனதும், அவனது அம்மாவினதும் எண்ணத்தை நிறைவேற்ற முட்டுக் கட்டை போட்டு நின்றது.

அட்வான்ஸ் லெவல் படிக்க ஆரம்பித்து ஒரு வருடம் கழிந்த நிலையில், ஒரு காலைப் பொழுதில், கல்லூரிக்குச் செல்லும் வழியில் ஓராங்கட்டைச் சந்தியில் வைத்து, நீண்ட நாட்களின் பின் நான் தடியனைச் சந்தித்தேன்.

என்னெய் கண்டு பல நாட்களாகி விட்ட கேசம், முரடு பத்திப் போயிருந்தது. கண்கள் சிறுத்து உட்குழிந்திருந்தது. கன்னம் உள் விழுந்து பற்கள் மேலும் துருத்திக் கொண்டிருந்தது. தடியன் என்ற கௌரவ பட்டத்தினையே தொலைத்துவிட்டு வந்தவனைப் போல் அரைவாசியாக மெலிந்து, காய்ந்து கருவாடாகியிருந்தான்.

"என்னடா மச்சான் இது கோலம்?" என்றேன் குரல் தளதளக்க

ஏதோ குற்ற உணர்வு மேலிட்டது போல் என்னை ஏறிட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்காது, நிலத்லதையே வெறித்துப் பார்த்தபடி நின்றான். நிலத்தில் கால்லூன்றிய படி இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் தான் தரித்து நின்றிருப்பான். எதுவுமே சொல்லாது 'பெடலை' மிதித்து திரும்பியே பார்க்காது சென்று விட்டான். அவனது தலைக் கறுப்பு மறையு மட்டிலும் அவ்விடத்திலேயே ஊன்றிய கால் வலிக்க வலிக்க நின்றிருந்தேன்.

அதன் பிறகு தடியனை ஒருபோதும் நான் நேரில் சந்திக்கவில்லை.

சில காலங்கள் தடியன் பற்றி எவ்வித தகவலுமே இல்லாதிருந்தது.

தடியன், வீட்டிற்கு வந்து மாதக் கணக்காகி விட்டதாக, காண்போர் எல்லோ ருக்கும் தாயார் சொல்லி அழுவதாக நண்பர்கள் கூறினர். அவனுடன் இறுதியாகத் திரிந்த சாண்டோ, வீரப்பா முதலா னோரையும் காணக்கிடைக்க வில்லை என சிலர் தகவல்கள் சொன்னார்கள்.

இப்படியாக ஏறத்தாழ எல்லோரும் தடியனின் முகத்தையே மறந்து போன நிலையில், வீ.ரீ.கே.மாஸ்டரின் இரசாயன பாடவகுப்பிற்கு ஆளுக்கொரு சைக்கிளில் சென்று கொண்டிருந்த, ஒரு அதிகாலைப் பொழுதில்... கட்டை ரவி அவ்விடயத்தை விக்கி விக்கிச் சொன்னான்.

"மச்சான் தடியனைப் பற்றி ஒரு செய்தி கேள்விப்பட்டன். உண்மையிலை என்னாலை நம்ப முடியாமல் இருந்தது"

"என்னடா அது?"

"ஆளை மணல்காட்டடியிலை ஆரோ கண்டிருக்கினமாம். அவை வந்து தாய்க்குச் சொல்ல... அது மனுஷி குளறிக் கூத்தாடி ஊரைக் கூட்டி புளியடிப் பக்கம் நேற்று ஒரே அல்லோல கல்லோலமாம்"

"ஆளைக் கண்டாச்சுத்தானே.. பிறகென்ன மச்சான் பிரச்சினை?"

"கண்டதில்லைப் பிரச்சினை... கண்டகோலம் தான் பிரச்சினை..."

"அப்பிடி யெண்டால்"

"தோளிலை துவக்குத் தொங்க ஏதோ சீருடையிலை நிண்டானாம்"

தொண்டைக் குழியை ஏதோ வொன்று அடைப்பது போன்ற உணர்வு என்னுள் எழுந்தது. என்னையே அறியாது என் கைகள் 'சடின்பிறேக்' அடிக்க சிறிது நேரம் அப்படியே தன்னுணர்வு அற்று நின்றேன். சமாந்தரமாக என்னுடன் சைக்கிளில் பயணித்த கட்டைரவி உசாராகி, எனது சைக்கிள் ஹான்டிலைப் பிடித்து என் சமநிலையைப் பேணிய பின்னரே மீண்டும் பெடலை நான் உழக்க ஆரம்பித்தேன்.

பாம்புகளாக ஊர்ந்த என் சைக்கிள் சில்லுகள் வீதியின் அகலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டில் தடம் பதித்தவாறே மீண்டும் முன்னோக்கி நகர ஆரம்பித்தன.

அதன் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகத் தடியனைப் பற்றிய தகவல்கள் கசியத் தொடங்கிற்று.

பயிற்சி முடித்து இப்போதுதான் தடியன் வந்திருப்ப தாகவும், எங்கள் பகுதிக்கு அவன்தான் பொறுப்பாளன் எனவும் அவன் இப்போது வேறொரு பெயர் வாயிலாகவே அழைக்கப்படுவதாகவும், சாண்டோ, வீரப்பா ஆகியோரும் அவனுடனேயே இருப்பதாகவும் சுடச்சுட அவ்வப் போது செய்திகள் வந்து கொண்டேயிருந்தன.

அட்வான்ஸ்லெவலில் சித்தியெய்தி நான் கணக்கியல் கற்கை நெறிக்கென கொழும்பு செல்லும் தறுவாயில், கோயிலடியில் கல்யாணப்படிப்பு நடந்து கொண்டிருந்த ஒரு மைமல் பொழுதில், உச்சக்கட்டச் செய்தியாக தேர்முட்டியடியில் வைத்து கட்டைரவி அதை எனக்குச் சொன்னான்.

"மச்சான், இவள் விஜயகுமாரியை ஐஞ்சாறு நாளா வீட்டிலை காணேல்லையாம். தடியனோடைதான் போய்ச் சேர்ந்திருப்பாள் எண்டு ஆக்கள் பரவலாகக் கதைக்கினம்."

அச்செய்தி கிடைத்த ஓரிரு மாதங்களுள் நான் கொழும்பு சென்று விட்டேன்.

மாதங்கள் வருடங்களாகி பின் தசாப்தங்கள் இரண்டு கழிந்த நிலையில், தடியன் எனும் பெயர் அறவே அழிந்து போயிற்று. புதிய தனது பெயரில் கிராமங்கள் கடந்து, நகரங்கள் கடந்து... ஏன் நாடு கடந்தும் அவன் பிரசித்தமானான்.

***

இப்போது...

புதிய பெயரில் புகழடைந்த தடியன் என்றழைக்கப்பட்ட எஸ்.எஸ் ரவிச்சந்திரனுக்கும், அவனது குடும்பத்தி னருக்கும் இறுதி நேரத்தில் என்னவாயிற்று என இன்று வரை எவருக்கும் எதுவுமே தெரியாது! அவனது தாயாரோ இன்னும், "என்ரை பிள்ளை எண்டைக்காவது ஒரு நாள் திரும்பி வருவான்" என்று ஏதோ ஒரு அகதி முகாமிலிருந்து சொல்லிக் கொண்டிருப்பதாகவே ஊரவர்கள் சொல்கிறார்கள்.

ஆனால்...

தடியன் என்றும் உயிருடனேயே உலா வருகிறான். கரியர் பூட்டிய அந்த 'றோட்மாஸ்டர்' சைக்கிளின் பின்னால் என்னை ஏற்றிக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் பஸ் டிப்போ வழியாக ரவுனுக்குச் செல்கிறான். எங்களூர் சென்றல் தியேட்டர் கலரி பின்வரிசையில் இருந்து கொண்டு என்னுடன் படங்கள் பார்க்கிறான்.

பிள்ளையார் கோவில் தேர்முட்டிக்கு அருகிலுள்ள மகிழ மரத்தின் கீழ் அமைந்துள்ள பொழிந்த கற்களிலிருந்து கொண்டு மணிக்கணக்கில் என்னுடன் முசுப்பாத்திக் கதைகள் கதைக்கின்றான்......

என் நினைவுகளிலும்... கனவுகளிலுமாக...!

**இதழ் - 25 ஐப்பசி 2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெடுபிடி

## தாட்சாயணி

ஜீவநதி
சிறுகதைகள்
14

"அக்கா வாங்கோக்கா... கிலோ அம்பது தானக்கா... வாங்கோ..." தீபனா திரும்பிப் பார்த்தாள். சனங்கள் நிரம்பிவழிய பஸ் சிரமப்பட்டு நகர முயற்சித்துக் கொண்டிருந்தது.

"கிலோ அம்பது... கிலோ அம்பது" தீபனாவை மீண்டும் அந்தக்குரல் இழுத்தது கறுத்துப் பளபளத்துக் கொண்டிருந்த திராட்சைக் குவியல்கள் அவளை வாவென்றழைத்தன.

"அரைக்கிலோ போடப்பன்..." பேர்சைத் திறந்து காசை எடுத்த படியே சொன்னாள் அவள். சொல்லும் போதே சின்னவளின் முகம் ஞாபகத்திற்கு வந்தது. சின்ன வளுக்கு ஏதேனும் வாங்கிக் கொண்டு போகவேண்டும். இல்லா விட்டால் அவள் முகம் தொங்கிப் போகும். ஆசைஇ ஆசையாய்க் காத் திருக்கும் அவளின் முகத்தை வாடவைக்கப் பிடிக்காமல் எப்போதும் ஏதேனும் அவளுக்கு வாங்கிக் கொண்டு போவதே வழமை. இன்று அவளுக்குத் திராட்சை. அவற்றைப் பார்க்கும் போது அவள் முகத்தில் தோன்றப் போகும் குதூகலம் தீபனாவின் அன்றைய நாள் களைப்பைப் போக்கப் போது மானதாயிருக்கும். திராட்சைகளோடு அவள் திரும்பிய போது நேரம் நான்கு பதினைந்தை நெருங்கிக் கொண்டிருந்தது. திருநெல்வேலியில் மூன்றரைக்கே பஸ்ஸைப் பிடித்தும் இங்குவர அரைமணி நேரம் ஆகி விட்டது. இனி வரணி வரை போக வேண்டும். ஏற்கனவே நின்றிருந்த மினிபஸ் சனங்களுடன் போய் விட்டிருக்க, வேறொரு மினிபஸ் இரண்டொரு மனிதர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்று ஆசனங்கள் நிறைய அவளுக்காகக் காத்திருந்தது.

'ஏறுங்கோ அக்கா, ஏறுங்கோ...' வழக்கமாய் வந்ததில் பழகிப்போன, கண்டக்டர் அவளை வரவேற்றான். இவள் ஏறி இருக் கையில் அமர்ந்தவுடன் மேலும் சனங்கள் மளமளவென்று ஏறினர். பஸ் வெகுவிரைவிலேயே முழுமையாய் நிரம்பிக்கொண்டது. நேரம் நான்கு இருபதை அண்மித்தது. சனங்கள் இன்னும் ஏறினார்கள். தீபனா ஜன்னலோரம் அமர்ந்தபடி யாரும் தெரிந்தவர்கள் ஏறுகின்றார்களா என அவதானித்துக் கொண்டிருந்தாள்.

பஸ் ஸ்டார்ட் ஆகிவிட்ட போதும் இன்னும் நகரவில்லை. "ஏன் இன்னும் நிண்டு மிலாந்துறான். கொன்வேயிலை அம்பிட்டால் தெரியும். பஸ்ஸினுள் ஏறியவர்கள் முணுமுணுக்கத் தொடங்கி விட்டார்கள். இவளுக்கும் ஒரு பயம் இருந்தது தான் முன்பும் இரண்டு மூன்று தடவை இப்படி "கொன்வே"யில் அகப்பட்டு வீடு போய்ச் சேர இரவு ஏழு மணியாகிவிட்டது. முகத்தை அழுமாப்போல வைத்துக் கொண்டு, வீட்டுக்கும், வாசலுக்கு மாய்த்திரியும் சின்னவளை நினைக் கையில் மனம் பதறும். ஆனால் என்ன செய்ய முடியும்? வேலையை விட்டுவிட்டா போக முடியும்?

பஸ் கொஞ்சம் கொஞ்ச மாய் நகரத் தொடங்கியது.

கடைசி பஸ்... கடைசி பஸ்... என்ற தன் அஸ்திரத்தைப் பாவிக்க முனைந்தபடி கண்டக்டர் பையன் தன் திறமையைக் காட்டிக் கொண்டிருந்தான்.

இப்படியே பஸ்கள் ஆறுதலாய்க் கிளம்பிப் போயிருப்பின் முன் பொருநாள் அவள் பஸ்ஸைத் தவறவிட நேர்ந்திருக்காது. அன்று எவ்வளவு அவசரமாய் வந்தும் நாலரை ஆகிவிட்டது. இவள் வேர்க்க, விறுவிறுக்க திருநெல்வேலி பஸ்ஸிலிருந்து இறங்கி ஓடிவந்தும், கொடிகாம பஸ்ஸைக் காணமுடியவில்லை. அப்போது நான்கு முப்பத்தி மூன்று தான். ஆனால் ஒரு நிமிடம் கூடத் தாமதிக்கமாட்டேன் என்பது போல் பஸ்கள் புறப்பட்டு விடுகின்றன.

இவளுக்கு ஒருநிமிடம் தலை சுற்றிப்போனது. என்ன செய்யவ தென்று தெரியாமல் திகைத்தவள், அப்பால் நின்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்றைப் பிடித்து பஸ்ஸை பிடிக்கக்கூடிய தூரம் வரை வரச்சொல்லி, செம் மணி எல்லையில் பஸ் தெரிவதைக் கண்டு எட்டி விரட்டி, அன்று அவனுக்கு முந்நூறு ரூபா கொடுத்துப் பின் பஸ்ஸிலேறிப் போனதை எப்படி மறக்க முடியும்? அவ்வாறு எத்தனையோ தடைகளை யெல்லாம் தாண்டி வீடு போய்ச் சேர்ந்தவளுக்கு இன்று பஸ் மெதுவாகப் போவதையிட்டு அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபிக்கவும் முடியவில்லை. ஆனாலும் சில பெண்கள் பஸ் மெதுவாகப் போவதையிட்டு முணுமுணுக்காமல் இல்லை.

ஆஸ்பத்திரிமுன் தாமதித்து, ஆட்களை ஏற்றிய மினிபஸ் அதற்குப்பிறகும் நின்று மிலாந்தாமல் வேகம் எடுத்தது. அப்பாடா என எண்ணியபடி இவள் இருக்கையில் வாகாகச் சாய்ந்து கொண்டாள். உள்ளே ஒலித்துக்கொண்டிருந்த பாடல்களும் மிக ரம்மியமாய் இருக்க இவள் சாதாரணமாயே அந்தப் பயணத்தை ரசித்தபடி யிருந்தாள். காதில் ஒலித்த பாட்டின் இசையை மீறி விசில் ஒலி கேட்ட போது, திடுக்குற்று நிமிர்ந்தது மனம். பஸ்ஸின் வேகம் சீராகக் குறைந்து, ட்றைவர் பஸ்ஸை மாம்பழம் சந்தியிலுள்ள ஒழுங்கையொன்றில் புகுத்தி பின்வளமாய், உள்ளே உள்ளே போய்க்கொண்டிருந்தான்.

"இனி, வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த மாதிரிதான்..."

உள்ளே பெரும்புகைச்சல் கிளம்பியது.

"சொல்லச் சொல்ல வைச்சுக் கொண்டிருந்தவன் இப்ப மறிச்சபிறகு, நாங்களெல்லோ நிக்கவேண்டிக்கிடக்கு..."

"இனி ஏழுமணிதான்..."

இவ்வாறான குரல்கள் உள்ளே பல்கிப் பெருகின. நிறுத்தப்பட்ட பஸ்சின் ஓய்வை பயன்படுத்தி கொண்டக்டர் உள்ளே துருவிக் கொண்டு நுழைந்தான்.

"அக்கா, காசை எடுங்கோக்கா..."

"இதுக்குமட்டும் முன்னாலை வரத் தெரியும். கொண்டு போய்ச் சேர்க்க மட்டும் தெரியாது".

யாரோ ஒருத்தி கத்தினாள்.

"வரவிருப்பமில்லாட்டி இறங்குங்கோ அக்கா, சும்மா இதிலை ஏறி நிண்டு கொண்டு கத்தாதையுங்கோ..."

பொறுமையை இழந்துபோன கொண்டக்டர் பதிலுக்குக் கத்தினான்.

தீபனா மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தாலும், பரிவாய் சனங்களை ஏறிட்டாள். ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பிரச்சினைகள். வேளைக்குப் போக முடியாமல் போய் விட்ட ஆதங்கத்தில் அந்தப் பெண்கள் கத்துகிறார்கள். உன் மையில் பயணம் தடைப்பட யார் காரணமோ அவர்கள் மீதில் கோபத்தைக் காட்ட முடியாது. கோபத்தைக் காட்டுவதற்கு அவர் களுக்குக் கிடைத்தது அந்த அப்பாவி கண்டக்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் செய்த ஒரேதப்பு சற்றே ஊர்ந்து ஊர்ந்து மெதுவாக பஸ்சை ஓட்ட வைத்ததுதான். மற்றும்படி அவனும் இவர்களோடு தான் அலைந்து உரிய இடத்தில் பஸ்சை ஒப்படைத்து எத்தனை மணிக்குத் தனது வீட்டை அடையப்போகிறானோ...? அது எல்லாம் யோசிப்பது யார்? இவளும் எப்படியும் வேளைக்குப் போயே ஆகவேண்டும். கொடிகாமத்திற்கு அப்பால் எப்படிப் போவதென்று தெரியவில்லை. ஏழு மணியானால் ஊரடங்கு ஆகிவிடும். கொடிகாமத்தில் சைக்கிளை எடுத்துக் கொண்டு அப்பாலுள்ள முகாம்களைக் கடந்து எப்படிப்போக முடியும்.?

தீபனாவின் முகம் கலவரத்தினால் சுருண்டுபோனது. விட மாட்டானா? விடமாட்டானா...? என உள்ளே ஏங்கிற்று மனம். எட்டி எட்டிப் பார்த்த பார்வைக்குள் எந்த ஒரு வாகன அணியுமே சிக்க வில்லை. இரண்டு மூன்று சீருடைகள் விசிலை வாயில் வைத்துக்கொண்டு அங்குமிங்கும் நகர்ந்து கொண்டி ருந்தன.

கடவுளே, கடவுளே என நேர்ந்தபடி அவள் கண்களை மூடிக் காத்திருந்தாள். நேரம் துளித் துளியாய் மிகக் கடினமாய் நகர்ந்து கொண்டிருந்தது. ஒற்றை ஒற்றையாய் இராணுவ வாகனச் சத்தங்கள் கேட்டன. எட்டி எட்டிப் பார்த்தாள். நிமிடங்களை விழுங்கிக் கொண்டு வாகனங்கள் பறந்தன. இவள் எச்சிலை விழுங்கிக் கொண்டு ஒவ்வொரு நிமிடத்தையும் கனத்த யுகங்களாகக் கடத்தினாள். கைத் தொலைபேசி மூலம் வீட்டுக்குத் தகவல் சொல்ல வேண்டும் என்று நினைத்தாள். சற்றுப் பொறுத்துச் சொல்லிக் கொள்ளலாம். இப்போ திருந்தே ஏன் கணவனை யும், குழந்தைகளையும் சங்கடத்திற்கு உள்ளாக்குவான் என்று தோன்றப் பேசாதிருந்தாள். பஸ்ஸிற்குள் அடிக்கடி கைத் தொலைபேசிகளின் சிணுங்கல்கள் கேட்டன. எல்லாரும் தத்தம் அவலத்தை வீட்டுக்கு அறிவித்துக் கொண்டிருந்தனர். என்ன நாடு இது...? விடிகாலை ஏழு மணிக்குப் புறப்பட்டால் இரவு எட்டு மணி ஆகியும் வீட்டுக்குப் போய்ச் சேர்வோமா என்று தெரியாத நிலை. என்னதான் செய்வதுஇ இந்த நாட்டில். வீட்டிலும் இல்லாமல் அலுவலகத்திலும் இல்லாமல். வெறும் தெருவில்தானே பாதிப்பொழுது கழிகிறது.

ஏழுமணிக்கு ஊரடங்கு போடுகிறார்கள்தானே. அதன் பின் இந்த வாகன அணி போக முடியாதா? அல்லது சற்றுப்பொறுத்து பஸ்கள் புறப்பட்டபின் ஐந்தரைக்குப் பிறகு போனால் தான் என்ன..? இப்படி நாலரைக்கு உழைத்துக்களைத்து, வீட்டுக்குப்போகும் மக்கள் மீது இப்படி ஈவிரக்கமற்ற அழுத்தத்தைப் பிரயோகிப்பது சரிதானா...? ஒருபக்கம் வாகன அணி. இன்னொரு பக்கம் ஊரடங்கு. இரண்டு பக்கத்தாலும் நசித்தால் இந்த சனங்கள் என்னதான் செய்வது..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபனாவின் மனதில் பொங்கியெழுந்த கேள்விகள் தான் எல்லார் மனதிலும் இருந்தன. எனினும் கேள்வி கேட்கின்ற சூழலிலா அவர்கள் இருக்கின்றார்கள்.

ஒற்றை ஒற்றையாய் கேட்ட வாகன இரைச்சல் சற்றே அடங்கி ஓய்ந்தது. வெளியே இறங்கி நின்றிருந்த சனங்கள் ஒவ்வொருவராய் உள்ளேறினர். நேரம் ஐந்தே முக்காலைக் காட்டியது. "கடவுளே விட்டுவிட்டானென்றால் எவ்வளவு நல்லது" மனம் பிரார்த்தனை பண்ணியது. ஏதோ நினைத்தவன் போல் வீதியில் நின்றவன் விசில் ஊத பிறகும் கீழே நின்றவர்கள் தபதபவென்று உள்ளே ஏறினர். கண்டக்டர் அவசர அவசரமாய் சனங்களை உள்ளேற்றி 'ரைட்' சொன்னான். ட்றைவருக்கு எங்கிருந்து தான் அந்த வேகம் வந்ததோ தெரியாது. இவ்வளவு நேரமும் புதிதாய் பஸ் ஓட்டப் போகிறது போல் ஓடிக்கொண்டிருந்த ட்றைவர் இப்போது கைதேர்ந்த வாகன ஓட்டுனராய் தன் திறமையைக் காட்டினான்.

ஏதோ சின்னவளின் முகத்திலாவது சந்தோஷத்தைப் பார்க்கலாம் எனும் எண்ணம் இன்னும் கொஞ்சம் மிச்சமிருந்தது. இனி மாம்பழம் சந்தியிலிருந்து கொடிகாமம் போகும்வரை எங்குமே மறிக்காதிருக்க வேண்டுமே என மனம் மன்றாடிக் கொண்டது எதையும் திட்டவட்டமாகச் சொல்ல முடியாமலல்லாவா இருக்கிறது. வேகமாகச் சென்ற பஸ் செம் மணியை நெருங்கியபோது நல்லூருக்குச் செல்லும் கிளைப் பாதை யில் ஏற்கனவே பஸ்கள் வரிசையாய் மறிக்கப்பட்டிருப்பது தெரிந்தது. நிறைய சனங்கள் மோட்டார் சைக்கிள்களோடும் சைக்கிள் களோடும் மறிக்கப் பட்டிருந்தனர். சிலவேளை இந்த வழியால் செல்லும் வாகனங்களை விட்டபின் அவர்களுக்குரிய தடைகள் அகற்றப்படக்கூடும். மனம் அந்தரித்துக் கொண்டிருந்த போது இவர்களின் பஸ்ஸையும் சைகைகாட்டி அந்தப்பாதைக்குள் பின்வளமாக அனுப்பினான் ஒரு சிப்பாய். இருப்புக் கொள்ளாமல் தவித்தபோது பஸ்ஸின் என்ஜினும் நிறுத்தப்பட்டது. இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் காற்றில் பறந்தது.

"சீ.. என்ன வாழ்க்கை இது...?"

நேரம் ஆறுமணி ஆயிற்று. வெட்டவெளிக்காற்று குளிராகி ஜன்னலால் இவள் முகத்தை அடித்தது. மழைகால இருட்டு எங்கும் பரவத்தொடங்கியது. இவள் கண்களினூடு கண்ணீர் கரகரவென்று வழிந்தது. ஏதோ ஒற்றையடிக் காட்டுப்பாதையில் தனித்து வழி தவறியது போல் உணர்வு. தனித்து வழி தவறவில்லை. எல்லோரும் சேர்ந்து வழிதவறியிருக்கிறோம் என்பது போல் ஜன்னலுக்கு வெளியே கும்பலாய் சனங்கள் தெரிந்தார்கள். எத்தனை சைக்கிள் கள். எத்தனை மோட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிள்கள். மோட்டார் சைக்கிள்களில் இரண்டு மூன்று சிறுவர்கள் கூட நெருக்கியடித்து இருந்தார்கள் குழந்தைகளைக் கொண்டு வந்த வர்கள் எல்லாரும் இந்த இருட்டில் எப்படிப் போகப்போகிறார்கள். ஆறுமணி ஆகிவிட்டதால் வீடுகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். இன்னும் சற்று நேரத்தில் அவன் விசில் ஊதியதும் இந்த மழை இருட்டில் பீறிட்டபடி பறக்கப் போகின்ற இந்த மோட்டார் சைக்கிள்கள், மினிபஸ்கள் ஒன்றோ டொன்று மோதாமல் இருக்க வேண்டுமே வீட்டையும் நாட்டையும் நினைக்க நினைக்க அவளுக்கு அழுகை வந்தது. யாரும் பார்த்து விடுவார்கள் என்ற உணர்வு எதுவுமின்றிக் கண்ணீர் விட்டாள். மழை மம்மல் யாருக்குத் தெரியப் போகிறது. அவள் கண்ணீர் வழிய வழியக் கைக்குட்டையால் ஒற்றியெடுத்தபடி அவள் ஜன்னல் வழியே வெளியே வெறித்தாள். எந்த ஒரு வாகனமும் வருவதற்கான அறிகுறிகளைக் காணவில்லை.

தொலை பேசியை எடுத்து செம்மணியடியில் நிற்பதாய் கணவனுக்குத் தகவல் சொன்னாள். சின்னவளைப் பற்றிக் கேட்டால் அழுகை வந்துவிடும். அவளும் கேட்கவில்லை. அவனும் அவளைப் பற்றி எதுவும் சொல்ல வில்லை. இவளால் இந்த இரவு நிச்சயம் வீட்டுக்குப் போக முடியாது. போனமுறை மாதிரி கொடிகாமத்தில் சைக்கிள் விடும் வீட்டில் தங்கிவிட்டு, காலை ஐந்தரைக்கு எழும்பி வீட்டுக்குப் போய் அதன்பின் குடும்பத்துக்கான கடமைகளைக் கவனித்து திரும்பவும் அவசரப்பட்டு எட்டுமணிக்காவது வீட்டைவிட்டுக் கிளம்ப வேண்டும். வீட்டில் வேளைக்கு வெளிக்கிட வேண்டியது தானே எனும் கணவனுக்கு மூன்றரைக்கு முன் எப்படி வெளிக்கிடுவது என்று சொல்லிப் புரியவைக்கமுடியும். கையெழுத்து மெஷினுக்கு முன் என்ன நியாயத்தை எப்படி வெளிப் படுத்த முடியும். வேளைக்கு அலு வலகத்திற்கு வரவேண்டும் என வலியுறுத்தும் அதிகாரிகள் யாரும் எத்தனை மணிக்கு வீடு போய்ச் சேர்ந்தாய் என்று கேட்பதில்லையே!

கண்ணீரை அடக்கிக் கொண்டு வெளியே பார்த்த போது சைக்கிளில் போன இரு சிப்பாய்கள் மறிக்கப்பட்டவர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டு போனார்கள். இவர்களுக்கு எப்படிப் பதிலுக்குச் சிரிப்பது? கைகால்களை இறுகக் கட்டிவிட்டுச் சிரி என்று சொல்வது போல் அல்லவா இருக்கிறது நிலைமை.

"நாளைக்கு நீ சுடுதண்ணிப் போத்தில் கொண்டா மச்சான், நான் பிஸ்கட் கொண்டாறன்..." யாரோ விடலைகளின் பேச்சு இவளை நிமிர்ந்து பார்க்கவைத்தது. உள்ளே பஸ்ஸின் லைட் மங்கலாக ஒளிர்ந்தது. இரு பையன்கள் இவளிருந்த சீட்டிற்கு அருகில் நின்றபடி பேசிக் கொண்டிருந்தார்கள். இவளது கண்களில் வழிந்த கண்ணீரை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டார்களோ...? அது தான் அவளின் கவனத்தைத் திசைதிருப்பி அவளது முகத்தை மலரச்செய்யும் விருப்ப மோ? அவள் முகத்தை அழுத்தித் துடைத்தாள். தொடர்ந்த அவர்களின் நகைச்சுவைப் பேச்சுக்களிடையே முகத்திற்குப் புன்னகையைப் பூசிக் கொண்டாள்.

பிரச்சினைக்குள்ளும் நகைச் சுவை பேசுகின்ற அவர்களால் அந்தச் சூழலின் இறுக்கம் சற்றே தளர்ந்தது. அப்பாடி என மூச்சுவிட முடிந்தது. "நாளைக்கு ரேடியோவும் கொண்டரவேணும், பாட்டுக்கேக்க..."

"கச்சான் கொண்டந்தாலும் வறுத்துச் சாப்பிடலாம்..."

லேசாய்ப்போன மனத்தை ஒரு பெருமூச்சோடு தாங்கிக் கொண்டான். நேரம் ஏழுமணியாகிற்று. இருட்டு கனமாகவே திரண்டு. எந்த ஒரு வாகனமும் போகவில்லை. வீதியில் நின்றவன் விசிலை ஊதினான்.

"இப்பதான் விசிலூதிப் பழகிறான்..." எரிச்சல்தாளாமால் ஒரு குரல் முணுமுணுத்தது.

"அப்பாடி இப்பவாவது எல்லா வாகனமும் முகமாலைக்குப் போய்ச் சேர்ந்துதே..."

"அதெல்லாம் பத்திரமாப் போய்ச் சேர்ந்தபடியாத்தானை எங்களை விடுபடுது..."

அவர்களின் பேச்சுக்குக் காத்திராமல் பஸ் சர்ரென்று சீறிக் கொண்டு பாய்ந்தது. நாவற்குழி வளைவில் வெள்ளை ஒளிப்புள்ளி களாய் மோட்டார் சைக்கிள்களும், மினிபஸ்களும் வரிசையாய் அசைவது தெரிந்தது. சாதாரண வேளையெனில் அது ஒரு அழகான காட்சியாய் மனதில் பதிந்திருக்கும். இப்போதோ எந்தவொரு விபத்தும் நேராதிருக்க வேண்டும் என்றே எண்ணத்தோன்றியது.

வீதிகளிலெல்லாம் லாம்பு ஏந்தியபடி ஒவ்வொருவரும் தமது சொந்தங்களுக்காகக் காத்து இருந்தனர். இவளுக்கு...? கொடிகாமத்தில் கடைசி ஆட்களில் .இவளும் ஒருத்தியாய் இறங்கிய போது மனம் கனத்தது. பைக்குள் இருந்த திராட்சையும் கூட... இப்போது பளிச் சென்றிருக்கின்ற அந்தத் திராட்சைகள் தான் சின்னவளைப் பரவசப்படுத்தும். நாளை வாடி உலர்ந்த திராட்சைகளை நித்திரைப் பாயில் அவளை உலுக்கி எழுப்பிக் கொடுக்கிற போது அவளது முகம் மலரவா செய்யும்.. கண்களில் மீண்டும் நீர் வந்து விடும் போல் தோன்றவே மனதைக் கல்லாக் கியபடி நடக்கத் தொடங்கினாள் தீபனா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் உலகம்

## ச.முருகானந்தன்

ஜீவநதி
சிறுகதைகள்
15

நான் அலுவலகத்தால் வந்ததும் எனக்காகவே காத்திருந்தவள் போல ஓடி வந்து என்னைக் கட்டிக் கொண்டாள் என் செல்ல மகள் அகல்யா. என்னைக் கண்டதும் ஓர் துள்ளல் குதியாட்டத்துடன் கால்கள் நிலத்தில் பட்டும் படாமலும் 'அப்பா' என்று கூவி அழைத்தபடி ஓடி வந்த அவளுக்குத் தடை போட்டாள் என் அன்பு மனைவி காந்தா.

"அகல்... அப்பா வேலையால களைச்சுப் போய் வாறார். கை கால் முகம் கழுவின பிறகுதான் அப்பாவிடம் போக வேணும். இவள் இப்படித்தான் எல்லாவற்றிலும் சுத்தம் பார்ப்பாள். மணமான புதிதில் கூட, அலுவலகத்தால் வந்தால் கை, கால், முகம் கழுவி உடுப்பு மாற்றும் வரை ஒரு முத்தம் கூடத் தரமாட்டாள். அவளது பேச்சுக்கு இந்த வீட்டில் அப்பீலே இல்லை. நான் மேல்கழுவி உடை மாற்றிக் கொண்டு வந்ததும் மனைவி சூடான தேநீர் தந்தாள். தேநீரைப் பருகிக் கொண்டிருந்த போது மறுபடியும் மகள் 'அப்பா... அப்பா...' என்று கூப்பிட்டபடி எனதருகே வந்தாள்.

மெதுவாக அவளை அணைத்தபடி "என்ன, பிள்ளைக்கு என்ன வேணும்?" என்று கேட்டேன்.

"அப்பா... நாளைக்கு பேச்சுப் போட்டி... இதில முதலாவதாக வந்தால் தமிழ்த்தினப்போட்டிக்கு அனுப்புவினமாம். எனக்கு பேச்சு சொல்லித் தாங்கோ..." கண்களை உருட்டி உருட்டி தலையை ஆட்டியபடி அவள் ஆர்வமாக கேட்பது ரசிக்கும் படியாக இருந்தது..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்லம், என்னத்தைப் பற்றி பேசப் போறியள்?"

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற தலைப்பு தந்திருகிறா ரீச்சர்..." எப்படியும் பேச்சுப் போட்டியில் முதலாவதாக வரவேண்டும் என்ற பரபரப்பும், நம்பிக்கையும் அவளிடம் தெரிந்ததை அவதானித்த நான் அவளது வேண்டுதலை நிறைவேற்றினேன். பேச்சை தயார் செய்து கொடுத்து பேசும் முறையையும் காட்டிக் கொடுத்தேன். அவள் உரையை தயார் செய்து கொண்டிருந்த போது காந்தா அழைத்தாள் "பிள்ளை சாப்பிட்டுட்டுப் படியுங்கோ..."

அவள் கேட்கவில்லை பேச்சை தயார் செய்து என்னிடம் பேசிக் காட்டிய பின் தான் சாப்பிட வந்தாள் சாப்பிட்டு முடிந்த பின்னர் நான் சந்திரகாந்தாவின் 'விடியலைத் தேடும் புதுயுகப் பெண்கள்' என்ற புத்தகத்தை வாசிக்க ஆரம்பித்தபோது மீண்டும் என்னிடம் ஓடி வந்தாள்.

"அப்பா... அப்பா..."

"என்ன குஞ்சு...? பால் குடிச்சாச்சா?..."

"அம்மா பால் ஆத்திக் கொண்டுவாறா, அதுக்கிடையிலை இன்னொருக்கால் பேசிக்காட்டட்டே அப்பா?" எனக்கு மீண்டும் மீண்டும் கேட்பதில் சலிப்பு எனினும் மகளின் ஆர்வத்தை தடைபோட முடியவில்லை.

"பொறுங்கோ அகல்... அம்மாவும் வரட்டும் அவவும் ஒருக்காக் கேட்கட்டன்"

"அம்மா கெதியாக வாங்கோ... பேசிக்காட்டப்போறன்..." அம்மாவை அழைத்தாள் அகல்யா.

"வாறன் பிள்ளை... பாத்திரம் கழுவுறன்... அப்பாவோட இருந்து ரீ.வியைப் பாருங்கோ"

ஆனால் அகல்யாவுக்கு இன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் ஆர்வம் இருக்கவில்லை. அம்மாவின் வரவை ஆவலோடு எதிர்பார்த்தாள். காந்தா வந்ததும் "அம்மா நான் பேசிக் காட்டுறன்..." என்று கூறி பேசிக் காட்டினாள். உண்மையாகவே அற்புதமாக இருந்தது.

"பிள்ளை திறமாகப் பேசுறியள். நாளைக்கு உங்களுக்குத் தான் முதல் பரிசு" மனைவியின் உளவியல் ரீதியிலான அணுகுமுறையில் அகல்யாவின் குழந்தை முகம் பூரித்து குதூகலித்தது.

மறுநாள் காலை எழுந்ததும் மறுபடியும் பேசிக் காட்டினாள். தொனியைக் கூட்டி குறைத்து அழுத்திச் சொல்ல வேண்டிய இடங்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டி சொல்லிக் கொடுத்தேன். "பிள்ளைக்குத் தான் கட்டாயம் பரிசு கிடைக்கும்..." நானும் என் பங்கிற்கு உற்சாக மூட்டினேன். ஒரு வேளை முதலிடம் கிடைக்காதுவிட்டால் தாங்கிக் கொள்ளமாட்டாள் என எண்ணினேன். மறுநாள் மாலையில் குதூகலமாக வரவேற்றாள் அகல்யா.

"அப்பா எனக்குத்தான் முதல்பரிசு..."

பிள்ளைகள் பரிசு பெறும் போதும், பரீட்சையில் சித்தியடையும் போதும், பெற்றோருக்கும் மகிழ்ச்சி தானே? இந்தக் கெட்டித்தனம் இறுதிவரை தொடரவேண்டும் என எண்ணிக்கொண்டேன். எனது மனக்குறிப்பை உணர்ந்தவள் போல காந்தாவும் தன்கருத்தைக் கூறினாள்.

"பிள்ளையை டொக்டராக்க வேணும்..."

உன்ர ஆசைலை பிழையில்லை. ஆனால் பிள்ளைக்கு எந்தத் துறையிலை ஈடுபாடு வருகுதோ, அந்தத் துறையில விடவேணும்... நீ டொக்டராக்க வேணும் என்று ஆசைப்படுகிறாய். ஒருவேளை அவள் வளர்ந்த பிறகு கணக்காளராகவோ, சட்ட வல்லுனராகவோ வர விரும்பக்கூடும்... இல்லாவிட்டால் வேற ஏதாவது..."

"ஏதோ, நல்லாக வந்தால் சரிதான். போராளியாகப் போகப் போகிறேன் என்று அடம்பிடிக்காட்டில் சரிதான்" என்று சிரித்தபடி கூறினாள் காந்தா.

"எதுவுமே எங்கட கையில் இல்லை. ஆனால் இளைய தலைமுறையினருக்கும் குழந்தைகளுக்கும் இன ஒற்றுமை பற்றி சொல்லிக் கொடுக்க வேணும்... அது தான் பிள்ளையினுடைய உரையில தமிழ், சிங்கள, இஸ்லாமிய மக்களின் சமூக உறவு பற்றி வலியுறுத்தி சொல்லிக் கொடுத்தனான்.

"இன ஒற்றுமையும், மனிதாபிமானமும் இருந்திட்டால் யுத்தமும், இழப்புகளும் இல்லாமல் போகும். முதலிலை உடனடியாக அரசியல் வாதிகளுக்குத்தான் பாடம் நடத்த வேணும் அதோட கூடவே மதவாதிகளுக்கும்.." என்று சிரித்தாள் காந்தா. அன்றைய இரவு இனிதாகக் கழிந்தது.

ஒவ்வொரு நாளும் ஒரேமாதிரி இருப்பதில்லையே. மறுநாள் அலுவலகத்தால் திரும்பி வந்த போது மகள் அழுதபடி இருந்தாள். விசும்பலுடன் வந்தபோது என் மனதும் கரைந்தது. "அம்மா ஏசிப் போட்டாவே அகல் குட்டி?"

"இல்லை அப்பா..." என்ற அகல்யாவின் பார்வை சூனியத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்தது. விசும்பியபடியே அருகில் வந்து எனது கால்களைப் பற்றியபடி நிமிர்ந்து பார்த்தாள். முகம் அழுது அழுது வீங்கிப் போயிருந்தது.

"என்ன செல்லம்?" என்று நான் கேட்டதும் விசும்பல் அழுகையாய் மாறியது. "ரீச்சர் அடிச்சுப் போட்டா..." என்றபடி கையை உயர்த்திக் காட்டினாள். உள்ளங்கை சிவந்து தழும்பாயிருந்தது. மென்மையான அந்தப் பிஞ்சுக் கரத்தைப் பற்றி பார்த்தேன் தழும்பைக் கண்டதும் என் கண்கள் பனித்தன. இதற்கிடையில் அருகில் வந்த காந்தா "பார்த்தியாளை அத்தான் இந்த ராட்சசி ரீச்சரின்ர வேலையை? மனிசப் பிறவியளோ, மிருகங்களோ தெரியேல்லை! என்று சீறினாள். எனக்கும் அந்த ஆசிரியை மீது எரிச்சலாக வந்தது. பிள்ளைகளுக்கு அடிப்பதே குற்றம். அதிலும் தழும்பு வாற அளவுக்கு இந்த ஆரம்பப் பாடசாலைப் பிள்ளையளுக்கு அடிக்கிறதென்றால்? உளவியல் தெரியாத பிறவியள்"

மீண்டும் அகல்யாவின் கைகளைப் பார்த்தேன் காந்தா மஞ்சள் மாவும் நல்லெண்ணையும்குழைத்துத் தடவியிருந்தான்.

அந்தக் காலத்தில் மணியகாரன் தோட்டத்து அமெரிக்கன் மிசன் ஆரம்பப் பாடசாலையிலை எனக்குப் படிப்பித்த வள்ளிப்பிள்ளை ரீச்சர், என் நினைவுக்கு வந்தார். எவ்வளவு கனிவு! பிள்ளையளோட பிள்ளையளாகச் சேர்ந்து ஒரு தாயைப் போல எண்ணும் எழுத்தும் கற்றுத் தந்த அவரையும் இந்த இராட்சசியையும் நினைத்துப் பார்க்கிறேன். அப்புறம் இரண்டாம் வகுப்பில் ஆட்டமும், பாட்டும், விளையாட்டுமாக தானும் ஆடிப்பாடிப் படிப்பித்த மங்களம் ரீச்சரை, மூன்றாம் வகுப்பிலை கதைகள் சொல்லிப் படிப்பிச்ச அற்புதம் ரீச்சரை, நாலாம் வகுப்பில் ஆங்கிலத்தையும் கவரும்படி அணைத்துக் கற்பித்துத் தந்த பீமன் – சேரை அவரது சொந்தப் பெயர் நினைவில் இல்லை – நினைத்துப் பார்க்கிறேன்.

முன்பும் கூட அபூர்வமாக சில அடிக்கின்ற ஆசிரியர்கள் இருந்தார்கள். அப்படித்தான் ஐந்தாம் ஆண்டில் எமக்கு சமயபாடம் படிப்பிக்கும் சின்னையா சேர் பூவரசம் தடியால் கையிலோ அல்லது காலுக்குக் கீழோ அடிப்பார். சில வேளைகளில் கண்மண் தெரியாமல் அடிப்பதுண்டு அப்படி ஒரு நாள் என்னோடு படித்த இராசையாவுக்கு சரமாரியாக அடித்த போது அவன் பிரம்பைப் பறித்துக் கொண்டு ஓடிவிட்டான். நன்றாகப் படிக்கக் கூடிய அவனது படிப்புக்கு அன்றோடு முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது. பிள்ளைகளிற்கு ஆசிரியர்கள் அடிக்கக் கூடாது என சட்டம் வந்தது. எனினும் இப்போதும் சில ஆசிரியர்கள் மோசமாக மாணவரைத் தண்டிப்பதுண்டு. இன்று ஒரு ஆசிரியை பெண்மை, மென்மை, கருணை, தாய்மை என்று வர்ணிக்கப்படுகின்றவர். சிறு பிள்ளையை இப்படி அடித்திருக்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனது மகளுக்காய் கரைந்து தவித்த அதேவேளை அந்த ஆசிரியை மீது சீற்றம் கொண்டது. "நாளைக்கு பாடசாலையிலை முறையிட வேணும்..." என்றேன் மனைவியிடம்.

"அதிபரிடம் முறையிடுறதிலை பிரயோசனம் இல்லை அடிச்ச ஆசிரியை அதிபரின் மனைவி" என்றாள் காந்தா. நாம் உரையாடிக் கொண்டிருந்தபோதே கதவு தட்டப்பட்டது. திறந்த போது வாசலில் இன்னொரு ஆசிரியை, வசந்தி ரீச்சர் நின்றிருந்தார். உள்ளே அழைத்து உட்கார வைத்து உரையாடியபோது தான் எல்லாம் தெளிவாகத் தெரிய வந்தது.

பாடசாலையில் பேச்சுப் போட்டிக்கு மத்தியஸ்த்தம் வகித்த இருவரில் வசந்திரீச்சரும் ஒருவர் போட்டியில் அதிபர் ஆசிரியை தம்பதி யினரின் மகனும் கலந்து கொண்டிருக்கிறான். நேர்மையாக மத்தியஸ்தம் செய்த இவர்கள், அகல்யாவுக்கு முதலிடமும் ஆசிரியையின்மகனிற்கு இரண்டாம் இடமும் வழங்கியிருந்தனர். ஆசிரியையோ அதிபரான தனது கணவரிடம் சென்று பேச்சுப் போட்டியை வேறு மத்தியஸ்தர்களை வைத்து மீண்டும் நடத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதிபர் உடன்பட வில்லை. ஆனால், தலையணை மந்திரமோ, அடம் பிடிப்போ தெரிய வில்லை, மறுநாள் வந்த அதிபர் போட்டியை மறுபடியும் வைக்க முனைந்திருக்கிறார். நடுவராக இருந்த வசந்தி ரீச்சரும், முரளிசேரும் தமது பலத்த எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள்.

இதற்கிடையில் நிலைமையை உணர்ந்த உப அதிபர் அதிபருக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

"சேர்... போட்டி முடிவை அறிவித்து விட்டு மறுபடியும் போட்டி வைப்பது முறையல்ல அதிலும் முதலிடம் பெற்ற அகல்யா டொக்டரின் மகள். ஏதோ யோசித்துச் செய்யுங்கோ. பிறகு டிபாட்மென்ற் வரையும் போகக்கூடும்"

அதிபர் பலமாக யோதித்து உப அதிபரின் ஆலோசனையை ஏற்றிருக்கிறார். இதனால் சீற்றம் கொண்ட ஆசிரியை தனது கோபத்தை அகல்யா மீது காட்டியிருக்கிறார். பாடத்தில் விட்ட சிறு பிழைக்குத்தான் இவ்வளவு கொடூரமான தண்டனை. வசந்திரீச்சர் தொடர்ந்து கூறினார். "பிழையைத் திருத்தி சொல்லிக் கொடுத்திருக்காலாம். ம்... இனி நீங்கள் இதைப் பற்றி பெரிசு படுத்தாதையுங்கோ. அதிபரும் மனைவியை பேசிக் கண்டிச்சவர்... அகல்யாவைத் தான் தமிழ்த் தினப் போட்டிக்கு அனுப்பப் போகிறோம்"

வசந்தி ரீச்சரின் உரையாடலுடன் மனது சிறிது ஆறுதலடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையை மாற்றும் எண்ணத்தைக் கைவிட்டேன். வசந்தி ரீச்சர் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் என் மனதைத் தொட்டது. "குழந்தைகள் கடவுளின் அம்சம். பிஞ்சு மனம் கள்ளங்கபடமில்லாத வஞ்சனை சூதில்லாத மென்மையானது. இதைக் கூடப் புரிந்து கொள்ளாத ஆசிரியை தடியும் கையுமாக வகுப்புக்கு வந்து போவது எவ்வளவு கொடுமை! புதிய கல்வி முறையில் சொல்லப்படுகுது, பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் படிப்பிக்கக் கூடாது பிள்ளைகள் கற்க வழிநடத்துறது தான் ஆசிரியர்களுடைய கடமை என்று. ஆனால் சில ஆசிரியர்கள் மாணவர் களைப் பாகுபடுத்தி சாதிபேதம், ஏழை – பணக்காரன், கெட்டிக்காரன் – மொக்கன் என்று தரம் பிரித்து கூறுபோட்டு குழந்தை உள்ளங்களையே குரூரமாக்கிட நிற்கிறார்கள்! அதிபரையும் மனைவியரையும் ஒருநாளும் ஒரே பள்ளிக் கூடத்தில் படிப்பிக்க விடக்கூடாது..."

ஆம்! எனது வள்ளிப்பிள்ளை ரீச்சர் போல பல நல்ல ஆசிரியைகள் இப்போதும் இருக்கிறார்கள் என வசந்தி ரீச்சரை எண்ணி மனம் நிறைவு கொண்டது.

சில நாட்களின் பின்னர் தமிழ்தினப் போட்டி நடந்தது. நான் எதிர்பார்த்தது போலவே பேச்சுப் போட்டியில் அகல்யா முதலிடம் பெற்றிருந்தாள். மனது குதூகலித்தது.

"அப்பா... நான் பேச்சுப் போட்டியிலை முதலிடம் பெற்றதுக்கு பிரவீன் கண்டோஸ் தந்தது..." என பெரிய ஒரு சொக்கிலேட்டைக் காட்டினாள் அகல்யா. பிரவீன் அகல்யாவுக்கு அடித்த ஆசிரியையின் மகன் என்பதை நினைத்தபோது மெய் சிலிர்த்தது. குழந்தை உள்ளங்கள் எவ்வளவு உன்னதமானது!

"அப்பா, பா ஓதல் போட்டியிலை பிரவீனுக்கு பரிசு கிடைச்சிருக்கு... நாளைக்கு நான் ஏதும் கொடுக்க வேணும் தானே அப்பா?... பிஸ்கட் பக்கெட் வாங்கித் தாறியளே அப்பா?" மகளின் கேள்வியில் மனது இன்னொரு படி அதிகமாகப் பூரித்தது. பொறாமை இல்லாத தூய உள்ளங்கள்!

"பிஸ்கட் மட்டும் காணாது கேக்கும் கொண்டு போய் கொடு.." என்று கூறியபடி காந்தா அருகில் வந்து அகல்யாவை அணைத்துக் கொண்டாள்.

கள்ளங் கபடமில்லாத அன்பும், நட்பும், கருணையும் நிறைந்த குழந்தை உள்ளங் களிடமிருந்து பெரியவர்கள் நிறையப் படித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என எண்ணிக் கொண்டேன். ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைப்புறா

க.நவம்

ஜீவநதி
சிறுகதைகள்
16

மனசு குதூகலித்தது!

'யுரேக்கா' எனக் கூவியபடி அது நிர்வாணமாகக் குதித்தோடியது.

இளங்காலையில் மொட்ட விழ்ந்த ரோஜா முகம் – அதிலிருந்து திருட்டுத் தனமாக என்னையே ஆலிங்கனம் செய்யத் துருதுருக்கும் இரண்டு கண்கள் என்ற பொன்வண்டுகள் – பொன்னை உருக்கி உச்சந் தலையில் வழிந்தோட வார்த்தாற் போன்று, பாளம் பாளமாகப் பளபளக்கும் கழுத்தளவோடிய காந்தக் கூந்தல் – இவையாவும் சேர்ந்து என் நிஷ்டையைக் குழப்பிவிட்டன.

'வாழ்நாள் பூராவும் அந்த அழகு தேவதை யின் கடைக்கண் கடாட்ஷத்திற் காக, அவளது காலடியில் ஆயுட்கைதியாகவே கட்டுண்டு கிடக்கலாம்'

மனசு அங்கலாய்க்கிறது!

அந்த வெள்ளைக்காரப் பெண் புறாவின் தாபம் ததும்பும் கண்ணெறிகையை எதேச்சையாகக் கண்டுகொண்ட கணம் முதலாக என் இதயம் பீரங்கியாய், அவளுக்காக அடையாள அணிவகுப்பு மரியாதை வேட்டுக்களைத் தொடர்ந்தும் தீர்த்துக் கொண்டே இருக்கிறது.

"சீ... சீ மனசே, நீ திருந்தவே மாட்டாயா?"

மனசின் கீழ் மாடியிலிருந்து யாரோ குறு குறுப்பது போன்று ஓர் அசூசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கனடாவில் கரையிறங்கி, ரொறோன்ரோவில் நிரந்தரமாக நங்கூரமிட்டு மூன்று மாதமாகவில்லை. இந்த 'ஈட்டன்ஸ் ஷொப்பிங் கொம்ப்ளெக்சுக்கு' இன்று இரண்டாவது தடவையாக வந்திருக்கின்றேன்.

முதன் முறை என்னை இங்கு கூட்டி வந்து, மாரிகால அட்டைகள் போல சதா மேலும் கீழுமாக ஊர்ந்து கொண்டு இருக்கும் தானியங்கி மாடிப்படிகளில் என்னை ஏற்றி இறக்கி, 'கடை காட்டிப் போன' என் நண்பன் இன்று வரவில்லை.

உலகிலுள்ள அனைத்து ஆடம்பரப்பொருட்களும் இந்த ஈட்டன்ஸி னுள் அடக்கம் எனலாம். அந்தளவு பிரமாண்டமானது!

கனடிய அரசாங்கம் மாதாந்தம் அளந்து தரும் 'வெல்ஃபெயர்' பணத்தில் ஒட்டுண்ணிச் சீவியம் நடத்தும் இந்த நாட்களில் நான் ஈட்டன்ஸில் 'ஷொப்பிங்' செய்ய நினைத்ததற்கும், ஏழைச் சோமாலிப் பையன் ஒருவன் 'சொக்லேட்' வாங்கிச் சாப்பிட ஆசைப்பட்டதற்கும் அவ்வளவு பெரிய வித்தியாசம் இல்லை!

ஏதோ தரங்கூடியதுகளுக்குள் விலை குறைந்தது ஏதாவது தட்டுப்படாதா என்ற ஆசையில், துணிமணிகளுக்கு நடுவே சுழி யோடிக்கொண்டிருந்த என்னை நோக்கி... மறுபடியும்... மறுபடியும்... அதோ, பெண்கள் பகுதியில் நிரை நிரையாகத் தொங்கிக் கொண்டி ருக்கும் ஆடைகளினாலான வேலி இடுக்குகளின் ஊடாக அவள்...

விழிகளால் என்னை விசாரித்தபடி!

சொல்லுக்குள் அகப்படாத இன்பக் கிளுகிளுப்புடன், நெஞ்சுக்குள் இலேசான படபடப்பு! ஒரே நேரத்தில் என் காதுக்குள் ஓராயிரம் உய்யலாக்கள்!

அருகாக சுவரில் பொருத்தப்பட்டுள்ள ஆளுயர நிலைக் கண்ணாடியில் தெரியும் என் மாயவிம்பம் ஆய்வுக்குட்படுகிறது.

அகதிகளுக்கே உரிய, அவநம்பிக்கை தோய்ந்த பயப்பிராந்தியை யும் மீறி என் முகத்தில் 'அறிவு ஜீவித்தனம்' ஏதாவது பளிச்சிடுகின்றதோ? வாளிப்பான என் உடலின் வாலிப முத்திரைகளில் தன்னைப் பறி கொடுத்திருப்பாளோ? ஏன், பூர்வ ஜென்ம பந்தம் கூடக் காரணமாயி ருக்கலாம் தானே?

விருப்பம் துளிர்ப்பதற்கான காரணங்கள் வேடிக்கை யானவை! சில வேளைகளில் விநோதமானவையும் கூட!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முட்டாள்! கண்டதும் காதல் கனடாவிலும் சாத்தியம் என்ற நினைப்போ, உனக்கு? "

மனசுக்கடியிலிருந்து வரும் எச்சரிக்கையா? அல்லது நையாண்டியா?

என் மனவீட்டுக்குள்ளேயே எனக்கு எதிரி வேறு!

நீலவான் ஆடைக்குள் முகம் புதைத்து நின்று, நிலவென்று அழகுகாட்டும் அவளது சுடர் விழிகளின் யாசிப்புக்கு வேறு என்னதான் அர்த்தமோ?

உடுப்புத் தேடும் பாவனையில் இப்போது என் கால்கள் அவளைத் தேடுகின்றன. நான் கிட்ட நெருங்குவதை உணர்ந்து கொண்டதாலோ என்னவோ, அவள் எட்ட எட்ட ஓடி, ஆடைகளின் வரிசைகளுக்குள் ஒளிந்துகொண்டு அடம் பிடிக்கின்றாள்.

"இந்த நாட்டிலை, ஓராளை இன்னொரா ளுக்குப் பிடிச்சுக் கொண்டால் நேரடியாகப் பேசி, ஒரு 'டேட்டிங்' ஒழுங்கு செய்து, ஒரு 'பார்' அல்லது ஒரு 'கிளப்'புக்குப் போய், தண்ணியில் சற்றே ஆளையாள் குளிப்பாட்டி, பின் ஆடிப்பாடி, வேண்டின மாதிரி அனுபவிச்சுப் போட்டு, அடுத்த நாளே விட்டிடலாம் – விருப்ப மெண்டால் தொடரலாம். ஊரிலை வருசக் கணக்காக வேர்க்க விறுவிறுக்க சையிக்கிள் சீட்டிலை உழுந்தரைச்சு, அலைஞ்சு திரிஞ்சு சரக்குச் சுழட்டின மாதிரி இங்கை செய்யத் தேவையில்லை யடாப்பா"

நான் இங்கு வந்து சேர்ந்த புதிதில் அனுபவசாலியான என் நண்பன் முன்கூட்டியே என் காதில் போட்டுவைத்த புத்திமதி.

இத்தனைக்கும் மாறாக இவளிடத்தில் மட்டும் எப்படி எங்கள் தமிழ்த்தனம் புகுந்து கொண்டதோ? இங்குமா காவியப் பாங்கில் கண்ணோடு கண்ணோக்கல்? இப்போதுமா? இவளிடத்திலுமா?

வந்த நோக்கம் திசைமாறி, நான் இப்போது அவளைத் தேடுகிறேனா? பெட்டிப் பாம்பாக அடங்கி ஒடுங்கியிருந்த ஓமோன்களைச் சீண்டி வேடிக்கை காட்டுகிறாளா, இந்தச் சிங்காரி?

மழைக்கால மின்னலாய்த் தோன்றி மறைந்தும், மறைந்து தோன்றியும் என்னை அலைக்கழித்துக் கண்ணாமூச்சி விளையாடுகிறாள்.

ரொம்பவும் பிடிவாதக்காரியாக இருப்பாளோ?

பிடிவாதக்காரிகளைத் தான் எனக்கும் வெகுவாகப் பிடிக்குமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒன்று மட்டும் நிச்சயம். ஏதோ ஒரு விதத்தில் நான் இவளுக்கு மிகவும் தேவைப்பட்டவனாகிவிட்டேன். நான் இங்கிருந்து வெளியேறும் போது இவள் என்னைப் பின்தொடர்ந்து வருகிறாளா பார்ப்போமே'. மனசு தனக்குள் மெது வாகச் சொல்லியது.

'காஷ் கவுண்டர்' அருகே 'பெர்ஃபியூம்' பகுதியில் 'சாம்பிள்' ஆக வைக்கப்பட்டிருந்த புட்டியை எடுத்து எனது ஜக்கெட்டுக்கு விசிறியடித்தேன். ரம்யமான 'கல்வின் கிளெய்ன் – ஒப்ஸெஷன்' வாசனை மயக்கத்தில் மீண்டும் அவளைத் தேடிக் கண்கள் சுழல்கின்றன.

அவள் என்னை ஏமாற்றவில்லை. அதோ, சுழல் தாங்கிகளில் தொங்கும் 'ஸ்வெட்டர்'களுக்கு நடுவே நின்று என்மீது கடைக்கண்ணால் கணை தொடுக்கிறாள். 'பெர்ஃபியூம்' புட்டியைத் தூக்கிக் காட்டி, அவளுக்கு 'ஸ்ப்றே' பண்ணுவது போல, சின்னதாய் ஒரு சில்மிஷம்!

தோளில் தொங்கப்போட்டிருந்த 'ஹாண்ட் பாக்'கினால் தன் முகத்தை மூடியபடி நாணத்தால் முறுவலித்துப் பின் மீண்டும் மறைந்து கொள்கிறாள்!

நான் புறப்படத் தயாரானேன்.

நான் எனக்கெனத் தெரிவு செய்த ஒரேயொரு 'ரீஷேட்'டைக் கவுண்டரில் கொடுத்துப் பணம் செலுத்துகின்றேன்.

மனசு என்னவோ இன்னமும் அவளைத் தேடி அலைகிறது!

'ஈட்டன்ஸ் பாக்' ஒன்றினுள் ரீஷேட்டையும் 'றிஸீட்'டையும் போட்டு மிச்சச் சில்லறைகளை என் கையில் திணிக்கும் போது, "ஈட்டன்ஸில் ஷொப்பிங் செய்தமைக்கு நன்றி" என்று 'காஷியர்' சிட்டு உதிர்த்த வார்த்தைகள் கூட இலேசாகத்தான் காதில் விழுகிறது. ஆர்வமற்ற நன்றிச் சிரிப்புடன் வாசலை நோக்கி அடியெடுத்து வைக்கின்றேன்.

என்ன அதிசயம் இது!

என்னைச் சுற்றிச் சுழன்ற அந்தச் சுந்தரி, எங்கிருந்தோ பறந்து வந்து என் கையைப் பற்றிக்கொண்டாள்.

இதயம் ஒரு கணம் தரித்துத் துடித்தது!

ஆவெனத் திறந்தவாறு அணிந்திருந்த என் 'ஜாக்கட்' சற்று பொருமியிருக்கத் தக்கவாறு, உள் பையினுள் சொருகி வைத்திருந்த 'வின்ரர் க்ளவுஸ்' சோடியை அவள் வெளியே எடுக்கும்படி கட்டளையிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைக்கு அடிபணியும் இயந்திரமாய், எடுத்து நீட்டுகின்றேன். அவற்றை மேலும் கீழுமாகப் புரட்டிப் பார்க்கிறாள்.

"என்ன செய்கிறாய் நீ?"

இறுகி உறைந்து போன என் முகத்தைப் பார்த்தே, என் கேள்வியை அவள் ஊகித்திருக்க வேண்டும்.

தனது 'ஹாண்ட்பாக்'கிலிருந்து அட்டை ஒன்றை எடுத்து என் முகத்துக்கு நேராகப் பிடித்தாள்.

அவளது அழகான படத்துக்கு அருகாகப் பெயரும் பதவியும் பொறிக்கப்பட்ட அடையாள அட்டை, அது.

'ஈட்டன்ஸ் களவு தடுப்பு அதிகாரி'

எலும்பை உறைய வைக்கும் இந்த 'வின்ரர்' குளிரிலும் எனக்கு வியர்த்துக் கொட்டியது.

மூன்று மாதமாக நான் பாவித்து, புதுமெருகை இழந்துபோன குளிர்க் கையுறையான எனது 'க்ளவுஸை'ப் பார்த்தவுடனேயே அவளுக்கு உண்மை தெளிவாகிவிட்டது.

ஆனாலும் "நான் உனக்காக வருந்து கின்றேன்" என்று சிறு மன்னிப்புக் கோரல்கூடக் கிடையாது.

எனது பழைய 'க்ளவுஸை' என் கை களுக்குள் திணித்துவிட்டு, தொடர்ந்தும் இன்னொரு நிறந்தோலைத் தேடி வலைவிரிப்பதற்குப் போலும், உள்ளே நடக்கத் தொடங்கியது, அந்த வெள்ளைப் புறா!

என் மனசின் கீழ்மாடியிலிருந்து யாரோ ஈனமாய் அழுதபடி...!

கூடி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அத்தனைபேர் கண்களிலும் ஓர் அற்ப ஜந்துவாய்க் கூனிக் குறுகிச் சமைந்து போய் நிற்கிறேன்,நான்!

இதழ் - 14 புரட்டாதி - ஐப்பசி 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மேம்படுத்துநர்கள்

## அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின்



"இண்டைக்குச் சப்பாத்து வாங்கித் தராட்டி இனிமேல் பள்ளிக்கூடம் போகமாட்டன். சப்பாத்துப் போட்டுக்கொண்டராட்டி இனி அடிதான் என்று ரீச்சர் சொன்னவா" காலைச் சாப்பாடின்றி வெறு வயிற்றோடு சென்ற சீலன் விரக்தியோடு தன் கையிலிருந்து பாடசாலை பாக்கை வீட்டு முற்றத்தில் வீசி எறிந்தான்.

"ஐயோ கடவுளே! எங்கடை கஷ்டம் யாருக்குத் தான் விளங்குமோ. சாப்பாட்டுக்கே வழி தெரியேலை. சப்பாத்துக்கு எழுநூற்றம்பது ரூபாய்க்கு எங்கை போவன். கொப்பியும் துணியும் இலவசமாய்த் தராட்டி என்ர பிள்ளை பள்ளிககூடம் போயிருக்குமே. அதைத் தோய்க்க சவுக்காரம் வாங்கிறதே பெரும்பாடு" தன் வேதனையை அடக்க முடியாமல் வாய்விட்டே அழுதுவிட்டாள் விக்கினேஸ்வரி.

விக்கினேஸ்வரி தன் மகன் சீலனை கஷ்டப்பட் டென்றாலும் படிப்பித்துப் பெரியவனாக்க வேண்டு மென்ற கனவுடனே வாழ்ந்து வருபவள். தன் பிள்ளை களுக்கு நகரிலுள்ள கல்லூரியில் தரமான கல்வி கிடைக்கவேணும் என்பதிலே உறுதியாக இருந்தாள். அக்கல்லூரியில் சேர்க்கும் கதை வந்தபோது தங்கை புஷ்பா ஏசியது இவள் நினைவில் இப்போது விசுவரூப மெடுத்தது. "வயித்தை நிரப்பவே திண்டாடிக் கொண்டிருக்கிறாய். பணக்காரர் அனுப்பினமெண்டு நீயும் அங்கை அனுப்பிப்போட்டு பிள்ளையை அவமானப்பட வைக்கப்போறியே. உனக்கென்ன விசரே பிடிச்சிட்டுது. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலாமோ என்று அறியாமலே சொன்னவைங்கள்" அக்காவின் ஆவல் சரியானதெனத் தெரிந்தும் தன்னால் எந்த வகையிலும் உதவமுடிய வில்லையே என்ற இயலாத்தனமும், ஊரிலுள்ள வசதிபடைத்த பலர் படிக்கக்கூடிய இந்தப் பிள்ளைக்கு உதவ முன்வர வில்லையே என்ற ஏமாற்றமும் வேதனையும் உறுத்தப் பொரிந்து தள்ளினாள் புஷ்பா.

தாங்க முடியாத சோகம் தன் இதயத்தைக் கௌவிக் கொள்ளும் போதெல்லாம் விக்கினேஸ்வரி தலையிலை இரண்டு கையையும் வைத்துக் கொண்டு நிலத்தைப் பார்த்தவண்ணம் இருப்பது கணவன் கந்தசாமிக்குப் பழக்கப்பட்டுப்போன விடயம். "என்ன வழக்கம்போல தலையிலை கைவைச்சுக் கொண்டு. ஏன் சமையலுக்கு ஒண்டும் கிடைக்கேலையே" வீட்டிலை உலை வைக்கேலையாக்குமெனத் தப்பாக ஊகித்துக் கேட்டு விடுகின்றான்.

'இல்லையுங்கோ. அவன் இனிப் படிக்கப் போகமாட்டன் என்று அழுகிறான்... நாளைக்குக் கட்டாயம் சப்பாத்துப் போட்டுக்கொண்டு வரட்டாம்... யாரிட்டை யெண்டாலும்... கடனாய் ஒரு... எழு நூற்றம்பது மாறேலுமே" மனதிலுள்ளதை தயங்கித் தயங்கி வெளியிட்டாள் விக்கி.

"நான் எங்கை போறது. டொனேசனுக் கெண்டு வாங்கின காசுக்கு வட்டி வளருது. கூரை ஒழுகுதெண்டு சின்ராசிட்டை வாங்கின ஓலைக் காசு கொடுக்கேலை. அவன் இண்டைக்கு கடையடி யிலை ஆக்களுக்கு முன்னாலை கேட்டிட்டான். பெரிய வெட்கமாய்ப் போச்சு. மூத்தவளுக்குச் சட்டை வாங்க சின்னண்ணையிட்டை மாறின காசு குடுத்து முடியேலை. இப்ப திருப்பக் கடன் எண்டு கொண்டு நிற்கிறாய். நான் எங்கை போறது இனி. உனக்கு விருப்பமெண்டால் நீ எங்கையெண்டாலும் மாறன். உனக்கு நான் சொன்னான்தானே உந்தப் பெரிய பள்ளிக்கூடத்திலை படிப்பிக்க நினைக்கிறாய் கஷ்டப்படப்போறாய் என்று. கேட்டியா. இப்ப ஏன் என்ர கழுத்தை முறிக்கிறாய்" மனச்சுமை தாங்காமல் குமுறினான் கந்தசாமி.

"பிள்ளையளும் எங்களைப்போல கஷ்டப்படக் கூடாதென்று தானேங்கோ நான் சேர்த்தனான். அவனும் படிக்கக்கூடிய பிள்ளை தானே. ஏன் ஏழையள் நல்ல பள்ளிக்கூடத்திலை படிக்க உரிமை இல்லையே. மற்றது எங்கடை பிள்ளையளுக்கு சப்பாத்து என்ன தேவைக்கு? பாடசாலையின்ரை தரம் சப்பாத்துப் போடுறதிலையே கிடக்கு. ஏதோ தரம்பேணவேணுமாம் என்று எங்கடை உயிரை வாங்கினம்... சரி மேலிடம்தான் சொன்னாலும் ஏழைப்பிள்ளையளுக்குக் கஷ்ரம் என்று சொல்லினமே. அதுவும் இல்லை. தங்களுக்குச் சம்பளம் கிடைச்சால் காணுமெண்டு இருக்கினம். ஏழையளின்ரை கஷ்ரம் இவேக்கு எங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கப் போகுது" குறை சொல்ல வேண்டும் என்பதை விட தன் கஷ்டத்தை எவரும் புரியவில்லையே என்ற மன உளைச் சலைக் கொட்டித் தீர்த்தாள் விக்கி.

"அம்மா. நீ ஏனணை எனக்காக அப்பாவோடை சண்டை பிடிக்கிறாய். எனக்குப் படிப்பும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம். என்னை எங்கையாலும் கராஜ்சிலை சேர்த்து விடு. நான் உழைச்சு உங்களைப் பார்க்கிறன்" வயது வரமுன்னமே பெற்றோரின் வேதனைகளை உணர்ந்து தான் தன் படிப்பைக் காற்றில் பறக்கவிட நினைக்கின்றான் என்பது தாய்க்குத் தெளிவாய்த் தெரிந்தது. பிள்ளையின் புரிந்துணர்வை எண்ணி உள்ளூர மகிழ்ந்தாள்.

'உரிமை கிரிமை என்று கதைக்கிறாய். உன்ர பிள்ளை தரமான படிப்புப் படிக்க வேணுமென்றால் அந்தப் பள்ளிக்கூடம் சொல்லுற ஒழுங்கு முறை களைச் செய்யத்தானே வேணும். அண்டைக்கு ஏன் இவே டொனேசன் வாங்கினம் எண்டனி. இஞ்ச வா. தரமான பள்ளிக்கூட மெண்டால் அவங்களுக்கும் செலவுக்குக் காசு வேணும்தானே. கவுண் மேந்து எல்லாத்துக்கும் காசா கொடுத்துக் கொண்டிருக்கு" அநியாய டெனேசன் வாங்கிறார்கள் என்ற உண்மை கந்தசாமி அறியாதல்லவென் றாலும் நிர்வாகத்தின் நியாயமான தேவைகளை உணராதவருமல்ல.

அலுமினியச் சட்டியிலை வடிச்சு வைச்ச குத்தரிசிக் கஞ்சிக்குள்ளே தேங்காய்ப் பாலைவிட்டு குண்டாளக் கோப்பையிலை ஊற்றிக் கணவனுக்குக் கொடுத்துக் கொண்டே,

"ம்... இவர் பெரிய பரந்த மனம் கொண்ட சீமான். நிர்வாகத்துக்கு வக்காலத்து வேறை. அப்ப ஏழையளுக்குத் தரமான படிப்புக் கிடைக்கக் கூடாது அதுகள் நல்லா வரக்கூடாது எண்டே சொல்லுறியள்?" தன் பக்க நியாயத்தைக் கேட்டாள்.

தன் மனைவியோடு வாதாடி வெல்லேலாது எண்டு கந்தசாமிக்குத் தெரியும். சிறுமியாக இருக்கும்போதே தகப்பன் தங்கராசர் இவளை புறக்டர் என்று செல்லமாக அழைப்பதுண்டு. படிக்கும் வாய்ப்பு அவளுக்கு அளிக்கப் பட்டிருந்தால் நிச்சயம் சிறந்த வழக்கறிஞராக மலர்ந்திருப்பாள். ஏன் கந்தசாமியும் குறைந்த ஆளில்லை. எட்டாம் வகுப்புப் படித்தாலும் பெரிய கணக்குகளுக்கு மனதாலை விடை சொல்லி ஏ. எல். மாணவர் களை வியக்க வைப்பார். யாரும் உதவி செய்திருந்தால் அவரும் ஒரு எக்கவுண்டனாய் வந்திருப்பான். தான் படிக்காட்டிலும் பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டுமென்ற எண்ணம் மட்டும் அவன் மனத்தைவிட்டு விலக மறுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மகன்போன்ற ஏழைப் பிள்ளைகளின் விடிவுக்கு அவளுக்குத் தெரிந்த ஒரே வழி கல்விப் பணிப்பாளரைச் சந்திப்பதென்பதே. கல்வி பணிப்பாளரின் பணியகத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். உள்ளே சென்றபோது கண்களின் பிரகாசத்தில் அவளது அறிவுநிலையையும் அணிந்திருந்த சேலையின் நேர்த்தியில் ஏழையானாலும் சுத்தமானவள் என்பதையும் புரிந்து கொண்டார் கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம். தான் படித்துக்கொண்டிருந்த பைலை மூடித் தன் பின்னாலிருந்த றாக்கையில் வைத்துவிட்டு, "என்னம்மா?" என்று பரிவோடு கேட்டார்.

"ஐயா இது என்ர பிள்ளையின்ரை பிரச்சினை என்றது உண்மையென்றாலும் எனக்குத் தெரிந்த கன ஏழைப்பிள்ளைகளின்ர பிரச்சினை. பாட்டா சிலிப்பர் வாங்கக் காசில்லாமல் திண்டாடுறது களைச் சப்பாத்துப் போட்டுக் கொண்டு வா எண்டால் எங்கை ஐயா போகுங்கள்? அன்றாடம் சாப்பாட்டுக்கே வழியில்லாத குடும்பங்களுக்கு சப்பாத்து வாங்கக் காசு என்றால் நினைச்சுப் பார்க்கலாமே. பணக்காரப் பிள்ளையள் விரும்பினால் போடட்டும். வசதியில்லா தாக்கள் செருப்போ சிலிப்பரோ விரும்பினதைப் போட்டுக்கொண்டு வரலாம்தானே. எல்லாருக்கும் ஒரே யூனிபோம் என்று வந்தது ஏழைப்பிள்ளை யளுக்குத் தாழ்வு மனப்பான்மை வரக்கூடாது என்றுதானே. அப்பிடிக் கவுண்மேந்து நினைச்சு நடக்கச் சில பள்ளிக் கூடங்களிலை தங்கடபாட்டிலை சப்பாத்தைக் கட்டாயப்படுத்தினம். ஐயா நீங்கள் பெரிய மனிசர். நாங்கள் பள்ளிக்கூடம் போய் அறியம். ஏதாவது பிழையாய்ச் சொன்னால் மன்னிச்சுக் கொள்ளுங்கோ."

"இல்லை அம்மா. அப்பிடி நான் குறை நினைக்கமாட்டன். நீங்கள் சொல்லுறது உண்மை தானே அம்மா. யோசிக்காமல் சொல்லுங்கோ" ஏழைகளின் இதய வேதனைகளை அறியும் ஆவலோடு, தொடர்ந்து பேச ஊக்கம் கொடுத்தார் சுந்தர்.

"நல்லாய் படிப்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் கிராமப் பாடசாலைகளிலை இருந்தால் எங்கடை ஏழைப் பிள்ளையள ஏனய்யா நகர்ப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பப்போறம். அங்கை பெரியாக்கள், பணக்காரரற்றை பிள்ளையளுக்காகத் தானே தரமான ஆசிரியர்மார் அங்கை. ஏழையள் தங்கடை பிள்ளையளைப் படிப்பிச்சு நல்லாக்க நினைக்கிறது பிழையே ஐயா. உந்தப் பணக்காரரிட்டை இன்னும் கொஞ்சம் கூட டொனேசன் வாங்கி வறுமைப்பட்ட பிள்ளையளை இலவசமாய்ப் படிப்பிக் கலாம்தானே! வறுமைப்பட்ட மாணவர்களுக் கெண்டு நிதிதிரட்டி ஏதாவது செய்யே லாதோ? அப்பிடிச் செய்தால் எத்தினை பிள்ளையள் படிச்சு நல்லாய் வருங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்துப் பெண்ணின் வாதத்திறமை சுந்தரை வியப்பில் ஆழ்த்தினாலும் அவள் கூறும் உண்மைகளை மறுத்துப்பேசக் களநிலை இடம்கொடுப்பதாயில்லை. சுந்தரலிங்கம் ஒரு வித்தியாசமான மனிதன். கிராமமட்ட மக்களின் கஷ்டங்களை நன்கு அறிந்தவர். ஏழைப் பிள்ளைகளும் படித்து நல்லாய் வரவேணும் என்பதில் அக்கறை கொண்டவர். தன் கோட்டத்தில் ஏழைப்பிள்ளைகளுக்கு வசதி செய்து கொடுக்கும் நோக்கோடு பல தீர்மானங்கள் எடுத்து நடை முறைப்படுத்தியவர். துணிச்சலான ஆள் என்பதால், தான் எடுக்கும் தீர்மானத்தினால் வரக்கூடிய பிரச்சினைகளை மலையே வந்தாலும் தலையே சும என்ற மனப்பாங்கோடு எதிர்கொண்டு செயற்படுபவர்.

புரிந்துணர்வோடு கேட்டுக்கொண்டிருந்த சுந்தர் 'சப்பாத்துப் போடுவது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. அதிபர்கள் கட்டாயப்படுத்தக்கூடாது' என்று தானே கம்பியூட்டரில் 'ரைப்'படித்து செயலாளரிடம் கொடுத்து அன்றே தன் பிரிவிலுள்ள அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பும்படி அறிவுறுத்தல் கொடுத்தார். தரமான ஆசிரியர்களைக் கிராமப்புறப் பாடசாலைக்கு மாற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்... கிராமத்திலிருந்து படித்தும் தமக்கு ஆசிரியர் பதவி கிடைத்ததும் கிராமப் பாடசாலைகளில் படிப்பிப்பது வெட்கம் என்று நினைக்கும் ஆசிரியர்களைக் கையாளவேண்டிய யுக்திகள்... ஏனைய கல்விப் பணிப்பாளர்களை தூண்டும் முறைகள்... கல்வி அமைச்சுக்கு எழுதி அனுப்பவேண்டிய பரிந்துரைகளென... அவரது சிந்தனை பரந்து விரியத் தொடங்கியது.

உரிமைக் குரல்கொடுத்து வெற்றிபெற்ற முக்கிய சமூகமேம்படுத்துநர் போன்ற உணர்வு பொங்க மலர்ந்த முகத்தோடு வெளியேறினாள் விக்கி.

**இதழ் - 16 தை - 2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்பைக் கட்டு...!

## இ.இராஜேஸ்கண்ணன்

ஜீவநதி
சிறுகதைகள்
18

"பீகிண்டிக் கந்தவனத்தான் எதைச் செய்தாலும் வலு கலாதியாகத்தான் செய்வான். இளவு அறிவித்தல் நோட்டீசிலை இருந்து சுடலையிலை பிணம் எரிக்கிறது வரைக்கும் ஒரு வேலைக்கார பொடியனுக்கு ஆர் தான் உப்பிடிச் செய்வினம். ஒரு பெத்தபிள்ளைக்குச் செய்யிற மாதிரியெல்லே செய்தவன். ஆள் கஞ்சனெண்டாலும் செத்தவீட்டை ஒரு கலியாணவீடு மாதிரியெல்லே நடத்திப் போட்டிருக்கிறான்."

"என்ன பேய்க்கதை கதைக்கிறாய் அவனெட்டை ஏதோ கைநீட்டி வாங்கின மாதிரி ஈப்பிணிக்கு விளம்பரம் போட்டுக் கதைக்கிறாய். அவன் செத்த வீட்டை கலியாணவீடு மாதிரி நடத்தினது தனக்கு விளம்பரம் போடுறதுக்கெல்லோ. இளவு அறிவித்தல் பாத்தனியே?... செத்தவன்ரை படத்துக்கு கீழை 'முன்னாள் கம்பளை பிரபல வர்த்தகரும் கொண்டலடி ஞான வைரவர் கோயில் முகாமையாளருமான கந்தவனம் ஜே.பியின் வியாபாரப் பணியாளர் சிவராமன்'... எண்டுதானே கொட்டை எழுத்தில போட்டிருக்கிறான். உதென்னத்துக்கு?... பின்னை கேக்கிறன்."

"நீ என்ன விசர்க்கதை கதைக்கிறாய் அவன்ரை பெருமையைத் தேடித்தானே சனங்கள் வந்ததுகள் சும்மா "சிவராமன்" எண்டு செத்தவன்ரை பேரைப் போட்டால் ஒரு காகமும் வந்திராது. 'கம்பளை யான்ரை' வீட்டிலை செத்தவீடு எண்டு சனம் வந்ததோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாட்டில் வேலைக்காரப் பொடியனுக்காக சனம் வந்ததோ? சொல்லு பாப்பம்?"...

"உவன், பீகிண்டி பெரிய முதலாளியா இருந்தால் என்ன? 'மனேச்சரா' இருந்தால் என்ன? சனம் வந்தது, பாவம் அந்த ராமுவுக்காகத்தான். உன்ரை விளம்பரத்தை விட்டிட்டு மனச்சாட்சிப்படி சொல்லு அந்தப் பொடியன் வேலைக்காரப் பொடியன் எண்டிட்டு நீ செத்தவீட்டுக்கு வராமல் வீட்டிலை கிடந்திருப்பியோ?... அவன் ஆக்க ளோடை பழகிறவிதம். எங்கடை பொடிபெட்டையளோடை நடந்து கொள்ளுற விதம் எங்கடை நெருக்கமான சொந்தக்காரன் செத்த மாதிரியெல்லே கவலையாக் கிடக்கு."

"அதெண்டால் உண்மைதான் பொடியனெட்டை ஒரு வேலை யெண்டு உதவியா ஏதாவது கேட்டால் போதும் தலையாலை நடந்தெண் டாலும் செய்து முடிப்பான். சொன்னால் நம்பமாட்டாய் என்ரை மனுசி யோடை மாமி மாமி எண்டு கூப்பிட்டு நல்லமாதிரிப் பழகுவான். அவனைக் கொண்டு எப்பவாதல் இருந்திட்டு விறகு கொத்திக்கிறது, அரிசி இடிப்பிக் கிறது. எண்டு செய்விச்சுப் போட்டு ஏதாலும் காசுகீசை குடுத்தாலும் வாங்கமாட்டான். 'மாமா ஐயாவின்ரை சினேகிதம் நான் மாமான்ரை மாமியெட்டை காசு வாங்குவனோ?' எண்டுதான் உடனே கேட்பான்"

"அப்ப 'ராமுப் பொடியனை' சுரண்டின ஆக்களிலை நீயும் ஒருத்தன் எண்டு சொல்லன் நீ கந்தவனத்தான்ரை கூட்டாளிதானே உனக்கும் அவன்ரை குணம் தொத்தியிருக்குந்தானே"

"டேய்... விசரா... என்ன கதை கதைக்கிறாய். நான் என்ன சுரண்டினனான். இந்த ஊரிலை நூத்துக்கு தொண்ணூறு பேரும் ராமுவைக் கொண்டுதான் எடுபிடி வேலை செய்விச்சது உனக்குத் தெரியாதே. அவன் கந்தன்ரை வீட்டுக்கு மட்டுமில்லை உவடமெல்லாம் வீடுகளிலை மாடு மாதிரி வேலை செய்து கொண்டுதான் திரிஞ்சவன். கந்தவனத்தான் கூட அதை ஒரு நாளும் தடுக்கிறதில்லை. அது அவன்ரை பரம்பரைக்குணம். 'யாவாரி வளவார்' எண்டால் சும்மா ஆக்களே? அவங்கடை வீட்டு வேலைக்காரரை ஊருக்கே வேலைக்காரர் எண்டுதான் வைச்சிருந்தவங்கள், அதாலைதான் இண்டுவரைக்கும் ஊரிலை அந்தக் குடும்பத்துக்கு தனிமரியாதை."

"எனக்கெனி இறுள் வந்துதேயெண்டால் வேறை மாதிரித்தான் உன்னோடை கதைக்கவேண்டி வரும் என்ன யாவாரி வளவாற்ரை பெருமை பாடுறாய். எங்களுக்குத் தெரியாத பெருமையே. உன்ரை தோழன் கந்தவனத் தான்ரை பேரோடை ஒட்டிக் கொண்டிருக்கிற 'பீகிண்டி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரெண்டு தெரியாதே உனக்கு. கையிலை கொண்டுபோன ஒறுவாக்குத்திக்காசு வழியிலை கிடந்த நாயின்ரை மலத்திலை விழுந்து புதைஞ்சு போக, அதை தடியாலை கிண்டி எடுத்த மயில்வாகனத்தாரின்ரை பிள்ளைதான் உன்ரை தோழன். அப்பிடிச் சேர்த்த சொத்துத்தான் மலைநாட்டுப் பொடியளை வேலைக்காரராக் கொண்டு வந்து அதிகாரம் செலுத்த வைச்சுது தெரியாதே எங்களுக்கு?... பாவம்... அந்தப் பொடியளுக்கு உடுப்புத்துணியைக் கூட சரியா எடுத்துக் குடுக்கிறதில்லை. தேயிலைத் தோட்டத்திலையும், சிங்களவற்றை வீடுகளிலையும் வேலை செய்யிற அதுகளின்ரை தாய்தேப்பன் வயிறு கழுவுறதுக்கு ஏதாவது கிடைச்சால் போதுமெண்டு இங்கை உங்களோடை அனுப்ப, நீங்கள் முதலாளிக் குணத்தை காட்டுறியள். உன்ரை தோழன் அந்தப் பாவியின்ரை செத்தவீட்டிலை தன்ரை பேரை பொறிக்கிறான்"...

"அவன்ரை பேரைப் பொறிக்காமல் பின்னை உன்ரை பேரையே பொறிக் கிறது?..."

"அப்பிடியெண்டால் துணிஞ்சு தன்ரை பேரை தலைப்பேராப் போட்டு விளம்பரப்படுத்தியிருக்கலாந்தானே? ஏன் செய்யேல்லை?... பெரியமனிசன்?"...

"........................"

"செத்தவீட்டிலை வந்த யாராவது கண்ணீர் விடாமல் போனது கண்டனியோ?... பாசம் என்றது பழகிற விதத்தாலை மற்றவனுக்காக கண்ணீர் விட வைக்கும். அதுவும் பரம்பரையாலை ஒரே ரத்த உருத்தாலை எண்டால்?... மனிசன் மற்றவனுக்காக ஒரு சொட்டு கண்ணீர் விடுறதிலை என்னடா கௌரவம் வேண்டிக் கிடக்கு?... நீ முதலாளி தான், பெரிய மனிசன் தான். எண்டாலும் உன்ரை ரத்த மொண்டு சாகேக்கை ஒரு சொட்டு கண்ணீர்?...

"நீ என்னத்தைச் சொல்லுறாய்?"...

"உண்மையைச் சொல்லுறன். உனக்குத் தெரிஞ்சும் தெரியாத மாதிரி இருக்கிறாய். அவன்ரை சினேகிதத்துக்காக. எனக்கென்ன?... நான் ஏன் மறைக்க வேணும்?... சிவராமு கந்தவனத்தானுக்கு கம்பளையில் பொம்பிளை ஒண்டுக்கு பிறந்தவன் தானே. அந்தநேரம் இவர் கடையிலை வேலைக்கு வைச்சிருந்த ஒரு கிழவன்ரை மகள்தானே அவள். ராமு சில நேரம் கதைக்கேக்கை தாயின்ரை பேரை 'மல்லிகா' எண்டு சொல்லியிருக்கிறான். கிழவன் செத்துப்போனாப் பிறகு அவள் இவற்றை கடையிலையே வேலை செய்ய துவங்கி, பிறகு அது தொடர்பாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுக்குத்தான் ராமு பிறந்தவனாம். அவள் பாம்பு கடிச்சு சாகேக்கை பொடியனுக்கு எட்டு வயசாச்சாம். தொடர்ந்து அவனை கடையிலை வைச்சிருந்து வேலைவாங்கி பிறகு இங்கை வீட்டுக்கு வேலைக்காரனைக் கொண்டு வருமாப்போலை கொண்டுவந்து சேர்த்திட்டானாம். கந்தவனத்தான்ரை பெண்டிலுக்கும் கொஞ்சம் விசயம் தெரியுமாம். மனிசி ஒரு மாதிரி சமாளிச்சுப் போட்டுதாம்"

"இந்தக் கதை எப்படி வெளியிலை வந்தது?..."

"ஒவ்வொருதருக்கும் ஒரு வரலாறு இருக்குந் தானே. மற்றவை அதை கதைப்பினம் தானே. இப்ப ராமுவுக்கு முப்பத்திரண்டு வயசாச்சு. அவனை ஒரு பேய்ப் பொடியன் மாதிரி வளத்துப் போட்டினம். கந்தவனத் தான்ரை மனிசியை நோகாமல் நொடியாமல் அவன் தானாம் பாக்கிறவன். வெளிநாட்டுக்கு கலியாணம் முடிச்சு அனுப்பினாப் பிறகு கிட்டடியிலைதான் அவை திரும்பி வந்தாப்போலை பிரச்சினை வெளிச்சிருக்கு. கந்தன்ரை மனுசி ராமுவுக்கு அவனின்ரை பேரில 'யாவரியார் வளவு' பின்துண்டுக் காணியை எழுதி உறுதி முடிச்சிருக்கிறாள். ராமுவுக்கு காணி எழுதினதுக்கு காரணம் கேட்டு பெட்டையள் சன்னதமாட, கந்தனும் மனுசியும் மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் அவதிப்பட்ட நேரத்திலை பெட்டையளின்ரை பிரியமாரிலை ஒருதன் வெளிலை போடா நாயே எண்டு அடிச்சுக் கலைக்கத்தானாம் பின் வளவு 'தீராந்திக் கொட்டிலுக்கை' தூக்கிக்கிடந்த மருந்தை எடுத்து குடிச்சுப் போட்டு கிடந்தவன் செத்துப்போனானாம்!... உண்மையைச் சொல்லு உனக்குத் தெரியாதே இவ்வளவும்?"....

"நீ சொல்லுறது உண்மைதான்..... பாவமடா கந்தன், தன்ரை குடும்ப கௌரவத்துக்காக...."

"இப்ப இவ்வளவும் வெளிச்சிட்டுது தானே?... கண்ணீர் விட்டு அழவேண்டியதுதானே?... பிற கென்னத்துக்கு நடிக்கிறியள்? தனக்கு பின்னாலை கௌரவ பட்டம் போடுறார் அவர். பாவம் அந்தப்பிள்ளை முன்னாலை 'இனிஷல்' இல்லாமல் போகுது... என்ன தான் ஒழிச்சு மறைச்சாலும் 'யாவாரியார் வளவு'க் காணி உறுதியிலை ராமுவின்ரை பேரும் இனிஷலோடைதான் இருக்கு. சும்மா சப்பைக்கட்டு கட்டாதையுங்கோடா!"...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பும் வெள்ளையும்

## கெகிறாவ சஹானா

ஜீவநதி
சிறுகதைகள்
19

மெல்லிய இளமாலைப் பொழுதின் தென்றல் கழுத்தோரமாக கிச்சிகிச்சு மூட்டிற்று. வாடிக் கையாளர்கள் வரும் நேரம். எல்லாவற்றிற்கும் மேலாக சந்தடியின்றி அந்த பொலிஸ்காரன் வரும் நேரமும் கூட. சாரதா மெல்ல எழுந்து கொண்டாள். கையில் வைத்திருந்த சிறிய கையகலக் கண்ணாடியில் முகத்தை மீண்டும் ஒரு தரம் பார்த்துக் கொள்கிறாள். அந்த கண்ணாடியே நிரம்பி வழிவது போன்று தெரிந்த வட்ட, சிவந்த முகத்தில் செவேரென்ற குங்குமப் பொட்டு பிரகாசமாக ஒளிவீசிற்று. கண்ணாடியை சற்றே வளைக்க, காதோரங்களில் சுருளாக விழுந்திருந்த கேசம் அழகு காட்டிற்று.

அவள் எத்தனை தடவையாக இந்த கண்ணாடியைப் பார்த்துக் கொள்கிறாள் என்று தெரியாது. எத்தனையோ தடவை கள்! அவளைப் பொறுத்தவரை அவளது பொழுது போக்கே இது தான். தனது அன்றாட வேலைகளை முடித்துக் கொண்டு விட்டால், வீட்டின் முன்புற ஹோலில் முன் வாசல் கதவோரமாக வந்து அமர்ந்து விடுவாள். பின்னர் என்ன, கண்ணாடி அவள் கையில் 'சீஸோ' விளையாடும்.

சாரதா இந்த ஊரில் பிரபலமான ஒரு சாராய வியாபாரி. இந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்த இவளது அம்மா பலே குடிகாரி. குடிக்கச்செல்லும் போது சாரதாவையும் எப்போதும் தன்னோடு இட்டுச் செல்வதுண்டு. நாளடைவில் சாராய சமாசாரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துப்படியாகி விட, சாரதா பிரபல "கசிப்பு" வியாபாரியாக மாறி விட்டாள். எனினும் அவள் ஒரு போதும் சாராயக் கிளாஸொன்றை உதட்டருகே கொண்டு சென்றது கூட இல்லை. ஆனால் அவளைப் பார்ப்பவர்கள் மதர்ப்பான அந்த தேகக் கட்டின் பின்னால் ஒளிந்திருக்கும் அழகின் ரகசியம் அவள் குடிக்கின்ற சாராயமோ என்று ஐயுறுவார்கள். அந்தளவுக்கு செக்கச்சிவந்து ஜெக ஜோதியாக அவளது முகமும், உடம்பும் சுடர்விடும்.

அவளது தொழில் முதலிய யாவற்றையும் தெரிந்து கொண்டே வேலுச்சாமி அவளைக் கரம் பிடித்தான். அவளைத்திருத்தி நல்ல குடும்பப் பெண்ணாக ஆக்கிவிடலாம் என்ற நப்பாசையின் காரணத்தாலோ என்னவோஇ துணிந்து, நல்ல குடும்பத் தைச் சேர்ந்த அவன் பெற்றோரை எதிர்த்து வந்து அவளை மணம் முடித்துக் கொண்டான். ஆனால் ஐந்து வருடங்கள் முயன்றும் அவனால் எதுவும் முடியாது போயிற்று. திருமணத்தையடுத்து ஒரு வருட த்துக்குள் பிறந்த ஆண்குழந்தை கூஷகுப்பைகூஷ. அது தான் அவனது செல்வமகனின் பெயர். அவனுக்கு இப்போது பத்து வயது நெருங்குகிறது. ஆண்டவன் தந்த அருளால் தான் தாம் எதிர்பாராத விதமாக ஒரு ஆண் மகன் தலைச்சனாக கிடைத்தது என்றுஇ மனங்கொள்ளாத பூரிப் பில் லயித்திருந்த சாரதா– வேலுச் சாமி தம்பதிகள்இ பிறர் கண்ணூறு செய்யாதிருக்கும் பொருட்டு அவனுக்கு அந்தப் பெயரை சூட்டி மகிழ்ந்தனர். இப்போதெல்லாம் வேலுச்சாமி அவளுடன் இல்லை. அவளது பிடிவாத குணம் காரணமாக மனம் விட்டுப்போய் நான்கு வருஷங்களுக்கு முன்பு குப்பையின் ஆறாவது வயதில் தனது குடும்பத்தை விட்டே பிரிந்து சென்று எங்கோ தொலைதூரம் போய் விட்டான்.

அவள் ஒரு துணிந்த கட்டை, வாழ்க்கையில் எதற்குமே அஞ்சியது இல்லை. சாராயம் விற்பவளாயினும்கூட அவள் இன்று வரை அந்த சமாசாரங்கள் உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கெல்லாம் போனதில்லை. அதற்கெல்லாம் உதவிக்கு ஏகப்பட்ட ஆட்கள் தயாராக இருந்தார்கள். சாராயத்தை மலிவு விலையில் காய்ச்சுவதற்கு ஒருவன், அதைக் கொண்டு வந்து தருவதற்கு ஒருவன் தற்செயலாக அவள் பிடிபட்டுவிட்டால் தானே அந்த குற்றத்திற்கு பொறுப்புதாரி எனக்கூறி வலிந்து சென்று பொலிஸில் தண்டனையை அனுபவித்து விட்டு வந்து பிறகு அவளிடம் வந்து கூலி பெற்றுக்கொள்ள ஒருவன் என, ஏக தடபுடலாக சாரதா வாழ்ந்து வந்தாள்.

ஒரு தடவை எதிர்பாராத விதமாக பொலிஸ் திக்விஜயம் செய்தபோது சாரதா வீட்டில் இருக்கக்கண்டு அவளையும், சாராய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டியையும் ஏற்றிக் கொண்டு போய்விட்டார்கள். அப்போது விளக் கமறியலில் இருந்த காலத்தில் அவளுக்கு அறிமுகமாகியவனே அந்த பொலிஸ்காரன். நாளா வட்டத்தில் அவன் அவளது வாடிக்கையாளனாக மாறிவிட்டான்.

சாரதாவின் தாய் வள்ளியம்மா சில வருடங்களுக்கு முன்னர் இறந்து போனாள். சாரதா ஒரு கேவலமான சாராய வியாபாரியாக மாறிவிட்டது குறித்து அவளுக்கு ஏகப்பட்ட மனவருத்தம். அடிக்கடி சண்டை பிடிப்பாள். முற்றத்து மணலை வாரிவீசி, திட்டிக்கொட்டு வாள். அப்படித்தான் ஒருநாள் போனவள் குடிபோதையில் கீழே விழுந்து, தலை அருகில் இருந்த பெரிய கல்லில் மடேரென்று மோதி அடிபட, பொட்டென்று போய்விட்டாள்.

சாரதாவுக்கு உள்ள வருத்தமெல்லாம் ஒன்றே. அவள் அருமை பெருமையாகப் பெற்ற ஒரே மகன் குப்பை, மூளை வளர்ச்சியற்ற பையனாக இருந்தான். சட்டென்று பார்த்தால் தோற்றத்தில் எதுவும் தெரியாது. சிறிது நுணுகிப் பார்த்தால் அவன் தன்னையொத்த ஏனைய சிறுவர்களை விடவும் வித்தியாசமாக இருப்பது தெரியும். பன்னிப் பன்னிப் பேசுவான். செயல்களில் பத்து வயதுப்பையனின் முதிர்ச்சி இல்லை. நாலு வயதுக் குழந்தையின் சமர்த்துக்கூட இருக்காது. கைகால்கள், கண்பார்வை, மூளை என்பவற்றிலும் சரியாக இயங்கும் திறன் இல்லை. வெள்ளை வெளேரென்று மெலிந்த அழகிய சிறுவன் அவன்.

சிவனேயென்று போட்டதைத் தின்றுவிட்டு தன்பாட்டுக்கு கிடப்ப வனாக அவன் இருந்திருந்தால் அவள் இவ்வளவு வருத்தமாக இருந்திருக்கமாட்டாள். கெக்கிறாவ பிரதான வீதியின் அசுரப்போக்கு வரத்தில் இருந்து நாளும் அவனைக் காப்பதே பெரும் பாடாக இருந்தது. பக்கத்து வீடுகளுக்குப்போய் ஏதாவது தொல்லை கொடுப்பான். அவர்கள் ஒரு நடை நடந்து வந்து முறைப்பட்டுவிட்டுப் போவார்கள். சாரதா சமாளித்து அனுப்புவாள். பக்கத்து வீட்டுக்கூனிக் கிழவி குனிந்து கூட்டுவதற்கென்று செய்து வைத்திருந்த கூட்டுமாறைத்தூக்கி மதிலுக்கு அப்பால் எறிவான். முன்வீட்டுச்சிறுமி கண்ணே பொன்னே என்று வைத்திருக்கும் விளையாட்டுச் சாமான்களை தூக்கியெறிவான்.

பின்வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் வாகனங்களைக் கண்டால் அவனுக்கு ஒரு நரம்புத் துடிப்பு கூடிவிடும். ஏறி உட்கார்ந்து ரிப்பேர் பார்ப்பான். யாருக்கும் தெரியாமல் மெல்லக் கதவை இழுத்து மூடித்திறந்து கையில் பலத்த அடியுடன் வந்து அதை மெதுவாகக் காட்டி எரிச்சல் மூட்டுவான். நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமு மாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தக்காயங்களோடு வரும் அவனுக்கு அவள் ஏசி மருந்து போட்டு விடுவாள். மருந்தும் மாயமும் பண்ணிப்பண்ணி சமயங்களில் தண்டனை அனுபவிப்பது போல் இருக்கும் அவளுக்கு

இதையெல்லாம் விட பெரிய வேதனை பொலிஸ்காரனின் உருவத்தில் வந்தது. தொழில் முறையில் மிகவும் வேண்டப்பட்ட வனல்லவா அவன்? கள்ளச்சாராயம் குடிப்பவர்களை விட விற்பவர்கள் ஏறத்தாழ நூறு என்று விகிதம் காணப்பட்ட அவ்வூரில், சாரதா தவறியும் பொலிஸ் நிலையத்திற்கு போக நேராதபடி அவன் பார்த்துக் கொண்டான். மாதாந்தம் ஐம்பதாயிரம் ரூபா வரை வருமானம் தருகின்ற கள்ளச்சாராய கேஸ்களை வெகு உற்சாகமாக கையாளுகின்ற தனது சகாக்களை ஒரே கண் ஜாடையில் சாரதாவின் வாசலுக்கு போகாமல் தடுத்து விட அவனால் முடியும். ஈஸ்டையும், பேரீச்சம்பழத் தையும், சீனியையும் எவ்வெவ் விகிதங்களில் கலந்தால் என்ன சுவை கிடைக்கும் என்று கூறுமள விற்கு அவன் அவ்விடயத்தில் கைதேர்ந்தவனாக இருந்தான். சமயங்களில் இரண்டு கிளாஸ் கசிப்போடு அவனது தேவைகள் முடிந்து போகும். சிலவேளைகளில், அதற்கும் மேல் சிறிது மேலே...

அப்போதெல்லாம் சாரதா விற்கு பெரிய பிரச்சினையாக இரு க்கும். எல்லாவற்றுக்கும் குப்பை குறுக்கே நின்றான். அவனை சமாளி த்து தூங்க வைப்பதற்குள் போது மென்றாகிவிடும் அவளுக்கு.

இவனை எங்காவது தொலைத்துக் கட்ட முடியுமானால் எவ்வளவு நிம்மதி? யோசித்துக் கொண்டிருந்தவளின் கவலையை ஒருநாள் அந்த பொலிஸ்காரனே தீர்த்து வைத்தான்.

"மாத்தளையில் ஒருஸ்கூல் இருக்காம் அங்க போய் தள்ளிடலாம்...."

மூளை வளர்ச்சி குறைந்த மாணவர்களுக்காக புதிதாகக் கட்டப்பட்டிருந்த அந்தப்பாடசாலை பெரிய ஆரவாரங்கள் எவையுமின்றி இரண்டு கட்டடங்களுடன் இருந்தது. அவர்களது பிரயோக அறிவுத் திறன்களுக்காக பொருட்கள் நிறைந்திருந்த ஒரு மண்டபமும் தவிர, பிள்ளைகள் விளையாடு வதற்கான பூங்கா ஒன்றும் வெளியே காணப்பட்டது. தோட்டத்தின் மேல் மூலையில் ஒரு சிறிய குவாட்டஸ் இருந்தது.

சாரதா குப்பையை அழைத்துக்கொண்டு சென்றது ஒருமாலை நேரம் ஆதலால், இரு மண்டபங்களும் மூடப்பட்டு பூட்டுக்கள் தொங்கிக் கொண்டிருந்தன. விளையாட்டுப் பூங்காவை கண்டதுமே உற்சாகம் மேலிட்டதால் அங்கு மிங்கும் ஓடினான், அதிலும் இதிலும் தொங்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்து குப்பை விளையாடத் தொடங்கிவிட்டான். அவனை அப்படியே விட்டு விட்டு, குவாட்டஸின் திறந்திருந்த வாசல் கதவுகளின் முன்னே தயங்கி நின்றாள் சாரதா.

உள்ளேயிருந்து மெல்லிய டீவியின் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ஆள் அரவமில்லை. இரண்டுமுறை கதவில் தட்டினாள்.

உள்ளேயிருந்து ஒரு பெண் வந்தாள். அந்த அம்மணியின் கையில் ஒரு பத்திரிகை இருந்தது. மூக்குக்கண்ணாடியை சரி செய்த படியே புருவங்களை நெரித்தபடி வாசலில் வந்து நின்று, மிக நேர்த்தி யாக உடையணிந்து கௌரவமான தோற்றத்துடன் வெளியே காத்து நிற்கின்ற சாரதாவைப் பார்த்தாள்.

சாரதா எப்போதுமே இப்படித்தான். வெளியே புறப்பட்டாளானால் அவளது இனம், குலம், தொழில் பற்றிய சந்தேகங்கள் யாருக்கும் எழவே எழாது. அந்த ளவுக்கு படித்த நாகரிகமான ஒரு தொழில் செய்கின்ற பெண்ணைப் போன்று கனகச்சிதமாக காட்சி யளிப்பாள். சற்று உருண்டு திரண்ட உருவம் ஆயினும் போதுமான உயரம் இருந்ததால் அவளது தோற்றம் யாரையும் பிரீதி கொள்ள வைக்கும். ஜொலிக்கும் குங்குமப் பொட்டு எப்போதும் நெற்றியில் பெரிதாக துலங்க, தலையில் மலர்ச் சரம் இல்லாவிட்டாலும் ஒரேயொரு ஒற்றைப் பூவாவது பின்னால் உச்சி யில் கொழுவியிருக்க, பளீரென ரோஜா நிறத்தில் ஒளிர்கின்ற முகத்தில் செவ்விரத்தம் கோலம் காட்ட ... அவள் அனேகமாக ஒரு தேவதை போன்று தான் இருப்பாள்.

"என்ட, எத்துலட்ட என்ட" என்று அவளை வரவேற்றாள் அம்மணி. யாரோ வேலை தேடி வந்திருக்கக்கூடும் என்ற எண்ணத்தில், நெடிய, மெல்லிய அவளது தேகத்தையும், முகத்தின் மீது தொங்குகின்ற சுருள் முடிகளையும், தூய வெள்ளை நிறத்தில் பளீரென்று கட்டியிருக்கும் வெள்ளைச் சேலையையும் கண்களால் அளந்து, மனதால் எடைபோட்ட படியே உள்ளே வந்தமர்ந்தாள் சாரதா. அதுவரை விளையாடிக் கொண்டிருந்த குப்பை ஓடிவந்து, ஏக உரிமையுடன் அவளது மடியில் உட்கார்ந்து கொண்டான்.

அவனைப் பார்த்ததும் அம்மணிக்கு எல்லாம் புரிந்தது. இருவருக்குமிடையில் மொழி ஒரு பிரச்சினையாக இல்லை. சாரதாவுக்கு சிங்களம் நன்கு தெரியும். அம்மணியும் கொஞ்சம் தமிழ் புதிதாகக் கற்றிருந்தாள்.

சாரதா குப்பையின் பிரச்சினையை எடுத்துக் கூறினாள். தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் என்ன என்பதை மட்டும் மறைத்து விட்டு. அவனை ஏற்க சம்மதித்த அம்மணி, தினமும் காலையில் அவனை கொண்டு வந்து விட்டு பின்னேரம் கூட்டிச்செல்ல வரவேண்டுமென்று கண்டிப்பாகக் கூறினாள்.

இந்த இடத்தில் தான் உதைத்தது. ஏறத்தாழ ஐம்பது அறுபது கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் கெக்கிறாவையில் இருந்து தினமும் அவனைக்கூட்டி வந்து, கூட்டிச்செல்வதென்றால் வேறு வேலை இல்லையா சாரதாவுக்கு?

கெஞ்சிக் கூத்தாடி அவனை அங்கேயே விட்டுச்செல்ல அனுமதிக் குமாறு வேண்டினாள். அவள் ஏற்கனவே அவனுக்குத் தேவையான உடைகளையும், பொருட்களையும் ஒரு ட்ரவலிங் பேக்கில் எடுத்து வந்திருந்தாள். தான் தினமும் போக்குவரத்திற்கு செலவளிக்க முடியாதளவிற்கு ஏழை என்று பேசி அந்தப் பெண் அதிபரை நம்ப வைத்துவிட்டாள்.

மிஸ் குருகுசூரிய... அவளுக்கு இந்த பொறுப்பு மிக்க அதிபர் பதவிதான் புதியதே தவிர, அல்லும் பகலும் மனவளர்ச்சியற்ற சின்னக் குழந்தைகளுடன் பழகி, அவர்களது நாடித்துடிப்பை அறிந்து செயல்படுவதில் நல்ல அனுபவம் பெற்றிருந்தாள். ஏற்கனவே பல சமூகசேவை நிறுவனங்களில் கடமையாற்றியிருந்தாள். அரசாங்கம் தற்போது இந்தப் பள்ளியின் நிருவாகியாக அவளை நியமித்த போது மனப்பூர்வமாக அதை ஏற்றுக் கொண்டு, இனி தனது வாழ்நாளை இத்துறையிலே அர்ப்பணித்துவிட வேண்டும் என்ற சங்கற்பமும் கொண்டிருந்தாள்.

ஏறத்தாழ வயது ஐம்பதை நெருங்கிக் கொண்டிருந்தாலும் திருமணம் செய்து கொள்ளாமல் சமூகப்பணி செய்து வாழ்ந்து, ஊருக்கும் உலகுக்கும் பல சேவைகள் செய்து இப்படியே காலங்கழித்து விட வேண்டும் என்று அவள் தீர்மானித்திருந்தாள். இன்று நேற்றல்ல பல வருடங்களாகவே தன்னுள் சுடர்விடும் இக்கனவை அதன் ஜோதியை இன்றுவரை யாரும் அறிந்துவிடாதபடி மிகக் கவனமாகவே தனது வாழ்க்கையில் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்தவள் ... வைப்பவள் அவள்.

இந்தப்பாடசாலையை நடத்தி வருகின்ற இந்த ஒருவருட காலத்தில் இத்தகைய மாணவர்களைப் பயிற்றிப் பல கலைகளையும் கற்பிப்பதற்கு ஏற்றபடி ஒரு விடுதியையும் தானே நடத்தி வர வேண்டும் என்ற எண்ணம் அவளிடம் இருந்தது. ஏற்கனவே ஓரிரண்டு மாணவர்கள் அவளுடன் வந்து தங்கி நிற்பதற்கு விருப்பம் தெரிவித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது குப்பையும் சேர்ந்துகொள்ளவே, பரீட்சார்த்தமாக விடுதியைத்தொடங்கி விடலாம் என்ற எண்ணத்தில், அவனைப்பொறுப் பேற்றுக்கொண்டாள் அவள்.

குப்பையைத் தள்ளிவிட்டு வெற்றிக்களிப்புடன் திரும்பி பஸ் பிடித்து வீடுபோய்ச்சேர இரவு எட்டு மணியாகியிருந்தது. சமையல்கட்டில் இருந்த பிஸ்கட்டை உண்டு விட்டு, சூடாக டீ தயாரித்து குடித்து விட்டு படுத்துக் கொண்டாள் சாரதா. மனது ஏனோ வெறுமையாக இருந்தது.

காலையில் நேரங்கழித்தே எழுந்தாள். எழுந்ததும் வழக்கமாக "அம்மா" என்று குரலெடுத்து அழைத்து எழுப்பிவிடுகின்ற குப்பை யின் குரல் கேளாதது சந்தோஷமாகவே இருந்தது. கூடவே ஒருவித வெறுமைசூழ் அமைதியாகவும் இருந்தது.

வீட்டுவேலைகளை நிதானமாக செய்து முடித்தாள். வீட்டைக் கூட்டிப் பெருக்கும் போதும், தட்டித் துப்புரவு செய்யும் போதும் ஆங் காங்கே சிதறிக்கிடந்த குப்பையின் பொருட்களையும், விளையாட்டுச் சாமான்களையும் காணுந் தோறும் மனதைப் பிசைந்தது. பாத்ரூம் கதவோரத்தில் பின்புறம் ஒளித்து வைத்திருந்த சாராயக்குடம் காலி யாகி இருப்பதைக் கண்ட அவள் ராமலிங்கத்திடம் ஒரு கேன் எடுத்து வரச் சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

மாலை வந்தது. அவள் சொல்லியனுப்பியது போல ராமா ஒரு பிளாஸ்டிக் கேனில் சரக்கு எடுத்து வந்திருந்தான். பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு மாலை கறுக்கும் போது வரும் வாடிக்கை யாளர்களை கவனிப்பதில் மும்முரமானாள் அவள்.

இரவு முற்றிப்பழுத்து, மின்விளக்குகளின் பளீர் ஒளியால் கனிந்து கொண்டிருந்தபோது பொலிஸ்காரன் வந்து சேர்ந்தான். அவன் வருகின்ற நாள்தான். அவனது வரவை அவளும் எதிர்பார்த் திருந்தாள். இடையிடையே பல்வேறு சிந்தனைகள் மனதில் சூழ மனதுக் குள் குழப்பமாகவே இருந்தது. அவளுக்கு குப்பையின் நினைவும் மேலோங்கி நின்றது.

தனக்குக் கள்ளச் சாராயத்தை கொண்டு தந்துவிட்டு போகும் ராமலிங்கத்திற்கும் தன்னிடம் கிளாஸ் கணக்கில் குடித்து விட்டு பணம் தந்து செல்கின்ற வாடிக்கையாளர்களுக்கும் தனக்கும் என்ன உறவோ அவ்வளவே தனக்கும் இந்த பொலிஸ்காரனுக்குமான உறவு என்னுமாப் போல் ஒரு நிரந்தரமற்ற தன்மை தன்னை சூழ்ந்து கொண்டிருப்பதை அவளால் இப்போது உணர முடிந்தது. ஒரு கிளாஸை மேலதிகமாக குடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு "நாளை பணம் தருகிறேன்" என்று அவளை யாருமே ஏமாற்றிவிட முடியாது. பணம், கடன் போன்ற விஷயங்களில் பேய் அவள். வந்தவனிடம் கண்டிப்பாகப் பேசி, கறாராக பணத்தை வாங்கிய பின்பே திரவம் கையில் கொடுக்கப்படும். அப்படி கொடுக்கும்போது எக்குத்தப்பாக சில்மிஷம் எதும் வந்தவன் செய்துவிட்டால் போதும் தொலைத்து விடுவாள். அவளது வலிய தடக்கைகள் எப்போதும் சுறுசுறுப்பாகச் சுழலும். ஓட ஓட விரட்டுவாள். எனவே அந்த ஊரிலேயே "ராங்கிக்காரி" என பேரெடுத்திருந்தாள்.

இந்த பொலிஸ்காரனோ பொலிஸ் விவகாரங்களில் மட்டுமின்றி தனது சுதந்திரத்திலும் தலையிடுவது அவளுக்கு நீண்ட காலமாகவே பிடிக்கவில்லை. அவளது கொள்கைகளில் கூட அவன் அதிகம் தலையிட்டான். எப்போதும் கடன் வைத்துக்கொண்டுதான் குடிப்பான். பொலிஸ் உருட்டல் மிரட்டல்களுக்கென்று அவள் அவ்வப்போது கணக்குத்தீர்த்துப் பணத்தைக் கொடுத்து விடுவாள். அல்லது, போனால் போகிறதென்று ஒருநாள் பிடிபட்டாலும் தண்டப்பணம் கட்டி வெளியே வந்து ஒரு குப்புசாமியையோ மாடசாமியையோ அனுப்பி பிடிபட்ட சாராய குடத்திற்கு பொறுப்பேற்க வைத்துவிடுவாள். வீடுவாசலின்றி கட்டாக்காலியாகச் சுற்றிக்கொண்டிருக்கும் அவர்கள் மாதக்கணக்கில் மாமியார் வீட்டில் இருந்து ஹாய்யாக சாப்பிட்டுவிட்டு, முடிந்தால் பொலிஸ்காரர்கள் முதல் வக்கீல்கள் வரையில் கூட்டாளிகளாக்கிக் கொண்டு வெகு கம்பீர மாக வந்து சேர்வார்கள். சில வேளைகளில் நீதவான் வீட்டு வேலைகளைச் செய்வதற்காக பொலிஸ் மூலம் அனுப்பப்படும்போது அங்கே நீதவானுக்கு உதவி ஒத்தாசை புரி ந்து அவர் மனதை வென்றவர்களாகவும் திரும்புவார்கள்.

எப்படிப்பார்த்தாலும் சாரதாவுக்கு இந்தத்தொழில், இதன் ஏற்ற இறக்கங்கள் தண்ணீர்பட்டபாடுதான். இந்த பொலிஸ்காரனோ பல வேளைகளில் அதிகபட்ச தொல்லையாக, ஒரு கடன்காரனாகஇ அடிக்கடி அவளை ஏமாற்றுவதற்கே வழி பார்த்த வனாக, அல்லது ஒவ்வொரு முரண் பாடான யோசனைகளையும் கதைகளையும் சொல்லி அச்சமூட்டு பவனாகஇ எரிச்சலூட்டுபவனாக இருந்து கொண்டிருந்தான். இப்போது குப்பையை அனுப்ப யோசனை சொன்னவனும் அவன்தானே!

"என்ன மூஞ்சி ஒருமாதிரி செவக்குது?" பொலிஸ்காரன் இளித்தவாறு கேட்டான். அவனுக்கு வழக்கமாகக் கொண்டுவந்து தரும் உயரமான, விஷேடமான பூப்போட்ட கிளாஸை நிரப்பி நீட்டியவாறு கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குப்பையை ஸ்கூல்ல வுட்டுட்டு வந்துட்டன் நேத்து" அவளை அறியாமல் குரலில் சோகம் தொனித்தது

"அடிசக்கை" கும்மாளமிட்டுச் சிரித்தான், சந்தோஷத்தில். உடனே சரக்கை காலி பண்ணாமல் கிளாஸை மேசை மீது வைத்து விட்டு குறும்பாகப் பார்த்தான். "அப்ப இனி தொல்லையே இல்ல". நெருங்கி நின்று கண் சிமிட்டினான்.

சாரதாவுக்கு திடீரென அழுகை பொங்கியது. ஒருகணம் தன்னை உயர்த்தி வாழவைப்பதற்காகவே தன்னைக் கரம்பிடித்து பொறுமைகாட்டி வாழ்ந்துவந்த வேலுச்சாமியின் சாந்தமான முகம் மனக்கண்ணில் வந்து நின்றது. அவன் எங்கே இந்த சுயநலமி எங்கே? அவன் எவ்வளவு நல்லவன்.!

ஏதோ ஒரு குணத்தால் பொலீஸ்காரன் சொன்னபடி குப்பையைத் தள்ளிவிட்டு வந்துவிட்டாலும், அந்தயோசனை அவளுக்கு முற்றாகப் பிடிக்க வில்லை என்னுமாப்போல் ஒரு குமைச்சல் அடிக்கடி அவளுள் எழுந்து கொண்டிருந்தது. இவன் சொன்னபடிதானே அவனைத் தள்ளிவிட்டேன்... இப்ப என்னால் நிம்மதியா இருக்க முடியுதா? முந்தியை விட கொடுமையா இருக்கே அவன் நெனப்பு...? என் றெண்ணிக் கலங்கினாள் சாரதா.

அவளது முகபாவத்தைக் கவனித்த அவன், கிளாஸை நிதான மாகக் காலிபண்ணிவிட்டு, வாயைத் துடைத்துக்கொண்டு, கிளாஸை டமாரென்று மேசையில் வைத்தான். அந்தச் சத்தத்தில் திடுக்கிட்டுப் பார்த்தாள் அவள். அவளது அகன்ற விழிகளில், கடைசியாக தான் டொபி வாங்கி தருவதாக பொய் சொல்லி ஏமாற்றிவிட்டு வந்தபோது தன்னை நம்பியும் நம்பாமலும் நிலைகுத்திப் பார்த்த குப்பையின் கண்கள் வந்து நின்றன.

பொலிஸ்காரன் முகம் நிறைய சிரித்துக்கொண்டு, சாராய நெடி அவளைச்சூழும்படி இன்னும் மிக நெருங்கி அவளது தோள்களைத் தொட்டான்.

ஏனோ... தனக்கு மட்டுமே முழு உரிமையில்லாத ஒரு பொருளை... வேலுச்சாமிக்கு சொந்தமான ஒரு பொருளைத் தொலைத்துவிட்டு நிற்பதுபோல் ஒரு குற்ற உணர்வு மேலிட்டு கொதித்துப் போயிருந்த அவள் வெறி கொண்டு "பளா"ரென" அவனது முகத்தில் அறைந்தாள்.

"யோசன சொல்லிட்டு சிரிச்சிட்டு வாரியா, மவனே போடா வெளியே..! நீ நெனக்கிறது இனி நடக்காது தூ... ஒன் யோசனையும் நீயும்... தொலஞ்சி போ..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைத்து தள்ளாடி நின்ற அவனைப்பிடித்து வெளியே தள்ளி கதவைச்சாத்தினாள். கண்ணீர் கண்களில் கோடாக வழிந்து நெஞ்சை நனைத்தது. "நாளையே குப்பையை கூட்டி வந்திரனும்" என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக முளைவிட்டு அவளுள் உறுதியா யிற்று. அதற்கும் மேலாக பத்து வருடமாக தன்னைவிட்டுப் பிரியாத குப்பையை... மூணு வயசுக் குழந் தையின் புத்திசாலித்தனம்கூட இல்லாத ஒரு பச்சைப் பாலகனை... எங்கோ தள்ளிவிட்டேனே என்ற குற்ற உணர்வு படமெடுக்கும் நல்ல பாம்பு போன்று அவளைச்சுற்றி சீறிக் கொத்தியது. அந்தத் துன்பத்தில் மிக உழன்று, மூடிய கதவில் சாய்ந்து, "எங்கண்ணே குப்பை.." என்று ஓலமிட்டு அழத்தொடங்கினாள் சாரதா.

**இதழ் - 03 கார்த்திகை - மார்கழி 2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணக்குளம்

## அன்புமணி

ஜீவநதி
சிறுகதைகள்
20

ஊருக்கு மத்தியில் இப்படி ஒரு குளம் எப்படித்தான் உருவானதோ தெரியவில்லை. ஏதாவது பெரிய கோயில் கட்டி அதற்காக மண் அகழ்ந்தெடுத்தது போன்ற விசாலமான குளம். மழை காலத்தில் குளம் நிரம்பி வழியும். மிதமிஞ்சிய நீர் கான் வழியே வெளியேறும். வெயில் காலத்தில் குளம் சுருங்கிவிடும். தூண்டில் போடுபவர்களும், கரப்புக் குத்துபவர்களும் அத்தாங்கு வடிப்பவர்களும், கோவணக் கட்டோடு அதன் கரையோரங்களில் திரிந்து குளமீன்களைப்பிடித்து வீட்டுக்கு எடுத்துச் செல்வர். விரால், குறட்டை, சுங்கான் மீன்கள் தேறும். குளத்தின் பெயர் "வண்ணக்குளம்"

சணல் கட்டுகளை குளத்தில் ஊறப்போட்டு, ஒரு வாரம் அல்லது இருவாரம் சென்றபின், ஊறிய சணல்கத்தைகளை இரு கைகளாலும் அடியில் பிடித்துக் கொண்டு, ஓங்கி ஓங்கி அடித்து சணல்பிரியச் செய்து, ரோட்டோரமாக உள்ள கிடுகு வேலிகளில் காயப் போடுவார்கள். பின்நேரம் வந்து அவற்றை அப்படியே வீட்டுக்குக் கொண்டுபோய் சணல் வேறு கம்பு வேறாகப் பிரிப்பார்கள்.

சணலை நூல்நூற்று வலை பின்னுவார்கள். சணல் கம்பை விறகாகப் பாவிப் பார்கள் நெருப்புச் சுள்ளிபோல இச்சுள்ளிகளும் விசுக் கென்று பத்திக் கொள்ளும். பெண்கள் உரி மட்டைகளை ஊறப்போட்டு ஒருவாரம் கழித்து வீட்டுக்கு அள்ளிக் கொண்டுபோய் தும்பு தட்டி எடுப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாவற்றையும் விடக் கொஞ்சம் அருவருப்பான விடயம் சிறுவர் சிறுமியர் குளக்கரையோரத்தில் மலம் கழித்து, குளத்தில் கழுவிக் கொண்டு போவார்கள் குளத்திலிருந்து நூற்றுக்கணக்கான ஆமைகள் வெளியேறி அவ்விடத்தை வெளியாக்கிச் சுத்தப்படுத்தும் இதெல்லாம் 50 வருடங்களுக்கு முந்திய கதை.

பிரதேசசபை அலுவலகம்:

"என்ன செய்யலாம்?"

"இந்தக்குளம் பொதுமக்கள் சுகாதாரத்துக்கு கேடு. நுளம்பு எக்கச்சக்கமாகப் பெருகிறது"

"அப்படியானால் குளத்தை மூடி விடுவதைத் தவிர வேறு வழியில்லை."

"குளத்தை மூடுவது அவ்வளவு லேசான காரியம் அல்ல."

"குப்பை கொட்டி நிரப்பினாலும் வருடக் கணக்கில் செல்லும்."

"அப்போ என்ன தான் செய்யலாம்?"

"பொதுமக்கள் குளத்தைப் பாவிப்பதைத் தடை செய்யவேண்டும் குப்பை கொட்டிக் குளத்தை நிரப்ப வேண்டும்?"

"அப்படியானால், பிரதேச சபையிடம் இதை ஒப்படைக்கலாம்"

அன்று முதல் குளத்தில் இறங்குவது தடை செய்யபட்டுள்ளது என்ற 'போர்டு'... நாட்டப்பட்டது. பிரதேச சபையின் குப்பை வண்டில்கள் வந்து குப்பையைக் கொட்டிச் சென்றன.

வருடங்கள் சில சென்றன.

குளம் மூடப்படவில்லை. குளக் கரை ஓரம் குப்பை கொட்டி மேடாகிய நிலத்தை வெலப்படுத்தி இரண்டு குடும்பங்கள் வீடமைத்துக் கொண்டன. கிழக்குக் கரையில் குளத்து ஓரமாக, வளவுச் சொந்தக் காரர்கள் குளக் கரையோரமாகத் தங்கள் வளவை விஸ்தரித்துக் கம்பி வேலியும் போட்டுக் கொண்டனர்.

குளத்தில் எவ்வித மாற்றமுமில்லை.

குளக்கரையோரம் வீடு கட்டிக் கொண்டவர்கள் நுளம்புத் தொல்லை யால் பாதிக்கப்பட்டனர். அதையும் பொருட்படுத்தாது அவர்கள் அவ்வீடுகளில் தொடர்ந்து வசித்தனர். அத்துடன் குளப்பக்கமாகத் தங்கள் எல்லை வேலியையும் நகர்த்திக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக்காலத்தில் குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து கரையோரம் உள்ள இரு குடும்பங்களின் வீட்டுக்குள்ளும் சென்றது. அவர்கள் பாடசாலையில் போயிருந்து வெள்ளம் வடிந்ததும் மீண்டும் தங்கள் வீடுகளுக்கு வந்தனர். வெள்ள நிவாரணமும் பெற்றுக் கொண்டனர். பிரதேச சபையின் செயலகத்தில் மீண்டும் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

தொழில் நுட்ப உத்தியோகத்தர் கூறினார்.

"குளத்தை மூடுவதென்பது லேசுப்பட்ட காரியமல்ல குளத்தின் வட புறத்திலுள்ள வீதியை அகலமாக்கி, போக்கு வரத்தைச் சீர் செய்யலாம். ஏதாவது ஒரு 'என்ஜி ஓ' வைப்பிடித்து, குளத்தை மூடுவதற்கு ஆலோசனை கேட்கலாம்.

தொழில் நுட்ப உத்தியோகத்தரின் கூற்று அனைவ ருக்கும் பிடித்திருந்தது. ஆனால் 'என்ஜி ஓ' ஒன்றைப்பிடிப்பது தான் கஷ்டமாக இருந்தது.

குளத்தை வந்து பார்த்த 'என்ஜி ஓ' அதிகாரிகள் அதனால் ஏற்படக் கூடிய செலவைக் கருத்திற் கொண்டு பின் வாங்கி விட்டனர்.

பிரதேச சபைச் செயலாளர் ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்தார். தொழில் நுட்ப உத்தியோகத்தர் தலைமையில் கிராம சேவை உத்தியோகத்தர், 'ஆர்டி ஓ' வலய நிர்வாகத் தலைவர், முன்னாள் கிராம சேவகர் மற்றும் ஊரில் உள்ள சில நலன்விரும்பிகள் இக்குழுவில் இடம் பெற்றனர்.

குளத்தை முழுதாக மூடி அல்லது அரைவாசியை மூடி அந்த இடத்தைப் பொதுமக்கள் கூடும் இடமாக்க வேண்டியது இக்குழுவின் பொறுப்பு.

மீண்டும் ஓட்டம் ஆரம்பமானது.

ஆனால் எவ்வித வழியும் பிறக்கவில்லை. இதற்கிடையில் வேறொரு பிரச்சினை தலைதூக்கியது அரச அதிபர் அலுவலகத்திலிருந்து ஒரு அதிகாரி வந்தார். குளத்தை மூடக்கூடாது. அது நன்னீர் மீன்பிடிக்குளம் என்றான். அவரோடு ஆலோசனைக் குழு போராட வேண்டி ஏற்பட்டது.

"ஐயா, இது நன்னீர் மீன்பிடிக்குளம் அல்ல. வண்ணாங் குளம். பல வருடங்களுக்குமுன் வண்ணார்கள் இக்குளத்தில் துணி தோய்த்தனர். அதன் பின் அவர்கள் கொலனிக்குச் சென்றதும், குளம் சும்மாதான் இருக்கிறது. குளத்தைத் துஷ்பிர யோகம் செய்கின்றனர். நுளம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதிக்கிறது. பொதுமக்கள் சுகாதாரத்துக்கு இது ஒரு பெரிய தலையிடியாக உள்ளது."

"நீங்கள் சொன்னால் சரியாகிவிடுமா, இந்தக் குளத்தை, மூடிவிடுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பதாக எங்களுக்கு முறைப்பாடு வந்துள்ளது."

"ஐயா ஆரோ பேயனுகள் உங்களுக்கு முறைப்பாடு அனுப்பியிருக்கிறார்கள். எப்பவோ ஒரு காலத்தில் இக்குளத்தில் குளமீன் பிடித்தார்கள். இப்போ குளத்தில் மீனே இல்லை. நுளம்புதான் நிறைய உள்ளது."

"அது சரி நீங்கள் குளத்தை மூடும் வேலையை இடைநிறுத்துங்கள் இந்த விடயம் பற்றித் தீர விசாரித்தபின் நாங்கள் உங்களுக்கு அறிவிப்போம்!"

"எப்போ அறிவிப்பீர்கள்?"

"அதை இப்போது எப்படிச் சொல்ல முடியும் கச்சேரியில் நன்னீர் மீன் வளர்ப்பு அதிகாரி இருக்கிறார். மற்றும் அதிகாரிகள் இருக்கிறார்கள் அவர்களோடு கலந்தாலோசித்த பின் தான் உங்களுக்கு அறிவிக்கமுடியும்."

"சரி இரண்டு வாரங்களுக்குள் உங்கள் அறிக்கை கிடைக்காவிட்டால், நாங்கள் எங்கள் நடவடிக்கையைத் தொடர்வோம்."

"அது என்னவோ அரசாங்க அதிபரைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். அவ்வளவு தான் நான் சொல்வேன்" என்று கூறிவிட்டுக் கச்சேரி அதிகாரி புறப்பட்டு சென்றார்.

ஆலோசனைக் குழு உடனடியாகக் கூடினார்கள். அவர்களுக்கு ஒரு வெறியே வந்துவிட்டது. எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இந்த வேலையை முடிக்க வேண்டும் என்றார்கள்.

கோடிக் கணக்கில் செலவு செய்யவேண்டிய வேலை. செய்தாலும் மலையைக் கல்லி எலியைப் பிடிப்பது போன்ற வேலை. குளம் என்னவோ சிறிய குளம் தான் மிஞ்சிப்போனால் பத்து ஏக்கருக்கு மேற்படாது. அதைமூடிச் சிறுவர் பூங்கா ஆக்குவதென்பது சுண்டைக்காய் காற்பணம். சுமை கூலி முக்காற்பணம் என்ற கதைதான் ஆனாலும் ஆலோசனைக் குழுவினர் இம்முயற்சியில் தீவிரமாக இறங்கினர்.

பல 'என்ஜீஓ'க்கள் குளத்தைப் பார்வையிட்டபின் ஒரு 'என்ஜீஓ' உதவுவதற்கு முன் வந்தது. அந்த நிறுவனம் தன் அதிகாரியை அனுப்பி நிலைமையை நன்கு பரிசீலனை செய்து அவ்வேலையைத் தங்கள் வேலைத் திட்டங்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள முன் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்வேலை அடுத்த வருடம் ஆரம்பமானது. பூர்வாங்க தரவு களைப் பரிசீலனை செய்து வேலையை ஆரம்பிக்க ஆறுமாதம் சென்றது.

வீதியோரமாக உள்ள குளத்தை அரைவாசி மூடி, குளத்தோரமாக, ஒரு குழாய் வேலி போட்டு மூடிய பகுதியை மட்டமாக்கிப் பின்னேரத்தில் பொதுமக்கள் கூடும் ஒரு இடமாக அதை ஆக்கும் வேலையில் நிறுவனம் ஈடுபட்டது.

ஆலோசனைக் குழுவினர் அரை மனதுடன் இதை ஏற்றனர். சிறுவர் பூங்கா ஒன்று அமையாவிட்டால் தங்கள் முயற்சிக்குப் பலன் கிடைத்ததாகக் கொள்ள முடியாது என அவர்கள் கருதினர். கிழக்குக் கரையோரமாக உள்ள வளவுக் காரர்களை அணுகி அவர்களுடைய வளவுகளையும் சுவீகரித்தால் மட்டுமே ஒரு பூரணமான சிறுவர் பூங்காவை அமைக்க முடியும் இதை எப்படிச் செய்வது?

ஆலோசனைக்குழுவினர் நாலாபக்கமும் ஓடினார்கள். பிடிக்க வேண்டிய ஆட்களை பிடித்து கதைக்க வேண்டிய முறையில் அவர்களுடன் கதைத்தார்கள் ஆனால் அதற்கு அவர்கள் இணங்குவதாக இல்லை.

"ஐயோ எங்களுக்குப் பெண்பிள்ளை இருக்கு ஒரு காலத்தில் அவளைக் கரைசேர்ப்பதற்கு இந்தக்காணித்துண்டு ஒன்றுதான் இருக்கு அதைக் கேட்காதீங்க."

"என்னம்மா, இத்தனை வருஷமா பேய்க்காடு என்று நீங்களே ஒதுக்கிவிட்ட காணி. இப்போ அதை நாங்கள் கேட்டதும் இப்படிப் பேசுறிங்க"

"முன்பு அதற்கு ஒரு தேவை இருக்கவில்லை. இப்போ அதுக்கொரு தேவை இருக்குத்தானே?"

"உங்களுக்குத் தெரியுமா? அரச தேவைக்கு எவருடைய காணியையும் அரசாங்கம் சுவீகரிக்கலாம்."

"ஐயையோ! அப்படியெல்லாம் செய்து போடாதீங்க எங்களை விட்டுங்க."

"வெறும் காட்டுப்பூமி. அரசாங்கம் சுவீகரித்தாலும் அதுக்குரிய பெறுமதியைக் கொடுப்பார்கள் நீங்கள் வேறு காணி வாங்கிக் கொள்ளலாம்."

"அரசாங்கம் பணம் கொடுப்ப தென்றல் அது இனி எந்தக்காலமோ! எங்கட அவசரத்துக்குப் பணம் கிடைக்குமா?"

"கிடைக்காம என்ன? பிரதேசசபைச் செயலாளர் தான் உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிகளைப் பொறுப்பேற்பார். அவரே முன்னின்று உங்களுக்குரிய பணத்தை பெற்றுத்தருவார்."

இன்னும் கொஞ்ச நேரம் பேசி, அவர்களைச் சம்மதிக்க வைத்தபின் அவர்கள் பிரதேச சபைச் செயலாளரிடம் சென்று விஷயத்தைக் கூறினார்கள். அவருக்கு இனி இல்லையென்ற மகிழ்ச்சி! குளப்பகுதியைப் புனரமைப்பதற்காகப் பொறுப் பேற்றுக் கொண்ட 'என்ஜீ ஓ' மிகத் துரிதமாகத் தன் வேலையைத் தொடர்ந்தது.

மேற்படி புனரமைக்கப்பட்ட குளத்தைத் திறந்து வைப்பதற்கு பிரதேச செயலாளரை அணுகினார்கள் ஆனால் அவரோ அதை முற்றாக மறுத்து விட்டார். அவர்கூறிய காரணம்.

"நடக்கமுடியாதது என்று கருதிய ஒரு வேலையை எங்களால் செய்ய முடியாத ஒரு வேலையை அந்த 'என்ஜீ ஓ' செய்து முடித்தது. அது மட்டுமல்ல, பல மில்லியன் ரூபாய்களைச் செலவு செய்து இவ் வேலை யை முடித்தது. எனவே அந்த நிறுவனத் தலைவரைக் கொண்டு திறந்து வைப்பது தான் முறையானது"

"அவர் வெளிநாட்டைச் சேர்ந்தவர் தமிழ் பேச மாட்டார். அவர் எப்படி இதைச் செய்வார் என்றுதான் யோசிக்கிறோம்."

"மொழி தெரியாவிட்டால் என்ன? ஒரு மொழி பெயர்ப்பாளரை வைத்துக் கொள்ள வேண்டியது தானே?"

"சரி அப்படியே செய்வோம்" என்றார்கள்.ஆலோசனைக் குழுவினர்.

திறப்பு வைபவம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆலோ சனைக் குழுவினர் இரவுவிரவாகப் பாடுபட்டதன் அறுவடையே அது.

குறித்த நாளில் குறித்த நேரத்தில் குறித்த 'என்ஜி ஓ' தலைவரும் அவருடைய உதவியாளர் களும் ஒருவாகனத் தொடர் அணியில் வந்து சேர்ந்தனர்.

அவரை வரவேற்று மலர் மாலை அணிவித்து மேடைக்கு அழைத்து வந்தார்கள். சம்பிரதாய பூர்வமான பேச்சுக்களுக்குப்பின்.

அவர் அந்தச் செயற்திட்டத்தின் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்.

அதில் இந்த வண்ணக்குளம்' பொதுமக்களிடம் இன்று கையளிக்கப் படுகிறது. என எழுதப்பட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர் கொலோ

## அ.விஷ்ணுவர்த்தினி

ஜீவநதி
சிறுகதைகள்
21

ஆனி மாதத்து வெயில் தலையைப் பிளக்கிறது. கந்தையாக் கிழவனுக்கு வெளிச்சம் பட்டுக் கண்கள் கூசத் தொடங்கின. தெருவில் வருவோர் போவோர் எல்லோரும் கிழவனின் கண்களுக்கு மங்கலாகவே தெரிந்தனர். நீண்ட தடியொன்றினால் தட்டித் தட்டி கந்தையாக் கிழவன் நடந்து கொண்டிருக்கிறார். வெட்டப்படாமலிருந்த தலை முடியும் சவரம் செய்யப்படாமல் நீண்டு வளர்ந்திருந்த தாடியும் அவரின் குடும்ப நிலையை உணர்த்தின. அரையிலே உடுத்தியிருந்த வேட்டியின் நிறம், தோய்த்து பல நாட்கள் ஆகிவிட்டன என்பதைக் காட்டியது.

கந்தையாக் கிழவன் தன் ஒட்டிய உடம்பில் சுற்றியிருந்த வேட்டியின் ஒரு தொங்கலில் போட்டிருந்த முடிச்சை தொட்டுப் பார்த்து பத்திரப்படுத்திக் கொண்டார். தன் தூரத்துச் சொந்தக்காரர்களிடமிருந்து வீடு வீடாய் ஏறி இறங்கிச் சேர்த்த இரண்டாயிரத்து நானூறு ரூபாப் பணம் அந்த முடிச்சில் தான் இருக்கிறது. அப்பணத்தைக் கொண்டு தான் கந்தையாக் கிழவன், தன் குழி விழுந்த கண்ணுக்கு அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும். அதனால் தான் அப்பணத்தை அடிக்கடி தொட்டுப் பார்த்து பத்திரப்படுத்திக் கொண்டார்.

தவமணி ரீச்சர் வீட்டு நாய், கந்தையாக் கிழவனைப் பார்த்து குரைத்து அவரின் வருகையை வீட்டுக்குத் தெரிவிக்கிறது. தவமணி ரீச்சர் வெளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறாள். வழமையாக அவ்வீட்டில் மழைக் காலத்தில் புல் வெட்டி துப்பரவு செய்தல், விறகு பிளந்து கொடுத்தல் போன்ற வேலைகளை கந்தையாக் கிழவனே செய்து கொடுப்பது வழக்கம். ரீச்சரும் அதற்கேற்ப கூலி கொடுப்பாள். அதை வைத்துத் தான் கிழவன் தன் மகளையும் இரு கால்களும் ஊனமான தனது பேத்தியையும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்.

"வாங்கோ ஐயா" என்று ரீச்சர் கந்தையாக் கிழவனை வழமையான பரிச்சயத்தோடு வரவேற்றாள்.

கந்தையாக் கிழவன் அமைதியாக எதுவுமே பேசாமல் மௌனமாக இருந்தார். தவமணி ரீச்சர் கிழவனுக்கு எவ்வகையிலும் உறவு இல்லை. ஆனபோதிலும், ரீச்சர் கிழவனின் உறவினர்களை விட அவர் மேல் மிகுந்த அன்புடையவள். கிழவன் அவ்வீட்டில் வேலை செய்யும் போதெல்லாம் அடிக்கடி சாப்பாடு, தேநீர் கொடுப்பாள். அதுமட்டுமில்லாமல் அவருக்கு அணிந்து கொள்ள நல்ல வேட்டி, சட்டை கொடுப்பதோடு மட்டு மல்லாமல் அடிக்கடி பணம் கொடுப்பாள். இப்படி நிறைய உதவிகளை செய்துகொண்டிருக்கும் ரீச்சரிடம் கண்ணுக்குச் சிகிச்சை செய்யவும் பணம் எப்படிக் கேட்பது என்ற தயக்கமே அவரை மௌனம் காக்க வைத்தது.

கிழவனின் மங்கிய கண்ணிலிருந்து நீர் ஒழுகிக் கொண்டிருப்பதைக் கண்ட தவமணி ரீச்சருக்கு மனம் பரிதவித்தது.

"என்னையா, கண்ணில இருந்து நீர் வடியுது. கண்ணில ஏதும் பிரச்சினையோ?" இவ்வாறு ரீச்சர் கண்ணைப் பற்றிக் கேட்டதும் ரீச்சரிடம் பணம் கேட்பதற்கு இது தான் ஒரு சந்தர்ப்பம் என்று கிழவன் நினைத்தார்.

"அது ஒண்டுமில்லை பிள்ளை. கண்ணில ஏதோ சவ்வு வளந்திட்டுதாம். அதுதான் இப்பிடி நீர் வடியுது. இதோட பெரிய கஸ்ரமாக் கிடக்கு. அதுதான் பிள்ளை, போன கிழமை பெரியாஸ்பத்திரியில் போய்க் காட்டினனான். அவங்கள் தான் சொன்னவங்கள் சவ்வு வெட்ட வேணுமாம்"

"அப்படி என்றால் அந்த ஒப்பரேசனை செய்யுறது தானே. உங்களை இப்படிப் பார்க்க எனக்கு மனக்கஸ்ரமாக் கிடக்கு"

கந்தையாக் கிழவன் பதில் எதுவும் பேசாமல் மீண்டும் மௌனமானார். அவரின் தயக்கத்தைப் பார்த்து ஏதோ விளங்கிக் கொண்டவளாய் ரீச்சரே மீண்டும் தொடர்ந்தாள்.

"ஏன் ஐயா பேசாமல் இருக்கிறியள். காசு ஏதும் பிரச்சினையே... என்னெண்டாலும் தயங்காமல் கேளுங்கோ" இப்படி ரீச்சர் கூறியதும் கந்தையாக் கிழவன் ரீச்சரை நன்றிப் பெருக்குடன் பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ர ரண்டு பிள்ளைகளும் என் மேல இவ்வளவு பாசமாக இருந்ததில்லை. ஆனால் நீ என் மேல இப்படி பாசமாக இருக்கிறியே யம்மா. நானும் என்ர ஒரே ஒரு மகனை பாசமாத் தான் வளர்த்தனான். ஆனால் அவன் எங்களையெல்லாம் ஏமாத்திப் போட்டான். அவன் கண்டியில போய்ப் படிக்க வேணும் எண்டதுக்காக நான் ஓடாய்த் தேய்ஞ்சு உழைச்சது மட்டுமில்லாமல் என்ர காணியையும் வித்துத் தானே அவனை படிக்க வைச்சனான். அவன் என்ஜினியராக வந்து அவன்ர தமக்கை யையும் அவளின்ர பிள்ளையையும் காப்பாத்து வான் எண்டெல்லே நினைச்சன். ஆனால் அவன் சிங்களபெட்டையோடை ஓடி எங்க ளெல்லாரையும் நடுத்தெருவில விட்டிட்டுப் போனான்" கிழவன் தன் கழுத்திலிருந்த நைந்த துவாயால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

கந்தையாக் கிழவன் இப்படி கவலைப் படுவதைப் பார்த்ததும் தவமணி ரீச்சருக்கு, எப்படி ஆறுதல் கூறுவதென்றே தெரியவில்லை. கிழவன் எத்தனையோ எதிர்பார்ப்புக்களுடன் கஸ்ரப்பட்டு வளர்த்த மகன் இப்படிச் செய்ததை ரீச்சராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மீண்டும் அவரே தொடர்ந்தார்.

"கண்ணில ஒப்பரேசன் செய்ய ஐயாயிரம் ரூபா வேணுமாம் பிள்ளை. இனிமேல் என்ர மகனோட எந்த உறவுமே வைக்கிறேல்லை என்றிருந்த நான், மனதைக் கல்லாக்கிக் கொண்டு, நேற்றுக் காலமை அவனோட ரெலிபோனில கதைச்சனான். அவன் வேண்டாவெறுப்பாத் தான் கதைச்சவன். என்ர மகன் தானே என்ற உரிமையோட, ஒப்பரேசனுக்கு காசு கேட்டன். அவனுக்கு இப்ப தான் குழந்தை பிறந்திருக்காம்... அதனாலை நிறைய செலவெண்டு சொல்லி ரெலிபோனை வைச்சிட்டான் பிள்ளை"

"இனி என்னையா செய்யுறது. எல்லாம் விதி தான். இந்தக் காலப் பிள்ளைய ளெல்லாம் சொகுசு வாழ்க்கையைத் தான் விரும்புதுகள். நாங்கள் கஸ்ரப்பட்டு அதுகளை வளர்த்துவிட, அதுகள் பிறகு எங்களை மறந்து வாழுதுகள். ஒரு காலத்தில தாய் தகப்பனா வரும்போது நாங்கள் பட்ட கஸ்ரங்களை அவையளும் அனுபவிப்பினம். அப்பத்தான் தெரியும் நாங்கள் எவ்வளவு கஸ்ரப்பட்டு அதுகளை வளர்த்தம் என்று... அதை விடுங்கையா. பூமலர் சுகமா இருக்கிறாளே. எனக்கொரு சாறிச் சட்டை தைக்க வேணும். போகும்போது தாறன். கொண்டுபோய்க் கொடுங்கோ"

"பூமலர் என்ர மகளாப் பிறந்து எவ்வளவோ கஸ்ரத்தை அனுபவிச்சுப் போட்டாள் பிள்ளை. பிரியனைத் தின்னி அந்தப் பிள்ளை யோட எவ்வளவு கஸ்ரப் படுறாள். நானும் அங்க இங்க கூலி வேலை செய்து தான் அவளைக் கவனிக்கிறன். ஆனால் அவள் ஊனமான தன்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேளுக்கு சில்லு வண்டி வாங்கிக் கொடுக்க வேணுமெண்டு இரவு பகலாய் தையல் மெசினோடேயே இருக்கிறாள்..." – கிழவர் பெருமூச்செறிந்தார்.

தவமணி ரீச்சர் அறைக்குள் சென்று கையில் பணத்துடன் வந்தாள்.

"இந்தாங்கோ ஐயா, இதில ரெண்டாயிரம் ரூபா இருக்கு. இதை வச்சு ஒப்பரேசனைச் செய்யப் பாருங்கோ. அடுத்த மாதச் சம்பளம் வந்தவுடனே இன்னும் கொஞ்சக் காசு தாறன்"

கிழவனுக்குக் கண் கலங்கியது. "இது போதுமம்மா. நான் என்ர சொந்தங்களிட்டயும் போய் கொஞ்சக் காசு சேத்திட்டன். இது போதுமம்மா" கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு கிழவன் தன் வீடு நோக்கிச் செல்கிறார்.

கந்தையாக் கிழவனின் வீட்டில் அவரது பேத்தி கண்மணி முற்றத்தில் இருந்து அழுது கொண்டிருப்பது அவர் காதில் கேட்கிறது. ஓடிப்போய்ப் பிள்ளையைத் தூக்கி அணைத்தபடி கேட்டார்.

"கண்மணிக் குஞ்சு, ஏனம்மா அழுறாய். அம்மா பிள்ளையை அடிச்சிட்டாளே"

குழந்தை பதில் எதுவும் சொல்லாமல் அழுது கொண்டேயிருந்தது. பூமலர் வந்து அவரின் கேள்விக்குப் பதில் சொன்னாள்.

"பாருங்கோ ஐயா இவளை. எங்கட விரலுக்குத் தக்க வீக்கம் வேணும். நாங்கள் சாப்பாட்டுக்கே படாத பாடு படுறம். இந்த நிலையில, இவவுக்கு சில்லு வண்டில் வேணுமாம். ஊரில உள்ள மற்றப் பிள்ளையள் ஓடி விளையாடுறதைப் பார்த்திட்டு தனக்கொரு சில்லுவண்டில் வாங்கித் தரட்டாமையா... உங்கட கண் ஒப்பரேசனுக்கே நான் காசுக்கு எங்க போறதெண்டு தெரியாமல் அல்லாடுறன்" – பூமலர் விம்மினாள்.

"குழந்தை ஆசைப்படுறது சரி தானேயம்மா. மற்றக் குழந்தையள் ஓடியாடித் திரியிறதைக் கண்டால் அவளுக்கும் ஆசை இருக்காதே... சில்லு வண்டிலிலை எண்டாலும் அசைஞ்சு திரிஞ்சால் என்ன என்று நினைக்கிறது ஞாயம் தானே..."

ஒரு தீர்மானத்துக்கு வந்தவராய் கந்தையாக் கிழவன் தன் வேட்டியிலிருந்த முடிச்சை அவிழ்க்கத் தொடங்கினார்.

திடீரென்று அவரிடம் ஒரு தயக்கம் எழுந்தது.

'தவமணி ரீச்சர் என்ர கண் ஒப்பரேசனுக்காகத் தந்தது. அவள் என்னைப் பற்றி என்ன நினைப்பாள்... நான் பொய் சொல்லித் தான் காசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிப் போட்டன் எண்டு நினைச்சால் எவ்வளவு கேவலம்...'

இந்த நினைப்பும் ஒரு கணம் தான். கிழவனுக்கு தன் மீதே வெறுப்பாக வந்தது.

'சே. என்ர சுகத்தைத் தான் இப்பவும் நினைச்சுப் பாக்கிறன். என்ரை பேத்தீன்ரை ஆசைக்கு முன்னாலை சாகிற வயசிலை எனக்குக் கண் பெரிசில்லை. தவமணி ரீச்சருக்கும் இது விளங்கும்...'

தன் மன ஓட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் காசைக் கையிலெடுத்தார்.

"இந்தா பிள்ளை... இது என்ரை கண் ஒப்பரேசனுக்காகத் தவமணி ரீச்சர் தந்தது... என்ரை பேத்தியின்ரை ஆசையை விட என்ரை கண் பெரிசே. அவளுக்கு சில்லு வண்டில் வாங்கிக் குடு..."

பூமலருக்கு முதலில் திகைப்பாக இருந்தது. தவமணி ரீச்சரை ஒரு கணம் நினைத்துப் பார்த்தாள். காசைக் கையில் வாங்கியபோது அவள் கண் கலங்கியது. பூமலரின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் அவள் தனக்காகக் கலங்குவதாக கந்தையாக் கிழவன் எண்ணிக் கொண்டார்.

**இதழ் - 21 பங்குனி - 2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிப்பு

## மு.அநாதரட்சகன்

ஜீவநதி
சிறுகதைகள்
22

ஆசீர்வாதப்பர் கோயில் முதல் மணிக்கே விழித்துக் கொண்டார் இசக்கியல் வாத்தியார்.

தினமும் முன்பின்னாக இந்த நேரத்தில் தானாகவே எழுந்து விடுவது அவர் வழக்கம். அண்மைக்காலமாக இது அவரிடம் ஒட்டிக்கொண்ட பழக்கமாகி விட்டது. அந்த நேரத்தில் எழுந்து சாதிக்கவேண்டிய வேலை எதுவுமில்லை என்பது அவருக்குத் தெரியும். இந்த முதியவயது அதற்கெல்லாம் இடம் கொடாது. ஆனாலும் இந்த வழக்கத்தை அவர் விடுவதாக இல்லை.

வீட்டில் மகன் குடும்பத்துடன் அவரது கடைசிக்காலம் கழிந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு தொந்தரவாக இருக்கக் கூடாதென்ற மன ஒதுக்கம் அவரை வீட்டின் ஒருபக்கத்தில் முடங்க வைத்து விட்டது.

மனைவியும் கர்த்தருக்குள் நித்திரையாகி இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. அதன்பின் இசக்கியல் வாத்தியார் தனித்துப் போய் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றார்.

அதிகாலை வேளை...

சுற்று வட்டாரத்திலுள்ள எல்லாக் கோவில்களின் மணிகளும் ஒலித்து ஓய்ந்து விட்டன. ஆனால் அவரது வீட்டின் சுவர்மணிக் கூட்டிலிருந்து மட்டும் மணி ஒலிக்கவில்லை. முன்னரெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் மணிகளுடன் போட்டி போட்டுக் கொண்டு ஒலியெழுப்பும் அந்த மணிக்கூடு மௌனித்து விட்டது.

அதன் ரீங்காரமான ஒலியைக் கேட்காது விட்டது கடந்த இருவாரங்களாக பெரும் இழப்புப் போல, அவர் மனதை நெருடிக் கொண்டிருக்கிறது.

அந்த சுவர்மணிக்கூட்டின் டிக்... டிக்... ஒலியில் கரைந்துபோன அவரின் வாழ்வின் ஈரமான நினைவுகள் தந்த இதமான சுகம். அதில் ஆழ அமிழ்ந்து நெட்டுருகிப் போகும் பரவச நிலையில் அவர் இருந்தார்.

இப்போது எல்லாமே அர்த்தமிழந்து நிர்க்கதியாகிப்போன மனநிலை வாத்தியாரை வாட்டுகிறது.

அந்தச் சுவர்மணிக்கூட்டின் ஒலி நின்றுபோனதிலிருந்து தனது அன்றாட வாழ்வுக்கு தடங்கல் ஏற்பட்டு விட்டது போன்ற உணர்வு அவரை ஆட்கொண்டிருந்தது. அது நெஞ்சில் ஒருவித எரிச்சலையும் கொடுத்தது. அந்த மன அவசத்திலிருந்து மீளமுடியாது போகவே படுக்கையை விட்டு எழுந்தார்.

மனதை ஆக்கிரமித்திருந்த சோகம் அவரைச் சோர்வடைய வைத்தது.

தலைமாட்டில் கட்டிலுக்கடியில் வீசப்பட்டுக்கிடக்கும் அந்த சுவர் மணிக் கூட்டைப் பார்த்தார். யாரதும் கவனிப்புக்கு உட்படாது போட்டது போட்டபடி கிடக்கிறது.

மினுமினுப்பாக இருந்த அது நிறம் மங்கிப்போய் சொறிவிழுந்து தூசிபடிந்துபோய் இருக்கிறது.

இயக்கமற்றுக்கிடக்கும் அதன் பென்டூலம் மட்டும் பளபளப்பாக, அந்த மங்கலான பொழுதிலும் அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது.

எழுந்து போய், அதனைத் தூக்கினார். உள்ளே கழன்று போயிருந்த பாகங்கள் கலகலத்தன. பக்குவமாகத் தடவிப்பார்த்தார். பெற்ற குழந்தையை வாஞ்சையுடன் தடவுவதுபோல தடவிக் கொண்டிருந்தார்.

நினைவுத்தடம் அந்தச் சம்பவத்தை இழுத்து வந்தது. அது நடந்து ஒருவாரம் கூட ஆகவில்லை. அன்று பகல்பொழுதில் கட்டிலில் அயர்ந்திருந்தபோது படீர் என்ற ஒலி கேட்டுத் திடுக்கிட்டார். பேரப்பிள்ளைகள் ஹோலுக்குள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரவாரம் கேட்டது. எறியப்பட்ட பந்து சுவரில் மோதித் தெறித்து மணிக்கூட்டில் பட்டுத்திரும்பியதில் மணிக்கூடு கீழே விழுந்துவிட்டது. பதகளித்துப் போய் எழமுயன்று கட்டிலால் விழுந்து விட்டார்.

பிருஷ்டத்தில் பலமான அடி. அதைக்கூட பொருட்படுத்தாமல் கலவரத்துடன் பார்த்தார்.

கீழே சுவர்மணிக்கூடு விழுந்து கிடந்தது. நாற்பத்தாறு வருடம் பழமையான மணிக்கூடு. அதன் கண்ணாடி நாலுபக்கமும் துகள்களாகச் சிதறிக்கிடந்தது.

பேரப்பிள்ளைகளைக் கடிந்துகொள்ள மனம் இடங்கொடுக்க வில்லை. அன்பு பாராட்டும் அருமைப் பேரக்குழந்தைகள். அவர்கள் எது செய்தாலும் அர்த்த மிருக்குமென நம்பும் மனம் அவருக்கு. அந்தப் பழமையான சுவர் மணிக்கூட்டுக்கு இப்படியாகிவிட்டதே என்ற ஆதங்கம் தான் அவர் நெஞ்சை வருத்தியது.

அந்த மணிக்கூட்டின் ஒலியின் இசைவுடனேதான் தனது கடந்தகால வாழ்க்கையே ஓடியது என்பது இசக்கியல் வாத்தியாரின் நம்பிக்கை. அதை மறப்பது எளிதான காரியமல்ல. அவருடனான அதன் பந்தம் அப்படி வலுவானது.

***

அறுபதுகளின் காலப்பகுதியில் ஆசிரியர் வேலை கிடைத்தது. மறு வருடமே லூர்த்துமேரியைக் கைப்பிடித்தது. முதல் கிறிஸ்துமஸ் பண்டிகையன்று மனைவியுடன் படம் பார்த்தது. படம் முடிந்து இருவருமாக பெரியகடைவீதியில் கடைகடையாக ஏறியிறங்கியது எல்லாமே ஞாபகத்திற்கு வந்தது.

பெற்றோல் செற்றுச் சந்தியில் வடக்குத் தெற்காக விரியும் கஸ்தூரியார் றோட்டில் இடது புறமுள்ள நான்காவது மணிக் கூட்டுக் கடை என்பது அவருக்கு மனப்பதிவாகியிருந்தது.

கடையில் விதவிதமான திணுசுகளிலும் அழகழகான சுவர் மணிக்கூடுகள்.

சதுரவடிவில், நீள்சதுரவடிவில், வட்ட வடிவில், இன்னும் பல்கோணிகள் வடிவில்... என எங்கு திரும்பினாலும் மணிக்கூடுகள். ஒவ்வொரு நேரங்களைக் காட்டியபடி சுவர்களில் தொங்கிக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் விருப்பத்தெரிவுப்படி பிடித்துப் போனதை வாங்கினார். அன்று மனைவிக்கேற்பட்ட மகிழ்ச்சி கண்டு பூரித்துப் போனார். அதனைப் பவித்திரமாகக் கொண்டுவந்து வீட்டில் சேர்த்தார். வந்ததும் முதல் வேலையாக ஹோலுக்குள் சுவரில் மாட்டிவிட்டார்.

கடைக்காரன் சொன்னதுபோல பென்டுலத்தை மாட்டி, சாவியால் முறுக்கி நேரத்தைச் சரி செய்தார். பென்டுலத்தை ஆட்டிவிட்டு கீழே இறங்கினார்.

டிக்... டிக்.. டிக்... ஒலி வீட்டினை நிறைத்தது. அந்த ஒலியில் அவரும் மனைவியும் பரவசப் பட்டுப்போய் நின்றனர்.

சுவர் மணிக்கூட்டுக்கு எதிரே சாய்மனைக்கதிரையில் கால்களை நீட்டிப் படுத்திருந்தார். ஹூர்த்துமேரி பக்கத்தில் தரையில் உட்கார்ந்து பூரித்துப்போய் அதன் அழகில் லயித்திருந்தாள்.

தலைக்குக் கீழே கைகளை அணையாக வைத்த படி பாதி மூடிய விழிகளுடன் மனைவியை நோட்டம் விட்டார்.

"ஹூர்த்து, எப்படி மணிக்கூடு...?"

"நல்லாத்தான் இருக்கப்பா..." வாயூறியபடி கூறினாள்.

"மணிக்கூடு, மணிக்கூடு என்று அடம் பிடிச்சியே சரி இனியென்ன... அதுவும் வாங்கியாச்சு. இனி எல்லா வேலைகளும் நேரப்படிதான் நடக்கும் போலை..."

இசக்கியல் வாத்தியார் பொடி வைத்துப்பேசினார்.

"உங்களுக்கு எப்பவும் பகிடிதான். போங்கோ" என்று செல்லமாகக் கூறிவிட்டு எழுந்து குசினிக்குள் சென்றாள்.

இது நடந்து எத்தனையோ ஆண்டுகள் கடந்து விட்டாலும் மனதில் நிலைத்திருந்த அந்தச் சம்பவம் மின்னலென வந்து போனது

பெருமூச்செறிந்தார் இசக்கியல் வாத்தியார்.

***

ஐந்து தசாப்தங்களைக் கண்ட அந்தச் சுவர் மணிக்கூடு இதுவரை எவ்வித பிரச்சினையையும் இசக்கியல் வாத்தியாருக்குக் கொடுத்ததில்லை. ஏதோ ஓரிருதடவை சேவிஸ் பண்ணுவதற்காக மட்டுமே கடைக்கு போய் வந்த ஞாபகம் வாத்தியாருக்கு.

தனது சம்பளத்தில் சேமித்து முதன்முதலில் வாங்கிய பயனுள்ள பொருள் அது ஒன்றுதான் என்பது அவரது தீர்க்கமான முடிவு. இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது யாருக்கும் பயனற்றுப்போய் வீசப்பட்டுக் கிடக்கிறதே என்பது அவரது ஆதங்கம்.

அவரது தவிப்பை வீட்டில் யாரும் கண்டு கொள்வதாக இல்லை. உண்மையில் இந்த மணிக்கூடு குடும்பத்தில் எல்லோருக்கும் உதவி யிருக்கிறது. தினமும் பல தடவைகள் அதில் நேரம் பார்த்து தங்களது நாளாந்தக் கடமைகளை ஆற்றி வந்திருக்கிறார்கள். தங்களது வேலை களின் போது, வெளியே புறப்படும்போது, வேலை முடிந்து வீடு வந்து சேரும்போது என தன்னிச்சையாக எத்தனை முறை நேரம் பார்ப்பார்கள்.

இப்போது அது தன் இயக்கத்தை நிறுத்தி விட்டது பற்றி யாருக்கும் கவலையில்லை.

நேற்றும் கூட, அதை கல்வியங்காட்டில் பேர்பெற்ற கடையில் காட்டினார். இனிமேல் இதனை ஓடவைக்க முடியா தென்று திருத்துபவன் சொன்னது. அவரது காதில் உவப்பற்ற வார்த்தையாக ஒலித்துக் கொண்டிருந்தது.

மனம் எதிலும் ஒட்டாது திக்பிரமை பிடித்தவர் போலானார்.

நேற்றைய தினம் கடையில் நடந்தது நெஞ்சில் வந்து கனத்தது.

"தம்பி, இதை ஒருக்கா திருத்தித் தா மோனை. எப்படியாவது ஓடவைக்க வேணும் ராசா..." கேட்டார். அவன் அதைக்கழற்றிப் பார்க்கும்வரை பொறுமையாக நம்பிக்கையுடன் இருந்தார்.

"வாத்தியார் இதின்ரை வீலுகள் எல்லாம் உடைஞ்சு போச்சு."

"--------------------"

"ஏன் தம்பி, அதுகளைப் புதிசா வாங்கிப் போடேலாதே..." – சிறிது யோசனையின் பின் கேட்டார். இது வாத்தியார் பண்டைக் காலத்துச் சாமான்... இதுக்கெல்லாம் பாட்சுகள் இப்ப வாறேல்லை"

ஏளனப் பார்வையுடன் வார்த்தை களை உமிழ்ந்தான். "அப்ப தம்பி என்ன செய்யலாம்..."

"இதை எறிஞ்சுபோட்டு புதிசா ஒண்டை வாங்குங்கோ" என யோசனை யொன்றைக் கூறிய திருப்தியில் தன் வேலையில் மூழ்கிப் போனான்.

அவனது பேச்சில் நம்பிக்கையற்றவராக அவனை வெறித்துப் பார்த்துவிட்டு பக்குவமாக மணிக்கூட்டைத் தூக்கிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தினமும் இசக்கியல் வாத்தியாருக்கு நிம்மதியற்றே கழிந்தது.

***

மறுநாளும்...

அந்தப் பழைய சுவர் மணிக்கூடு பற்றிய நினைவுகள் அவரை ஆக்கிரமித்திருந்தன. மனம் எதிலும் நிலைகொள்ளாமல் தவித்தபடியிருந்தது.

ஒருவேளை பெரிய கடையில் இதனைத்திருத்தக் கூடிய திறமைசாலிகள் இல்லாமலா போவார்கள்

பஸ்ராண்டின் ராஜா தியேட்டரிருந்த இடத்துக்கு வலதுபக்க ஓடையில் நிறைந்து கிடக்கும் மணிக்கூடு திருத்தும் கடைகள் அவர்கண் முன் வந்து நின்றன.

எப்படியும் அதனைத்திருத்தி ஓடவைக்கவேண்டும் என்ற ஆதங்கம் மேலிட புதிய வலுவுடன் படுக்கையை விட்டு எழுந்தார்.

தான் பக்குவமாக வைத்த மணிக்கூட்டைத் தேடினார். சுற்றுமுற்றும் கண்களைக் கூர்மைப் படுத்திப்பார்த்தார். வைத்த இடத்தில் அதுதென்படவில்லை.

பதகளித்துப்போய் வெளியே வந்தார். குசினிக்கு வெளியே சடைத்திருந்த கறிவேப்பிலை மரத்தில் இலைகளை உருவிக் கொண்டிருந்த மகளை அழைத்தார்.

"ரூபி... ரூபி... பிள்ளை நேற்று மேசையிலை வைச்ச மணிக்கூட்டைக் காணேல்லை எங்கை பிள்ளை அது..."

"அவர் அதைப் பள்ளிக்கூடத்துக்கு கொண்டு போட்டார் அப்பா..." விட்டேத்தியாகப்பதில் வந்தது.

"ஏன்... ஏன்.. ஓடாத மணிக்கூட்டைக் கொண்டு போனவர். நான் அதைப்பெரியகடைக்குக் கொண்டுபோய் திருத்தலாமெண்டிருந்தன்"

தவித்துப்போன வாத்தியாரிடமிருந்து வார்த்தைகள் வெளிவந்தது.

"பள்ளிக்கூடத்திலை பிள்ளையளுக்கு நேரம் கணிக்கிறது பற்றிப் படிப்பிக்கப் போறாராம். அதுதான் கொண்டுபோனவர்..."

"பிறகு மருமேன் கொண்டுவருவார்தானை"

"இல்லையப்பா... அது இனிமேல் பள்ளிக்குடத்திலைதானாம் கிடக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானமாகக் கூறிவிட்டு கறிவேப்பிலையும் கையுமாக குசுனிக்குள் போனாள்.

இதைக்கேட்ட இசக்கியல் வாத்தியார் விக்கித்துப்போய் வீட்டுக்குள் திரும்பி நடந்தார்.

அங்கே மேசையில் கழற்றி வீசப்பட்ட சுவர் மணிக்கூட்டின் சிறுபாகங்கள் பரவிக்கிடந்தன. அதைக் கண்டதும் அவர் கண்கள் பனித்தன.

நெஞ்சின் ஆழத்திலிருந்து நெடுமூச்சொன்று வெளிவந்தது. தீராத வெப்பிசாரத்தில் அது விம்மலாக வெடித்தது.'"

**இதழ் - வைகாசி 2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் துளிர்ப்போம்

## க.பரணீதரன்

ஜீவநதி
சிறுகதைகள்
23

இருண்டு கிடக்கும் எங்கள் வாழ்வில், நீண்ட நாட்களின் பின் அம்மாவின் உள்ளத்தில் மலர்ச்சியும் முகத்தில் மகிழ்ச்சியையும் கண்டபோது எங்கள் உள்ளத்திலும் ஆனந்தம் துளிக்கிறது.

இரண்டு வருட முகாம் வாழ்வு முடிவுக்கு வரப் போகிறது. ஆனால் அண்ணா... அப்பா! இருவரையும் எண்ணியதும் ஏங்குகிறது. 'பூசாவுக்குக் கொண்டு போன அண்ணா அங்கே எப்படி இருக்கிறாரோ? அப்பா என்ன ஆனார்? வேதனை எங்களை எப்போதும் அரித்துக்கொண்டே இருக்கிறது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் ஆசிரிய ராகப் பணிபுரிந்து கொண்டிருந்த அண்ணா அப்போது வீட்டில் தான் நின்றார். போர் உக்கிரம் அடைந்த வேளை, "வீட்டுக்கு ஒருவர் வந்து போராட வேண்டும்" என வலுக்கட்டாயமாக வந்து இழுத்தார்கள். அண்ணாவை விட்டுவிடுமாறு கேட்டு அம்மா மன்றாடினா... கண்ணீர் விட்டு அழுதா... அவர்கள் காலில் விழுந்து கும்பிட்டா... எதற்குமே அவர்கள் இரங்கவில்லை.

இப்போது அண்ணாவைப் போல் எத்தனையோ பேரை பூசாவுக்குக் கொண்டு போயிருக்கிறார்கள். அண்ணா விடுதலை பெற்று என்றைக்கோ ஒரு நாள் வீட்டுக்கு வருவார். அந்த நம்பிக்கையோடு தான் நாங்கள் இருக்கிறோம். ஆனால், அப்பா...? தம்பி இடையிடையே அம்மாவிடம் கேட்டுக் கொண்டிருக்கிறான்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா... அப்பா எங்கே...? அம்மா... அப்பா எங்கே...?"

கண்ணீரைத் தவிர வேறு என்ன பதில் அம்மாவால் சொல்ல முடியும்?

துணிமணிகளை எல்லாம் உரப்பை ஒன்றில் கட்டிக்கொண்டிருக்க, 'சுறுக்கா வாங்க, உங்க எடத்துக்குப் போக பஸ் ரெடி' என்று பாதுகாப்பு அதிகாரி குரல் எழுகிறது. நாங்கள் துரிதமாக வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடுகிறோம்.

சாவகச்சேரி முகாமில் தஞ்சம் புகுந்து இரண்டு வருட காலம் பட்ட அவலங்களுக்கு முற்றுப்புள்ளி. இருளிலும் சின்னஞ்சிறிய ஒளிப்புள்ளி தோன்றுவது போல எண்ணி எல்லாருக்கும் தான் சிறிய ஆறுதல்.

நாங்களும் இன்னும் இருபத்தியாறு குடும்பங்களுமாக முல்லைத்தீவு நோக்கிப் பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கிறோம்.

போரின் வடுக்களாகத் தலையில்லாத முண்டங்கள் போல பனைகளும் தென்னைகளும் பசுமை போர்த்திக் கிடந்த வயல் வெளிகள் எல்லாம் பற்றையும் பள்ளமுமாக காடாகிக் கிடக்கின்றன.

எங்கள் மண்ணைப் பார்க்கப் பார்க்க கண்கள் கலங்கி வழிகின்றன.

வீதி நெடுக தொடர்ந்து காவலரண்கள்.

எங்கும் கைகளில் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு படையினர்.

பாதையில் இடையிடையே தடைகள், அவர்களது விசாரணைகள் எல்லாம் தாண்டி, முல்லைத்தீவு வந்து சேருகின்றோம்.

பஸ்வண்டி விட்டு இறங்குகின்றோம், எங்கள் மண்ணில் காலடி எடுத்து வைக்கும்போது உடல் சிலிர்க்கிறது. அம்மாவை நிமிர்ந்து பார்க்கிறேன். அம்மா வின் முகத்தில் ஓர் ஒளி . சொந்த வீட்டுக்குப் போகப் போகிறோம் என்ற திருப்தி.

மூவரும் எமது வீடு இருந்த வளவை நோக்கிப் புறப்படுகின்றோம். இந்தச் சமயம் அப்பாவும்... அண்ணாவும்... இப்பொழுது எங்களுடன் இருந்திருந்தால்... எல்லாரது மனங்களிலும் அவர்களுடைய நினைவுகளே நிறைந்திருக்க வேண்டும். ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதற்குத் தெம்பில்லாது மௌனமாகப் போய்க் கொண்டிருக்கிறோம்.

*****

அப்பா, அம்மாவை காதலித்து, பெற்றோர் சம்மதத்துடன் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர். அம்மாவின் சொந்த இடம் இரணைமடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவை திருமணம் செய்து கொண்டதோடு, அம்மாவின் உறவுகளுடனான தொடர்பும் அதிகம் இல்லாமற் போனது.

அப்பாவின் உறவுகளும் அம்மாவை மனம் விரும்பி வரவேற்க வில்லை. சந்தர்ப்பம் வாய்த்த போதிலெல்லாம் சுடு சொற்களால் அம்மா மனதைக் குத்தி வேதனைப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

'உவையளை வீட்டுத் தாவாரத்திலை தான் இருக்க விடோணும்' அகங்காரமான பெரியம்மாவின் வயிற்றெரிச்சல்.

'சீதனம் இல்லாமல் கட்டிக் கொண்டு வந்திட்டாரே' என்ற மாமிமாரின் குத்தல் பேச்சு.

இவைகள் எல்லாம் அம்மாவை நோகடிக்கத் தான் செய்தன. ஆனால் அப்பாவின் முழு அன்பும் ஆதரவும் அம்மாவுக்கு கிடைத்தது. அம்மா மகிழ்ச்சியாகவே வாழ்ந்தா...

ஆனால் இருவரும் சேர்ந்து வாழ்வதற்கு ஒரு சொந்த வீடில்லை. என்ன செய்வது! அப்பா பிறந்த வீடு இப்போது அவர் அக்காவுக்கு.

அந்த வீட்டைத்தவிர வேறு எங்கே போய்த் தஞ்சமடைவது! மாமி வீட்டில் தான் அம்மாவும் அப்பாவும் தங்கள் வாழ்க்கையை தொடங்கினார்கள். அங்கு தான் நாங்கள் மூவரும் பிறந்தோம். மாமிக்கு அப்பாவில் பாசம் அதிகம் தான். ஆனால் மாமிக்கும் வெளியில் சொல்லிக் கொள்ள இயலாத நெருக்குவாரம். அதனால் பல சந்தர்ப்பங்களில் அம்மாவையும் எங்களையும் மாமி பிறத்தியார் போல நடத்துவதாக தோன்றும்... இதை நினைத்து நினைத்து அம்மா வேதனைப்படுவா... 'எலி வளையானாலும் தனி வளை வேணும்' என அடிக்கடி கூறிக் கொள்வா.

"தம்பி, ஒரு அறையோடை எண்டாலும் ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டு போவன்டா" என்று இரகசியமாக மாமி அப்பாவை நச்சரிப்பா.

பாவம், அப்பா! ஆசிரியத் தொழில் பார்த்து வாங்கும் சம்பளத்தில் மூன்று பிள்ளைகளையும் பார்த்தெடுத்து, படிப்பித்து குடும்பம் நடத்த என்ன செய்வார்! இதற்குள்ளே ஒரு வீடு கட்டி முடிப்பதென்பது இலகுவான காரியமா!

மாமி வீட்டில் ஓர் அறையிலேயே எங்களது இருபது வருட வாழ்வு கழிந்து போனது. அப்பா தன் இயலாமையினால் சூடு, சுரணை அற்றவர் போல தானும் தன் பாடுமாக இருந்து கொள்வார். தேவையில்லாமல் அதிகம் கதைக்காத சுபாவமுடையவர் அவர். ஆனால் குடும்பத்துக்கு தேவையான வீடொன்றைப் பற்றி அவர் கனவு கண்டு கொண்டிருந்தார் என்பது யாருக்கும் வெளியே தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பச் செலவுகள் ஒரு புறம், சின்ன மாமிக்கு கட்டிக் கொடுத்த சீதன வீடு போக, தனது சம்பளத்தில் இருபது வருட காலம் சேமித்த தொகையை வங்கியில் போட்டு வைத்தார். பத்து இலட்சத்துக்கு வங்கிக் கடனும் பெற்றுக்கொண்டு ஒரு வீட்டைக் கட்டத் தொடங்கினார்.

அத்திவாரம் வெட்டுவது தொடக்கம் சீமெந்து, கல் அரிவது வரையுள்ள அனைத்து வேலைகளிலும் அப்பாவின் வியர்வையும் அம்மாவின் கூட்டுமுயற்சியும் கலந்திருந்தது.

வீட்டுக்கு போடப்பட்ட அத்திபாரத்தைப்பார்த்து விட்டு, ஊரும் உறவும் ஆலோசனைகள் ஆரம்பித்தார்கள்.

'மூன்றும் பெடியங்கள் தானே, ரண்டு அறையும் விறாந்தையும் போதுந் தானே...! ஏன் பெரிய எடுப்பெல்லாம்...!' அப்பா பலர் பேச்சுக்கு காது கொடுக்கவில்லை. ஆறு மாதத்திலேயே ஐந்து அறைகள் கொண்ட பெரிய ஒரு வீடு நிமிர்ந்து நின்றது. எல்லோரும் வாய் பிளந்து நின்றார்கள்.

பலர் தங்களுக்குள் இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள்.

'உவன் வாத்தி பேய் வாத்தியில்லை, கெட்டிக்காரன் தான்... அதிலும் உவன்ரை மனுசி உப்பிடி ஒரு பெரிய வீட்டைக் கட்டுவிச்சுப் போட்டாள்'

நல்ல மனங்கள் தங்களுக்குள் சொல்லிச் சொல்லி வாயூறின.

எங்கள் வீட்டில் ஒவ்வொரு பொருளிலும் அப்பாவின் வியர்வைத் துளிகளும் அம்மாவின் கண்ணீர்த் துளிகளும் கரைந்து கலந்திருந்தன.

புதிய வீட்டுக்குக் குடிபுகுந்த அன்று இரவு விறாந்தையில் வெறும் சீமேந்து நிலத்தில் படுத்துக் கொண்டு அம்மா சொன்னா :

"இண்டைக்குத் தானடா நான் நிம்மதியாகக் கால் நீட்டிப் படுக்கிறன். இனி எனக்குச் சா வந்தாலும் நான் கவலைப்பட மாட்டனடா... உங்களை இனிமேல் யாரும் நொட்டை பண்ண முடியாதடா..."

மாமி வீட்டில் ஓரறையில் அடைபட்டுக் கிடந்த விடலைகளான எங்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியறை. சாப்பாட்டு அறை, விருந்தினர் அறை, சமையலறை என எங்கள் வீடு விசாலித்து இருந்தது. அப்பாவின் விசாலமான உள்ளத்துக்கு ஆண்டவன் கொடுத்த கொடை அது.

வீடு கட்டி முடித்து மூன்று வருடங்களில் போர் உக்கிரமடைந்தது. எறிகணைகள், விமானக் குண்டுத் தாக்குதல்கள் எங்களை நிலை குலையச் செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியும் தாங்க முடியாதென்ற நிலையில் வீட்டை விட்டு, ஊரை விட்டு எல்லோரும் இடம்பெயர வேண்டிய நிர்ப்பந்தம்.

வீட்டை விட்டு வெளியேற எங்கள் ஒருவருக்கும் விருப்பமில்லை. வலுக்கட்டாயமாக பயிற்சிக்கென அழைத்துச் சென்றிருந்த அண்ணனைப் பற்றியும் ஒன்றும் தெரியவில்லை. இரண்டுமே எங்கள் எல்லோருக்கும் கவலையை தந்தது. அப்பா தான் எங்களுக்கு நம்பிக்கையூட்டினார். 'இப்போதைக்கு சனத்தோடை சனமாக மாறிப் போய்விட்டு போர் ஓய திரும்பி வந்து விடலாம். அண்ணாவுக்கு ஒன்றும் நேராது' என்று எங்களுக்கு தெம்பூட்டிக் கொண்டிருந்தார்.

எங்கள் மனங்களில் நம்பிக்கையை ஊட்டினாரே ஒழிய, அப்பாவின் யோசனை முழுவதும் அண்ணனையும் வீட்டையும் சுற்றித்தான். எங்களுக்குத் தெரியாமல் அண்ணனுக்காக தனிமையில் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் காலையில் 'ஒருக்கா வீட்டைப் பாத்திட்டு வாறன்' என்று போன வர் தான் அப்பா... நாங்கள் தங்கியிருந்த முகாமுக்கு திரும்பி வரவேயில்லை.

*****

எங்கள் வீட்டை நெருங்க நெருங்க எங்கள் நடையின் வேகம் அதிகரித்தது. அம்மாவின் விழிகளில் ஆவலோடு கண்ணீர் துளிகள் நிறைந்திருந்தன. அம்மா அப்பாவையும் அண்ணாவையும் நினைத்துப் பார்க்கிறா என்பதை நான் உணருகின்றேன்.

நாங்கள் சிறிது தூரம் நடந்து அந்தச் சந்திக்கு வருகின்றோம். சந்தியில் இருந்து இன்னும் சுமார் நூறு மீற்றர் தூரம் சென்றால் எங்கள் வீடு வரும்.

உரைப்பைகளைத் தோளிலும் தலையிலும் சுமந்து கொண்டு சற்றுத் தூரம் வருகின்றோம்.

இப்போது எங்கள் வீடு கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் தோன்றுகிறது.

அம்மா தலையில் அடித்துக் குழறுகின்றா...

"ஐயோ.. ஐயோ... வீடு... வீடு..."

எங்கள் வீட்டின் கூரையையே காணவில்லை. முன்விறாந்தைச் சுவர் நிலத்தில் சரிந்து விழுந்து கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவைச் சமாதானப்படுத்திக் கொண்டு ஒருவாறு வீடு வந்து சேருகின்றோம்.

வீடு எங்கும் குப்பை கூளங்கள் நிறைந்து, கறையான் புற்றெடுத்திருக்கிறது. அம்மா தட்டுத் தடுமாறிக் கொண்டு இரண்டொரு காலடி எடுத்து வைக்கிறா. காலில் ஏதோ தட்டுப்படுகிறது. குனிந்து எடுத்துப் பார்க்கிறா.

செல்லரித்துப் போன எங்கள் குடும்பப்படம்!

தலையிலடித்துக்கொண்டு அம்மா கதறி அழுகிறா. அம்மாவைக் கட்டிப்பிடித்துக்கொண்டு தம்பியும் அழுகிறான். என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கண்களில் இருந்து ஆறாகப் பெருகிறது.

அம்மா அந்தப் படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுகிறா.

அம்மாவின் கதறலைப் பார்த்து என்னால் சகிக்க முடியவில்லை. எனது கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டு, மெல்ல அவவின் கையிலிருந்த படத்தை வாங்கி விட்டு அம்மாவின் கண்ணீரை மெல்லத் துடைத்து விடுகிறேன்.

அம்மா தன் இரு கைகளாலும் எங்களை வாரி அணைத்துக் கொள்கிறா. நான் இப்போது இந்தக் குடும்பத்தில் என் பொறுப்பை உணர்கிறேன். அம்மாவின் கைகளிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டே அம்மாவிடம் சொல்கிறேன்.

"அம்மா, ஒன்றுக்கும் யோசியாதையணை.. எங்கடை சனங்கள் எத்தனை பேர் எத்தனை உயிர்களைப் பலி கொடுத்திட்டினம். எத்தனை பேருடைய வீடுகள் தரைமட்டமாப் போச்சு... அப்பான்ரை புண்ணியத்திலை இந்த வீடு இந்தளவாவது காப்பாற்றப்பட்டிருக்கு... நாங்கள் கூடிய கெதியிலை இதைத் திருத்தி முந்தின மாதிரி ஆக்குவமணை... அண்ணனும் வந்திடுவார்... அப்பாவும் வரத்தான் போறார்..."

அம்மா தன் கையினால் என் நெஞ்சை மெதுவாகத் தடவிக் கொடுக்கிறா. எனக்கு சுகமாக இருக்கிறது.

**இதழ் - 28 தை - 2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபியானின் சாகசங்கள்

அஷ்ரஃப் சிஹாப்தீன்



"இந்த இழவப் பேசுங்க... இல்லாட்டி மூடி வெய்ங்களன்."

என்ற அன்பு கொஞ்சும் வார்த்தை களில் பொய்க் கோபம் கலந்து அவனிடம் சொன்னாள் சுபியானின் மனைவி.

கைத்தொலைபேசியை 'ஓன்' செய்து பத்து நிமிடங்களுக்குள் மூன்று தடவைகள் தானாகச் சிணுங்கித் தானாக அடங்கி விட்டிருந்தது. அதைக் கண்டுதான் அவள் அப்படிச் சொன்னாள்.

அழைக்கும் இலக்கங்களைப் பார்த்து விட்டு அவன் அதைக் கையிலெடுக் காமல் தேர்தல் முடிவு களை அறிவிக்கும் ஒளி பரப்பில் லயித்திருந்தான். தொலைக்காட்சியில் 'ஆய்த எழுத்து' படம் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

யாருக்குப் பதிலளிக்க வேண்டும் யாருக்குப் பதிலளிக்கக் கூடாது என்பது அவனுக்கு மட்டுமே தெரியும். காலையில் எழுந்ததும் வீட்டுத் தொலை பேசியின் தொடர்பைக் கழற்றி விட்டிருந்தான்.

முறுக வறுக்கப்பட்ட முந்திரிப் பருப்புகளை ஒரு பாத்திரத்தில் கொண்டு வந்து அவன் அமர்ந்திருந்த கதிரைக்கு முன்னாலிருந்த டீப்போவில் வைத்து விட்டு,

"ஒங்களுக்கு பிளேன்டி ஊத்தயா... டீ ஊத்தயா?" என்று அவனது மனைவி கேட்ட வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது முறையாகக் கைத்தொலைபேசி சிணுங்கியது.

"ம.." என்று பதில் சொல்லி விட்டு அழைக்கும் இலக்கத்தைப் பார்த்தான்.

போதகர் போல் அன்ரனி!

இந்தப் போதகரைக் காட்டித்தான் தலைவரிடமிருந்து பெருந் தொகையொன்றை அவன் சுருட்டிக் கொண்டு வந்திருந்தான்.

திட்டமிட்டு அவன் தலைவரிடம் கொண்டு சென்றவர்களை விடத் தானாகவே வந்து விழுந்த வாய்ப்புத்தான் போதகரின் தொடர்பு. தலைவர் ஒரு நேர்மையான அரசியல்வாதி என்ற போதகரின் கருத்தை அவன் புத்திசாலித்தனமாகப் பணமாக்கிக் கொண்டான்.

ஆயுதங்களின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் அரசியல்வாதிகளின் மீது போதகருக்கு நாட்டம் இருக்கவில்லை. தனக்கு வாக்களித்த மக்களுக்கு மட்டுமன்றி இன, மத, பிரதேச வேறுபாடு காட்டாமல் பன்னிரண்டு வருடங்களாகச் சேவை செய்த தலைவரின் அரசியல் போதகருக்குப் பிடித்திருந்தது. அவரது பிரதேசத்தைச் சேர்ந்த சுபியான் தலைவரிடம் நெருக்கமுள்ளவனாக இருக்கிறான் என்பதைப் போதகர் அறிந்திருந்தார். தலைவருக்குத் தம்மிடமும் தம்மைப் போன்ற ஏனைய போதகர்கள் மீதும் நம்பிக்கை வைத்துள்ள மக்களின் வாக்குகளைத் தேர்தலில் தலைவருக்குப் பெற்றுத் தருவதாகத் தாமாகவே வந்து தெரிவித்த போது சுபியான் மலர்ந்து போனான்.

போதகரின் பிரதேசத்தில் பத்து நாட்கள் வேலை செய்யப் போவதாகச் சொல்லிப் பத்து லட்சம் ரூபாய்களைத் தலைவரிடமிருந்து சுபியான் பெற்றுக் கொண்டான். எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாத போதகருக்குத் தெரியாமல் இப்பணத்தைப் பெற்றுக் கொண்ட அவன் அப்பணத்தைக் கொண்டு குறையாக இருந்த அவனது வீட்டைக் கட்டும் வேலையைத் துரிதப்படுத்தினான்.

போதகரின் பிரதேசத்தில் தலைவரின் போஸ்டர் ஒட்டு பவர்களுக்கு இரண்டாயிரம் மூவாயிரம் என்று சிறு சிறு தொகைகளை வழங்கி விட்டுப் பணத்தில் பெரும் தொகையைச் சுருட்டிக் கொண்டான். அதன் பிறகு அவனது மூளை சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியது.

சுபியான் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பமொன்றில் பிறந்தவன். அரசாங்கப் பாடசாலையொன்றில் துப்பரவுத் தொழிலாளி யாகத் தொழில் செய்து வந்தான். இயல்பில் எல்லோருடனும் நெருக்கமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் சினேகமாகவும் பழகும் சுபாவம் அவனுக்கிருந்தது. அந்தச் சினேகத்தைப் பயன்படுத்தி அவன் ஊசி நுழைக்கும் இடத்தில் உலக்கையை நுழைத்து விடும் குள்ளத்தனமான ஆசாமி என்பதை அவனது ஊரார் அறிவார்கள்.

இளவயதில் அவனுக்கு ஒரு பலவீனமாக இருந்த அந்தக் குள்ளப் புத்தியை வளர்ந்த பிறகு ஒரு பலமாக மாற்றிக் கொண்டான் சுபியான். அவனைப் பற்றி நன்கு அறிந்திருந்த அவனது பிரதேசத்தவர்கள் அவனை அங்கீகரிக்க மறுத்தனர். அதாவது அவனைப் பொறுத்த வரை அவனது ஊரவர்கள் 'துட்டனைக் கண்டால் தூர நட' என்பது போல் நடந்து கொண்டனர். இன்று வரை அந்த அங்கீகார மறுப்பு இருந்தாலும் கூட அதை வேறு ஒரு நபரில் வேறு ஒரு பிரதேசத்தில் அவன் பெற்றுக் கொண்டான்.

அதில் துரதிர்ஷ்டவசமாக மாட்டிக் கொண்டவர் அயலூர் அரசியல் தலைவர். சுபியானின் ஊரில் தனது அரசியலை முன் கொண்டு செல்லத் தலைவருக்கு ஓர் ஆள் தேவைப்பட்டான். அப்படியே வந்து ஒட்டிக் கொண்டான் சுபியான். அதன் பிறகு தலைவருக்கு எல்லாமே அவனாகிப் போனான்.

அவனது சுறுசுறுப்பும் வேகமும் தலைவருக்குப் பிடித்திருந்தது. தலைவர் காலால் இட்டால் தலையால் செய்து முடிப்பது போல் நடித்தான். தலைவருக்காக உயிரை விட்டுவிடத் தயாராக இருப்பது போல் பாவனை செய்தான். தலைவர் அவனது நடிப்பை உண்மையென்று நம்பினார்.

சுபியான் எந்தச் செயற்பாட்டையும் பதறிப் பதறியே செய்வான். கூட இருக்கும் அத்தனைப் பேரையும் ஒரு பதற்ற நிலைக்குக் கொண்டு வந்து விடுவான். மடிக்குள் நெருப்பு விழுந்தவனைப் போலப் பதறிப் பதறிக் கதைப்பான். நாளைக்கு உலகம் அழிந்து விடப்போகிறது என்கிற தினுசில் துடிக்கும் அவனது நடத்தை தலைவரின் அரசியலில் அபிமானங் கொண்டவர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்திற்று. ஒரு புயலைப் போல் நுழைந்து அந்த இடத்தின் நிலைமையையே ஒரு கணத் தில் மாற்றிவிட்டுச் செல்லும் அவனது போக்கைக் கண்டு தலைவரின் அபிமானிகள் தலைவரை எச்சரித்தனர்.

சுபியான் போன்ற ஒருவன் ஹொலிவூட்டில் இருந்திருந்தால் மாலன்பிரண்டோ, அந்தனி குயின் போன்றவர்கள் சுபியானிடம் பிச்சை எடுக்க வேண்டி யிருந்திருக்கும். தமிழ் நாட்டில் பிறந்திருந்தால் சிவாஜி கணேசன், கமலஹாசன் போன்றோர் நடிப்பைக் கைவிட்டிருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை எச்சரித்த உண்மையான விசுவாசி களையே எச்சரிக்கும் நிலைக்குத் தலைவர் வந்திருந்தார். அதாவது தலைவரை அந்த நிலைக்கு அவன் மாற்றியிருந்தான். தலைவருக்கு இவன் சூனியம் செய்து விட்டதாகவும் கூட அரசல் புரசலாகக் கதையிருந்தது.

காலம் செல்லச் செல்லத் தலைவரின் உடன் பிறப்புக்களையும் உறவினர்களையும் தன்மீது சந்தேகப்படும் தலைவரின் அபிமானிகளையும் மிரட்டும் அளவுக்கு சுபியான் துணிந்தான். "நான் தலைவரின் அரசியலை முன்னெடுப்பவன். மக்களோடு இருப்பவன். நான் சொல்வதை நீங்கள் செய்து தரவேண்டும்" என்று தலைவரின் அதிகாரிகளுக்குப் பெருங் குரலில் உத்தரவு போட்டான். வெறுத்துப் போன தலைவரின் அபிமானி களான புத்தி ஜீவிகள் பலர் ஒதுங்கிப் போனார்கள்.

"தும்புக் கட்டைக்குப் பட்டுக் குஞ்சம் கட்டிப் பள்ளி வாசலுக்குள் கொண்டு போனாலும் அதைக் கொண்டு குப்பை கூட்டலாமே தவிர ஆஸாக் கோலாகப் பயன்படுத்த முடியாது" என்று தலைவரின் உறவினர் ஒருவர் ஒருமுறை தலைவரிடம் முறையிட்ட போது 'சுபியானின் விடயத்தில் தலையிட வேண்டாம்' என்று உறுதியாக அவருக்குச் சொல்லி விட்டார் தலைவர்.

சுபியான் தன் தப்பாட்டத்தில் மும்முரமாயிருந்தான்.

***

தலைவரின் காதுகளுக்குச் செய்தி செல்லும் வகையில் அவ்வப்போது சில வதந்திகளைப் பரப்பி விடுவான் சுபியான். அவன் பரப்பிய முதலாவது வதந்தி விடுதலைப் புலிகள் அவனைக் கொலை செய்யத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது. அவனது நெருங்கிய உறவினரைக் கொண்டு இந்தச் செய்தியை அவன் பரவ விட்டான்.

இந்தச் செய்தி வெறும் 'டும்' என்பது தலைவரின் அபிமானி களுக்குப் புரிந்தது. புலிகள் ஒரு சொறி நாய்க்கு ஒரு புல்லட்டைச் செலவழித்தாலும் இவனைப் போன்ற ஒருவனைக் கொல்லப் பயன் படுத்தப் போவதில்லை என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. சுபியான் எதற்கோ திட்டமிடுகிறான் என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

இந்த வதந்தியை அவிழ்த்து விட்ட இரண்டு வாரங்களில் தலைவரைச் சந்தித் தான் சுபியான். அரசியற் செயற் பாடுகளை வேகமாக முன்னெடுக்கத் தனக்கு ஒரு வாகனம் தேவை எனத் தலைவரிடம் கோரிக்கை விடுத்தான் சுபியான். உயிராபத்தில் இருக்கும் சுபியானுக்கு வாகனம் தேவை என்று தலைவர் கருதி ஒரு வாகனத் தைப் பெற்றுக் கொடுத்தார். இரண்டாம் மாதம் அதற்கு எரி பொருள் செலவுக்கு மாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் பணம் கேட்டு வந்து நின்றான். தலைவரின் அரசியல் முதுகெலும்பல்லவா அவன்? பணம் வழங்கப்பட்டது.

ஆறுமாதங்களுக்கு ஒரு முறை தேய்ந்த டயர்களுடன் வாகனத்தைக் கொண்டு வந்து நிறுத்திப் புதிய டயர் போட்டுத் தரக் கோரினான். எல்லாப் பிரதேசங்களையும் சேர்ந்த மக்களை ஏற்றி இறக்கிப் பணிபுரிவதாலும் தலைவரின் சேவைகளை மக்கள் மயப்படுத்துவதாலும் அவ்வாகனத்தின் டயர்கள் சீக்கிரமே தேய்ந்து விடுவதாகக் கதை விட்டான்.

புதிதாக டயர்களைப் போட்டுக் கொடுத்தால் அவற்றைக் கழற்றி விற்றுக் காசாக்கி விட்டுப் பழைய டயர்களுடன் அந்த வாகனத்தை ஓட்டித் திரிவதை தலைவரின் அபிமானிகள் கண்டு பிடித்தார்கள். தலைவரைச் சந்தித்துப் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புவோரிடம் பணம் பெற்றுக் கொண்டு வாகனத்தில் ஏற்றித் தலை நகருக்கு அழைத்து வருவதைத் தலைவரின் அதிகாரிகளால் அறிய முடிந்தது. ஆனால் அவர்களால் அது பற்றி மூச்சு விடக்கூட முடியவில்லை. அவன் அவிழ்த்து விட்ட இரண்டாவது வதந்தியின் நோக்கம் தலைவர் உண்மை விளங்கித் தன்னைத் கழற்றி விட்டு விடக் கூடாது என்பது. தலைவரின் எதிர் அரசியல்வாதி ஐம்பது லட்சம் ரூபாவுக்குத் தன்னை விலைபேசுகிறார் என்பதுதான் அந்த வதந்தி. தலைவர் அவனை அழைத்து விசாரித்த போது தனது மனைவியின் பெயரால் உண்மை என்று சத்தியம் பண்ணினான். கோடிக் கணக்கில் தந்தாலும் தலைவரை விட்டுப் போவதில்லை என்று தலைவரின் கரங்களைப் பிடித்து 'அல்லா' மீது சத்தியம் செய்தான். இந்தச் செய்தி கேள்விப்பட்ட தலைவரின் அபிமானிகள் 'கோடி ரூபாய் என்ன, ஒரு கட்டுப் புகையிலை கொடுத்துக் கூட அவனை யாரும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள்' என்று அங்கலாய்த்தனர்.

தனது பிரதேசத்தில் தன்னோடு இருந்தவர்களையெல்லாம் அழைத்து வந்து தலைவருக்கு அறிமுகப்படுத்தினான் சுபியான். அவர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது முன்னூறு வாக்குகளைத் தம் கைவசம் வைத்திருப்பவர்கள் என்று தலைவருக்குப் படம் காட்டினான். பிறகு அவர்கள் பிரிந்து சென்று விடாமல் நம்மோடு இருக்க வேண்டும் என்பதால் அவர்களுக்கு மாதாந்தம் பத்தாயிரம் முதல் பதினையாயிரம் ரூபாய்கள் வழங்குவ தற்குத் தலைவருக்கு ஆலோசனை கூறினான். அவ்வாறு அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தைத் தனது மனைவி யின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறும் தான் அதனைப் பிரித்துக் கொடுப்பதாகவும் கேட்டுக் கொண்டான். அவ்வாறு மாதாந்தம் வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந் தொகைப் பணத்தில் பாதியைக் கொடுத்து விட்டு மீதியை சுபியான் சுருட்டிக்கொண்டான்.

சுபியான் தலைவருடன் இணைவதற்கு முன்னர் இரண்டு தேர்தல்களில் அவனது பிரதேசத்திலிருந்து தலைவருக்கு முன்னூறு வாக்குகள் விழுந்திருந்தன. தலைவரின் கருத்தில் சுபியான் பெரும் அரசியல் கில்லாடி என்பதால் அவன் மூன்றாவது தேர்தலில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளை எல்லாப் புறத்திலும் பெற்றுத் தருவான் என்று தலைவர் மிகக் கடுமையாக நம்பினார்.

சுபியானின் நம்பிக்கை வேறு விதமாக இருந்தது. இந்தத் தேர்தல் முடிவதற்குள் தான் தவணை முறையில் பணம் செலுத்தும் வகையில் பெற்றிருந்த காருக்கும் புதிய வீட்டுக்கென வாங்கிய பெரிய ரீ.வீ. ரேடியோ செற், சோபா செற் ஆகியவற்றுக்கும் கணக்கு வழக்கை முடித்து விடுவதுடன் வீட்டையும் கட்டி முடித்துவிடுவது என்று தீர்மானித்தான்.

***

தமது சிறு சிறு தேவைகளுக்காகத் தலைவரை சுபியான் மூலம் சந்தித்த பலர் இருக்கிறார்கள். வெவ்வேறு ஊர்களைச் சேர்ந்த இவர்களுடன் சுபியான் தொடர்ந்து உறவைப் பேணி வந்திருந்தான்.

கைத்தொலைபேசிக்கு வந்த முதலாவது அழைப்பு ஓர் அரச அதிகாரி யிடமிருந்து வந்திருந்தது. தலைவர் மூலமாக அந்த அதிகாரிக்கு சுபியான் இடமாற்றம் ஒன்றைப் பெற்றுக் கொடுத் திருந்தான். இடமாற்றம் பெற்றுத் தரக் கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்குப் பத்தாயிரம் ரூபாவும் அந்த அதிகாரியின் திணைக்களத்தில் உள்ள ஒருவருக்கு வழங்கவென இருபத்தையாயிரம் ரூபாவையும் அதிகாரியிடமிருந்து பெற்றிருந்தான்.

தேர்தல் வேளையில் அந்த அதிகாரியைக் காட்டி அவரிடம் ஆயிரம் வாக்குகள் இருப்பதாகச் சொல்லித் தலைவரிடம் இரண்டு லட்சம் ரூபாயைப் பெற்றுக் கொண்டான். தனது பெயரால் சுபியான் தலைவரிடம் பணம் பெற்றதை அறியாத அப்பாவி அதிகாரி தலைவரில் கொண்ட அபிமானத்தால் சுபியானிடம் பேசுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்.

அடுத்த அழைப்பு ஒரு கோவில் தலைவரிடமிருந்தும் இன்னொன்று தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து தலைவரால் கணினி ஒன்று வழங்கப்பட்ட ஒரு பொதுச் சங்கத்தின் தலைவரிடமிருந்தும் வந்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது ஒவ்வொரு தேவைக்கும் தலைவரைச் சந்திக்க வரும் போது தனது சிறு சிறு தேவைகளை அவர்களைக் கொண்டு சுபியான் நிறைவேற்றிக் கொள்ளத் தவறியதேயில்லை. அப்படி நிறை வேற்றிக் கொள்ளும் அதே வேளை அடுத்த தேர்தலில் தலைவருக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் வாக்குகளைப் பெற்றுத் தரவேண்டும் என்றும் கோரிக்கைகளை முன் வைத்திருந்தான். அவர்களும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தலையை அசைத்துக் கொள்வார்கள்.

போதகரைத் தலைவருக்கு அறிமுகப்படுத்திய பிறகு இவர்களை ஒருவர் இருவர் என அழைத்துக் கொண்டு சென்று தலைவரைச் சந்திக்கச் செய்தான் சுபியான். சந்திக்கும் போது ஒவ்வொருவரும் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் வரை வாக்குகளைப் பெற்றுத் தருவதாகத் தலைவரிடம் உறுதியளிக்கும் படி கேட்டுக் கொண்டான். சந்திப்புக்குப் பின்னர் இவர்களுக்குத் தேர்தல் செலவுகளுக்கு வழங்கவென இரண்டு லட்சம் முதல் ஐந்து லட்சம் ரூபாய்கள் வரை தலைவரிடம் பெற்றுக் கொண்டான் சுபியான். அந்தப் பணத்தில் தலைக்குப் பத்தாயிரம் அல்லது பதினையாயிரம் என்று போக மீதியைத் தானே சுருட்டிக் கொண்டான்.

இவ்வாறு பெற்றுக் கொண்ட பணத்தில் தேர்தல் தினத்துக்கு முன்னரே வீட்டைக் கட்டி முடித்துக் குடியேறினான். தவணைக் கட்டணத்தில் பெற்ற கார் முதல் கதிரை வரை எல்லா மீதிகளையும் செலுத்தி முடித்தான்.

இவ்வாறு சுபியானுக்கு மட்டும் நாற்பது லட்சம் ரூபாய்களைக் கொடுத்த தலைவர் தேர்தலில் தோல்வியுற்றார்.

சுபியானின் சொந்த ஊரிலேயே அவனுக்காக இருநூற்று ஐம்பது வாக்குகள் விழுந்திருந்தன.

***

வறுத்த முந்திரிப் பருப்புகளைக் கொறித்த படி இதோ தொலைக் காட்சிக்கு முன்னால் சுபியான் அமர்ந்திருக்கிறான். அவன் யாரைக் கொண்டு தலைவரிடம் பணம் சுருட்டினானோ அவர்கள் தலைவர் மீது கவலைப் பட்டு அவனது கைத்தொலைபேசிக்கு அழைப்புக்கு மேல் அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

போதகரின் அழைப்பையும் தவிர்த்து விட்டுத் திரைப்படத்தில் மூழ்கியிருந்தான் சுபியான்.

வீட்டுச் சுவர்களுக்குப் புதிதாகப் பூசப்பட்ட இள நீல வர்ணத்தின் வாசம் அவனது மனதுக்கு இதமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை தலைவரைப் பார்த்து விட்டுத்தான் மற்றவர்களுடன் பேச வேண்டும் என்று நினைத்தான் சுபியான்.

குறுக்கறுத்த அவனது மனைவி,

"தலைவருக்கு என்ன சொல்லப் போறீங்க?" என்று கேட்டாள்.

"கட்டிப் புடிச்சிக் கத்தினா எல்லாம் செரியாப் போகும் புள்ள!" என்று சொல்லிச் சிரித்தான்.

**இதழ் - 27 மார்மழி - 2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயம்

## கார்த்திகாயிணி சுபேஸ்

குழந்தைகளின் ஆரவாரத்தால் கலகலத்துக் கொண்டிருந்தது வீடு.

அங்கும் இங்கும் ஓடி விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் நித்தியா.

'இன்று எனக்கும் ஒரு குழந்தையிருந்திருந் தால் இவர்களுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்குமல்லவா...?' என்ற நினைவு நெஞ்சை இறுக்க கண்களில் நீர் முட்டி நின்றது.

மிகவும் பிரயத்தனப்பட்டு கண்களில் நிறைந்த நீரை வெளியில் சிந்தவிடாது கண்களுக்குள்ளேயே அடக்கிக் கொண்டாள்.

இது அவளுக்குப் பழகிப் போய்விட்ட ஒரு செயல்.

தனக்குக் குழந்தையில்லையே என்ற கவலையை முகத்திலும் செயலிலும் காட்டிக் கொள்ளாமல் இதயத்தின் ஓர் அறையில் போட்டு மூடிவிட்டு எந்தநேரமும் கலகலப்பாய் இருப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருப்பவளுக்கு கண்ணீரை அடக்குவதும் கைவந்தகலை இல்லையில்லை கண் தந்த கலையாகிவிட்டதில் வியப்பேதும் இல்லையே!.

'அவளுக்குப் பிள்ளை இல்லையெண்டகவலை கொஞ்சமும் இருக்கிற மாதிரித் தெரியவில்லை' என்று சித்தி ராஜம் சொல்லும் போது மெலிதாகச் சிரித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுச் செல்வாள் நித்தியா. குழந்தைக்காக ஏங்கும் இவளின் ஏக்கத்தை கூடவே இருக்கும் கணவன் பார்த்திபன் மட்டுமே அறிவான்.

நேற்று நடந்த மாமாவின் மகனின் திருமண வீட்டிற்கு கணவன் பார்த்திபனுடன் வந்த நித்தியாவை 'நின்று நாளைக்குப் போகலாமே' என கட்டாயப்படுத்தி மறித்துவிட்ட மாமியின் சொல்லை மீறமுடியாமல் போய்விட்டது அவளால்.

இவர்களோடு இன்னும் சில உறவினர்களும் நின்றார்கள் அவர் களின் குழந்தைகள் அந்த மாலை நேரத்தில் முற்றத்தில் போடப்பட்டிருந்த மணப் பந்தலினுள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் விளையாட்டை அங்கு அடுக்கிவைக்கப்பட்டிருந்த கதிரை ஒன்றில் இருந்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் நித்தியா.

நித்தி... இந்தா இவளக் கொஞ்சம்பிடி... அவர் தேத்தண்ணி கேட்டவர் போட்டுக் குடுப்பம் எண்டால் விடுறாளில்லை; என்றவாறு குழந்தையை நீட்டினாள் வேணி.

குழந்தையை வாங்கி மடியிலிருத்தினாள் நித்தியா தலையை நிமிர்த்தி இவளைப் பார்த்த குழந்தை கண்ணைச் சிமிட்டிச் சிரித்தது.

'நித்தி உனக்கும் தேத்தண்ணி போடவே'

'இல்ல வேண்டாமக்கா'

'பார்த்திபன் குடிப்பாரோ...

'அவர் இஞ்ச இல்ல கடைக்குப்போட்டார்'

'அப்பசரி.. நீ கொஞ்சநேரம் இவளைப் பார்த்துக் கொள் நான் 'டக்' கெண்டு வந்திடுறன்.' என்று சொல்லி விட்டு வேணி போனதும் குழந்தையிடம் பார்வையைத் திருப்பினாள் நித்தியா. குழந்தை மீண்டும் அவளைப் பார்த்துச் சிரித்தது. 'என்னடா... எங்கட சாருக்குட்டி பாப்பா குடிச்சிட்டுதா...' என குழந்தையிடம் கதை கேட்க அது அவளது வாயில் தனது கையை வைத்துச் சிரித்தது.

மெத்தென்ற குழந்தையின் பிஞ்சுக்கையைப் பிடித்துத் தன் கன்னத்தில் வைத்து அக் குழந்தையின் அழகை ரசித்தபடி சிந்தையில் ஆழ்ந்தாள் நித்தியா.

நித்தியாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். ஆனால் இப்பொழுதெல்லாம் குழந்தைகளை தூக்கி வைத்திருப்பதை அவள் தவிர்த்து விடுகிறாள். அதற்கு காரணமும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையை வைத்திருக்கும் போதுதெரியாதவர்கள் என்றால் 'உங்கள் குழந்தையா' எனக் கேட்பார்கள் 'இல்லை' என்று பதில் சொன்னால் 'உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்' என அடுத்த கேள்வியைக் கேட்பார்கள்.

தெரிந்தவர்கள் என்றால் 'உன்ர பிள்ளையை வைச்சுக் கொஞ்ச வேண்டிய நேரத்தில ஆற்றையன் பிள்ளையளை வச்சு கொஞ்சிக் கொண்டிருக்கிறாய்' ஆசைக்கு ஒரு பிள்ளையை எண்டாலும் பெத்துப் போடு..' என்பார்கள்.

இவ்வாறான தேவையற்ற மனதுக்குப் பிடிக்காத பேச்சுக்களைத் தவிர்ப்பதற்காகவே அவள் குழந்தை களை தூக்குவதைக் குறைத்துக் கொண்டாள்.

இந்தமாதிரி தேவையற்ற மனக்கசப்புக்களை தவிர்ப்ப தற்காகவே அவள் எந்த நல்லது கெட்டதுக்கும் போவதைத் தவிர்த்தாள். ஆனால் இத்திருமண நிகழ்வுக்கு வரவேண்டிய கட்டாயம் வந்துவிட்டாள். எது நடக்கக் கூடாது என அவள் நினைத்தாளோ அதுவும் நடந்து விட்டது.

நேற்றும் இக்குழந்தையைத் தான் தூங்க வைத்துக் கொண்டிருந்தாள் நித்தியா.. அப்போது அருகில் இருந்த ஒரு பெண்மணி

'இது உங்கட பிள்ளையா...?' என்னபெயர் என்றாள்

'சாருஷா.. அக்காவின் மகள்'

'உங்களுக்கு எத்தினை பிள்ளையள்..?'

'... பிள்ளைகள்... இல்லை..'

'கலியாணம் முடிச்சு கனகாலமோ...?'

'ஐஞ்சு வருஷமாகுது...'

'ஏன் வைத்தியம் ஏதும் செய்யேல்லையே...

'செய்து கொண்டு தான் இருக்கிறம்'

அதற்கு மேல் அங்கிருக்க மனமில்லாமல் குழந்தையையும் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள்ளே சென்று விட்டாள் நித்தியா.

சிலர் பார்க்கும் பார்வையே இவளுக்கு இன்னும் பிள்ளை இல்லையா என்பதைப்போல் ஒரு மாதிரிப் பார்ப்பார்கள். அந்தப் பார்வைகள் பேச்சுக்களில் இருந்து தப்புவதே பெரும் பாடாய் இருந்தது அவளுக்கு. எப்போது வீட்டுக்குப் போவோம் எனக் காத்திருந்தவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திபன் வருவதைக் கண்டவுடன்.

'ஏனப்பாஇவ்வளவு நேரமும் நிண்டனீங்கள் ஆறுமணியாக போகுது வாருங்கோவன் வீட்டுக்குப் போவம்'என ஆவலோடு கேட்டாள்.

அவன் பதில் சொல்வதற்கு முன்...

'என்ன அவசரம் ஆறுதலாப்போகலாம் தானே? பிள்ளையா குட்டியா,' என்றாள் அயல்வீட்டுக்காரி ஒருத்தி. தீயைத் தொட்டதுபோல சட்டெனத் திரும்பி நித்தியாவைப் பார்த்தான் பார்த்திபன்.

கைகளைப் பிசைந்தபடி நிமிர்ந்தால் கண்ணை நிறைத்து இருக்கும் நீர் வெளிவந்துவிடுமோ என்ற பயத்தில் தலையைக் குனிந்தபடி நின்றாள் நித்தியா. மெல்லிதாக நடுங்கிக் கொண்டிருக்கும் அவளது கைகள் கோபத் தைக் கட்டுப்படுத்த பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தன. அவளைப் பார்க்க பார்த்தி பனுக்கு பாவமாக இருந்தது.

'சீ... எனக்கே இப்படி இருக்கிறது என்றால் பாவம் அவளுக்கு. இந்தச் சனங்களுக்கு வேறவேலை இல்லை. ச்சா..' மனதுள் புழுங்கினான் பார்த்திபன்.

'ஏன் பிள்ளை. நீ கலியாணம் கட்டி ஐஞ்சாறு வரியம் இருக்குமே... கூனோ.. குருடோ.. பிள்ளை ஒண்டப் பெத்தால் தான் நாலுசனம் மதிக்கும்.. இல்லாட்டி மலடி எண்ட..... 'ஐயோ...! கொஞ்சம் நிப்பாட்டு றீங்களா...?; அடக்கி வைத்த ஆதங்கம், ஆத்திரம் எல்லாவற்றையும் சேர்த்து கொட்டிய நித்தியாவின் வார்த்தைகளால் நிஷப்தமானது வீடு. 'பிள்ளையில்லை எண்டால் இந்த உலகத்தில சந்தோஷமா வாழவே முடியாதா... பிள்ளையளப் பெத்தவை எல்லாரும் ஏதோ சந்தோஷமா இருக்கினம் எண்டமாதிரி கதைக்கிறீங்கள்... பிள்ளையளப்பெத்தால் ஏதோ ஒருவகையில் அதுகளால கஸ்ரப் பட்டுத்தான் ஆகவேண்டும். ஏன் நீங்கள் சந்தோஷமா இருக்கிறியளோ.. 'நான் பத்துப்பிள்ளையளப் பெத்தன் ஒண்டு கூட என்னைத் திரும்பிப் பாக்கிறதில்லை' எண்டு ஊர் முழுக்கப் புலம்பிக் கொண்டு இருக்கிறீங்கள்.. இண்டைக்கு உங்கட பேத்திக்கு நடந்தது என்ன? ஒரே ஒரு பொம்பிளப்பிள்ளை எண்டு கண்ணுக்குள்ள வச்சு வளர்த்த உங்கடமகள், அவளுக்கு என்ன நடந்தது? காதலிச்சவன் ஏமாத்திப் போட்டான் எண்ட கவலையில விசராக்கி இன்னும் சுகமாக முடியாமல் ஒவ்வொரு நாளும் செத்துச் செத்து வாழ்ந்து கொண்டி ருக்கிற உங்கட மகளின்ர நிலை உங்களுக்கு தெரியாதா? சரஸ்வதி அக்காவுக்கு பிறந்த ஊனமான பிள்ளையால அவவுக்கு எவ்வளவு கவலை. தனக்குப்பிறகு ஆர் அந்தப் பிள்ளையைப் பாப்பினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்டு எல்லாரிட்டையும் சொல்லி கவலைப்படுறது தெரியாதே; சுனாமி வந்த நேரம் பெத்தபிள்ளையள் செத்துப் போக தாய்மார் விட்ட கண்ணீர் உங்களுக்கு தெரியாதே? எல்லாம் தெரிஞ்சு கொண்டும் நீங்கள் இப்படிக் கதைக்கலாமே இவையள விட ஒருவகையில் நான் குடுத்து வைச்சவள் மூச்சு வாங்கப் பேசினாள் நித்தியா.

'நித்தியா சரி, சரி, விடும். வாரும் போவம்...'

'பார்த்திபன் சூழ்நிலை புரிந்து அவளைக் கூப்பிட்டான்'

'இந்த கலியாண வீட்டில எத்தினை பேர் என்னட்ட இந்தக் கேள்வியைக் கேட்டவை என்டு தெரியுமே.. உங்களுக்கு... இதுக்குத் தான் நான் ஒரு இடமும் வெளிக்கிடுறதில்லை வாங்கோ போவம்...'

அத்தை மறித்ததையும் கேளாமல் பார்த்திபனோடு அவள் புறப்பட்டு விட்டாள்.

வீட்டுக்குப் போனதும் கட்டிலில் விழுந்து அடக்கி வைத்த கண்ணீரைக் கொட்டித் தீர்த்தாள் நித்தியா.

பார்த்திபனுக்கு அவளைப் பார்க்க பாவமாகவும் வேதனை யாகவும் இருந்தது.

'இப்ப ஆறுதல் படுத்தப் போனால் இருக்கிறகோபத்தை எல்லாம் என்மேல் தான் காட்டுவாள்' என நினைத்தபடி மௌனமாக கதிரையில் சாய்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். குலுங்கிக் குலுங்கி அழுதவளின் உடல் மெல்ல மெல்ல வழமைக்கு வந்தது. அழுத களைப்புத் தீர அவள் அப்படியே படுத்திருந்தாள்.

மியாவ்... மியாவ் மியாவ்..

பூனை கத்தும் சத்தம் கேட்டு சட்டென எழுந்தாள் நித்தியா என்னப்பா... 'பூனை குட்டி போட்டுட்டுது போல' அவளின் முகத்தில் ஓர் மலர்ச்சி.

கலியாண வீட்டுக்குப் புறப்படும் போதே பூனை நிறைமாத வயிற்றோடு படுப்பதற்கும் நடப்பதற்கும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது. பூனையைப் பார்த்த நித்தியா நாம் இல்லாத நேரம் குட்டி போட கஸ்ரப்படுமே என நினைத்து.. ஒரு பெட்டியில் பழைய துணிகள் சில வற்றைப் போட்டு பூனையைத் தூக்கி அதற்குள் விட்டு பக்கத்தில் சாப்பாடும் வைத்து விட்டுத்தான் சென்றாள். ஆனால் தன் கவலையில் பூனைபற்றிய நினைவை மறந்தி ருந்தவள் பூனையின் சத்தம் கேட்டதும் ஓடிச் சென்று அந்தப் பெட்டியைப் பார்த்தாள். நான்கு அழகான குட்டிகளுடன் பூனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திருந்தது. அப்படியே பெட்டிக்கு அருகிலேயே அமர்ந்தாள். பின்னர் வந்த பார்த்திபனும் அவளுக்கு அருகில் வந்து அமர்ந்து கொண்டு பெட்டிக்குள் இருந்த பூனையையும் குட்டிகளையும் பார்த்தான்.

நான்கு குட்டிகளையும் நித்தியா மெல்லத் தடவிப்பார்த்தாள் பஞ்சு போன்ற அதன் உடல் மென்மையிலும் மென்மையாக இருந்தது. ரோஸ்நிறத்தில் அதன் மூக்கும் பிஞ்சுக் கால்களும் மெத்தென்று இருந்தன. கண்களை மூடியபடி தாயின் உடலுக்குள் சுருண்டு கிடந்த அவற்றை அப்படியே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது.

பூனையின் தலையைத் தடவியபடி ஏதோ யோசனையில் இருந்த நித்தியா...

'இந்தப் பூனை செய்த புண்ணியம் கூட நான் செய்யேல்ல போல...' என்றாள்.

பார்த்திபன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

'நித்தி... ஏன் இப்படிக் கதைக்கிறீர் பாரும் எங்களுக்கும் பிள்ளை பிறக்கும் கவலைப் படாதையும்'

'இல்லையப்பா.. இண்டைக்கு நான் கோபத்தில் என்னென் னெல்லாமோ பேசிப் போட்டன். அவையள் என்ன நினைச்சினமோ தெரியாது. உண்மையில எனக்கு அந்த நேரம் என்ன பேசுறன் ஏது பேசுறன் எண்டே தெரியேல்ல... கோவத்தில் ஏதேதோ பேசிப்போட்டன் நான் அப்பிடியெல்லாம் பேசியிருக்கக் கூடாது..ச்சா...'

'சரி.... சரி விடும்... பேசினது பேசியாச்சு ... இனி அதைப் பற்றிக் கதைச்சு என்ன நடக்கப் போகுது.

'நான் உங்களத்தான் கலியாணம் கட்டுவன் எண்டு ஒற்றை காலில் நிக்கேக்க அம்மா சொன்னது இப்பவும் எனக்கு நினைவிருக்கு...'

'அப்பிடி என்ன சொன்னவா..?' கேட்டான் பார்த்திபன்.

'உன்ர விருப்பத்துக்குத் தான் கல்யாணம் கட்டுவன் எண்டு பிடிவாதம் பிடிச்சு எங்களக் கஸ்ரப்படுத்திறாய். நாளைக்கு உன்ர பிள்ளை இப்பிடி நடக்கேக்க தான் எங்கட வேதனை உனக்கு விளங்கும் எண்டவா. அந்த வார்த்தை பலிக்க எனக்கு பிள்ளையே இல்லாமல் போச்சு...' நித்தி இப்ப என்ன நடந்து போச்சு எண்டு இப்பிடிக் கதைக்கிறீர். டொக்டரிட்ட காட்டிக் கொண்டுதானே இருக்கிறம்.. அதெல்லாம் சரிவரும்.. இந்தக் காலத்தில பிள்ளை இல்லையே எண்டு கவலைப்படத் தேவையே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தளவுக்கு வைத்தியத் துறை வளர்ந்து விட்டது. ஆரும் என்னவும் சொல்லினம் எண்டு அலட்டிக் கொள்ளாதையும்.. பாரும் இந்தப் பூனையை மாதிரி நீரும் நாலுபிள்ளைக்கு அம்மாவாகப் போறீர்' என்றான் புன்னகையுடன்.

'ஐயோ.. நாலு பிள்ளையா.. தாங்காதப்பா.. ஒண்டு ரெண்டு போதும்' எனச் சொல்லிச் சிரித்த நித்தியாவுடன் கூட அவனும் சேர்ந்து சிரித்தான்.

'நித்தி இந்த நாலு பூனைக்குட்டிகளையும் பார்க்க எனக்கு பாரதியார் பாட்டு ஒன்று நினைவில் வருகிறது...'

'என்னபாட்டு...'

*'வெள்ளை நிறத்திலொரு பூனை*
*எங்கள் வீட்டில் வளருது கண்டீர்*
*பிள்ளைகள் பெற்றதப் பூனை*
*அவை பேருக்கொரு நிறமாகும்.*
*சாம்பல் நிறமொரு குட்டி – கருஞ்*
*சாந்து நிறமொரு குட்டி*
*பாம்பின் நிறமொரு குட்டி*
*வெள்ளைப்பாலின் நிறமொரு குட்டி...'*

எனப்பாடிய பார்த்திபனை இடைமறித்த நித்தியா 'எனக்கு தெரியும் இந்தப்பாட்டு... மிச்சத்த நான் பாடுறன் கேளுங்கோ...' எனச் சொல்லி விட்டு பூனைக் குட்டி ஒன்றைத் தூக்கி அணைத்தபடி...

*"வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் அதில் மானிடர் வேற்றுமையில்லை*
*எண்ணங்கள் செய்கைகளெல்லாம் -இங்கு யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்..."*

என்று பாடிய நித்தியாவை இடைமறித்த பார்த்திபன் 'சரி சரி... நீர் வாத்தியாரிண்ட மனிசி எண்டத நிருபிச்சுப்போட்டீர். எல்லாரும் ஒரே மாதிரி இருக்க மாட்டின ஆரும் என்னவும் சொல்லினம் எண்டு கவலைப்பட்டுக் கொண்டிருக்காதையும்'

'இல்லையப்பா எனக்கு பிள்ளையில்லை எண்டது கூட கவலை இல்லை. எல்லாரும் இப்பிடிக் கதைக்கிறது தான் எரிச்சலாக் கிடக்கு...'

'சரி விடும்... ஏன் தேவை இல்லாத கதை கதைச்சுக் கொண்டு இருக்கிறீர். நாளைக்கு கிளினிக் போக வேணும் மறக்காமல் எல்லா றிப்போட்டையும் எடுத்து வையும். அங்க தேத்தண்ணி கூட குடிக்க விடாமல் கூட்டிக் கொண்டு வந்திட்டீர் வயிறெல்லாம் புகையிற மாதிரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கு கொஞ்சம் தேத்தண்ணி போட்டு தாருமன்..' "கொஞ்சம் பொறுங்கோ.. முகம் கழுவிப்போட்டு வந்து போட்டுத்தாறன்" என்றபடி துவாயையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் செல்ல நித்தியா புறப்பட்டபோது வாசலில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது.

வெளியே வந்த பார்த்திபனைத் தொடர்ந்து நித்தியாவும் வந்தாள்.

அங்கே மூர்த்தி நின்றிருந்தான்.

'அண்ணை.. எங்களுக்கு தென்னங் குத்தி தேவைப்படுது.. உங்கட அப்பாட்ட கேட்டனாங்கள். உங்க வீட்ட காய்க்காமல் சோடை பத்திப் போன ஒரு தென்னம்பிள்ளை நிக்குதாம் அதை தறிக்க சொன்னவர். நாளைக்கு காலம்பிற வந்து தறிச்சுக் கொண்டு போகவே.. அண்ணை...'

'வேண்டாம், வேண்டாம், அது காய்க்கும்.. நல்ல செழிப்பான தென்னை அநியாயமா ஏன் அதை தறிப்பான்...'

'இல்லை அண்ணை.. அதோட வைச்ச தென்னையளே காய்க்க வெளிக்கிட்டு ஆறேழு வருஷமாச்சு. இனியும் அது காய்க்காதண்ணை'

'காலம் சென்டாலும் அது காய்க்கும் எனக்கு அதை தறிக்க விருப்பம் இல்ல. அப்பாட்ட நான் சொல்லுறன்.. நீங்கள் வேற எங்கை யேனும் விசாரிச்சுப் பாருங்கோ...' என காட்டமாகச் சொல்லி விட்டு வீட்டுக்குள் வந்தவனை புன் சிரிப்புடன் உற்றுப் பார்த்தபடி நின்றாள் நிததியா.. அந்தப் பார்வை ஆயிரம் அர்த்தங்களைச் சொல்லியது.

கிளினிக் போய் வந்தாப் பிறகு நித்தியாவுக்கு மனதில் நம்பிக்கை பிறந்திருந்தது...

அதன் எதிரொலி அவள் முகத்திலும் தெரிந்தது... 'உங்கள் ரெண்டு பேருக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை. நித்தியாவுக்கு உடம்பில சத்தில்ல. இந்த மருந்துகளை ஒழுங்கா குடிச்சிங்கள் எண்டால் ஒரு வருஷத்துக்குள்ள... பிள்ளையோட என்ர கிளினிக்குக்கு வருவீங்கள் பாருங்கோ...' என்று வைத்தியர் சொன்ன வார்த்தைகளே அவள் மனதை நிறைத்து விட்டது. அதனால் எப்படியும் தான் தாயாவேன் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தாள்.

காலங்கள் ஓடின...

'ஆறுமணி ஆச்சுதப்பா... வேலைக்குப் போற எண்ணம் இல்லையே எழும்புங்கோவன்.. நேரம் போகுது...' நித்தியாவின் அதட்டலோடு கண்விழித்த பார்த்திபன் துவாயையும் சரத்தையும் எடுத்தபடி கிணற்றடிக்குப்போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு வேலைகளில் மும்முரமானாள் நித்தியா.

'நித்தீ... நித்தீ... இஞ்ச ஓடிவாரும்..'

கிணத்தடியில இருந்து பார்த்திபன் கத்திய கத்தலில் என்னாச்சோ ஏதாச்சோ என கையிலிருந்த தும்புத்தடியையும் போட்டு விட்டு கிணற்றடிக்கு ஓடினாள் நித்தியா.

'என்னப்பா.. என்ன நடந்தது...'

'இஞ்ச வந்து பாருமன்' என அவள் கையைப்பிடித்து இழுத்து தன்னருகில் நிறுத்தி ஒருகையால் அவள் தோளை பிடித்தபடி மறுகை யால் அந்த தென்னை மரத்தை காட்டினான் பார்த்திபன்.

இனி காய்க்காது எனச் சொல்லப்பட்ட தென்னையில் பாளை ஒன்று எட்டிப்பார்த்திருந்தது. அந்தப் பாளைக்குள் இருந்து தென்னம் பூ மெதுவாக எட்டிப்பார்த்தது.

காய்க்காத மரம் இனி பூத்துக் காய்க்கப் போகிறது.

'அண்டைக்கு இந்த மரத்தை வெட்ட விட்டிருந்தால்...'

அந்தப் பாளையையே பார்த்துக் கொண்டிருந்த நித்தியாவின் மனதில் என்னென்னவோ எண்ண ஓட்டங்கள்.

சாதனை ஒன்று நிகழ்ந்து விட்டதைப் போல இருவரும் சந்தோஷத்தில் திளைத்தனர். அந்த சந்தோஷம் அத்தென்னை மரத்தையும் தொற்றிக் கொண்டது போல அதுவும் தாய்மையின் பூரிப்பால் தன் ஓலைகளைச் சிலிர்த்தசைத்து சந்தோசத்தில் அங்கும் இங்கும் அசைந்தாடிக் கொண்டு இருந்தது. காற்றின் அசைவால் நாதம் எழுப்பிய தந்திக் கம்பிகளாய் அசைத்து கொண்டிருந்த கீற்றுக் களின் இடைவெளியில் கிழக்கில் உதயமான ஆதவன் கண்சிமிட்டிச் சிரித்தான். அந்தச் சிரிப்பின் ஒளியில் பாளையின் இடையே தெரிந்த பூக்கள் பொன் போல் தகதகத்துக் கொண்டிருந்தன.

**இதழ் - 05 பங்குனி சித்திரை - 2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீவநதி சிறுகதையாளர்களை பற்றி..

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்** – ஈழத்தின் மூத்த பெண் படைப்பாளிகளில் ஒருவர். 1965களில் அறிமுகமாகி இன்று வரை எழுதிக் கொண்டு வருபவர். 4 சிறுகதை தொகுதிகளையும், ஆன்மீக கட்டுரைத் தொகுப்புடையும், கடித நூலொன்றையும் உரைச்சித்திரத் தொகுப்பொன்றினையும் வெளியிட்டுள்ளார். இவர் கவிதை, கட்டுரை, நாடகம், உரைச்சித்திரம், ஆன்மீகம் எனப் பல்துறை சார்ந்த விடயங்களிலும் சிறப்பாக எழுதி வரும் படைப்பாளி.

**தெணியான்** – ஈழத்தின் மூத்த படைப்பாளிகளில் ஒருவர்.140இற்கு மேற்பட்ட சிறுகதைகளையும்,ஏழு நாவல்களையும், மூன்று குறுநாவல்களையும் எழுதியுள்ளார். சிறுகதை, குறுநாவல், நாவல், கட்டுரை, விமர்சனம் எனப் பல்வகைமைகளிலும் ஆளுமை உடையவர். ஒடுக்கப்பட்ட சமூக விடுதலைக்காக பேனாவை ஆயுதமாக கொண்டு போராடி வரும் படைப்பாளி.

**கே.ஆர்.டேவிட்** – உதவிக் கல்விப் பணிப்பாளராகிய இவர் சிறுகதைகள், விமர்சனங்கள் எழுதுவதில் வல்லவர்.

**குந்தவை** – ஈழத்தின் மூத்த பெண் படைப்பாளிகளில் ஒருவர். சிறுகதை, கட்டுரை ஆகிய துறைகளில் நீண்ட காலமாக தன் காலை ஆழப் பதித்து வருபவர்.மூன்று சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். சமூக யதார்த்தங்களை புரிந்து கொண்டு கதை புனையும் படைப்பாளி.

**செங்கை ஆழியான்** – ஈழத்தின் மூத்த படைப்பாளிகளில் ஒருவர். இது வரை 35இற்கு மேற்பட்ட நாவல்களையும், 5 சிறுகதைத் தொகுதிகளையும், 15 குறுநாவல்களையும் எழுதியுள்ளார். கல்விப் புலத்திலும், இலக்கிய வட்டத்திலும் முக்கியமானவராக திகழ்கின்றார். 2010ஆம் ஆண்டு சாகித்திய ரத்தினா விருதினைப் பெற்றுக் கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பவானி சிவகுமாரன்** – அண்மைக் காலமாக சிறுகதை எழுதி வரும் உந்நத பெண் படைப்பாளி. இது வரை 2 சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவரது கதை சொல்லும் பாங்கு சிறப்பானது. பெண்களின் விடுதலைக்காக எழுதுவதாக கூறுகின்றார்.

**க.சட்டநாதன்** – 1970களின் ஆரம்பத்தில் சிறுகதைத் துறைக்குள் நுழைந்தவர். சிறுகதைகளோடு ஓவியம், சினிமா, இசை என பல்துறையிலும் தீவிர ஈடுபாடு உடையவர். 5 சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவரது சிறுகதைகளில் ஆண், பெண், காதல், குடும்பம் சார்ந்த தளங்களின் வழி அக உணர்வுகளை அழகியல் ரீதியாகவும் கலை நயத்தோடும் கூடிய மொழிநடையோடு எழுதி வருபவர்.

**த.கலாமணி** – யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் சட்டத் துறை தலைவருமாகிய இவர் இது வரை 2 சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், குறுந் திரைப்படம் என பல ஆளுமைகளை கொண்டவர். ஜீவநதியின் பதிப்பாசிரியர். கல்வி புலத்திலும், இலக்கியத்திலும், நாடகத்திலும் சிறப்புற செயற்பட்டு வருகின்றார்.

**எம்.எஸ்.அமானுல்லா** – திருகோணமலை மூதூர் பிரதேசத்தைச் சார்ந்த இவர் ஓய்வுப் பெற்ற ஆசிரியர்., தொகை அளவில் குறைவாக எழுதியானாலும், காத்திரமான படைப்புகளை தந்திருக்கும் இவரது 2007 ஆம் ஆண்டு வெளிவந்த முதலாவது சிறுகதைத் தொகுப்பான 'வரால் மீன்கள்' சாகித்திய மண்டலப் பரிசை பெற்றுக் கொண்டது.

**சந்திரகாந்தா முருகானந்தன்** – பெண்ணியம் சார்ந்த கருத்துக்களை முனைப்புடன் எழுதி வரும் படைப்பாளி. சிறுகதை, கவிதை, கட்டுரை என எழுதி வருபவர். பெண்ணிய விடுதலை நோக்கிலான பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ப.ஆப்டீன்** –1960களின் முற்பகுதியில் எழுத்துலகில் புகுந்தவர். மலையகம் தந்த சிறந்த படைப்பாளிகளில் ஒருவர். சிறுகதைத் தொகுதி ஒன்றையும் நாவல் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். மலாய் மொழியைத் தனது தாய் மொழியாகக் கொண்டவர்.

**திக்குவல்லை கமால்** –1960களின் பிற்பகுதியில் எழுத்துலகில் புகுந்தவர். சிறுகதை, கவிதை, நாவல், பத்தி எழுத்து, விமர்சனம், மொழிபெயர்ப்பு என பல துறைகளில் மிளிர்பவர். பலசிறுகதைத் தொகுதிகளையும், சில நாவல்களையும் எழுதியுள்ளார். சிறந்ததொரு சிங்கள – தமிழ் மொழிபெயர்ப்பாளராக விளங்குகின்றார்.

**ஆ.இரத்தினவேலோன்** –மீரா பதிப்பகத்தின் உரிமையாளரான இவரது சிறுகதைகள் சிறப்பானவை. 5 சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். சிறுகதை, விமர்சனம் என்பவற்றில் அசைக்க முடியாத இடத்தைப் பெற்றிருப்பவர். தினக்குரல் பத்திரிகையில் முக்கிய பங்காற்றுகிறார்.

**தாட்சாயணி** –1990களின் ஆரம்பத்தில் இருந்து சிறுகதை, கவிதை, விமர்சனம், ஆன்மீகம் போன்ற துறைகளில் ஈடுபட்டு வருகின்றார். இன்றைய ஈழத்து இலக்கியத்தின் நம்பிக்கைக்குரிய பெண் படைப்பாளி. தற்போது கோப்பாய் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக பணிபுரிகின்றார். 3 சிறுகதைத் தொகுதிகள், ஒரு ஆன்மீக கட்டுரை தொகுதியும் வெளியிட்டுள்ளார்.

**ச.முருகானந்தன்** –மருத்துவத் துறையில் இருந்து கொண்டு இலக்கியம் படைப்பவர். சிறுகதை, கவிதை, குறுநாவல், கட்டுரை, விமர்சனம், சினிமா என பல தளங்களில் எழுதி வருபவர். ஆறு சிறுகதைத் தொகுதிகளையும், ஒரு கவிதைத் தொகுதியையும், ஒரு கட்டுரைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார். தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் படைப்பாளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. நவம்** – புலம்பெயர்ந்து கனடாவில் வசித்துக் கொண்டு தரமான இலக்கியங்கள் படைப்பதில் வல்லவராக இவர் திகழ்கின்றார். சிறுகதைத் தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளார். சிறுகதை, கட்டுரை, குறுந் திரைப்படம் என பல்துறைகள் சார் புலமை உடையவர். "நான்காவது பரிமாணம்" சஞ்சிகையில் ஆசிரியராக இருந்தவர்.

**ஸ்ரலின்** – எழுத்து வழி சமூகத்தை மேம்படுத்தல் என்ற கொள்கை அடிப்படை இலக்கிய படைப்பாளி. ஈழத்தில் சிறந்த உள ஆற்றுப்படுத்துநர்கள் வரிசையில் இவர், சிறுகதை, கட்டுரை, கவிதை என பல்துறை ஆற்றல் உடையவர். இவரது படைப்புகள் சமூக சீர்திருத்தத்தை முன்னிறுத்துபவை. "உள ஆற்றுப்படுத்தலும் வழிகாட்டலும்" என்று கட்டுரைத் தொகுப்பு வெளியிட்டுள்ளார்.

**இராஜேஸ்கண்ணன்** – யாழ். பல்கலைக்கழக சமூகவியற் துறை விரிவுரையாளர் இவர். இரண்டு சிறுகதைத் தொகுதிகளையும், ஒரு கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். கவிதை, கட்டுரை, சிறுகதை என பல்துறை சார்ந்த அறிவு உடையவர். பல பரிசில்களை இலக்கியத்திற்காக பெற்றுள்ளார். சிறந்த பேச்சாற்றல் திறன் மிகுந்த இவரது சிறுகதைகள் சிறப்பானவையாக வெளிவருகின்றன.

**கெக்கிராவ சஹானா** – 1980களின் முற்பகுதியில் எழுத்துலகில் பிரவேசித்த இவர் சிறுகதை, குறுநாவல், கட்டுரை, சிறுவர் இலக்கியம், கவிதை என பல துறைகளில் எழுதி வருபவர். இன்று உள்ள முஸ்லிம் பெண் படைப்பாளிகளில் முக்கியமானவர். ஒரு குறுநாவல் தொகுதி, சிறுகதைத் தொகுதி, கவிதை தொகுதி என்பவற்றை வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புமணி** – மட்டக்களப்பு பிரதேசத்தில் இருந்து கொண்டு இலக்கியப் பணிஆற்றிவரும் இவர் சிறுகதை, கவிதை,கட்டுரை, விமர்சனம், குறுநாவல் என் பல்துறை சார்ந்த அறிவு உடையவர். சமூகத்துப் பிரச்சினைகளை தீர்ப்பதை நோக்காக கொண்டு இலக்கியம் படைப்பவர்.

**அ.விஷ்ணுவர்த்தினி** – இளம் பெண் படைப்பாளியாகிய அ.விஷ்ணுவர்த்தினி யாழ். பல்கலைக்கழகத்தில் உளவியல் துறையின் இரண்டாம் வருட மாணவி. இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு உடைய இவர் ஒரு சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கியூடெக் நிறுவனம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்றார். உதயன் சர்வதேச ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றவர்.

**மு.அநாதரட்சகன்** – சிறுகதை, கட்டுரை, விமர்சனம் என்பவற்றில் மிகுந்த ஈடுபாட்டோடு எழுதி வருபவர் இவர். விரைவில் இவரது சிறுகதைத் தொகுப்பொன்று வெளிவரவுள்ளது. ஆழ்ந்த வாசிப்பினூடு பல்துறை சார்ந்த இலக்கிய அறிவு உடையவர்.

**க.பரணீதரன்** – ஜீவநதியின் ஆசிரியர், சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், விமர்சனம் என்பவற்றில் நாட்டத்தோடு எழுதி வருபவர். 1 சிறுகதைத் தொகுதி, 1 கட்டுரைத் தொகுதி வெளியிட்டுள்ளார். பல இசை நாடகங்களை நடித்து வருகிறார். உளவியற் துறை நான்காம் வருட மாணவன். ஜீவநதி பதிப்பகம் சார்பாக 8 நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

**அஷ்ரப் சிஹாப்தீன்** – கிழக்கு மாகாணம் ஓட்டமாவடியை பிறப்பிடமாக கொண்ட இவர், 70களின் இறுதித் தொடக்கம் எழுத்து பணியில் ஈடுபட்டு வருபவர். கவிதை, பத்தி எழுத்து, சிறுகதை, விமர்சனம் என பன்முக வடிவில் தன் ஆளுமையை வெளிப்படுத்தி வரும் இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலி, தொலைகாட்சி அறிவிப்பாளராகவும் பணி செய்து வருபவர். பல நூல்களை வெளியிட்டுள்ளார்

. **கார்த்திகாயினி** – தினக்குரல் பத்திரிகையில் முக்கிய பங்காற்றி வருபவர். சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம் என்பவற்றில் ஈடுபாடு உடையவர். இவரது ஒரு சிறுகதைத் தொகுதி வெளிவரவுள்ளது. பல பரிசில்கள் பெற சிறுகதைகள் பெற்றுள்ளன.


*நன்றிகள்*

*கலாநிதி த. கலாமணி
*தெணியான்
*வெ. துஷ்யந்தன்
*க. மதனாகரன்
*அ. விஷ்ணுவர்த்தனி
*மேமன் கவி
*கொடகே பதிப்பகத்தார்

*நன்றிகள்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# * ஜீவநதி சிறுகதையாளர்கள் *


குந்தவை


தெணியான்


அன்புமணி


செங்கை
ஆழியான்


கே. ஆர். டேவிட்


திக்குவல்லை
கமால்


கலாமணி


ச. முருகானந்தன்


க.சட்டநாதன்


ப.ஆப்டீன்


எம். எஸ்.
அமானுல்லாஹ்


யோகேஸ்வரி
சிவபிரகாசம்


க.நவம்


அருட்தந்தை
இராசேந்திரம் ஸ்ரலின்


ஆ.இரத்தினவேலோன்


சந்திரகாந்தா
முருகானந்தன்


இ.இராஜேஸ்கண்ணன்


கார்த்திகாயினி சுபேஸ்


மு.அநாதரட்சகன்


அஷ்ரப் சிஹாப்தீன்


கெக்கிராவ சஹானா


தாட்சாயணி


க.பரணீதரன்


பவானி சிவகுமாரன்


அ.விஷ்ணுவர்த்தினி

450/-

ISBN 978-955-30-3148-8

எஸ். கொடகே சகோதரர்கள்
675, பீ. டி எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904
godageem@slt.lk www.godage.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jeevanathy Sirukathaikal